

**FORMULA HONDA**

உங்களுக்கான வாகனத்தை தேர்வு செய்ய...

**ATHEESAN (SHAN) SARVANANTHAN**

CELL 416-720-1184

2240 MARKHAM ROAD, SCARBOROUGH, ONTARIO M1B 2W4.
TEL: 416-754-455 EXT.2705, FAX: 416-754-9465





# தாய் வீடு

THAIVEEDU | மார்ச் 2010 | HOME & LIVING



**FREE REAL ESTATE CLASSES**

வீடு வாங்க, விற்க மற்றும் வருமான வரி, அடமானக் கடன் சம்பந்தமான சகல ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்

**SELVA VETTYVEL**
Broker of Record
Cell: **416.568.4301**
Bus: **905.201.9977**

**HomeLife Future Realty Inc.** Brokerage
205-7 Eastvale Drive, Markham, ON L3S 4N8
*Independently Owned and Operated, REALTOR®






அரசியல் தலைவர்களின் அடுத்தடுத்த முயற்சிகளும் அழிந்துபோகும் தமிழ் மக்களின் அபிலாசைகளும்

பங்குச்சந்தையில் முதலிடுவது எப்படி?...

## கப்பலில் வன்கூவர் வந்தடைந்த ஓர் அகதித் தமிழனின் கதை

# வன்னியிலிருந்து வன்கூவர் வரை...

படம்: டிஜி கருணா


**RAMAN APPLIANCES**
Air Conditioning & Heating

எமக்கூடாக Furnace வாங்கும்போது ஒன்ராரியோ அரசு வழங்கும் Rebateஐப் பெற்றுக்கொள்ளலாம்

**General Contractors For:**
• Air Conditioning • Gas Furnaces • Central Vacuum
• Air Cleaners • Gas Fireplaces • Garage Door Openers
• Security Alarm

**Tel: 416.332.1989**
**Cell: 647.893.4414**

**Raman Chelliah**
President
3021 Markham Rd., Unit 51,
Scarborough, ON - M1X 1L8



THE LAW OFFICE OF

**Gary Anandasangaree**

Tel: **416 321 1100** Fax: **416 321 1107**
**gary@galaw.ca**

**BUYING, SELLING,**
INVESTING & MORTGAGE NEEDS CALL

**SUN SANMUGATHAS**
Broker & Manager

One stop shopping for all your mortgage & realestate needs.

Buying - Selling - Investing
PROPERTY MAX Realty Inc. Brokerage
Dir: **416.948.0693**
Bus: **416.291.3000**



**Mortgage and Finangial Service**

**Theven Kankesu**

Mortgage Agent
Fsco Lic#M08008759

**416 939 8789**

theven.kankesu@gmail.com



PMCI PROPERTY MORTGAGE CANADA INC.
Buying - Selling - Investing
PROPERTY MAX Realty Inc. Brokerage

One Source For Many Type of Properties & Mortgages

**Mohan Subramaniyam**
Broker of Record
**416.321.2300**



**Ahilan Thanabalasingham**
Sales Representative

**416.617.1767**
Office: 905.471.0002

RE/MAX
Dynasty Realty Inc., Brokerage
Independently owned and operated



இனிய இல்லம் ஒளிமயமான எதிர்காலதிற்கு அடித்தளம்

**மகேன் சிங்கராஜா**
Sales Representative

Direct: **416.302.7283** (SAVE)

E-mail: msingarajah@trebnet.com
web: www.mahenonline.com

RE/MAX Vision Realty Inc., Realtor
2210 Marham Road, Unit-1, Toronto, ON M1B 5V6
Tel: 416.321.2228, Fax: 416.321.0002


"MAKING YOUR DREAM HOME COME TRUE"
HOMELIFE
HIGHER STANDARDS
மனம் விரும்பியது போல் வீடு வாங்க, விற்க அழையுங்கள்"
HomeLife Today Realty Ltd., Brokerage*
*Independently Owned and Operated
31 Progress Avenue Suite 210 ★ Toronto, Ontario, M1P 4S6
Phone: 416-298-3200 Fax: 416-298-3440
Vasanthy Niranjan
Direct:416-845-8272
Broker
vasanthyne@gmail.com
Kirew Kanagasabai
Office:416-298-3200
Broker of Record
Kirewk@yahoo.com
Midland/Lawrence
$120,000
2 Bedrooms, 1 Washroom
Demand Location, Schools, Shopping & TTC, Large open Balcony, Ensuite Laundry,C.A.C. Indoor pool, Exercise & Sauna
Sheppard & MorningSide
$265,690
4 Bedrooms, 2 Washroom
This Faulous bright & clean home. Updated Kitchen painted, Interlocking Walkway. Central Air. Close to schools & TTC.
Kennedy & Williams
$251,000
3+1 Bedrooms, 2 Washroom
Semi-Detached 2 Kitchens, Bsmnt Apt Seperate Entrance Main level Hardwood floor Living & Dining 12.80*12.63(ft)
Tobram/Peter Robertson
$259,900
3 Bedrooms, 2 Washroom
Att/Row/Twnhouse Finished Basement, 3 Good Sized Bedrooms, Quite childsafe cresent Newly Painted & Modern Kitchen
Kennedy/Sandalwood
$253,990
3 Bedrooms, 3 Washroom
End Unit Freehold Townhome Finished Basement, Huge extd Kitchen, Ideal for first time buyer or investors Plush carpeting.
16th Avenue/9th Line
$359,900
3+1 Bedrooms, 4 Washroom
Immaculate Semi in the heart of cornel village Finished Basement, Lots Upgrades, Hardwood, Mouldings throughout 1st floor.
16th Avenue/9th Lane
$418,000
3 Bedrooms, 4 Washroom
Prime Markham Location Finished Basement, Good Size Detached Family Home, *$$$ Upgraded $$$*
Cornell Centre/16th Ave
$419,000
4 Bedrooms, 3 Washroom
0-5Yrs Old Apx Sqft 2000-2500 Lots of windows, 9ft Ceiling on Main Flr, Oak Hardwood, Gas Fireplace & Prof Landscaping.
Brimley/Steeles
$329,900
3+1 Bedrooms, 2 Washroom
Upgraded 2 storey starter home Finished Basement, $$$ Spent on Upgrades, Walking distance to steeles ave, TTC and School.
Morningside/Guilwood
$299,999
4+2 Bedrooms, 3 Washroom
Large semi with 200ft depth, 2 Bedroom basement prof-Finished with Sep Entrance Newer Furnance, With big backyard.
Scarb golf club/Ellesmere
$324,900
3+2 Bedrooms, 2 Washroom
Sun filled home, Mostly Newer Windows, Finished Basement Sep Entrance, Close to school, Church, Rec Center, Shop & 401.
Slan/Scarb golf club
$326,900
3+2 Bedrooms, 2 Washroom
Sun filled home, Mostly Newer Windows, Finished Basement Sep Entrance, Close to school, Church, Rec Center, Shop & 401.
Meadowale/Sheppard
$365,000
4 Bedrooms, 4 Washroom
Close to all amenities, Finished Basement, Family room walks out to a large Deck. Extra wide Driveway, close to Hwy 401.
Bellamy/Ellesmere
$249,000
4 Bedrooms, 2 Washroom
Quiet Neighbour hood, Finished Basement, *Beautiful lower levels New furnance. Sep entrance Near Scarborough Town center.
Finch/Morningside
$449,500
4 Bedrooms, 3 Washroom
Brazillian Cherry Hardwood Floors & Fenced Yard Great Location.
Warden/Finch
$159,900
2 Bedrooms, 2 Washroom
Best Location, Beautiful Unit Renovated throughout. Brand new Appliances, Close to school, Church & All Amenities.
Lawrence/Centennial
$209,000
3+1 Bedrooms, 2 Washroom
In demand Centennial community End Unit, With Finished Basement Close to Lake, Parks, TTC & More.
Guildwood Pkwy/Morningside
$299,900
3+2 Bedrooms, 2 Washroom
Steps to bluffs and lake, Close to TTC, GoTransit, Finished Basement, Great Hardwood Floors, Upgraded kitchen.
Birchmount/Sheppard
$369,000
3+3 Bedrooms, 2 Washroom
Desirable Location, Hardwood Floor in Living/Dining Room & Main floor Bedroom. Energy Saving windows.
Markham/Denison
SOLD
4 Washroom
Basement Apt.
Premium Lot backs on to Park. Professionally Finished.
* 5% Down, 2.10%(Variable) Interest 35 years Amortization
www.Homelifetoday.com
Thinking of a career change?
Or just starting out in Real Estate?
HomeLife Today Realty Ltd., Brokerage* Wants to Talk to YOU
Contact: Kirew Kanagasabai - Broker of Record Tel: 416-298-3200 E: kirewk@yahoo.com
VN Financial Service
Vasanthy Niranjan ★ Mortgage Broker ★ Lic. # M08010387 ★ Phone: 905-415-1676
Residential - First & Second Mortgages ★ First time Buyers ★ New Immigrants ★ Self Employed ★ Refinancing & Switching

தாய் வீடு
THAIVEEDU HOME & LIVING

### வரலாற்றிலிருந்து கற்றுக்கொள்வோம்

ஜனநாயகத்தின் முதுகெலும்பாகக் கருதப்படுவது கருத்துச் சுதந்திரம். 'மக்கள் தமது கருத்துக்களைச் சுதந்திரமாக வெளியிட எல்லா உரிமைகளும் உள்ளன' என்று கனடா, இலங்கை உட்பட உலகின் அநேக ஜனநாயக நாடுகளின் சாசனங்களும் சொல்கின்றன.

கருத்தைச் சொல்வதற்கு மட்டுமல்ல, உண்மைகளை அறிந்து கொள்வதற்கான நியாயமான உரிமைகளும் ஒரு ஜனநாயக நாட்டு மக்களுக்கு உள்ளன. இந்தச் சேவையை, ஊடக தர்மத்தைப் புரிந்துகொண்ட ஊடகவியலாளர்கள் செய்து வருகின்றனர்.

ஆனால் நடைமுறையில்,
இச் சுதந்திரம் மக்களுக்கு உள்ளதா?
ஊடகங்களுக்கு உள்ளதா?

கடந்த ஆண்டு மட்டும் உலகம் முழுவதுமாக 110 ஊடகவியலாளர்கள் மிகக் கொடூரமாகக் கொல்லப்பட்டும் பலர் கடத்தப்பட்டும் சிறையில் அடைக்கப்பட்டும் இன்னும் பலர் மிரட்டப்பட்டுமுள்ளனர். பத்திரிகை அலுவலகங்கள் தீயிடப்பட்டு, அடித்து உடைத்து அச்சுறுத்தப்பட்டுமுள்ளன. ஊடகவியலாளர்கள் பணிபுரிவதற்குப் பாதுகாப்பற்ற நாடுகளில் ஒன்றாக இலங்கை ஊடகத்துறைசார் அமைப்புகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந் நிலையில், கனடா உதயன் அலுவலகம் தாக்கப்பட்டுள்ளமை, 'உலகில் மக்கள் வாழ்வதற்குச் சிறந்த நாடுகளுள் ஒன்றாகக் கருதப்படும் கனடாவில், தமிழ் மக்களின் மத்தியில் அரசியல் சாயம் பூசப்பட்ட வன்முறை தலைதூக்க ஆரம்பித்துள்ளதா' என்ற கேள்வியை எழுப்புகின்றது. இது ஓர் அபாயகரமான எதிர்காலத்திற்கான ஆபத்து சமிக்ஞையாயின் நாம் கவனமாக இருக்கவேண்டியது அவசியமாகும்.

ஊடகங்கள் சுதந்திரமாக இயங்குவதற்கு மக்களும், மக்கள் சுதந்திரமாகச் செய்திகளை அறிந்துகொள்வதற்கு ஊடகங்களும் துணைநிற்கவேண்டும்.

III

அட்டைப்படத்தில் (மாதிரிக்காக)
சுதாகரன் சுப்பிரமணியம்

பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு. கனடியத் தமிழ் வானொலியில் ஒலிபரப்பாகி பின்னர் எமக்குத் தரப்பட்ட விளம்பரங்கள் இலவசமாகப் பிரசுரமாகின்றன. அவற்றின் சரிபிழைகளுக்கு தாய்வீடு பொறுப்பல்ல. ஏனைய விளம்பரங்கள் இலவசமல்ல. ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.

Publisher & Editor : P.J. Dilipkumar
பதிப்பாளர், ஆசிரியர் : பி.ஜே. டிலிப்குமார்

ஆலோசகர் குழு : ஞானம் லம்பேட், கருணா, சுந்தர் சின்னத்தம்பி, பொன்னையா விவேகானந்தன், கந்தசாமி கங்காதரன்.

ஓவியங்கள் : ரமணி (இலங்கை), K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து), கருணா (கனடா), மு.சு. சிவகுமாரன் (ஜேர்மனி

புகைப்படங்கள்: கணா ஆறுமுகம், கருணா

தட்டச்சு : கௌரி, கௌசலா, ஜீவா, பிரியதர்சினி, மஞ்சுளா ராஜலிங்கம்.

ஒப்புநோக்கல் : சாவையம்பதி சுப்ரமணியம், கௌரி. மஞ்சுளா ராஜலிங்கம்.

வரைகலை ஆலோசனை : கருணா (டிஜி வரைகலை அமையம்)

அஞ்சல் முகவரி : Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

தொரன்ரோ விநியோகம் : கிளி (சிவராஜா)
மொன்றியால் விநியோகம் : சுகுமாரன் சின்னையா
1-514-299-3186
ஒட்டாவா விநியோகம் : அலெக்ஸ் சிவசம்பு
1-613 -276-7253

Tel : 416-646-3422, 416-400-6406
Fax : 416.849.0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com

# வன்னியிலிருந்து வன்கூவர் வரை...




பல மாதங்களாகத் தொடர்ந்த இறுதிக்கட்ட வன்னிப் போரிலிருந்து மீண்டு பல தடைகளைத்தாண்டி ஒன்றரை மாத கொடுங்கடற்பயணத்தின் பின் எழுபதுக்கும் மேற்பட்ட எம் உறவுகள் கனடாவை வந்தடைந்தனர். இவர்களின் இவ் வருகைப்பயணத்தின் அனுபவங்கள்.




## பங்குச்சந்தையில் முதலிடுவது எப்படி...?

-கண்ணன் காங்கேசு


பங்குச் சந்தையின் நுட்பம் அறிந்து ஏற்படும் இழப்புக்களை குறைத்து மதிநுட்பத்துடன் முதலீடு செய்தால் இது பணத்தை தரக்கூடிய இடம்தான்.




## உலகின் ஒரேயொரு 7 Star Hotel

- திரு மகேசன்


High tech cityயான Dubai, உல்லாசப் பிரயாணிகளின் வருகை மூலம் தமது எண்ணெய் வியாபாரத்தைவிட பெருமளவு வருமானத்தைப் பெறுகின்றது.




## வேட்டை நாய்களும் Toyotaவின் முதலீட்டாளர்களும்

- மாறன் செல்லையா

அமெரிக்கர்கள் அமெரிக்க உற்பத்தியை வாங்க வேண்டும் என்ற பிரசாரம் உச்சியில் நிற்கும் இந் நேரத்தில், Toyotaவில் முதலிடுபவர்கட்கு அதிக கவனம் தேவை.




## மாற்று எரிபொருள்

- செந்தூரன் புனிதவேல்

எரிபொருளின் விலை, எண்ணெய் வளநாடுகளில் அரசியல் பதட்டம், எரிபொருளின் பாவனை அதிகரிப்பு என்பன மாற்று எரிபொருளின் தேவையை உணர்த்தி நிற்கின்றன.

அடுத்தடுத்த முயற்சிகளும் அழிந்துபோகும்...
அ. கணபதிப்பிள்ளை 04

சக்தியைச் சேமிக்கும் யன்னல்
மகேன் சிங்கராஜா 07

கடனும் வங்கிக் கணக்கும்
சிவாஜினி பாலராஜன் 13

வசந்தகால வீட்டுப் பராமரிப்பு
வேலா சுப்ரமணியம் 19

விரைவில் காணாமல் போகும் 10 உபகரணங்கள்
கருணா 41

உள நலப் பாதிப்பும் நாமும்
புஸ்பா கனகரட்ணம் 42

புற்றுநோய்! பாதுகாத்துக்கொள்ள...
சொக்கலிங்கம் பிரபாகரன் 46

Financial Planning and Time Management
சக்திவேல் 47

சக்தி விரயங்களைத் தடுக்க...
பிரபா சின்னா 54

மாற்று எரிபொருள்
செந்தூரன் புனிதவேல் 61

Timing Belt மோசமாகிவிட்டதா?
அதீசன் சர்வானந்தன் 64

தமிழமுது தந்த தமிழ் அமுது
கந்தசாமி கங்காதரன் 78

வள்ளுவர் பௌதீக விஞ்ஞானியா?
குமார் புனிதவேல் 81

ஒரு கூண்டும் சில மஞ்சள் கிளிகளும்
தேவகாந்தன் 89

தமிழ் எழுத்துக்கள் - கல்லில் இருந்து கணினி வரை...
பொன் பாலராஜன் 97

மேலும் ஆக்க விபரங்கள் 5ம் பக்கம்

# அடுத்தடுத்த முயற்சிகளும் அழிந்துபோகும் அபிலாசைகளும்

- அ. கணபதிப்பிள்ளை -

## அரசியல் தலைவர்களின் அடுத்தடுத்த முயற்சிகளும் அழிந்துபோகும் தமிழ் மக்களின் அபிலாசைகளும்

இலங்கைத்தமிழர்களின் கடந்தகால அரசியல் நடவடிக்கைகளில் நீண்டகாலமாக முன் வைக்கப்பட்ட விடயம் கூட்டாட்சித் தத்துவமாகவே இருந்து வந்திருக்கின்றது. ஒற்றுமைப் பட்ட இலங்கையினுள் சுதந்திரமாகவும், சமத்துவத்துடனும் சகோதரத்துவ உணர்வுடனும் வாழமுடியும் என்ற நம்பிக்கையுடன் மேற்கொள்ளப்பட்ட ஒரு முயற்சிதான் சமஸ்டிக் கொள்கையின் அடிப்படை நோக்கமாக இருந்தது.

பல இனம், பலமொழி, பொருளாதார ஏற்ற இறக்கம், கலாசாரப்பாரம்பரிய வேறுபாடுகள் மிகைப்படுத்தப்பட்ட நிலையில் அவற்றுக்கான தீர்வு அதிகாரப்பரவலாக்கமாக அமையும். இத்தகைய அதிகாரப்பரவலாக்கம் ஒரு குடைக்கீழாக ஒற்றையாட்சியடிப்படையிலும் பலகுடைக்கீழமைந்த கூட்டாட்சிமுறையிலும் அமைந்திருக்கும் நடைமுறை பல நாடுகளிலும் இருக்கின்றது.

ஒற்றையாட்சியின் கீழ் இலங்கை போன்ற பெரும்பான்மை இனத்தின் அபரிதமான செல்வாக்குப் பெற்றிருக்கும் பாராளுமன்ற நடைமுறையின் கீழும், சிங்களம், பௌத்தம் என்ற இரு கலாசாரக் கூறுகளை மாத்திரம் முன்னிலைப்படுத்தும் ஒரு இனத்தின் செயற் பாடுகளிடையேயும் சிறுபான்மையினரின் கலாசார விழுமியங்கள் அடக்கப்படுவதும் படிப்படியாகப் பறிக்கப்படுவதும் தவிர்க்கமுடியாததொன்று.

இதனை முன்னிலைப்படுத்தித்தான் இதுவரை காலத்திலும் தமிழ் மக்களின் அதிகாரப்பரவலாக்கக் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது. இதில் தனி அலகு என்ற செயற்பாடு எந்த வடிவத்திலிருந்தாலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய நிலைமையில் இருந்தமைதான் இலங்கையின் தமிழ் அரசியல் தலைவர்களின் ஆரம்பகால நடவடிக்கையாக அமைந்திருந்தது. அதற்கு முக்கிய காரணமாக இருந்தது தமிழர்களின் பாதுகாப்பு சீர் குலைந்து போனமை என்றே கூறலாம்.

1956ஆம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டத்துக்கு எதிராக நடாத்தப்பட்ட போராட்டங்கள் அரச யந்திரத்தின் சிங்களப்படையினரால் அடக்கப் பட்ட பொழுது தமிழர்களின் தலைவர்களின் பலவீனம் அரசியலில் மாத்திரமன்றி அவர்களின் கொள்கைப்பிடிப்பிலும் எதிரொலித்தது. அதன் முடிவுதான் மாகாணசபையையோ மாவட்டசபையையோ ஏற்றுக்கொள்ள வேண்டும் உறுதிப்பாட்டுக்கு வழிவகுத்தது. இதற்குத் தமிழர்களின் மீது தொடுக்கப்பட்ட தான்தோன்றித்தனமான இனக்கலவரத்தாக்கங்களும் அதற்கு அரசு அனுசரணையாக இருந்ததனையும் அடிப்படையாகக் கொண்ட சட்டரீதியான பாதுகாப்பின் தேவையினை அரசியற் தலைவர்களுக்கு விளக்கிக் காட்டியிருந்தமை காரணமாகலாம். அந்தத்தேவை கடந்த அறுபது வருட கால ஜனநாயகப் போராட்டத்தின் மூலமும் ஆயுதப் போராட்டத்தின் மூலமும் கிடைக்கவில்லை என்பது தான் இன்றைய தமிழர்களின் முன் வைக் கப்பட்டிருக்கின்ற கசப்பான உண்மையாகும்.

இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் ஏற்படுத்தப்பட்ட சிங்கள எதிர்ப்புப் போராட்டம் படிப்படியாக வளர்ச்சியடைந்து பாதுகாப்புப்படையினருக்கு எதிரான போராட்டமாகவும் அவர்களைத் தமிழ்ப்பகுதிகளிலிருந்து செயற் படுவதை முடக்குவதும் ஆகிய இருபெரும் பாதுகாப்பும் தற்காப்பும் கொண்ட செயற்பாடாகவே இருந்தது. இவற்றுக்குப் பின்னணியாக இருந்தது தமிழ் அரசு என்ற அடிப்படைக் கோட்பாடாகும்.

தமிழரசுக்கட்சி தோற்றம் பெற்றபொழுது சமஸ்டி என்ற கூட்டாட்சி முறையின் அடிப் படையில் இலங்கையின் சிறுபான்மையினருக்கு ஒருவித பாதுகாப்பை எடுத்துக் கொடுக்க முடியும் என்றும், அதற்குச் சிங்கள மக்கள் ஆதரவு கொடுப்பார்கள் என்றும் தமிழர்கள் எண்ணியிருந்தாலும் அதனைச் சிங்கள

> “ கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக
> பாராளுமன்றக் கதிரைகளை
> இலகுவாகப் பெற்றிருந்த பல வகையான
> தமிழ்க்கட்சிகளின் வேட்பாளர்களும்
> இம்முறை பொதுத்தேர்தலில்
> தமது ஆசனங்களைப் பெற்றுவிடக்கூடியதாக
> வரப்போகும் தேர்தல் அமையப்போவதில்லை. ”

மக்களின் மத்தியில் கூட்டாக எடுத்துச் செல்லப்படவில்லை என்ற குறைபாடு இதன் பின்னணியில் இருக்கிறது. சிங்களவர்களுக்குச் சமஷ்டிமுறையின் பலாபலன்களை எடுத்துச் சொல்லி அக்காலப் பொருளாதார சமநிலையின்மைக்குத் தீர்வு ஏற்படுத்தியிருக்கக்கூடும் என்ற அவசியம் சிங்கள அரசியற் தலைவர்களுக்கு இருக்கவில்லை.

இலங்கையின் வடக்குக்கிழக்குப் பகுதிகளில் பரந்திருந்த உள்ளார்ந்தப் பொருளாதார வளத்தினை படிப்படியாகத் தன்வசப்படுத்த ஒற்றையாட்சி முறையின் அவசியத்தை பெரும்பான்மையினரின் அரசியல்வாதிகள் நன்கு உணர்ந்திருந்தார்கள். சிங்களப்பிரதேசங்களின் பொருளாதாரம் கல்வி ஆகியவற்றின் சமத்துவமின்மையினை ஒற்றையாட்சியின் கீழ் தீர்வுக்குள் கொண்டு வரமுடியும் என்றதற்கு உதாரணமாக வீட்டுத்திட்டங்கள் மகாவலி அபிவிருத்தி போன்ற பொருளாதாரத் திட்டங்கள் தரப்படுதல் புதிய பல்கலைக்கழகங்களின் தோற்றம் ஆகிய கல்வித்திட்டம் போன்றனவற்றைக் குறிப்பிடலாம்.

வரண்ட பிரதேசத்தின் அபிவிருத்தித்திட்டங்கள் மூலமாக அரசியல் இலாபம் பெற்றவர்கள் சிங்களத்தலைவர்கள் என்றநிலை தோற்றம் பெற்றது. இதற்குச் சிங்கள மக்களின் குடியேற்றங்கள் வடக்குக்கிழக்குப் பகுதிகளை நோக்கி நகர்த்தப்பட்டமையைக் காரணமாகக் கூறலாம். சிங்களவர்களின் குடியேற்றங்கள் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் தன்னிச்சையாக ஏற்படுத்தப்பட்டிருக்கும்பொழுது சிங்களவர்களும் தமிழர்களும் கலந்து வாழக்கூடியதொரு நிலைமையும் அதன் வழியாகச் சிங்களவர்களும் தமிழர்களும் கலாசாரச் சகிப்புத்தன்மையும், கலாசாரத் தெளிவும் பெற்றிருக்கமுடியும். மறுபுறமாக அவர்களின் குடியேற்றங்கள் அரச உதவியுடன் மேற்கொள்ளப்பட்டதுடன் இன ஐக்கியம் ஒருமைப்பாடு ஆகிய இரு செயற்பாடுகளுக்கும் எந்த அடிப்படையும் இன்றி குடியிருப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. சமூகப் பொருளாதார கலாசாரப் பின்னணிகள் முழுவதும் இனம் சார்ந்தததாகவே இருந்தது. இஸ்ரேலின் மேற்குக்கரை யூதக் குடியேற்றங்களை ஒத்ததொரு செயற்பாடாகவே அவை காணப்பட்டன. இதனால் தமிழர்கள் தங்கள் நிலங் களைப் பறிகொடுத்துவிட்டுக் கலாசார, சமூகப் பாதுகாப்பினைத் தேடுவதற்கு நிற்பந்திக்கப்பட்டிருந்தார்கள்.

இத்தகைய செயற்பாடுகள் வடக்குப்பகுதிகளைவிடக் கிழக்குப்பகுதிகளிலேயே தீவிரம் பெற்றிருந்தன. இதனால் அடையாளம் தெரி யக்கூடிய இனத்தனித்துவம் கொண்ட குடியிருப்புகளால் தமிழர்கள் தமது பாரம்பரிய பிரதேசங்கள் என்று கட்டிக் காப்பாற்றி வைத்திருந்த நிலப்பரப்பு பறிபோய்க்கொண்டேயிருக்கின்றது. தமிழர் நிலங்கள் பாதுகாக்கப்படும் என்ற அரசின் உறுதிப்பாடு சட்ட ரீதியாக வரையறை செய்யப்படாத வரையில் இத்தகைய செயற்பாடு தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

மறுபுறமாக நெருக்கமாக வாழும் தமிழருக்கும், தமிழ் முஸ்லிம் சிறுபான்மையினருக்கும் அரச பாதுகாப்பும், அனுசரணையும், இல்லாதவரையில் தாங்கள் வைத்திருக்கும் பயிர்ச்செய்கை நிலங்களைத் தொடர்ந்தும் குடியிருப்பு நிலங்களாக மாற்றிக் கொண்டிருக்கும் நிலைமைக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இது தமிழர்களின் விவசாயப் பொரளாதாரத்துக்கு பெரியதொரு தடையாக இருக்கிறது. வன்முறைக்கெதிரான போர் பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்று தமிழர்களின் குடியிருப்புக்களுக்கு எல்லை வரையறை செய்யப்பட்டுவிட்டது. சுதந்திரமாக நடமாடவும், சுதந்திரமாகப் பயிர் செய்யவும் பிறபொருளாதாரமுயற்சி நடவடிக்கைகளில் ஈடுபடவும் ஏற்படுத்தப்படுகின்ற தடைகள் அடுத்துவாழும் சிங்கள சமூகத்தினருக்கு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. தமிழர்களின் பொருளாதார நடவடிக்கைகள் முடக்கப்பட்டிருக்கையில் படையினரின் பாதுகாப்புடன் வந்த சிங்களச் சிறு முயற்சியாளர்கள் உதயமாகிக் கொண்டிருக்கிறார்கள்.

சட்டம் தனது செயற்பாட்டைச் சரியாகச் செய்யாதவிடத்து படையினருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் தாரைவாத்துக் கொடுக்கப்பட்டவர்கள் தமிழர்களும் அவர்களின் பிரதேச அலகுகளும் என்ற நிலை தோற்றம் பெற்றிருக்கிறது.

1958ஆம் ஆண்டின் இன்ககலவரமும் அதற்கு முன்னைய சிங்கள எதிர்ப்புப் போராட்டமும் தமிழ்ப்பிரதேசத்தைச் சிங்களப் பிரதேசத்திலிருந்து பிரித்திருந்தது. சிங்கள சிறிக்குப் பதிலாக தமிழர் பயன்படுத்தும் ஸ்ரீ என்ற எழுத்தை வாகனத்துக்கு இட்டதும் தபால் தலையினைத் தமிழ்ப்பகுதியில் புழக்கத்தில் விட்டதுமான நடவடிக்கைகள் தமிழரசு என்ற கருத்தை வலியுறுத்துவதாக அமைந்ததுடன் தனிநாடு, தனி அலகு தேவை என்ற கோட்பாட்டுக்கு உரமேற்றுவதாயிருந்தது.

இதன் பின்னணியில் சிங்களத் தலைவர்கள் தமது மத்திய அரச ஆட்சி அதிகாரத்துக்குட்பட்டு மாகாணசபை ஏற்படுத்துவதற்குத் தமது அங்கீகாரத்தை வழங்கமுன்வந்தனர். இதனை அரசியலின் அடுத்த பிரிவினர் கண்டி யாத்திரை சென்று தடுத்ததனை தமிழருக்கு அரசியல் ரீதியான பாதுகாப்பின்மையினை வெளிப்படுத்தியதாகவே கொள்ளவேண்டும்.

அடுத்த தேர்தலில் தமிழ்த் தலைவர்களுக்கு மக்கள் வழங்கிய ஆதரவு மாவட்டசபை என்ற அதிகாரப்பரவலாக்கலுக்கும் அதன் வழி தமிழர்கள் தமது பாதுகாப்பைத் தேடிக் கொள்ளலாம் என்ற நிலைமைக்கும் வழி வகுத்தது. கிரிசாம்பாளின் மோதகம் போலிருந்து உள்ளுக்குள்ளிருந்த தங்கக்காசுகள் தமிழர்களின் கைகளுக்குக் கிடைக்கும் முன்னரே அது அடுத்த அரசியற் பகுதியினராற் பறிக்கப்பட்டு விட்டது. நிலத்தையும், தமிழர்களையும் பாதுகாக்கும் நிலையிலிருந்து தமிழ்த் தலைவர்களுக்கு ஒரு பின்னடைவு ஏற்பட்டது.

1983ஆம் ஆண்டின் இனக்கலவரமும் அது ஏற்படுத்திய கொடூரமும் உலகையே அதிர வைத்தது. தமிழர்களுக்குப் பாதுகாப்பில்லை என்பது வெளியுலகுக்கு எடுத்துக்காட்டப்பட்டது. இதன் பின்னணியில் அரச இயந்திரம் தொழிற் பட்டமை தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டிருந்தது. இந்நிலையில் மீண்டும் ஒரு தடவை தமிழ் அரசு என்ற அலகுக்குள் தமிழர்கள் கலைத்துவிடப்பட்டனர். தமிழர்களின் சொத்துக்களைச் சிங்களவர் வாழும் பகுதிகளில் வைத்தக் காப்பாற்றுவதற்கும், அரசு பாதுகாப்புக்கொடுக்காது என்ற நிலைமை உறுதி செய்யப்பட்டிருந்தது. அதேவேளை பௌத்தத்துக்கும், சிங்கள மக்களுக்கும் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் காதுகாப்பளிப்பதற்கென அரசாங்கப்படைகளும் அரச உதவிபெற்ற ஊர்காவற்படைகளும் நிலைநிறுத்தப்பட்டன.

இந்நிலையில் முதலாம்கட்ட சர்வதேசத் தலையீடு ஏற்படுத்தப்பட்டது. அதுதான் இந்திய சமாதானப்படையின் வருகையாகும். இந்திய சமாதானப்படை வருகையுடன் ஏற்படுத்தப்பட்ட அதிகாரப்பரவலாக்கத்திட்டம் வடக்குக் கிழக்கு அதிகார அலகினைத் தமிழருக்குக் கொடுக்கவேண்டும் என்ற நிற்பந்தத்தை அரசுக்கு ஏற்படுத்திக் கொடுத்தது. இதுவரை ஏற்றுக்கொண்டிருக்காத சமஸ்டி முறையின் மிகப் பெரியதொரு அதிகாரப்பரவலாக்கத்துக்குச் சிங்களத் தலைவர்கள் ஒத்துக்கொண்டிருந்தார்கள். பல வடிவங்களில் நடைமுறைச்சிக்கல்கள் அந்த ஒப்பந்தத்தில் இருந்த பொழுதிலும் அதனை நடைமுறைப்படுத்தக் கூடாது என்பதில் சிங்களத்தலைமையின் அடுத்த அரசியற் பகுதியினர் முன்னின்று செயற்பட்டனர். அதற்காகத் தமிழ்த் தலைவர் களைப் பகடைக்காய்களாகப் பயன்படுத்தினர்.

காலத்தை உருட்டுவதற்காகவே புதிதானதொரு அதிகாரப்பரவலாக்கம் தமிர்களின் அபிலாசைகளை ஈடுசெய்வதற்காக உருவாக்கம் பெறுகிறது எனக் கூறிக் காலத்தினைக் கடத்திக் கொண்டேயிருந்தனர். இதனிடையே

6ம் பக்கம் பார்க்க...

**A Z வாகன சாரதிகள் தேவை**

**கனடாவிற்குள் கனரகவாகனம் செலுத்துவதற்கு மூன்றுவருடத்திற்கு மேல் அனுபவமுள்ள A Z வாகன அனுமதிப்பத்திரம் வைத்திருக்கும் சரதிகள் தேவை.**

**தொடர்புகட்கு:**

**பிரபா: 416 716 6785**

# வன்னியிலிருந்து வன்கூவர் வரை...

**ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம், ஆயிரக்கணக்கான 'கதை'களுடன் பல தலைமுறைத் தமிழர்களை உலகெங்கும் விதைத்திருக்கிறது. யுத்தத்திலிருந்து தப்பி, எமக்கு அடைக்கலம் தரும் நாடொன்றை அடைவதற்கு எம்மில் பலர் அனுபவித்தவை இந்தக் கதைகள். இவற்றில் பல கற்பனைக்கு அப்பாற்பட்ட துயரங்களுடனும் வலிகளுடனும் கூடியவை. ஐரோப்பிய ஆறுகளைக் கடக்கையிலே மூழ்கிப்போனவர்கள், பாரஊர்திகளின் 'கொண்டெயினர்களில்' குளிரில் விறைத்து இறந்து போனவர்கள், உலகின் பல்வேறு நாடுகளிலும் சிறையில் வாடிக்கொண்டிருப்பவர்கள் என இந்தக் 'கதை'கள் பல தளங்களில் விரிந்து செல்லும். இந்தக் கதைகளில் பல பதியப்படாமலே போய்விட்டன. எழுதப்பட்டவைகளிலும் பல ஒழுங்கான ஆவணப்படுத்தல் இல்லாததால் காணாது போய்விட்டன. இந்த அனுபவங்கள் சரியான முறையில் பதிவாக்கப்பட்டு, பேணப்பட்டாலேயே எமது எதிர்காலத் தலைமுறை எமது 'போராட்டத்தின்' முழுப்பரிமாணத்தையும் அதன் தாக்கங்களையும் புரிந்துகெள்ளும்.**

**இந்தத் தொடர் கதையின் இன்னோர் அத்தியாயமாக, கடந்த ஆண்டு ஒக்டோபர் மாத நடுப்பகுதியில், ஒன்றரை மாத கொடுங்கடற்பயணத்தின் பின் எழுபதுக்கும் மேற்பட்ட எம் உறவுகள் கனடாவை வந்தடைந்தனர். இவர்களில் சிலர் பல மாதங்களாகத் தொடர்ந்த இறுதிக்கட்ட வன்னிப் போரிலிருந்து மீண்டு பல தடைகளைத்தாண்டி இந்தக் கப்பலை வந்தடைந்தவர்கள். இவர்களில் ஒருவர் தன்னுடைய அனுபவங்களை எம்முடன் பகிர்ந்துகொள்ள முன்வந்தார். அவருடைய வேண்டுகோளின்படி அவரது அடையாளத்தை எம்மால் வெளியிட முடியாதுள்ளது.**

'அந்த நினைவுகள் என்றுமே மறக்க முடியாதவை மட்டுமல்ல, மறக்கப்படவும் கூடாதவை. எமது உயிர்களை மட்டுமல்ல, எம் மண்ணும் எமது பாரம்பரியமும் கலாச்சாரமும் திட்டமிட்டு அழித்துச் சிதைக்கப்பட்டு மண்ணோடு மண்ணாகக் குழி தோண்டிப் புதைக்கப்பட்டுக் கொண்டிருந்த வேளையில் எனது உயிர் பிரியும் தறுவாயில் மரணத்தை வென்றவனாக, அகோர சிங்களத் தாண்டவத்தில் இருந்து உயிர் தப்பிய அந்த நினைவுகளை எப்படி மறக்க முடியும்?

வன்னிப் பகுதியில் எமக்கே உரித்தான பாரம்பரிய மண்ணில் மனைவியுடனும், இரு குழந்தைகளுடனும் அமைதியான வாழ்க்கையினை வாழ்ந்து கொண்டிருந்தேன். வேளாண்மையிலும் கால்நடைவளர்ப்பிலும் நான் பெரிதும் வெற்றி கண்டிருந்தேன். மிகவும் ஈடுபாடான எமது பாரம்பரிய தொழிற்றுறையில் எனக்குத் தாராளமான வருமானம் கிடைத்தமை என் வாழ்வில் பெரிதும் தன்னிறைவைத் தந்திருந்தது.

2008ம் ஆண்டு இலங்கை இராணுவம் வன்னி மீதான இறுதிக்கட்ட போரை ஆரம்பித்தது. இலங்கை அரசின் அகோரத் தாண்டவத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு நான் மட்டும் என்ன விதிவிலக்கா! மாரி மழையாக எட்டுத்திக்குகளிலிருந்தும், வானிலிருந்தும் குண்டு மழையாகக் கொட்டியது. குருவிக் கூடுபோன்றிருந்த என் குடும்பத்தினைக் கால் போன திசையெல்லாம் கொண்டு ஓடினேன்.

தரையில் கால் தடக்கிய இடமெல்லாம் மனித உடலங்கள் வயது வேறுபாடின்றிக் குவிந்து கிடந்தன. ஓடிச் சோர்ந்த இறுதிப் பொழுதில் என் மனைவியுடன் என்னிரு பிள்ளைகளையும் தொலைத்தேன்.

அகோர தாண்டவம் ஆடிய இராணுவத்தின் துப்பாக்கிகளுக்கு எம் சொந்தங்களெல்லாம் இரையானதுடன், அவர்களது காமப்பசிக்கு ஏராளமான இளம் யுவதிகளும் பலியானார்கள். அவர்களில் ஏராளமானோர் மானமிழந்ததைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் உயிரை மாய்த்துக்கொண்டனர்.

இந்நிலையில் என் பிள்ளைகளைத் தேடி அலைந்தேன். எத்தனையோ சிறுவர்கள் தன் குடும்பத்தினைத் தவறவிட்ட நிலையில், அழுதழுது கால் போன பாதையில் அங்கும் இங்குமாக அலைந்துகொண்டிருந்தனர். இன்னும் எத்தனையோ உறவுகள் பாதி உடல்களுடன் உயிர் பிரியும் நிலையில் அருந்த நீர் கேட்டு முனங்கிய நிலையில் மடிவதைக் கண்டேன். (சொல்லிக் கொண்டிருந்தவரது கண்களில் கண்ணீர் மல்க, வார்த்தை வர மறுத்த நிலையில் மௌனித்து கண்களை துடைக்கொள்கின்றார்)

இறுதியாக அகதி முகாம் எனும் பெயரில் ஒரு சித்திரைவதை முகாமுக்குக் கொண்டு சென்றனர். வார்த்தைகளால் சொல்ல முடியாத சித்திரைவதைகளை அனுபவித்தது மாத்திரமல்ல, காணக்கூடாத கொடூரங்களையெல்லாம் அந்த வதை முகாமில் கண்டேன். கதறக்கதற உறவுகளை கொடும் வதைக்கு உள்ளாக்கிவிட்டு தலையில் பெற்றோலை ஊற்றி எரியவிட்டு நின்று வேடிக்கை பார்த்தனர். நானும் மரணிக்கப்போவது உறுதி எனும் நிலையில் முற்றிலுமாய் உடைந்து போனேன். எனினும் கொலைக்கரங்களுக்குள் சிக்காதிருக்க, கிடைத்த உதவிகளைப் பயன்படுத்தித் தப்பி வந்தேன்.

வவுனியாவில் உள்ள உறவினரது வீடு வந்து சேர்ந்த போது, என் துணைவி மற்றும் பிள்ளைகள் வேறோர் 'அகதி' முகாமில் இருக்கும் செய்தியறிந்து ஆறுதலடைந்தேன். அவ்வேளையில், நான் தேடி அலைந்து திரிந்த பொழுதுகளில் சந்தித்த சோக நினைவுகள் என் மனக்கண்ணில் வந்தது. (வேதனையுடன் மௌனிக்கின்றார்...)



என் குடும்பத்தினரை அகதி முகாம் என்ற அந்த வதை முகாமில் இருந்து மீட்க இராணுவத்தினருக்கு, சுமார் ஐந்து இலட்சம் கப்பம் செலுத்தினேன். வவுனியாவில் அவர்களை என் மாமனார் வீட்டில் இருத்திய பின்னர், வெளிநாட்டிலுள்ள எனது சித்தப்பாவின் ஒழுங்கு மூலமாக பல சிரமங்களின் மத்தியில் கொழும்பையும் பின்னர் தாய்லாந்தையும் வந்தடைந்தேன்.

ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு பயண முகவரின் உதவியுடன், கனடாவுக்கான என் பயணத்தை ஆரம்பித்தேன்.

தாய்லாந்தில் உள்ள ஓர் இடத்திலிருந்து சுமார் ஐம்பதிற்கு மேற்பட்ட எம் உறவுகளுடன் கடலில் ஒரு படகு (றோலர்) மூலமாகப் பயணித்து, பலத்த புயல் காற்றில் சிக்குண்டு உயிரைக் கையில் பிடித்துக் கொண்டே நடுக் கடலில் தரித்து நின்ற கப்பலை வந்தடைந்தோம்.

எல்லோரையும் ஏற்றிய பின், சீனக் கடலைக் கடந்து பசுபிக் சமுத்திரத்தைக் கடக்கும், உயிர் அச்சுறுத்தல்களும் பெரும் அபாயங்களும் நிறைந்த கடற் பயணத்தை அந்த 76 பேரும் ஆரம்பித்தோம்.

'என்ன கனடா போற கப்பல்தானே' எனும் போது பயணிகள் கப்பல் என நினைத்து விட வேண்டாம். நாம் பயணித்தது சரக்கு களை ஏற்றும் பழைய துருப்பிடித்த கப்பல். இந்த 76 பேரும் நாட்டில் இருக்க முடியாது எனும் நிலையில் எஞ்சிய உயிரை கையில் பிடித்தபடி, முழுமையான அகதிகளாக்கப்பட்டு வந்தவர்களாகவே இருந்தோம். நாம் அனைவரும் கப்பலில் முதன்முறையாக சந்தித்துக்கொண்ட பெரியதொரு குடும்பம் ஆனோம். அதுமட்டுமல்ல தாயகத்தின் வடகிழக்கில் எமது சொந்த மண்ணில் பாரம்பரிய வாழ்வைத் தொலைத்த உறவுகளாக கப்பலில் ஒன்று சேர்ந்து கலந்தோம்.

ஒன்று சேர்ந்த இந்தக் குடும்பத்தின் வெளிப்படையான மனித நேயமும் புரிந்துணர்வுடன் கூடிய ஐக்கியமும் அச்சங்கள் நிறைந்த பயணத்திற்கு உரமாகியது. ஒருவரை ஒருவர் அரவணைத்தோம். ஒன்றுமையுடன் கூடிய மனிதாபிமானம் எம்மிடையே மேலோங்கிக் காணப்பட்டது.

தன்னிலை உணர்ந்து தேவைப்பாடுகளை அனைவரும் கையில் எடுத்துக்கொண்டோம். பலருக்கு கடல் பயணம் ஒத்துவராததாகவே இருந்தது, அவர்களது தேவை உணர்ந்து நாங்கள் மனிதாபிமான ரீதியாக உதவினோம், மேலும் பலர் என்னை விட மிகவும் மோசமான ரீதியாக மனநிலை பாதிக்கப்பட்டிருந்தனர். அவர்களை ஏனையவர்கள் ஆற்றுப்படுத்தினர்.

இவை யாவற்றுக்கும் மேலாக, அனைவரும் ஒன்று கூடிப் பிரார்த்தனைகளில் ஈடுபட்டோம். அது மன அமைதியைத் தந்தது. இந்த பிரார்த்தனையின் தேவையை இப்போதும் உணர்கின்றேன்.

நாங்கள் பயணித்தது சரக்குக் கப்பல் ஆகையால் எமக்கான அடிப்படைத் தேவைகள் நாமே ஏற்பாடு செய்து கொண்டோம். கப்பலின் கீழ்த்தளத்தில் 66 படுக்கை ஒழுங்கமைப்புக் களை உருவாக்கியிருந்தோம். கையிருப்புக்கு ஏற்றவகையில் உணவு ஒழுங்குகளை

24ம் பக்கம் பார்க்க...

## வீட்டினுள்ளே இன்னும் வருபவை...


வாடகைக்கு விடுவதற்கு முன்... — கிருபா கனகசபை — 09
வீடு: 2008! 2009!! 2010!!! — கருணா கோபாலபிள்ளை — 11
பட்டிப்பூ — செல்லையா சந்திரசேகரி — 14
தேகப் பயிற்சி — சசி நரேன் — 21
பனியும் பிரெஞ்சும் பொய்த்துப்போன வன்கூவர் — கந்தசாமி கங்காதரன் — 22
உங்கள் வீட்டை விற்பது எப்படி? — S.K. பாலேஸ் — 27
மருத்துவக் கேள்வி பதில் — இராஜசேகர் ஆத்தியப்பன் — 28
கனடாவில் தனிநபரின் வங்குரோத்து நிலை — வி. சிறி — 37
சிக்கல்கள் பல தீர்க்கும் 311 தொலைபேசி இலக்கம் — சிவ பஞ்சலிங்கம் — 38
நோயெதிர்ப்புத் தொகுதியும் செழுமைப்படுத்தலும் — கந்தையா பரநிருபசிங்கம் — 41
பதகளிப்பு ஒழுங்கீனம் — ஜீவா திசைராஜா — 53
வீட்டின் விலையேற்றம் வீதிக்கு வருமா? — அலன் சிவசம்பு — 57
கல்வி — சிவவதனி பிரபாகரன் — 58
சமூகச் சந்தைப்படுத்தல் முறை — பொன் குலேந்திரன் — 62
வரவு செலவுத் திட்டம், கனடா தலைமை தாங்கலாம் - தாங்குமா? — ராகுலன் — 69
சிந்திக்கச் சில நிமிடம் — கதிர் துரைசிங்கம் — 70
நாடகத்தின் வேரும் வளர்ச்சியும் — ஞானம் லேம்பட் — 73
லெமூரியா கண்டம் — முருகேசு பாக்கியநாதன் — 75
வாஸ்து — சத்குரு வாசுதேவ் — 76
கொடியேற்றம் — குரு அரவிந்தன் — 77
குப்பையடிக் கறுத்தக்கொழும்பான் — பொ.கனகசபாபதி — 79
அந்தரவெளியில்... அந்தகார இருளில்.. — கே.எஸ். பாலச்சந்திரன் — 82
மகள்கள் வெல்வார்கள் — அ. முத்துலிங்கம் — 87
சுற்றம் ஓம்பிய கற்றவர் குடும்பம் — வி. கந்தவனம் — 92
'இசைச் சக்கரவர்த்தி' திரு.கதிர் சுந்தரலிங்கம் — சிவ பஞ்சலிங்கம் — 94
'பல்கலைத் தென்றல்' ஶ்ரீதர் பிச்சையப்பா — கே. எஸ். பாலச்சந்திரன் — 95
அடிப்படையான ஆயுட்காப்புறுதித் திட்டங்கள் — சிறீதரன் துரைராஜா — 99

# அடுத்தடுத்த முயற்...

4ம் பக்கத் தொடர்ச்சி...

விடுதலைப்புலிகளின் எழுச்சி அதிகாரப் பரவலாக்கக் கொள்கையின் அவசியத்தை மீண்டும் மீண்டும் அரசாங்கங்களுக்கு வலியுறுத்திக் கொண்டிருந்தது. ஆயினும் அவையாவும் வெளிவராத அதிகாரப் பகிர்வாகவேயிருந்தன. ஆனால் விடுதலைப்புலிகளிடம் உத்தரவாதமளிக்கப்பட்டடிருந்த எந்தத்திட்டமும் முடிவு பெறா ஆரம்பநிலைப் பேச்சுக்களாகவேயிருந்தன. தொடர்ந்தும் ஏமாற்றத்தை அனுபவிக்க முடியாத தமிழர்கள் முடிவானதொரு தீர்வுத்திட்டத்தை எதிர்பார்த்திருந்தனர். ஆனால் நூலின்றி நெய்யப்படும் ஆடைபோல் விளக்கமில்லாமல் தீர்வுத்திட்டம் எழுதப்பட்டுக் கொண்டேயிருக்கும் பொழுதே விடுதலைப் புலிகள் தமது பலத்தினை இழந்தமை அந்த எழுதப்படபடாத அதிகாரப் பலவலாக்குதலின் நிரந்தர முடிவுக்கு அரசாங்கத்தினையும் அரசியல் தலைவர்களையும் இழுத்துச் சென்றுவிட்டது.

இரண்டாவது முறையாக விடுதலைப்புலிகளைப் பலமிழக்கச் செய்வதற்காகச் சர்வதேசத்தலையீடு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. விடுதலைப்புலிகள் பலமிழக்கப் படுத்தப்பட்டதும், அவர்கள் விட்டுச்சென்ற சுயநிர்ணயம் தன்னாட்சி என்ற பதங்கள் இன்றைய தமிழ் அரசியற் தலைவர்களிடையே பிரபல்யம் பெற்றிருக்கிறது. அவற்றினடிப்படையில் சர்வதேசத்தின் தலையீடு பிரச்சனைக்குத் தீர்வாக அமையவேண்டும் எனறே இன்றைய தலைவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக பாராளுமன்றக் கதிரைகளை இலகுவாகப் பெற்றிருந்த பல வகையான தமிழ்க்கட்சிகளின் வேட்பாளர்களும் இம்முறை பொதுத்தேர்தலில் தமது ஆசனங்களைப் பெற்றுவிடக்கூடியதாக வரப்போகும் தேர்தல் அமையப்போவதில்லை. தமிழர்களில் பலர் தம்மைப் பொது நீரோட்டத்தில் இணைப்பதன் மூலம் சிறப்பான அதிகாரப்பரவலாக்கம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இருக்கிறார்கள். இதனிடையே தேசியம், சுயநிர்ணயம், சுயாட்சி என்ற கோட்பாடுகளுக்கு மக்கள் எந்தளவுக்கு மதிப்புக் கொடுக்கப்போகிறார்கள் என்பது கேள்விக்குரியது.

ஒரு பெரிய இழப்புக்குப் பின்னர் தமிழர்களின் மனஉறுதிப்பாட்டினை மையப்படுத்தி அடுத்துவரப்போகும் சர்வதேசத்தலையீட்டுக்குத் தங்களைத் தயார்ப்படுத்தி வேட்பாளர்கள் எல்லோரும் இந்தத் தேர்தலின் மூலம் ஜனநாயக வழியில் தீர்வுக்காகத் தமது ஒன்றுபட்ட பூரண உடன்பாட்டினைச் செய்யத்தவறுவார்களாயின் தமிழர் என்ற இனம் தமது உரிமைக்காகவும், சுதந்திரத்துக்காகவும் போராடி வருகிறார்கள் என்ற கருத்துக்கு அர்த்தம் இல்லாமற் போய்விடும்.

தமிழ்ப்பிரதேசத்தில் தமிழர்களும் முஸ்லிம்களும் தெரிவு செய்யப்படுவார்கள் என்ற உறுதிப்பாடடைப் பொய்யாக்கத்தக்க விகிதாசாரப் பிரதிநிதித்துவமுறையானது வடக்கிலோ கிழக்கிலோ சிங்கள அரசியல் வாதிகளின் பிறப்புக்கு வழி செய்யாமலிருக்கப் போவதில்லை.

தமிழர்களின் ஒன்றுபட்ட கோரிக்கை இந்த இருபத்தைந்து வருடத்தில் ஒருதடவையாவது ஏற்படுத்தப்படவில்லை. அதேபோல் கடந்த அறுபது வருட காலத்திலும்கூட தமிழர் ஒற்றுமையான முடிவான தீர்மானத்துக்கு வழி ஏற்படுத்திக் கொடுக்கவில்லை.

இன்று நிலைமை மாற்றம் பெற்றுவிட்டது. வடக்குக் கிழக்கில் படைவீரர்களும் அவர்களது குடும்பங்களும் வாக்களிக்குமிடத்துக்கூட குறைந்தபட்சம் ஒருசில அரசாங்க ஆதரவு அங்கத்தவர்களைத் தெரிவுசெய்யத்தக்க சூழலை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்புத் தென்படுகிறது. தமிழர்கள் பாராளுமன்ற முறையின் கீழ் தமது அபிலாசையினை சர்வதேசத்துக்குக் காட்டி அவர்களது ஆதரவினைப் பெறச் செய்ய வேண்டுமாயின் மீண்டும் ஒற்றுமைப்பட்ட ஒருதொகை தமிழர்களை ஒரு குடையின் கீழ்த் தெரிவு செய்யவேண்டும் என்ற அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

பணம், பழக்கம், அறிமுகம், கட்சி, ஒற்றுமை போன்ற கருதுகோள்களை மட்டும் முன்னிலைப்படுத்தாமல் காலத்தின் தேவை ஒற்றுமைப்பட்டுச் செயற்படுத்தக்கூடிய மனப்போக்கு திடமான கல்வி அறிவு தலையாட்டிப் பழக்கப்படாத தனித்துவம் ஆகியன சர்வதேசத்துக்குக் காட்டப்பட வேண்டியன. அத்தகைய உறுதிப்பாட்டுடனான தலைவர்களையே தமிழினம் இன்று அவாவி நிற்கிறது.

kanapathipillai.a@thaiveedu.com

■ ■ ■

J & S ACCOUNTING SERVICE
INCOME TAX SPECIALIST
FOR ALL YOUR PROFESSIONAL ACCOUNTING SERVICE
* CORPORATE TAX
* PERSONAL TAX
* BOOKKEEPING
* HST FILING
* PAYROLL SERVICE
* FINANCIAL STATEMENT PREPARATION
* BUSINESS START UP ASSISTANCE
* BUSINESS REGISTRATION
* INCORPORATING A BUSINESS
* PREPARING BUSINESS PROPOSAL
* BUSINESS VALUATION
* CRA AUDIT REPRESENTATION
* GST / PST / WSIB RETURNS
* CORPORATE TAX PLANING AND PREPARATION
INCOME TAX & RRSP
FREE CONSULTATION WITH APPOINTMENT
J&S ACCOUNTING SERVICE
15 YEARS OF EXPERIENCE
PLEASE CALL:
JEYA PILLAI, CGA
OR SUE SRI, CMA
Excellence! SERVICE
Tel: 416-826-5306
Email: jsaccountingservice@hotmail.com

RBC MORTGAGE SPECIALIST



• 1st Time Home Buyers, Pre-Approvals & Refinances
• Switch your mortgage to RBC and save
• We will pay your legal & Switch fees on Switches*
• Builder rate hold up to 18 months
• Cash back options available*
• New Immigrants Programs
• Self-Employed? No income verification*
• Consolidate your debts to one low monthly payment

As you RBC Mortgage Specialist and trusted member of our community, I can advise you on your options and give you the confidence you need to make the right decisions. And, I can meet with you at the **time** and **place** that is **convenient** for you.

RBC

Ram Krish
Mobile Mortgage Specialist
Tel: 416-526-4996
Email: ram.krish@rbc.com
* Some conditions apply.



- digi Media -

# சக்தியைச் சேமிக்கும் யன்னல்



மகேன் சிங்கராஜா
- வீடு விற்பனைப் பிரதிநிதி -

### எப்படி உங்களது வீட்டிற்கான யன்னலைக் கொள்வனவு செய்வது?

வழமையை விட இம் முறை குளிர்காலம் (winter) குறைந்து காணப்பட்டதால் நாம் இலை உதிர்காலத்தை நெருங்கி விட்டோம் என்பதை உணராமலே பங்குனி மாதத்தை நெருங்கி விட்டோம். வீட்டு வேலை செய்ய வேண்டும் என்று நினைப்பவர்கள் இலையுதிர் காலத்தினை தேர்ந்தெடுப்பது மிகவும் சிறந்தது, ஏனெனில் திருத்தவேலை (contractors) செய்பவர்கள் வேலை இன்றி வெறிச்சோடி இருப்பார்கள். அவர்களிடம் நாம் பேரம் பேசி மிகவும் குறைந்த விலையில் வேலை செய்விக்கக் கூடியதாக இருக்கும். எனவே யன்னலை மாற்ற நினைப்பர்களுக்கு இக் கட்டுரை ஒரு அடிகோலாக இருக்கும் என்ற அடிப்படையில் தொடர்கின்றேன்.

ஒரு சிறந்த வகை யன்னலை வாங்குவது தொடர்பான சில உபயோகமான அறிவுரைகளைப் பயன்படுத்தினால் நீங்கள் சக்தி வினைத்திறன் கொண்ட யன்னல்களை கொள்வனவு செய்து, பணத்தை சேமிக்க முடியும்.

### சக்தி வினைத்திறன் கொண்ட யன்னல்களை கொள்வனவு செய்வதன் மூலம் பெறப்படும் பயன்கள்:

நீங்கள் ஒரு புதிய வீட்டை வாங்குபவராக அல்லது ஏற்கனவே ஒரு வீட்டின் உரிமையாளராக இருந்தாலும், சக்தி வினைத்திறன் கொண்ட யன்னல்கள் உங்களுக்கு பெருமளவு நன்மையைத் தரும். ஆரம்பத்தில் சிறிது அதிகளவு செலவு ஏற்பட்டாலும் நீண்டகால அடிப்படையில் மாதாந்த வெப்பமூட்டல் செலவுகளில் சேமிப்பு ஏற்படும். வீட்டில் இருந்து வெப்பம் வெளியேறுதலைக் குறைப்பதற்கு, சுவர்கள், கூரைகள், Ceilings, வீட்டின் தரை ஆகியவற்றுடன் கண்ணாடிகளும் உதவுகின்றன. வெப்பம் வெளியேறுவதை யன்னல்கள் தடைசெய்வது குறைவு. இவற்றினூடாகவே பெருமளவு வெப்பம் இழக்கப்படலாம் அல்லது வெப்பம் சேகரித்தல் அதிகரிக்கப்படலாம். பொதுவாக உங்கள் வீட்டில் இருந்து இழக்கப்படும் வெப்பத்தின் 25-30 சதவீதமானவை யன்னல்களினூடாகவே வெளியேறுகிறது.

### சொற்பதங்கள் - Terminology

சக்தி வினைத்திறனைக் கொண்ட யன்னல்களின் தன்மைகள் தொடர்பாக சில சொற்பதங்களை அறிந்து வைத்திருந்தால், சிறந்த யன்னல் வகைகளை கொள்வனவு செய்வதற்கு உதவியாக அமையும்.

**Fenestration**: இது ஒரு கட்டடத்தில் யன்னல்களும், கதவுகளும் ஒழுங்கு செய்யப்பட்ட முறையை விபரிக்கும் சொல்

**Emmissivity:** இது குறிப்பிட்ட ஒரு மேற்பரப்பு ஒளி, வெப்பம், வெப்பக் கதிர்வீச்சு என்பவற்றை எவ்வளவிற்கு வெளியேற்றும் திறமை உடையது என்பதை குறிக்கும் சொல்.

### யன்னல்களின் வகைகள் (types of Windows)

இவை வழுக்கும் தன்மையானவை (Sliding), தனியாகத் தொங்குபவை (Single Hung), இணைந்து தொங்குபவை (Double Hung). Bay, வளைந்தவை (Curved) என்பன. உங்களுக்கு தேவையான யன்னலை தெரிவு செய்யும்போது இயற்கை ஒளியை அதிகளவு உட்புகவிடும் தன்மையானதாகவும் உங்களது வதிவிடத்திற்கு பொருத்தமானதாகவும் உள்ளதா என்று கவனம் செலுத்துவது அவசியம்.

### செயற்படும் திறன் (Performance)

வெப்பத்தை கடத்தாத திறமையின் அளவு என்ற பெறுமானத்தின் அடிப்படையிலேயே எந்த ஒரு யன்னலின் செயற்திறனும் தீர்மானிக்கப்படுகிறது. இது R-காரணி என அழைக்கப்படும். ஒளிபுகும் தன்மையான கண்ணாடி போன்றவற்றின் செயற்திறன் U-காரணி என அழைக்கப்படும்.

U-காரணி என்பது இரண்டு வகையான அளவீடுகளைக் காட்டுகிறது. அவையாவன:

#### கண்ணாடியின் மத்திய பகுதி

முழுமையான – யன்னலின் அமைப்பு (Total Window Assembly) இவற்றில் முழுமையான கணிப்பீட்டு அளவைப் பற்றி கவனம் செலுத்துவதே சிறந்தது.

யன்னல்களைத் தெரிவு செய்யும்போது கவனத்தில் எடுக்க வேண்டிய மற்றுமொரு அம்சம் சூரிய வெப்பப் பயன்பெறும் குணம் (Solar Heat Gain Coefficient) அல்லது SHGC. இது ஒரு யன்னலினூடாக எவ்வளவு சூரியக் கதிர் வீச்சு வீட்டினுள் சென்று வீட்டினுள் வதிவிடப் பகுதியை சூடாக உதவுகிறது. இது பூச்சியத்திற்கும் ஒன்று என்ற இலக்கத்திற்கும் இடைப்பட்டதாக குறிக்கப்படுகிறது. கூடிய அளவான எண் பெறுமானம் எவ்வளவுக்கு அதிக சூரிய வெப்பம் உள்ளே வருகிறது என்பதைக் குறிக்கிறது.


**பளபளப்பான மேற்பூச்சு - Glazing:** இவை தனித்த தெளிவான மேற்பூச்சுடையவை, tinted மேற்பூச்சுடயவை, ஒன்றுக்கு மேற்பட்ட கண்ணாடிகளைக் கொண்ட மேற்பூச்சுடையவை, வாயுவினால் நிரப்பப்பட்ட பல கண்ணாடிகளைக் கொண்ட மேற்பூச்சுடையவை என பல வகைப்படும். இவற்றுள் பல பண்ணாடி அடுக்குகளைக் கொண்ட மேற்பூச்சுடையவையே (Multiple – pane glazing) மிகச் சிறந்தவை. இவ்வகையான யன்னல் கண்ணாடிகள் இடைவெளிகளால் (Spacers) பிரிக்கப்பட்ட இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட கண்ணாடி படைகளைக் கொண்டவை. இவ்வகையான யன்னல்கள் குளிர் காலத்தின்போது வெப்பம் இழக்கப்படுவதை தடை செய்வதற்கும் கோடை காலத்தின் போது அதிகளவு வெப்பம் உள்ளே வருவதைக் கட்டுப்படுத்தவும் உதவுகின்றன.

Multiple – pane glazing வகையான யன்னலை விட மேலும் சிறந்த யன்னல் double paned glazing என அழைக்கப்படுகிறது. இதில் ஆர்கன் (argon) அல்லது கிரிப்ரன் (krypton) வாயு நிரப்பப்பட்டிருக்கும்.

### குறைவான வெப்பக் கடத்தல் மேற்பூச்சு (Low – Emissivity Coating)

சில யன்னல் கண்ணாடிகளில், முழு அளவிலான சூரிய வெப்பத்தை வீட்டினுள் உட்புகுத்துவதற்கு அனுமதிக்கும் தன்மையும் அதே சமயம், வெப்பம் வெளியேறுதலைக் குறைப்பதற்கான தன்மையும் உடையதான மேற்பூச்சு இடப்படுகிறது. இந்த மேற்பூச்சு என்பது ஓர் மிகவும் மென்மையான உலோக அல்லது உலோக ஒட்சைட்டு (Metal Oxide) படை.

ஓர் யன்னலில் வெப்பம் வெறியேற்றும் தன்மை (Emssivity) பூச்சியம் முதல் 1 என்ற இலக்கம் வரை அளவிடப்படுகிறது. இந்த எண்ணில் பெறுமானம் எவ்வளவு குறைவாக உள்ளதோ




அவ்வளவிற்கு வெப்பம் இழப்பு குறைவாக இருக்கும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

பொதுவாக ஒற்றைக் கண்ணாடிப் படை கொண்ட யன்னலின் Emissivity பெறுமானம் (E-Value) 0.85 அளவுடையதாகவும், இரட்டைக் கண்ணாடிப்படைகளைக் கொண்ட யன்னலின் Emissivity பெறுமானம் 0.005 என்பதற்கும் 0.20 என்பதற்கும் இடைப்பட்டதாக அமையும். இந்த பெறுமானத்தின் அர்த்தம் - வெப்பத்தில் 95 சதவீதமான அளவு வெப்பம் உருவாகும். எனவே குளிர்காலத்தின்போது குறைவான E-பெறுமான மேற்பூச்சுடைய யன்னல்கள் சூரிய வெப்பத்தை உங்கள் வீட்டினுள் திருப்பி அனுப்புகின்றன. அதே சமயம் கோடை காலத்தில், ஏற்கனவே வீட்டினுள் அகப்பட்டுள்ள வெப்பத்தை வெளியே திருப்பி அனுப்புகிறது.

### கொள்வனவு விலை வேறுபாடுகள் (Cost – Effectiveness)

யன்னல்களின் செயற்படும் திறனைப் பொறுத்த வரையில் ஈரலிப்புக்கான தடுப்புகள், இறுக்கமான சீல்கள், Window Placement என்பன யாவும் முக்கியமான காரணிகளாகும்.

செலவு அதிகமானாலும் குறைவான E மேற்பூச்சுக் கொண்டதும், ஆர்கன் வாயுவினால் நிரப்பப்பட்டதும், இரட்டை மேற்பூச்சுடையதுமான யன்னல்கள் நீண்ட கால பாவனையின் அடிப்படையில் பிரயோசனமானது என்பது கவனிக்க வேண்டிய விடயம்.

### சக்தி நட்சத்திர குறியீடும், விலைக் கழிவுகளும் Energy Star Rebates

யன்னல்களைக் கொள்வனவு செய்யும்போது கனடிய அரசின் அங்கீகாரத்தைக் குறிக்கும் சக்தி வலுத்திறன் நட்சத்திரக் குறியீட்டை (Energy Star) அவதானிக்க மறக்க வேண்டாம். அத்துடன் அரசாங்கம் எந்த விதமான யன்னல்களின் விற்பனை விலையில் கழிவு வழங்குகின்றது எனவும் அறிந்து கொள்ளுங்கள்.

நீங்கள் எதிர்காலத்தில் யன்னல்களை வாங்கும்போது மேற்குறிப்பிட்ட விடயங்களை அவதானித்து வாங்கி பயன் பெறுங்கள்.

mahensingaraja@thaiveedu.com

■ ■ ■



# BRAND NEW TRIDEL CONDO

Hwy 427 & QEW



west village
West Toronto

## OPEN HOUSE "COMING SOON"

## FOR ALL YOUR REAL ESTATE NEEDS

வீடு வியாபார நிலையங்கள் வாங்க விற்க!

To Buy or Sell Home, Business & Investment properties





**Homelife GTA Realty Inc**, Brokerage*
1711 Mccowan Rd, Suit # 206, Toronto, ON M1S 3Y3
416-321-6969

**Gnani Narasingham**
Sales Representative
416-937-8090

**Judy Gnanendran**
Sales Representative
416-629-9797

*Independently Owned and Operated, Realtor®

# வாடகைக்கு விடுவதற்கு முன்...

## வாடகைக்கு விடுவதற்கு முன் வாடகைக்கு விடுபவர் கவனிக்க வேண்டிய விடையம்.

## ஒரு வாடகையை ஏற்பாடு செய்தல்

## சிறந்த வாடகைத் தாரர்களை தேர்ந்தெடுத்தல்

வாடகைக்கு விடுபவர்கள் சிறந்த வாடகைக்காரர்களை மனித உரிமைச் சட்டதிட்டத்தின் கீழ் உள்ள விதிமுறைகளின் படி தேர்ந்தெடுக்க வேண்டும். வாடகையாளரின் வருமானம், கடன் விபரங்கள், வாடகைக்கு இருந்த வரலாறு, கடனுக்கான உத்தரவாதங்கள் ஆகியன பற்றி அந்த விதிமுறைகளில் கூறப்பட்டது போன்று ஆராயப்பட வேண்டும்.

## வாடகைக்கு விடுபவரின் கண்ணோட்டத்திலிருந்து எழும் சில கேள்விகளைப் பார்ப்போம்.

- வாடகைதாரின் வருமானம், கடன் விபரங்கள் மற்றும் வாடகைக்கு இருந்த வரலாறு பற்றி வாடகைக்கு விடுபவர் கேள்விகள் கேட்க முடியுமா?
- வாடகை ஒப்பந்த பத்திரத்தில் எந்தெந்த தகவல்கள் சேர்க்கப்பட வேண்டும்?
- ஒரு புதிய வாடகையாளருக்கு வாடகைக்கு விடுபவர் எந்தெந்த தகவல்களை தெரிவிக்கவேண்டும்?

## வாடகைக்கு விடுபவரின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள்

- வாடகைக்கு விடுபவர் வாடகைதாரர் மீது டிபாஸிட் (உத்தரவாதப்பணம்) மற்றும் பிற கட்டணங்களை விதிக்க முடியுமா?
- வசூலிக்கப்பட்ட உத்தரவாதப்பணம் பணத்திற்கு வாடகைக்கு விடுபவர் வட்டி செலுத்த வேண்டுமா?
- சாவிகளுக்கு என தனியாக டிபாஸிட் பணம் வாடகைக்கு விடுபவர் கேட்க முடியுமா?
- வாடகைதாரரின் இடத்தில் நுழைய வாடகைக்கு விட்டவருக்கு உரிமை உண்டா?
- சட்டத்திற்கு புறம்பாக அந்த இடத்தில் வாடகைக்கு விடுபவர் நுழைந்தால் என்ன நடக்கும்?
- செல்லப்பிராணிகள் வைத்திருப்பவர்களுக்கு வாடகைக்கு விடமாட்டேன் என்று வாடகைக்கு விடுபவர் கூற முடியுமா?

## வாடகை காலத்தை முடிவுறச் செய்தல்.

- வாடகைதாரர் தன்னுடைய வாடகை காலத்தை எப்படி முடிவுறச் செய்யவேண்டும்?
- வாடகைக்காரர் தங்களுடைய வாடகையிலிருந்து வெளியேற எத்தனை தடவை அழைப்பாணை அனுப்ப வேண்டும்?
- ஒரு வாடகைதாரர் தன்னுடைய வாடகை ஒப்பந்தத்தை ரத்துச்செய்ய முடியுமா?
- ஒரு வாடகைதாரர் தான் வாடகைக்கு எடுத்த இடத்தை Sub-Lease எப்படி விடவேண்டும்?
- வாடகைக்கு விட்டவரின் சம்மதம் இல்லாமல் ஒரு வாடகைதாரர் தன்னுடைய இடத்தை Sub-Leaseக்கு விட்டால் என்ன நடக்கும்?
- வாடகைக்கு விட்டவர் ஒரு வாடகைதாரரை எப்படி வெளியேற்ற வேண்டும்?
- ஒரு வாடகைதாரரை வெளியேற்றுவதற்கான வழிமுறை என்ன?
- நீதிமன்ற விசாரணை இல்லாமல் ஒரு வாடகைதாரரை வெளியேற்ற முடியுமா?
- குளிர்காலத்தில் ஒரு வாடகைதாரரை வெளியேற்ற முடியுமா?
- எந்த காரணங்களுக்காக ஒரு வாடகைக்கு விடுபவர், ஒரு வாடகை தாரரை வெளியேற்ற முடியும்?
- வாடகை தாரரிடம் ஒரு செல்லபிராணி உள்ளது என்பதற்காக அவரை வெளியேற்ற முடியுமா?
- வாடகை தாரருடன் ஒரு Room mate (அறைதோழன்) தங்கி உள்ளார் என்பதற்காக அவரை வெளியேற்ற முடியுமா?
- வாடகைக்கு விட்ட இடத்தை தன்னுடைய சொந்த அவசியத்திற்கு பயன்படுத்த விரும்பும் போது, வாடகைதாரரை வெளியேற்ற முடியுமா?
- வாடகைக்கு விட்டவரிடமிருந்து வீட்டை விலைக்கு வாங்கியவர்; வீட்டில் குடியிருக்க விரும்பும் போது வாடகைதாரரை வெளியேற்ற முடியுமா?
- வாடகைதாரர் தான் வாடகைக்கு இருக்கும் வீட்டில் யாராவது தோழர் அல்லது விருந்தினரை தங்க வைத்தால் அவரை வெளியேற்ற முடியுமா?
- வீட்டை வாடகைக்கு விட்டவர், வீட்டை காலி செய்யும்படி அழைப்பாணை அனுப்பினால் வாடகைதாரர் என்ன செய்ய வேண்டும்?

## வாடகையாளரால் கைவிடப்பட்ட வீடு.

- வாடகை தாரர் எந்த வித முன்னறிவித்தலும் அனுப்பாமல் வீட்டை விட்டுச் சென்றுவிட்டால், வீட்டின் பூட்டுகளை மாற்றிவிட்டு அதை வேறு ஒருவருக்கு வீட்டு உரிமையாளரால் வாடகைக்கு கொடுக்க முடியுமா?

வாடகைக்கு விடுபவருக்கு மேலும் எழும் சில முக்கியமான கேள்விகளை நாம் இப்போது பார்ப்போம்.

## ஒரு வாடகை ஒப்பந்த பத்திரத்தில் எந்தெந்த தகவல்களை சேர்க்கவேண்டும்?

ஒப்பந்த பத்திரத்தில் வாடகைக்கு விடுபவரின் சட்டப்பூர்வமான பெயர் மற்றும் முகவரி எழுதப்பட்டிருக்க வேண்டும். அப்போதுதான் வாடகைதாரர் சட்டப்படியான நடவடிக்கைகள் எடுக்க அல்லது ஆவணங்கள் அனுப்பவிரும்பினால் அனுப்ப முடியும்.

## வாடகை ஒப்பந்த பத்திரத்தில் மேலும் சேர்க்கப்படவேண்டிய கூடுதல் தகவல்கள் எவை.

- செலுத்தப்பட வேண்டிய வாடகை பணம்.
- வாடகை செலுத்தப்பட வேண்டிய தேதி.
- வாடகையுடன் சேர்த்து செலுத்தப்பட வேண்டிய மின்கட்டணம், கார் நிறுத்தும் கட்டணம், போன்ற பிற செலவுகள்.

## அனைத்து வாடகை தாரர்களும் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள்:

- வாடகை ஒப்பந்தப் பத்திரத்தில் வீட்டு வாடகை சட்டத்திற்கு புறம்பான எந்த விதிமுறைகளும் மற்றும் நிபந்தனைகளும் இருக்க கூடாது. அப்படி ஏதாவது இருந்தால் அது வாடகைக்கு விடுபவரை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது.
- வாடகைக்கு விடுபவர் மற்றும் வாடகைதாரர் எந்த தகவலை ஒப்பந்த பத்திரத்தில் குறிப்பிடவேண்டும் என்று அரசின் சட்ட நிர்வாக சபை (Board) பரிந்துரை செய்யாது. இருதரப்பினரும் தங்கள் சொந்தமுடிவில் ஒப்பந்த பத்திரத்தை தாயர் செய்யவேண்டும். (ஒப்பந்த பத்திரத்தை கையெழுத்து இடுவதற்கு முன் சட்ட ஆலோசனை பெறுவது நல்லது.)
- வாடகை ஒப்பந்தம் தயாரிப்பதற்கு முன் வாடகைக்கு விடுபவரும் வாடகைதாரரும் அது சம்பந்தமான தேர்ச்சி பெற்ற வல்லுனரிடமிருந்து சரியான ஆலோசனை பெறுவது நல்லது.

## ஒரு புதிய வாடகை தாரருக்கு எந்தெந்த தகவல்களை தெரிவிக்க வேண்டும்?

இருதரப்பினரையும் கட்டுப்படுத்தும் அனைத்து உரிமைகள் மற்றும் பொறுப்புகள் சம்பந்தமான விபரங்களை அளிக்க வேண்டும். அத்துடன் வாடகைக்கு விடுபவரின் சட்டப்பூர்வமான பெயர் மற்றும் முகவரி ஒப்பந்த பத்திரத்தில் சேர்க்கபட வேண்டும். வாடகை தாரர் ஒப்பந்த பத்திரத்தில் கைஒப்பமிட்டு, வாடகைக்கு விடுபவரிடம் அதை கொடுத்த பிறகு 21 நாட்கள் சென்ற பின்னர் வாடகைதாரர் மற்றும் வாடகைக்கு விடுபவர் ஆகிய இருவரின் கை ஒப்பங்கள் அடங்கிய ஒப்பந்த பத்திரத்தை வாடகைதாரரிடம் வாடகைக்கு விடுபவர் கொடுப்பார். அப்படி கொடுக்கவில்லை என்றால் வாடகைதாரர் வாடகை கொடுக்க வேண்டியதில்லை. ஆனால் சரியான ஆவணங்கள் வாடகையாளருக்கு கொடுக்கும்பட்சத்தில் முழுப் பணத்தை உடனே செலுத்த வேண்டும். அப்படி அவர் செலுத்தாவிட்டால் வாடகைக்கு விட்டவர் அவரை வெளியேற்ற உரிமை உண்டு.



கிருபா கனகசபை
- வீடு விற்பனைப் பிரதிநிதி

## வாடகைக்கு விடுபவர் வேறு ஏதாவது முற்பணம் அல்லது கட்டணம் வாடகைக்கு வருபவரிடம் கேட்க முடியுமா?

இருவரும் வாடகை ஒப்பந்த பத்திரத்தை எழுதுவதற்கு முன் வேறு கட்டணங்கள் பற்றி முடிவு செய்வது அவசியம். முற்பணம் ஒரு மாத வாடகைப் பணத்தைவிட கூடுதலாக இருக்க கூடாது. ஒப்பந்தத்தின் கடைசி மாதத்தில் முற்பணத் தொகையை வாடகைக்காக பிடித்துக்கொள்ள முடியும். முற்பணம் பெற்றுக்கொண்ட வீட்டு உடமைக்காரர் அதற்குரிய வட்டியை கொடுக்க வேண்டும் ஒவ்வொரு 12 மாதங்களுக்கு ஒருமுறை வட்டியை கொடுக்க வேண்டும்.




## வாடகைக்கு விடுபவர் சாவிகளுக்காக ஒரு தொகையை அறவிடலாமா?

அறவிடலாம். ஆனால் பூட்டுகளை மாற்றுவதற்கு ஆகும் செலவைவிட அது கூடுதலாக இருக்கக் கூடாது.

உசாத்துணை:
The landlord and tenant board – Ontario, Canada.

kirew.kanagasabai@thaiveedu.com

■ ■ ■

ROYAL SHUTTERS & BLINDS INC.
DIRECT FROM MANUFACTURER
Everything Factory Direct Prices
உங்கள் இல்லத்தின் உட்புறத்திற்கு ஏற்றவகையில் யன்னல்களை மறைப்புச் செய்திடவும் அழகு படுத்திடவும் நாடுங்கள்


Sales - Service - Installations
Custom Made
Wood & Vinyl Shutters: California Style Shutters, Plantation Style Shutters, Traditional Style Shutters, Arches
(We Do Any Colour Of Paint & Stain)
Blinds: Vertical Blinds, Venetian Blinds, Wood Blinds, Bamboo Shades, Roller Shades, And More
Draperies: Swags, Sheers, Valance, Curtains, And More
Workmanship Guaranteed
Free Shop At Home
CALL FOR A FREE ESTIMATE:

தாஸ் Thaas Sivathason
13 Years of Experience in Shutter Business
Tel: (416) 562-0340
Full Satisfaction Guaranteed

# வீடு வாங்க விற்க






3 Bedrooms 3 Washroom
Finished Basement



**Kuga Raveendrarajah**
Broker
Direct: **416-843-8585**


**Mathan Selvendarakumaran**
Sales Representative
Direct: **416-625-2870**




3 Bedrooms 2 Washroom
Finished Basement




4 Bedrooms 3 Washroom
Finished Basement




HomeLife Higher Standards

## HomeLife Today Realty Ltd., Brokerage*

31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6

**Bus: 416-298-3200**

*Independently Owned and Operated, Realtor



# எமக்கென்று ஒரு தனிக்குடில்

சொந்த இல்லத்திற்கு தேவையான அடமானத்தை சுலபமாகப் பெறுவதற்கு பலவருட அனுபவம் பெற்ற முகாமையாளர்களை நாடுங்கள்



**TWO PROFESSIONAL MORTGAGE SPECIALISTS UNDER ONE ROOF WITH RATES YOU CAN'T BEAT**

**MAILVAGANAM (MIKE) AHILAN**
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
**416-220-1184**

**VINCE SINNADURAI**
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
**416-917-9462**

# 416.438.1688

**Fax: 416 438 1612**

**1421 Kennedy Rd,**
**Scarborough, ON. M1P 2L6**

RBC Financial Group

# வீடு: 2008! 2009!! 2010!!!



கருணா கோபாலபிள்ளை
- வீடு விற்பனை முகவர் -

தாய் வீடு சஞ்சிகையின் வாசகர்களுக்கு வணக்கம்.

பலதுறைகளில் ஒருவர் பாண்டித்தியம் அடைவதை விட சில துறைகளில் அதிக அனுபவஸ்தர்களாக காணப்படுவது வழமை போல, வீடு சார் தகவல்களையும் அதன் பின்னணி தகவல்களையும் வாசகர்களாகிய உங்களுக்கு அளிப்பதில் தரத்துடன் கூடிய தகைமையைப் பெற்றிருப்பது தாய்வீட்டிற்கு ஓர் சிறப்பு.

ஒரு சீரான வளர்ச்சியிலோ அன்றி சீரான வீழ்ச்சியிலோ சென்றுகொண்டிருந்த கனடிய வீட்டு சந்தை நிலவரமானது கடந்த சில மாதங்களாக எதிர்பாராத ஏற்றத்தாழ்வுகளை கொண்டிருப்பது நாம் அவதானிக்க முடிகின்றது. இவ்வாறு தடுமாறும் சந்தையினை பல நிதிசார் நிறுவனங்கள், வீட்டுதுறைசார் அமைப்புக்கள் பலவாறான கருத்துக்களால் வர்ணித்த வண்ணமுள்ளனர். நேர்மறை எதிர்மறையான கருத்துகள் அன்றாடம் அவரவர் வியூகங்களில் வெளிப்பட்ட வண்ணமுள்ளன.

இவ்வகை செய்திகளால் நம்மவர் பலர் தண்ணீரில் நாணல் ஆகி அன்றாடம் தமது வைத்திருக்கும் அல்லது வாங்க எத்தணிக்கும் வீடுகளையிட்டு கவலை கொண்டிருப்பதுவும் காணக்கூடியதாக இருக்கின்றது. ஆகையால் 2008 - 2009 - 2010 ஆண்டுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் எதிர்நோக்குகளை ஆராய்வதை இன்றைய நோக்கமாக கொள்வோம்.

ரொரன்றோ மற்றும் சுற்றுவட்டாரங்களின் வீடு விற்பனை விபரங்களை 'MLS' (Multiple Listing Service) கொண்டிருக்கின்றது. இதன் சேவைகளை பதிவு செய்யப்பட்ட வீடு விற்பனை முகவர்கள் மூலம் பெற்றுக்கொள்ளலாம். அவர்கள் வெளியிட்டுள்ள தகவலின்படி 2009ஆம் ஆண்டில் 87,308 பரிமாற்றங்கள் இடம் பெற்றுள்ளது. இவ் அளவானது 2008ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 17% பரிமாற்ற வளர்ச்சியினைக் கொண்டுள்ளது என்பது அவர்கள் கருத்து. 2009ஆம் ஆண்டின் பரிமாற்றங்கள் குறிப்பாக வருட இறுதியில் அதாவது டிசம்பர் மாதத்தில் மட்டும் 5,541 இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. 2004 - 2006 களில் காணப்பட்டது போன்று டிசம்பர் மாத வளர்ச்சியும் ஓர் அதீத பரிமாற்றமாகவே காணப்பட்டது. இருப்பினும் ஒட்டுமொத்தமாக பார்க்குமிடத்து 2007ஆம் ஆண்டில் அதிகூடிய எண்ணிக்கை அளவை எட்டிய 93,193 பரி-

மாற்றத்தை காட்டினும் சற்று குறைவாகவே காணப்பட்டதற்கு காரணிகளாக 2009ஆம் ஆண்டின் ஆரம்ப பகுதியில் இடம்பெற்ற மந்தமான போக்கினை குறிப்பிடலாம்.

மிகவும் மெதுவாக ஆரம்பித்த 2009இன் ஆரம்ப பகுதிகள், அரையாண்டு காலத்தில் சூடுபிடிக்கத் தொடங்கியது. வாடிக்கையாளர்களின் நம்பிக்கை மற்றும் பொருளாதார மாற்றங்கள், ரொரன்ரோ மற்றும் சுற்றுவட்டாரங்களில் திடீர் கேள்வி அதிகரிப்பினை ஏற்படுத்தியது. நீண்ட காலமாக சந்தையில் தேங்கி காணப்பட்ட வீடுகள் கேள்விகள் நிமித்தம் திடீர் விலையதிகரிப்பினை கண்டது. இதன் தொடர் வளர்ச்சி மேலும் பல வாடிக்கையாளர்களை தன்னகத்தே கவர்ந்தது.

இவ்வாறு தரமான வளர்ச்சியினை கொண்டிருக்கும் இத்துறையினை பல ஆய்வாளர்களும் எதிர்வுகூறுபவர்களும் எவ்வாறு கணிப்பிட்டுள்ளார்கள் என்று பார்ப்போம். இவ் எதிர்வு கூறுகள் ரொறன்ரோ ஸ்ரார் பத்திரிகையில் வெளியான தகவல்களின் சாராம்சமே.

ரொறன்ரோ வீட்டு விலைகளில் 2010ஆம் ஆண்டில் சிறிதளவு சரிவு காணப்படலாம். இக் கூற்றின் அடிப்படைத் தரவாக: சராசரி வீட்டின் விலையாக $396,200ஆக சென்ற ஆண்டு (2009) கணிப்பிடப்பட்டது. இவ்விலையானது 1.6% வீழ்ச்சி பெற்று காணப்படும் அதாவது $389,00ஆக காணப்படும் என்பது அவர்கள் கூற்று. வேலை வாய்ப்புகள் உருவாக்குவதில் காணப்படும் மந்த நிலையே இதன் அடிப்படைக் காரணமெனப் பொருளி-

> " வீடுகளுக்கு அதிகரிக்கும் கேள்வியானது
>
> பெரிதும் வேலையதிகரிப்பிலேயே தங்கியிருக்கின்றது.
>
> இருப்பினும்,
>
> தற்போதைய கேள்வியதிகரிப்புக்கு மறைமுக காரணியாக
>
> அதிகுறைந்த வட்டி விகிதமும்,
>
> இவ் வட்டி விகிதம்
>
> அதிகரிக்குமே என்கின்ற பயமுமே விளங்குகின்றது. "

முடிவு; 2009 ஆண்டில் வீட்டின் சராசரி விலையானது 4% வளர்ச்சியினை எட்டியது. இந்த 4% வளர்ச்சியானது 395,460 டிசம்பர். மாதத்தில் அதே வளர்ச்சி சராசரியாக 411,931ஆக காணப்பட்டது. பரிமாற்றங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு கேள்வியின் மூலம் விலையதிகரிப்பு என விற்பனை வேகமானது மிகவும் பலமாக முன்னேற்றம் கண்டது. (இங்கு காணப்படும் அட்டவனை தரவு ரொறன்ரோ வீடு துறைசார் நிறுவனத்தினை அடிப்படையாக கொண்டது.)

யலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

அண்மையில் வெளியான தகவலின்படி, வீடுகளுக்கு அதிகரிக்கும் கேள்வியானது பெரிதும் வேலையதிகரிப்பிலேயே தங்கியிருக்கின்றது. இருப்பினும் தற்போதைய கேள்வியதிகரிப்புக்கு மறைமுக காரணியாக அதிகுறைந்த வட்டி விகிதமும், இவ் வட்டி விகிதம் அதிகரிக்குமே என்கின்ற பயமுமே விளங்குகின்றது.

இக் கூற்றினை ஆமோதிக்கும் வண்ணம் மாசி மாதம் 16ஆம் திகதி அரசினால் ஏற்படுத்தப்பட்ட நிதி கடன் வழங்குவதில் புதுமாற்றங்கள் கூறப்பட்டது (அதாவது 35 வருட கடன் வழங்கும் காலம் 30 வருடமாக குறைக்கப்பட்டுள்ளது. தரக்கணிப்பீடு 3 வருடத்திலிருந்து 5 வருடமாக மாற்றப்பட்டுள்ளது போன்றவை) இவ்வாறாக கடன் வழங்கும் முறைகளில் கடினமான போக்கினை அறிமுகப்படுத்துவதன் மூலம், எதிர்கால ஏமாற்றங்களை தவிர்ப்பதே அவர்களின் நோக்கமென கொள்ளலாம். 2009 ஜனவரிமாத விற்பனை எண்ணிக்கையை விட சுமார் இரட்டிப்பு மடங்கு விற்பனை 2010 ஆரம்ப பகுதிகளில் காணப்பட்டது. இவ்வாறு கடந்த ஒன்பது மாதங்களில் காணப்பட்ட தொடர் வளர்ச்சி தற்போதும், தொடரும்

ஒன்பது மாதங்களுக்கும் சீரான அல்லது சற்று குறைவான போக்கினையே கொண்டிருக்கும் என்பது ஒரு சாராரின் கருத்து. ரொறன்ரோ வீடு விற்பனை எண்ணிக்கையின் அடிப்படையில் 2008ஆம் ஆண்டு சாதனை ஆண்டில் இரண்டாம் இடத்தினை பெற்றிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

Bank of Canadaவின் அறிக்கையின் பிரகாரம், வட்டி விகிதமானது இவ்வாண்டின் நடுப்பகுதி வரை மாறாமலே காணப்படும். இவ்வகை சலுகைகள் விற்பனைத் துறையினை இன்னும் சிறிது காலம் தாங்கிப்பிடிக்கும் என்பதும் ஓர் ஊகம்.

மேலே கூறியது போன்று வீடு விற்பனையில் நிஜ கேள்வி அதிகரிப்பானது, வேலைவாய்ப்பிலேயே தங்கியிருக்கின்றது. அவ்வாறிருக்க நவம்பர், டிசம்பர் மாதங்களில் வேலையற்றோர் எண்ணிக்கை 9.5%ஆக காணப்பட்டதும், இவ் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி காணப்பட்டதும், காணப்படாததும் நிட்சயம் கருத்தில் கொள்ள வேண்டிய தொன்று.

வாடிக்கையாளர்கள் குறைந்த வட்டிவிகிதத்தினை தமக்கு சாதகமாக பயன்படுத்துவதற்காக எண்ணினாலும் கூட கடனினை மீள செலுத்துவதற்கு வேலைவாய்ப்பு என்பது இன்றியமையாதது என்பதனையும் கருத்தில் கொள்ளுதல் வேண்டும். அது மட்டுமன்றி, இதே போன்ற குறைவான வட்டிக்கடன்களுடன் கூடிய சலுகைகள் தொடர்ச்சியாக கிடைக்கப் போவதில்லை என்பதும் யாவரும் அறிந்ததே

சி.ஐ.பி.சி பொருளியலாளர் ஒருவரின் கூற்றுப்படி வீட்டின் விலைகளில் ஓர் சீரானபோக்கு காணப்படும் என்றும் தொடரும் வருடங்களில் இவ் விலைகளின் வளர்ச்சி சிறிதளவாகவே இருக்கும் என்பதுமாகும்.

எது எப்படியோ வரலாற்றில் இல்லாத வளர்ச்சியினை ரொறன்ரோ வீடுகள் பெற்றிருக்கின்றது. வீடுகளின் விலைகள் மிகவும் அதிகம் என்பதும் ஒரு சாரார் கருத்து.

சரி வாசகர்களே, இவ் ஆய்வானது சில எண்ண ஓட்டங்களில் இருந்த உங்களுக்கு ஓர் தெழிவினை ஏற்படுத்தியிருக்கும் என்கின்ற எண்ணத்தில், உங்கள் முடிவுகளை சில பல தகவல்களின் அடிப்படையில் மேற்கொள்ளுங்கள்.

நீங்கள் முதலிடும் எத்துறையும் உங்களுக்கு லாபகரமானதாக இருப்பதற்கு அத்துறை பற்றி அறிந்தவர்களுடன் அளவளாவுங்கள் அல்லது அது பற்றிய தகவல்களை சேகரித்து முழுப் பயனையும் பெறுங்கள். எண்ணித் துணிக கருமம். மீண்டும் வரும் இதழ்களில் இணைந்து கொள்வோம்.

karunagopalapillai@thaiveedu.com

■ ■ ■

இணையத்தளத்திலும்'தாய்வீடு'
www.thaiveedu.com
இணைந்து கொள்ளுங்கள்
'தாய்வீடு' facebookஇல்
www.facebook.com/thaiveedu





**Full-time Real Estate Agent**

# Nada G. Nadarajah B.V.Sc

Sales Representative

**Call Me @ 416 616 8751**

"An award-winning realtor with 14 years experiance".




**Markham & Sheppard**
Condo. Apartment
2 Bedrooms - 2 Washrooms
Close to Schools & Major Plazas




**McCowan & Highglen**
2-Storey Detached
4+1 Bedrooms - 5 Washrooms
Newly Finished Basement




**McClevin & Neilson**
Condo. Apartment
2 Bedroom - 2 Washroom
Approx. 1000 Sq. Ft




**Markham & Tapscott**
Industrial Condo. Unit
Approx. 800 Sq. Ft
Well Maintained Complex




**Neilson & Sheppard**
Condo. Apartment
2 Bedrooms - 2 Washrooms
Close to Schools & Major Plazas




**McCowan & 16th**
Detached 2-Storey
3 Bedrooms - 3 Washrooms
Finished Basement

**HomeLife**
Landmark Realty Inc., brokerage
5200 Finch Ave. E, Suite 106
Toronto, ON M1S 4Z4
Bus: 416 293 5093
nanadarajah@trebnet.com

HOMELIFE HIGHER STANDARDS



# " A Goal without a plan is just a wish"

என்றும் உங்களுடன்..

## Homes Of This Week



**Justin William**
Broker
Cell: 416.803.7344



**Ravi Raveendran**
Broker
Cell: 416.817.8479




**Sasi Chelvaratnam**
Sales Representative
Cell: 416.725.1125

Your Chance to Win






- 4+2 Bedroom
- Hardwood on Main Floorl
- Convenient Location
- Close To All Amenities




- 2 Bedroom Beautiful Condominium
- Two Full Bathrooms
- Convenient Location. TTC at door Steps
- WHY ? Pay Rent. While You Can Own This.





- Beautiful Townhouse
- 3 Bedrooms & 2 Washrooms
- Hardwood Floor
- Close To School And TTC




- 3 Bedroom Detached House
- Few years Old
- Close to All Amenities
- A Must See To Appreciate




- 4 Bedroom Detached House
- Hardwood Floor On Main Floor
- 3 Years New
- Close to Shopping and Hwy




- 2 bedroom Luxury Condo
- Shows Very Well
- 24 hrs Security
- Convenient & Quiet Location




- Executive 4+1 Bedroom Home
- Huge Pie Shaped Lot
- Basement Apartment
- Quiet Court In Great Location




- 4 Bedroom Detached House
- Less Than 3Years Old
- Prime Boxgrove Area
- Hardwood Floor Through out




- 4 Bedroom Detached House
- Newly Upgraded Property
- Separate Entrance
- Close To School




- Excellent Investment
- Store with Apartments
- Anchored Tenants
- Call for More details

**HomeLife GTA Realty Inc.,** Brokerage* 1711 McCowan Rd, Suite 206, Scarborough, On. **Office: 416.321.6969**

This is not intend to solicit properties currently listed for sale

*Independently owned and operated

# கடனும் வங்கிக் கணக்கும்

சிவாஜினி
பாலராஜன்



கடன் தொல்லை மிகப்பெரிய தொல்லையாக பலருக்கு உண்டு. எவ்வாறெல்லாம் கடன் பட முடியுமோ அவ்வாறெல்லாம் கடன் பட்டு அவதியுறுவோர் பலர். வீட்டு மோட்கேஜ் கடன், வங்கிக் கடன் இப்படிப் பல கடன்களிடையே வாழும் வட அமெரிக்கர்கள் பலருக்கு புதிய கடன் ஒன்று அதுவும் பலரால் அடையாளம் காணப்படாத கடன் சேர்ந்து கொள்வதாக ஆராய்வுகள் கூறுகின்றன. இந்தக் கடன் மற்றைய வங்கிக் கடன்கள் போல உடல் ஆரோக்கியத்தினை மறைமுகமாக பாதிக்கமாட்டாது, நேரடியாகவே பாதிப்பினை ஏற்படுத்தும். அந்தக் கடன் என்ன என்பதனை அறிய வேண்டும் எனப் பலருக்கும் ஆர்வம் நிறையவே இருக்கும். அதுதான் நித்திரைக் கடன் ஆகும். இந்த நித்திரைக் கடன் என்பது மிகவும் பிரச்சினையான ஒரு விடயமாக இருப்பதாக நித்திரைக்கான ஆய்வாளர் மையம் கூறுகின்றது.

நல்ல தூக்கமும் மகிழ்ச்சியும் இருந்தால் மனிதன் மிகவும் இளமையாக இருப்பான். முதுமை அவனை நெருங்காது என்று மிகப் பெரும் தத்துவஞானி “பிளாட்டோ” கூறியிருக்கின்றார். இது அறிவியல் ரீதியாக நிரூபணம் செய்யப்பட்ட உண்மையும் கூட.

ஒவ்வொருவருக்கும் தேவையான தூக்கத்தின் அளவு அவரவர் வயதிற்கேற்ப வேறுபடுகிறது. பிறந்த குழந்தைக்கு 16 -20 மணி நேரம் வரையும் வயது வந்தவர்களுக்கு 7-9 மணி நேரம் வரையும் வயதானவர்களுக்கு 5-6 மணி நேரம் வரையும் தூக்கம் தேவைப்படுகிறது. இதில், இந்த தூக்கத்தின் அளவு கூட ஒவ்வொரு மனிதனுக்கும் வித்தியாசப்படும். சிலருக்கு ஆகக் குறைந்த காலமான 7 மணி நேரம் போதுமானதாக இருந்த போதிலும் வேறு சிலருக்கு அதிகமான நேர மான 9 மணி நேரம் தேவைப்படும். மேற்கூறப்பட்ட நேரங்கள் ஒரு அண்ணளவான கணிப்பீடே அன்றி உண்மையில் ஒவ்வொருவருக்கும் தேவையான நித்திரையின் அளவானது அவர்களது உயிரியல் மணிக்கூட்டி னால் ‘circadian rhythm’ நிர்ணயிக்கப்படும். உயிரியல் மணிக்கூடு என்பது 24 மணிநேரமும் எமது உடல் வெப்பநிலை, ஓமோன் சுரத்தல், போன்ற பலவிதமான நிகழ்வுகளை வரைமுறைப்படுத்தும் அதேசமயம் மிக முக்கியமாக நித்திரை, விழிப்பு என்பவற்றினையும் கட்டுப் படுத்தும் ஒரு செயற்பாடாகும்.

“தூங்காதே தம்பி தூங்காதே! சோம்பேறி என்ற பெயர் வாங்காதே” என்று கூறிய காலம் மெல்ல மாறி வருகிறது. இன்றைய அவசர உலகத்தில் பொருளாதாரத் தேவைகளை ஈடு செய்யவும், வசதிகளைப் பெருக்கிக் கொள்ளவும் மக்கள் தூக்கத்தைக் குறைத்துக் கொண்டு உழைத்தாகவேண்டிய நிர்பந்தத்தில் தள்ளப்பட்டுள்ளார்கள். (இதற்கு ஒரு சிலர் விதிவிலக்காகவும் இருக்கின்றார்கள். உடல் வளைந்து உழைக்காது அரச ஊதியம் பெற்று இலவச தொலைபேசியினை பாவித்து வம்பளந்து மேலும் தொடர்ச்சியாக நாள்முழுவதும் ஒலிபரப்பாகும் சின்னத்திரைகளில் முழுநேரத்தையும் செலவழித்து நாட்டையும் வீட்டையும் பாதாளத்தில் தள்ளுகின்றனர். இப்படிப்பட்ட சிலரினால் உண்மையிலேயே உடலில் குறைபாடுள்ள, உழைக்க முடியாத பலர் பாதிக்கப்படுவது மிகவும் மனவருத்தப் படவேண்டிய விடயம்) அதிகத் தூக்கம் என்ற முனையிலிருந்து பயணித்து நாம் இப்போது தூக்கமின்மை என்ற முனையை நெருங்கிக் கொண்டிருகிறோம். இரு முனைகளுமே ஆபத்தானவைதான்.

இயற்கையின் வரப் பிரசாதமான தூக்கத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளாவிட்டால் நிறைய சிக்கல்கள் துளிர்விட ஆரம்பித்துவிடும். இந்தப் பிரச்சினைகளை வட அமெரிக்காவில் வசிக்கும் மக்கள் அதுவும் நம்மவர்கள் அதிக அளவில் சந்தித்து வருகின்றனர். டொலர் கனவுகளால் இயற்கையான தூக்கத்தில் வரும் கனவுகளை எம் மக்கள் துறக்க ஆரம்பித்துவிட்டனர். எனவே தூக்கம் குறித்த ஆய்வுகளும் அதன் பரிகாரங்களும் காலத்தின் கட்டாயமாகி தொடர்கின்றன. முன்னெப்போதையும் விட விஞ்ஞானிகளும் ஆராய்ச்சியாளர்களும் தூக்கம் பற்றி ஆராய்வுகளை மும்முரமாக மேற்கொண்டு இருக்கின்றனர்.

## தூக்கமின்மைக்கான காரணங்கள்





தூக்கமின்மைக்கு பல விதமான காரணங்கள் இருக்கும். இது ஒவ்வொரு மனிதனுக்கும் வேறுபடுவதால் எது காரணம் என்பதை நாமே கண்டு ஆராய்ந்து கொள்ள வேண்டும். உதாரணமாக தவறான பழக்க வழக்கங்கள், சுகாதாரம் மற்றும் சூழ்நிலை, மனநிலை, உடல் நோய், அளவுக்கதிகமான தேநீர், மதுபானங்கள், போதை பொருட்கள், புகை பிடித்தல், நல்ல காற்றோட்டமில்லாத படுக்கையறை, அதிக வெளிச்சம் உள்ள படுக்கை அறை மற்றும் அதிக சத்தம் உள்ள படுக்கை அறைகளில் உள்ளவர்களுக்கு தூக்கமின்மை ஏற்படும். மேலும் இரவில் அதிக அளவிலான உணவு உண்பதாலும் குறிப்பாக 11 மணிக்கு மேல் உணவு அருந்திவிட்டு உடனடியாக உறங்கப்போவது அல்லது உணவு உண்ணாமல் பட்டினியாக தூங்குவது தூக்கத்தை கெடுக்கும். அதிக உடல் உழைப்பு உள்ள நபர்களுக்கு அதனால் ஏற்படும் உடல்வலி காரணமாக தூக்கம் கெடும். அதிக உடல் உழைப்பு இல்லாத நபர்களுக்கும் தூக்கம் கெடும். அதுமட்டுமல்லாது சில நோய்களும் அதற்கு எடுக்கும் மருந்து வகைகளும் கூட தூக்கத்தினை கெடுக்கக் கூடியவை.

இளையோர் மிக முக்கியமாக பல்கலைக் கழக மாணவர்களுக்கு படிப்பு காரணமாக நித்திரையின்மையின் அளவு கூடுகின்றது. பொதுவாக அவர்களின் வேலைப் பழு மிகவும் கூடியதாகக் காணப்படுவதால் அவர்களுக்கு போதியளவு தூக்கம் கிடைப்பதில்லை. இவை அனைத்தினையும் விட சிலருக்கு snoring, sleep apnea, insomnia, narcolepsy போன்ற குறைபாடுகள் இருக்கலாம் இவற்றின் காரணங்களினாலும் இவர்களுக்கு போதியளவு தூக்கம் கிடையாது விடுகின்றது.

## குழந்தைகளுக்கான தூக்கமின்மை ஏற்படக் காரணங்கள்:

இரவில் சரியான உணவு உண்ணாமை அல்லது அதிக உணவு உண்ணுதல், வயிற்றில் கிருமிகள் இருத்தல், படுக்கையறையில் அடிக்கடி சிறுநீர் கழிப்பதாலும், பயம் மற்றும் சத்தம் காரணமாகவும் சிறுவர்கள் அல்லது குழந்தைகளின் தூக்கம் குறையலாம்.

## நித்திரைக்கடன் என்றால் என்ன? நாங்கள் நித்திரையினை வேறு யாரிடமாவது கடனாகப் பெறுகின்றோமா?

நித்திரைக் கடன் = ஒரு மனிதனுக்கு கிடைக்க வேண்டிய நித்திரை – அவன் பெற்றுக் கொண்ட நித்திரை

பொதுவாக ஒவ்வொருவருக்கும் ஒரு குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட அளவான நித்திரை தேவைப்படுகின்றது. இவ்வாறான இந்த நித்திரையினை அவரினால் பெற்றுக்கொள்ள முடியாத போது அது அவரது வாழ்நாள் முழுவதுமாக தொடர்ந்து கடனாக எடுத்துச் செல்லப்படுவதாக ஆய்வுகள் கூறுகின்றன. கடந்த நூற்றாண்டைச் சேர்ந்த மக்களை விட தற்போதைய மக்கள் ஒன்றரை மணிநேரம் குறைவாக தூங்குவதாக ஆய்வுகள் கூறுகின்றன.

## எங்கள் தூக்கம் போதுமானதா என்பதை எவ்வாறு அறிவது?

பகல் நேரத்தில் நீங்கள் தூங்கி வழிந்தால் நீங்கள் முதல் இரவு கொண்ட தூக்கம் குறைவானது என்றே அர்த்தமாகும். முக்கிய வேலையின் போது தூங்கி வழிந்தால் மட்டுமின்றி, சலிப்படையச் செய்யும் வேலையின் போது தூங்கி வழிந்தால் கூட போதாது என்றே கொள்ள வேண்டும். (இங்கு நாம் கவனத்திற் கொள்ள வேண்டிய ஒரு விடயமும் உண்டு. சாப்பிட்டவுடன் நித்திரை வருபவர்கள் நித்திரைக் கடன் இருப்பதாகக் கொள்ளுதல் கூடாது. இனிப்பு அல்லது மாச்சத்து நிறைந்த உணவினை உண்டால் அவ் உணவானது எமது மூளையினைத் தூண்டி கூடிய அளவிலான இரசாயனத் தூண்டிகளான neurotransmitter, serotonin என்பவற்றினை உண்டாக்குவதால் இவை தூக்கத்தை ஏற்ப டுத்துகின்றன.) ஒருவர் படுக்கையில் சாய்ந்த 5 நிமிடங்களுக்குள் வழமையாகத் தூங்கிவிடுகிறார் எனில் அவருக்கு பாரதூரமான தூக்கப் போதாமை இருக்கக் கூடும் அல்லது தூக்கக் குறைபாட்டு நோய்கள் இருக்கக் கூடும் என இத்துறையில் நிபுணத்துவம் பெற்றவர்கள் கூறுகின்றார்கள்.

கோழித் தூக்கம் என்பதும் இதன் மற்றொரு வெளிப்பாடு ஆகும். முழித்திருக்கும் வேளைகளில் தன்னை அறியாமல் கண்ணயர்வதைத் தான் நாம் கோழித் தூக்கம் என்கிறோம். ஆங்கிலத்தில் Microsleep என்கிறார்கள். ஒருவருக்கு நித்திரைக் கடன் அதிகமாக அதிகமாக கோழித்தூக்கத்தின் அளவு அதிகரிக்கும். இந்தக் கோழித்தூக்கமானது ஒரு சில செக்கன்களிலிருந்து சில நிமிடங்கள் வரை நீடிக்கலாம். ஆனால் தான் தூங்குகின்றோம் என்பதனை தூங்குபவர் அறிந்து கொள்வதில்லை. நித்திரைக்கும் விழிப்புக்கும் இடைப்பட்ட நிலையாகவே இது கருதப்படுகின்றது. அதனால் அவ்வாறான தூக்கத்தில் இருப்பவரால் வெளிக் காரணிகளுக்கு ஏற்ப இயங்க முடிவதில்லை. தெருவில் சிவப்பு விளக்கு எதிரே இருப்பது தெரியாமல் வாக-

32ம் பக்கம் பார்க்க...

சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...
Uthayan Alex Sivasambu B.Sc. (Hons), M.B.A
Broker
Ottawa: 613.276.SALE (7253)
Toronto: 416.659.SELL (7355)
alex-sivasambu@coldwellbanker.ca, www.sivasamburealty.com
COLDWELL BANKER




# அழகிய பூஞ்செடிகள்

# பட்டிப்பூ

## (Vinca rosea)

### வீட்டுத் தோட்டம் - 25



செல்லையா சந்திரசேகரி

### அறிமுகம்:

பட்டிப்பூ, குடும்பம் அப்போசைனேசியேயைச் (Apocynacea) சேர்ந்தது. இது, மடகாஸ்கர் நாட்டின் பூர்வீகமானது. பின்னர் உலகின் பல வெப்பமண்டலங்களிலும் 5-7செ.பாகையுள்ள, கீழ் வெப்பமண்டலங்களிலும் பயிரி-





டப்படுகின்றன. ஐரோப்பா, இந்தியா, இலங்கை, சீனா, அமெரிக்கா, கியூபா, மெக்சிக்கோ போன்ற நாடுகளில் பல நூற்றாண்டுகளாகத் தோட்டங்களில் வளர்க்கப்படுகின்றன. இது கூடுதலான ஈரத்தன்மையையோ அல்லது குளிரையோ தாங்கமாட்டாது. இது, எப்பொழுதும் பச்சைநிறமாகக் காட்சிதரும் செடியாகும். ஓரளவு 1மீற்றர் உயரம்வரை அல்லது தரைமட்டமாக வளரக்கூடியது. இனங்கள் மூலிகைகளுக்காக நெடுங்காலமாக வளர்க்கப்பட்டபோதிலும். அழகிய பூக்களுக்காகவே வீடுகளிலும் பயிரிடப்படுகின்றன. தாவரத்திற்கு சூரியவொளி கிடைக்கின்றதைப் பொறுத்து, வளர்ச்சியில் மாற்றங்கள் காணப்படுகின்றன.

- முழுமையான ஒளி கிடைக்குமாயின் சாதாரண வளர்ச்சியோடு, பூக்கள் நிறைந்து காணப்படும்.
- ஓரளவு ஒளி கிடைக்குமாயின், சுமாரான வளர்ச்சியுடன் பூக்கள் குறைவாகவும் காணப்படும்.
- சாதாரண ஒளியின்போது, நல்ல வளர்ச்சியும் கூடுதலான பூக்களும் காணப்படும்.

### வளர்க்கும் முறைகள்:

செடியானது வித்துக்கள் மூலம் வளர்ப்பதில் சிரமமுண்டு. செடிகள் வளர்வதற்தகு மிகக் கூடுதலான நாட்கள் எடுக்கின்றன. எனவே, குளிர்ப் பிரதேசங்களில், வித்துக்கள் எப்பொழுதும் பனிஉறைதல் வந்து இரு மாதங்களின் பின்னர், வரிசைகளாக அகன்ற பாத்திரங்களில் புதைக்க வேண்டும். வித்துக்கள் முளைப்பதற்கு முழுமையான இருள் தேவை. எனவே, பாத்திரத்தைக் கறுப்புத் துணியினால் மூடிவிடவேண்டும். இரு வாரங்களில் வித்துக்கள் முளைத்துவிடும். சில நாட்களில், இவற்றை வேறுபடுத்தி உங்களுக்கு விரும்பிய இடங்களில் நட்டுவிடலாம். நிலத்தின் மண் செறிவைக் கவனிக்க வேண்டும். மண்ணின் pH செறிவு 6-6-5ஆக இருக்க வேண்டும். நீரோட்டமுள்ள தரையும் செறிவான பசளையும் தேவை. எனவே செடிகள் விற்பனையாகும் நிலையங்களிலிருந்து வளர்க்கப்பட்ட செடிகளை வாங்கி நட்டுவிட்டால், அநேக சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ளமுடியும். செடியானது வருடாவருடம் வளரக்கூடியதாக இருந்தாலும் சிலவேளைகளில் சில காலம் நிலைகொள்ளும் செடியாகவும் இருப்பதை அவதானிக்கின்றோம். செடியின் அடியிலிருந்து பல கிளைகள் முளைத்துவிடும். இலைகள் முட்டை அல்லது நீள் செவ்வக வடிவமானவைகளாக நெருக்கமாக எதிரெதிராகக் காணப்டும். வேர் அழுகுதல், இலைகளில் புள்ளிகள், பங்கசு நோய்கள் சாதாரணமானவை. ஏப்பிட்ஸ் பூச்சியின் தாக்கமும் இருக்கும்.

### பூக்கள்:

பூக்கள் வேறுபட்ட நிறங்களில் காணப்படுவதால், இச்செடியினை வளர்ப்பவர்கள், இதனை நன்கு விரும்பித் தெரிவுசெய்வார்கள். வீட்டுத் தோட்டங்களில் கரையோரமாக நிரைகளில் நடுவார்கள். நிறங்கள் வெள்ளை, இளம்வெள்ளை, செம்மஞ்சள், சிவப்பு, கடுஞ்சிவப்பு போன்றவையாகும். நீறங்களின் நடுவே கடுஞ் சிவப்பு நிறப்புள்ளி காணப்படும். செடியில் ஏராரமான பூக்கள் தோன்றுவதை நாம் அவதானிக்கின்றோம்.

### பயன்கள்:

செடியின் பகுதிகளிலிருந்து எடுக்கப்படும் சில பதார்த்தங்கள் குருதிச்சோகை, சலரோகம், மலேரியா போன்ற நோய்களைக் குணப்படுத்தும். இருமல், தொண்டை அரிப்புகள், கண்நோய், போன்ற நோய்களுக்கும் இலைகள், வேர்கள் உபயோகமாகின்றன. கேரளா நாட்டில் மூலிகைவகையாக பலதரப்பட்ட நோய்களுக்கு பயன்படுத்தும் செடியாகும்.

sekari.s@thaiveedu.com

■ ■ ■



Family Arecaceae

## தென்னை மரம்

**(Botanical Name : Cocos nucifera : Eng.Name : Coconut palm)**

தென்னைமரம், குடும்பம் (Arecaceae) அரக்கேசியேயைச் சேர்ந்தது. ஒருவித்திலைத் தாவரங்களின் முதலாவதானதும் இன்றும் வாழும் குடும்பமாகும். ஆங்கிலப்பெயரான 'coconut' என்ற சொல் முதலாவதாக ஆண்டு 1555ல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. coco என்பது 'குரங்கு முகம்', கண்களோடு சேர்த்துக் காணும் முகத்தோற்றம். இது 800 மில்லியன் வருடங்களுக்கு முன்னரே அறிமுகப்படுத்தப்பட்டது. இது, ஏறக்குறைய 30மீ உயரமாக தண்டின் நுனியில் இறகுகள் போன்ற அதிபெரிய ஓலைகளைக் கொண்டு வளரும் மரமாகும். வெப்பவலையங்கள் எல்லா இடங்களிலும் இதன் பகுதிகளான குருத்திலைகள், இளம்பாளைகள், இளங்குரும்பைகள் அனைத்தும் அலங்காரத்திற்கு பயன்படும் வகையில் வளர்க்கப்பட்டன. இம்மரமானது எல்லோரது வாழ்க்கைக்கும் 'பயன்தரக்கூடிய அனைத்தையும் கொடுக்கும்' என்ற நியதியில் 'ஆயிரம் பயன்களைத் தரும் மரமே' என மலேசிய நாட்டு மக்களும், 'வாழ்க்கைக்குரிய மரமே' என பிலிப்பையின்ஸ் தேசத்தவர்களும் கூறுவர். பழமையான இந்திய மக்கள் தென்னைமரத்தை 'கற்பகவிருஷ்சம்' என்பர்.

ஆபிரிக்கா, தென் அமெரிக்கா, ஐயிரோப்பா, பிறாசில், இந்தியா, இலங்கை, இந்தொனேசியா, மலேசியா போன்று, ஏறக்குறைய 80 நாடுகளில் பின்னர் அறிமுகப்படுத்தப்பட்டன. இந்தியாவின் கேரளா மாநிலத்தில் அதிகூடுதலாகக் காணப்படும் மரங்களாகும். இதன் காய்கள் குரும்பைகள் என ஆரம்பத்திலும் தேங்காய்கள் என பழுத்ததும் அழைக்கப்படும். சாதாரணமாக ஒரு வருடத்தில் 75 தேங்காய்கள் தரக்கூடிய மரமாகும். பொருளாதாரரீதியில் வாழ்க்கையின் மூலாதார மரமெனக் கருதுவர். பகுதிகளின் உபயோகம் ஏராளமானவை. பூக்கள் எல்லாவிதச் சடங்குகளிலும் அலங்காரத்திற்காக பயன்படுத்துவர். தேங்காய் சொட்டு, பால், உலர்த்திய பின்னர் கொப்பரா, எல்லாவித உணவுகளிலும் சேர்க்கப்படும். இளநீர் மிகவும் ஆரோக்கியமான பருகு நீராகும். மனித குருதியின் வெளுத்த பதார்த்தத்திற்கு சமமாக இளநீரைக் கருதினர். அதனால் அவசர சிகிச்சையின்போது குளுக்கோசாக உபயோகித்தனர். பதமான தென்னங்கள்ளு பிரபல்லியமானது, ஓரளவு மயக்கும் என்றாலும் இதமாக தேகஆரோக்கியத்தைக் கவனிக்கும் பானமாக அருந்துகின்றனர். ஓலைகள் பலவிதத்தில் உபயோகப் படுத்துவார்கள். ஓலைகள் பின்னப்பட்டு வீட்டுக் கூரைகள் மேய்வதற்கும், தட்டிகள் கட்டவும், வேலிகள் அடைப்பதற்கும் பயன்படும். மேலும், ஓலைகள் அலங்காரத்திற்கும் தொப்பிகள், பெட்டிகள், தட்டுகள், பாய்கள் செய்வதற்கும் உபயோகமாகும். மரமானது சீவப்பட்டு, நீர் இறைப்பதற்கு கிணற்றுத் துலாவாக பாவிக்கப்படும். தேங்காய் பொச்சு தும்பாக கயிறு, நூல், பாய், சாக்கு செய்வதற்கு பயன்படும். தேங்காய்ச் சிரட்டைகள் சிறிய உணவுப் பாத்திரங்களாகவும் வேறுபட்ட சித்திரம் வரைந்த கைவேலைகளுக்கும் பயன்படும். தேங்காய் எண்ணைய் மனித உடலுக்கு தீங்கற்றதாக உபயோகப்படும். இன்னும் பல பகுதிகள் பிரயோசனமான தேவைகளுக்கு பயன்படுகின்றன.


$22.50 Per Sq
Markham
Commercial/Retail
$2,700 For Lease
Queens Quay / York
Condo Apt, 2+2 Bedrooms,2 Washrooms, Location! Location! Bright And Sunny, Walking Distance To Roger Center, Air Canada Center, Union Station
$ 159,900.00
Warden/ Finch
Condo Apt, 2 Bedrooms, 2 Washrooms, Beautiful Unit, Renovated Throughout The Unit. Close To All Amenities.
$ 449,500.00
Finch/Morningside
Ditached 2 Storey, 4 Bedrooms, 4 Washrooms, Location! Location/Location! Brazillian Cherry Hardwood Floors, & Fenced Yard
$ 479,900.00
9th Line & 14th Ave
Ditached 2 Storey, 4 Bedrooms, 3 Washrooms, Sparkling Hardwood Floors And Staircase, 9Ft Ceiling, California Shutters. Extended Driveway, Very Close To 407
புதியதோர் உலகுக்கான திறவுகோல்
சுஜாதா குணசேகர்
Sales Representative
Direct: 416-569-5086
HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
Bus: 416-298-3200, Fax: 416-298-3440
E-mail: sujatha.homelife@gmail.com
*Independently Owned and Operated.
We do not intent to solicit currently listed properties.


Nanthini Singarajah, AMP
VERICO THE MORTGAGE PRACTICE INC.
MORTGAGE AGENT
License #: M08005294
Brokerage #: 11156
TMP
THE MORTGAGE PRACTICE
Specialize In
* Residential Mortgage
* 1st Mortgage
* 2nd Mortgage
* Refinancing
* HELO (home equity line of credit)
Services available all over Canada
Other Services
* Income Tax
Personal
Business
Corporate
* Life Insurance
* RRSP
* RESP
Tel:(905) 787-2027
Fax:(866) 903-4664
Cell:(416) 704-4006
Email: nsingarajah@vtmp.ca
30 Via Renzo Drive, Suite 200, Richmond Hill, ON L4S 0B8 (Leslie/Elgin Mills)
HO: 2425 Matheson Blvd E., 8th Floor, Mississauga, ON L4W 5K4.


RAPID SECURITY
WE PROTECT YOU
"We'll Beat any Quote"
5101-880 Ellesmere Rd, Toronto ON M1P 2W6 Office: (416) 321-6777 Tel: (416) 841-1415
Indoor & Outdoor Guard for
Commercial
Residential
Retail
Healthcare
Finance Institution

# TODAY IS A GOOD DAY

## TO CELEBRATE ACHIEVEMENTS

**Ahilan Balachandran has recently achieved his CFP designation.**

We are pleased to announce that Ahilan Balachandran has earned the prestigious designation of Certified Financial Planner (CFP). The CFP designation assures you that Ahilan will offer you the best solutions in financial planning and investment strategies for your personal and professional needs. In order to achieve this designation, Ahilan has met the strict education, experience and ethical requirements set by the Financial Planners Standards Council (FPSC).

Congratulations to Ahilan on this outstanding professional achievement.



**Ahilan Balachandran*** CFP CLU B.Comm.
Bus 416-412-0401 ext 2302
Cell 416-894-2009
ahilan.balachandran@sunlife.com
www.sunlife.ca/ahilan.balachandran
2075 Kennedy Road, Suite 1300
Scarborough ON M1T 3V3

CFP

Sun Life Financial

*Mutual funds offered by Sun Life Financial Investment Services (Canada) Inc.
© Sun Life Assurance Company of Canada, 2010.

# New Midwest auto collision

## "Quality & service First"


- Specialized in insurance claims
- FULL Service All-in-One Body Shop
- Free Estimate Available
- We repair all makes & models
- Free towing Available
- Customer Satisfaction Guaranteed

TOYOTA LAMBORGHINI BENTLEY CHRYSLER DODGE BUICK Ford mazda CHEVROLET VOLVO HYUNDAI DAEWOO

**(416) 751-9280**
260 Midwest Rd, Unit 8,
Scarborough, ON, M1P 3B4
newmidwestauto@gmail.com

**Contact Person:**
**Ruban or Shan**





Alphaweb 416-238 7222

# வீடு வாங்க விற்க Buy or Sell

## Residential, Commercial & Rental

### Steeles & Staines





Excellent 5 Bedroom Fully upgraded,
Backing onto Ravine,
Brick Built , 9' Ceiling,
Upgraded 3 1/2" Strip Cabreuva exotic hardwood for Ground and 2nd Floor
Oak Stairs with upgraded railing
Double Detached Garage-direct access to home,
Finished Basement-2 b/r, w/r & kitchen,
Extras: Stainless Steel (2 Fridges & 2 Stoves, B/I
Dishwasher), Washer, Dryer,
All Electrical Light Fixtures, Central Air Conditioning,
Central Vacuum and all accessories, Humidifier, Electronic Air cleaner
Custom made California Shutters
Around $175,000 worth of upgrades
Lot Size: 44.64' x 88.91' feet
Taxes: $4,543 (2010)

**$760,000**

### Weston & Major Mackenzie



Brand new 5 Bedroom with attached washrooms,
Stucco, Brick and Stone exterior-4,381 sq. ft
Custom Designed Kitchen with Granite Counter
10' Ceiling-Ground and 9' Ceiling-2nd Floor,
Upgraded 3 1/2" Strip Hardwood thru' out
Oak Stairs with upgraded railing
Double Garage-direct access to home,
Lot Size: 50.2' x 104.99' feet

**$1,149,000**



Rudy Ruthran
416-587-5583
rudy@ruthran.com

COLDWELL BANKER
COLDWELL BANKER EXCEPTIONAL REAL ESTATE SERVICES
Brokerage
Each office is independently owned and operated

3107 Sheppard Ave East, Toronto. ON. M1T 3J7
Tel: 416.497.9794, Fax: 416.497.5949



Logan Velumailum
416-410-1620
vlogan599@yahoo.com



# இலகுவாக மோட்கேஜ்

கடினமான இலக்குகளையும் நாம் இலகுவாக்குவோம்

## Mortgages

- First Time Buyers
- Refinaning
- Renewal
- Self Employed
- Pre-Aproval
- Bankruptcies
- Bad Credit
- Debt Consultant
- Non-verifiable Income
- New immigrant



**We Will**

- Simplify the entire process of mortgage financing
- Save you money and time
- Get you the most competitive rates
- Offer you the widest selection of mortgage options including variable rate, fixed rate, capped variable rate, step, secured lines etc. for all situations including self-employed, no down payment ....
- Counsel you on credit and mortgage qualifications
- Provide maximum flexibility in financing choices
- Assist you every step of the way

**Best Rates**

We can get you a mortgage in most situations regardless of your circumstances. Where traditional financial institutions have given the answer "No", We routinely says "Yes" and gets you a product that suits your needs at an extremely competitive rate.

VERICO TMP

**Siva Ratnasingam**
Lic: M08002133
Brokerage # 11156
SENIOR MORTGAGE CONSULTANT
*2005,2006,2007,2008 Diamond Award Winner*
416.520.1214



# புதியதொரு வீட்டிற்கான நகர்வு...



- digi Media -



**Ahilan Thanabalasingham**

Sales Representative

**416.617.1767**

Office: 905.471.0002
Fax: 905.471.7441

RE/MAX
**Dynasty Realty Inc., Brokerage**
Independently owned and operated

# வசந்தகால வீட்டுப் பராமரிப்பு
# (Spring - Home Maintenance)

**வீடும் விடியலும் - 49**



வேலா சுப்ரமணியம்
- Certified Home Inspector -


கடந்த காலக்கட்டுரைகளில் குறிப்பிட்டது போல் காலநிலைக்கேற்ற வகையில் வீட்டைப் பராமரித்து வந்தால் திடீரென ஏற்படும் பாரிய செலவுகளைத் தவிர்துக் கொள்ளலாம். அந்த வகையில் குளிர்காலம் முடிவடைந்து கோடை காலத்தை எதிர்பார்த்து நிற்கும் எங்களுக்கு வசந்த காலத்தில் எந்தவகையில் வீட்டைப் பராமரிக்கலாம் அல்லது கோடை காலத்திற்கு தயார்ப்படுத்தலாம் என்பது பற்றி குறிப்பிடுவது பொருத்தமானது.

## மரத்தளம் - Deck

பொதுவாகக் குளிர்காலத்தில் தேங்கிக்கிடந்த பனிப்படிமானங்கள் கரையத் தொடங்கியதும் நீர், மரப்பலகைக்குள்ளேயோ அல்லது மரச் சட்டங்களுக்குள்ளேயோ உட்புகத் தொடங்கலாம். மரச்சட்டங்களில் உரிய எதிர்ப்புத் தன்மையற்றுப் போய்விட்டால் உட்புகும் நீரால் மரம் உரிய காலத்திற்கு முன்னர் உக்கிப் பழுதடைந்துவிடும். இக்காலத்தில் நீர்க்கறை, பொருமல் என்பவற்றை அவதானிப்பதன் ஊடாக கோடைகாலம் வரும்போது உரிய-முறைப்படி நீர் எதிர்ப்புக்குரிய பூச்சுக்களை பூச (Water Resistent Paint) எம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ளலாம். அத்துடன் Mold, Moss போன்ற பங்கஸ் பிடிக்காமல் இருப்பதற்காக ஒருதடவை Power Washer உதவியுடன் கழுவியும்விடலாம்.

## குளிரூட்டி - Air conditoner

குளிரூட்டியைச் சுற்றி சருகுகள், குப்பை கூழங்கள் குவிந்திருக்க வாய்ப்பு உள்ளது. அவற்றைச் சுத்தப்படுத்துவதோடு குளிரூட்டியைச் சுற்றியுள்ள வலைப்பகுதியினை (Net) Garden hose மூலமோ அல்லது Vacum Cleaner இன் உதவியுடனோ, சுத்தம் செய்து காற்றோட்டம் தடைப்படாதவாறு குளிரூட்டி இயங்கக்கூடிய நிலையை உறுதி செய்தல் வேண்டும்.

## அத்திவாரம் - Foundation


பனிஉருகி கரைந்தோடும் காலப்பகுதியாக இக்காலம் விளங்குவதால் பொதுவாக நிலக்கீழ் அறையில் தண்ணீர் உட்புகும் இடர் இக் காலத்தில் தான் அதிகமாக இருக்கும் எனவே மயிரளவு (Hairline Crack) வெடிப்பினால் கூட தண்ணீர் உட்புகும் வாய்ப்பு இருப்பதால் நிலைமை மோசமாக முன்னர் சற்று கூர்ந்து அவதானித்தால் உரிய நடவடிக்கைகளை ஆரம்பத்திலேயே எடுத்துவிடமுடியும்.

## வாகனக் கொட்டகைக் கதவு

வாகனக் கொட்டகைக் கதவு திறப்பதற்குப் பொதுவாக மோட்டர்கள் பொருத்தப்பட்டிருக்கலாம். அதன் தொடர்பைத் துண்டித்து விட்டு கையால் கதவை ஒரு தடவை திறந்து பார்த்து கதவு தடைகளின்றி இலகுவாக திறந்து மூடுகிறதா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். தடைகள் இருந்தால் over head springஐ சரி செய்ய வேண்டிய தேவை இருக்கலாம். அத்துடன் உரிய முறையாக வேலை செய்கின்றனவா? என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

## தண்ணீர் பீலிகள் - Gutters

அடைபட்டு இருக்கக்கூடிய பீலிகளை நன்கு சுத்தம் செய்து இலகுவில் நீர்வழிந்தோடும் தன்மையை உறுதி செய்தல் வேண்டும். அத்துடன் கீழ் நோக்கி விழும் குழாய்கள் (Downspout) உரிய முறையில் நீரை வெளியேற்றுகிறதா? என்பதையும் அவதானித்தல் நல்லது. முக்கியமாக அதன் அடியில் பொருத்தப்பட்டிருக்கும் Leader pipes அடைக்காதிருக்கின்றதா என்பதை உறுதி செய்வதோடு நீர் நேரடியாக அத்திவாரத்திற்கு அடியில் உட்புகாதவாறு பார்த்தக்கொள்ளல் வேண்டும். குறிப்பாக அத்திவாரத்தில் இருந்து 5 அடிக்கு வெளியே நீர் சென்றடையும் விதத்தில் அவை பொருத்தப்பட்டிருப்பது சாலவும் சிறந்தது.






## கூரை - Roof

Chimney, Spylightஐ அண்டிய பகுதிகளில் நீர்க்கசிவு ஏற்படலாம். இக்காலப்பகுதியில் Attic ஊடாக நீர்க்கசிவுக்கான அடையாளங்களை இலகுவாகக் கண்டுகொள்ளலாம். பொதுவாக 15-20 வருடங்களுக்கு கூரையில் போடப்பட்டிருக்கும் Shingles நின்றுபிடிக்கும் என்றாலும் காற்று மற்றும் புறக்காரணிகளால் பழுதடைந்துள்ள அல்லது இடைவெளியாக உள்ளவற்றை பழுதுபார்ப்பது அவசியம்.

## மரங்கள்

வீட்டைச் சுற்றி மரங்கள் இருப்பது ஆரம்பத்தில் நன்றாகத்தான் இருக்கும். ஆனால் காலப்போக்கில் அதுவே பெரிய பிரச்சினை ஆகி விடும். வளர்ந்த மரங்கள் கூரையையோ, யன்னல்களையோ தாக்கி சேதங்களை உண்டு பண்ண வாய்ப்பு இருக்கின்றது. கொப்புக்கள் வளர்ந்து பாரம் ஏறமுதல் அவற்றை கத்தரிப்பதற்குரிய சிறந்த காலம் இதுவே. மரங்கள் அளவுக்கு அதிகமாக வளர்ந்திருந்தால் அதற்குரிய தொழில்சார் வல்லுனர்களை நாடுவதே சாலவும் சிறந்தது.

## வாகனப்பாதை - Driveway

வாகனப்பாதைக்கு குளிர்காலத்தில் உப்பால் குளிப்பாட்டி இருப்போம். இந்த வருடம் அவ்வளவாக இல்லாவிட்டாலும் போட்ட உப்பு தங்கி இருந்து அதற்குரிய பணியைச் (அரிப்பு) செய்து கொண்டே இருக்கும். Asphalt, Inter-lock, concrete என்று எந்தவகை வண்டிப் பாதையாக இருந்தாலும் இக்காலப் பகுதியில் Power washerஇன் உதவியுடன் முதலாவது வேலையாக வண்டிப்பாதையை நன்றாகக் கழுவி உப்பின் தன்மையை இல்லாது செய்தல் வேண்டும். குறிப்பாக Inter Lock உள்ளவர்கள் கல்லின் இடைவெளிகளில் பூண்டுகள் முளைப்பதை அவதானிக்கலாம். எனவே அவை முளைக்க முன்னர் அதனைத் தடுக்கக்கூடிய விதத்தில் உரிய மண்ணைப் போட்டு (Brush stone dust) பாதுகாக்கலாம். Congrete வாகனப்பாதையாக இருந்தால் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை யாவது அதனை Seal பண்ணத் தவறக்கூடாது. Asphalt வாகனப் பாதையாக இருந்தால் இருக்கக்கூடிய வெடிப்புகளை, அடைத்த பின்னர் நல்ல வெப்பமான காலநிலை வரும் போது இரண்டு வருடத்திற்கு ஒருமுறையாவது Seal பண்ணத் தயாராதல் வேண்டும்.

## கவனத்தில் கொள்ளவேண்டிய மேலும் சில...

- வெப்பமாக்கியுடன் பொருத்தப்பட்டிருக்கும் ஈரப்பதனாக்கியை (Central Humidifiert) முற்றாக நிறுத்தி விடுங்கள்.
- வெப்பமாக்கிக்கோ (Furnace), Fire placeக்கோ முதன்மை விளக்குகள் (Pilot Lamps) பொருத்தப்பட்டிருந்தால் அவற்றை நிறுத்தி விடலாம்.
- வெளிவளவிற்கோ அல்லது முன் வளவிற்கோ (Back Yard & Front Yard) போகும் குழாய்களின் நீரை நிறுத்தி இருந்தால் (Shut Off) அவற்றைத் திறந்துவிடலாம்.
- 3 மாத்திற்கு ஒருமுறை வெப்பமாக்கிக்குரிய வடிகட்டியை (Filters) மாற்றிவிடவேண்டும் என்ற அடிப்படையில் அதனையும் உறுதி செய்து கொள்ளுங்கள்.
- யன்னல்களுக்குரிய வலைகளை (Net)ச் சுத்தப்படுத்தி அல்லது அவசியம் ஏற்பட்டால் பிரதியீடு செய்து தயார்ப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.



- தண்ணீர் வெளியேற்றத்திற்குரிய வெளிப் புறப் பாதைகள் அடைபட்டிருந்தால் அவற்றை சுத்தம் செய்தல் வேண்டும்.
- பூக்கன்றுகள், காய்கறி வைப்பவர்கள் மண்ணைத் தயார் செய்து தேவை ஏற்பட்டால் பசளைகளைப் போட்டு தமது பணிகளை ஆரம்பிக்கலாம்.

velasubramaniam@thaiveedu.com

■ ■ ■









Buy & Sell Residential and Commercial Properties
340,000
McCowan & M. MacKenzie
Bedrooms: 4. Type: Townhouse. Details: Close to Transit, Shopping Plaza, School and Parks. 3 Washrooms & 2 Car detached garage.
$374,900
Sheppard & Port Union
Bedrooms: 3+1. Type: Townhouse. Details: Close to all amenities. Lots of upgrades, 12 foot living room ceiling & neutral colours.
$375,900
9th Line & 16th Ave.
Bedrooms: 5. Type: Townhouse Details: Close to Schools, Amenities & Transportation. Soaring 10 ft ceilings, 5 large bedrooms and 2 fireplaces.
$399,000
Hwy 7 & 9th Line
Bedrooms: 4. Type: Semi-Detached (3 storey). Details: Close to Hospital, Transit, Shopping & Hwy 407. Enclosed back porch, 2 car garage, rent in basement, 4 bathrooms & 9 ft ceilings.
$435,000
Steeles & Staines
Bedrooms: 4+1. Type: Detached. Details: Close to All amenities, school, golf course, parks & TTC. Open concept home, upgrade kitchen & finished basement.
$438,800
Morningside & Old Finch
Bedrooms: 4. Type: Detached. Details: Main floor laundry, door to garage, open concept family room+gas fireplace, oak staircase & pool sized backyard.
Raj. A. Rasaratnam
B.Com.
Sales Representative
416-726-8055
argaccountax@rogers.com
HOMELIFE
HomeLife/ GTA Realty Inc.
Real Estate Brokerage*
1711 McCowan Rd., Suite #206,
Scarborough, ON. M1S 3Y3
Bus: (416) 321-6969
Fax: (416) 321-6963
*Independently own and operated
Mortgage arrangement, Business incorporation
and corporate tax preparation
(416) 726-8055




மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்...
வீடு வாங்கவும் விற்க்கவும்
குறைந்த வட்டி விகிதத்தில்
மோட்கேஜ் ஒழுங்கு செய்வதற்கும்
அழையுங்கள்
Ravi. Paramu
Broker
Direct: 416-262-4176
``The best compliment you can give me is the referral of your family and friends``
Thank you for your trust
HOMELIFE
$79,900
Davis Dr / Yonge
Cafe
$269.900
Neilson / Finch
4+1 Bedrooms
3 Washroom Finished Basement
$619,300
Mccowan/16th
4+2 Bedrooms 4 Washroom
CONVENIENCE/VARIETY
$95,000
Plus Stock
IN OSHAWA
HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210,
Toronto, ON, M1P 4S6
Bus: 416-298-3200
*Independently Owned and Operated, Realtor

நாம் அழகாய் இருக்க

# தேகப் பயிற்சி

## தொடர் 07



சசி நரேன்
Cosmetologist & Aestheticia

ஆண்களுக்கு உடற்பயிற்சி எவ்வளவு அவசியமோ அதைப் போலவே பெண்களுக்கும் உடற்பயிற்சி மிகவும் அவசியம். உடற்பயிற்சிகளைக் காலை வேளையில் செய்வதே நல்லது. காலையில் செய்ய முடியாதவர்கள் மாலையில் செய்யலாம். தேகப் பயிற்சி செய்வதால் இரத்த ஓட்டம் கூடும். அழகைக் கொடுக்கும், தேவையற்ற சதைகள் குறையும், புத்துணர்ச்சி கிடைக்கும், துடிப்பு, பரபரப்பு இவைகள் குறையும், தேகப்பயிற்சி செய்வதால் மென்மையான பளபளப்பான, பிரகாசமாக சருமத்தைப் பெறலாம். தேகப்பயிற்சியில் பல முறைகள் உண்டு. எல்லாம் செய்வது என்பது சாத்தியம் இல்லை. ஆகையால், சில முக்கியமான பயிற்சிகளைச் செய்யலாம்.

### கண்களுக்கு

முதலில் ஏதாவது ஒரு கலர்ப்பென்சிலை எடுத்துக் கொண்டு முக்குக்கு நேராக வைத்துக் கைக்கெட்டிய தூரத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும். அப்படியே பென்சிலை முக்கின் அருகில் கொண்டு வரவேண்டும். இப்படிச் செய்யும் போது கருவிழிகள் இரண்டும் மூக்கின் அருகில் வந்து சேர்வது போல் இருக்கும்.

பார்வையைப் பென்சிலை விட்டு நகர்த்தாமல், பென்சிலை அப்படியே வலது புறமாகக் கொண்டு செல்ல வேண்டும், தலையை அசைக்கக் கூடாது விழிகளை மட்டும் அசைக்க வேண்டும். இப்படியே இடது புறமும் கொண்டு செல்ல வேண்டும்.

இது போல் பென்சிலை மேலும், கீழுமாக அசைத்து. தலையை அசைக்காமல் விழிகளை மட்டும் அசைத்துச் செய்ய வேண்டும். பின்பு, கடிகார முட்கள் சுற்றுவது போல் வட்டமாகவும் அதன்பின் பின் புறமாகச் சுற்றுவது போலவும் பென்சிலைச் சுற்ற வேண்டும். அவ்வாறு செய்யும் போது தலையை அசைக்காமல் விழிகளை மட்டும் சுழற்றிப் பார்க்க வேண்டும் இப் பயிற்சிகளைச் செய்வதால் கண்கள் பளபளப்பாகவும், பிரகாசமாகவும் இருக்கும்.

### கன்னங்கள்

கன்னங்கள் ஒட்டிப் போய் இருப்பவர்கள் வாயில் நிறையத் தண்ணீரை வைத்துக் கொண்டு, வாயை முடிக்கொண்டு கொப்பளிப்பது போலவும். பிறகு தண்ணீரை இடமிருந்து வலமாகவும் வலமிருந்து இடமாகவும் கொண்டுபோவது போலவும் செய்ய வேண்டும். அடிக்கடி பலூன் ஊதுவது போல் ஊதவும் வேண்டும்.

### தாடை

இரண்டு தாடையும் இறங்கியதுபோல் உள்ளவர்கள் வாயில் தண்ணீரை வைத்துக் கொண்டு தலையை பின்பிறமாக சாய்த்துக் கொப்புளிக்க வேண்டும்.

### கழுத்து

கழுத்துப்பகுதி மட்டும் பருமனாக உள்ளவர்கள் இடது புறமும் வலது புறமும் மாற்றி மாற்றித் தலையைச் சுழற்ற வேண்டும்.

### கை

கைப் பகுதிகள் பெரிதாக உள்ளவர்கள் தோள்பட்டையோடு கைகளையும் சுழற்ற வேண்டும். மேலே உள்ள ஒரு பொருளை எடுப்பது போல் கைகளை மாற்றி மாற்றிச் செய்ய வேண்டும்.

கைகளுக்கும் காலின் பாதங்களுக்கும் Manicure, Pedicure பயிற்சியைச் செய்யலாம்.

### இடுப்புச் சதை

இடுப்புச் சதை பெரிதாக உள்ளவர்கள் நின்று கொண்டு கால்களை இலேசாகப் பரப்பி வைத்துக் கொண்டு ஒரு கையை பக்க வாட்டில் மேலே தூக்கி, இடுப்பை வளைத்து மற்றொரு கையைக் கீழே இறக்கிக் காலைத் தொடவேண்டும்.

### வயிறு

வயிறு பெரிதாக உள்ளவர்கள், இரண்டு கைகளையும் முதுகில் வைத்துக் கொண்டு முழங்காலில் உட்கார்ந்து, நெற்றியால் தரையைத் தொட வேண்டும். பின்பு, நின்றபடி பாதம் இரண்டையும் சேர்த்துக் கொண்டு முழங்கால்களை மடக்காமல் கைகளால் கால் கட்டைவிரலைத் தொடவேண்டும். கால்களைப் பரப்பிக் கொண்டு இடது கையினால் வலது கால் கட்டை விரலைத் தொடவேண்டும். இப்படிச் செய்யும் போது மற்றைய கையை மேலே தூக்க வேண்டும்.

### தொடை

தொடை பருமனாக உள்ளவர்கள், கைகளைத் தரையில் ஊன்றாமல் கால்களை நீட்டிக்கொண்டு ஒரு காலை மடக்கி மற்றைய காலை நீட்ட வேண்டும். இவ்வாறு மாறி மாறிச் செய்ய வேண்டும்.

நின்று கொண்டு, குதிகால் தரையில் படாமல் கால் விரல்களினால் நடக்க வேண்டும்.

நேராக நின்று கொண்டு ஒரு காலைத் தூக்க வேண்டும். பிறகு, அந்தக் காலை இறக்கி மற்றைய காலைத் தூக்க வேண்டும். இப்படி மாறி மாறிச் செய்ய வேண்டும்.

சுமார் பத்து அல்லது இருபது முறை தோப்புக் கரணம் போட வேண்டும்.

தரையில் நேராக (மல்லாந்து) படுத்துக் கொண்டு, கைகளையும் கோர்த்துப் பின் கழுத்தில் வைத்துக் கொண்டு, கால்களை மடக்காமல் உட்கார வேண்டும்.

நீச்சலும், ஓடுதலும் கூட நல்ல தேகப்பயிற்சிகள்.

தரையில் கால்களை நீட்டி உட்கார்ந்து கொண்டு, வலது காலை இடது பக்கமாக குறுக்காக எவ்வளவு தூரம் கொண்டு செல்ல முடியுமோ அவ்வளவு தூரம் கொண்டு செல்ல வேண்டும். இடது காலை அசைக்க கூடாது. இதே போல் இடது காலையும் செய்ய வேண்டும். சுமார் பத்து அல்லது பதினைந்து முறை இப்படிச் செய்ய வேண்டும்.

இருப்பில் இரண்டு கைகளையும் வைத்துக் கொண்டு நின்று, பின்புறமா முதுகை வளைத்து, எவ்வளவு தூரம் வளைக்க அல்லது வளைய முடியுமோ அவ்வளவு தூரம் வளைய வேண்டும் பெரும்பாலும் அதிகம் வளைய முடியாது.

உட்கார்ந்து கால்களையும் நீட்டிக் கொண்டு வலது கையால் இடது கால் விரலையும், இடது கையால் வலது கால் விரலையும் மாற்றி மாற்றித் தொட வேண்டும்.

இவைகளைத் தவிர 'யோகா' பயிற்சி முறை தெரிந்திருந்தால் அப்பயிற்சிகளைச் செய்வது மிகவும் நல்லது. இந்த தேகப் பயிற்சி செய்வதோடு உணவிலும் கட்டுப்பாட்டுடன் இருந்தால். உடல் ஆரோக்கியமாகவும், அழகுடனும், நல்ல சருமத்துடனும் விளங்கலாம்.

sasi.naren@thaiveedu.com

■ ■ ■



# பனியும் பிரெஞ்சும் பொய்த்துப்போன வன்கூவர்

வன்கூவரில் நடைபெற்று முடிந்திருக்கும் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் கனடிய வீரர் Alexandre Bilodeau வென்ற தங்கப் பதக்கத்தின் மூலம், கனடாவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் கனடாவுக்குத் தங்கம் கிடைக்காத ஏக்கம் மறைந்திருக்கின்றது. 1976 கோடைகால ஒலிம்பிக் போட்டிகள் மொன்றியலிலும் 1988 குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் அல்பேட்டா மாநிலத்தின் கல்காரி-யிலும் நடைபெற்றிருந்தன.

கனடா முழுவதும் அனைத்து ஊடகங்களும் Alexandre Bilodeauஇன் வெற்றியைக் கொண்டாடிக்கொண்டிருக்க, கியூபெக் மாநி-லத்தில் நிலைமை தீவிரமாகிவிட்டிருந்தது. தங்கள் மாநிலத்தவர்... பிரெஞ்சுமொழி பேசு-கின்ற ஒருவர் தங்கம் வென்றதைக் கொண்டா-டினார்கள்தான் - மறுப்பதற்கில்லை. ஆனால் அந்தக் கொண்டாட்டத்தின் மகிழ்ச்சியையும் தாண்டி கியூபெக் மாநிலத்தில் பலருக்கும் பெரும் கோபம்.

கோபத்தின் காரணம் - தங்கள் மொழி ஒலிம்பிக் போட்டிகளில் புறக்கணிக்கப்பட்டதாக அவர்கள் நினைப்பதுதான். பெப்ரவரி 12ம் நாள் ஒலிம்பிக் போட்டிகளின் தொடக்க நிகழ்வு-களில் பிரெஞ்சு மொழிக்குப் போதுமான இடமளிக்கப்படவில்லை, போட்டிகளில் பணி புரியும் 25,000 தொண்டர்களில் 15 வீதமானோர் மட்டுமே பிரெஞ்சுமொழி பேசக்கூடியவர்கள். இந்த இரு விடயங்களும்தாம் கோபத்திற்கான மூலம். தொடக்க நிகழ்வுகளில் 15-20 நிமிடம் தான் பிரெஞ்சு மொழிக்கு வழங்கப்பட்டதாம். அறிவிப்புகளின்போது முதலில் பிரெஞ்சு மொழியும் பின்னர் ஆங்கிலமும் பயன்படுத்-தப்பட்டதும் பல பிரெஞ்சுக் கனடியர்களுக்குப் பிடிக்கவில்லை.

1884 இலிருந்து வெளிவந்துகொண்டிருக்கும் மொன்றியல் நகரத்து முன்னணி நாளேடு La Presse இருபக்கக் கட்டுரையொன்றின் மூலம் அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தது. 'பிரெஞ்சு, பனியைப்போலவே வன்கூவரில் அரிதாயுள்ளது' (Le français à Vancouver, c'est comme la neige - French is as rare as snow in Vancouver) என்று தலையங்கம் கொடுக்கப்பட்டிருந்தது.

கியூபெக் அரசியல்வாதிகள் பலரும் வன்கூவர் ஒலிம்பிக் குழுவினரையே குற்றம் சாட்டினார்-கள். கியூபெக் முதல்வர் Jean Charest, ஒலிம்பிக் போட்டிகளில் பிரெஞ்சுமொழிக்கு இன்னும் இடம் கொடுக்கப்பட்டிருந்தால் தனக்-குப் பிடித்தமானதாக இருந்திருக்கும் என்று செய்தியாளர்களிடம் சொன்னார். முன்னமே 'ஒலிம்பிக் போட்டிகளில் பிரெஞ்சு மொழிக்குச் சரியான மதிப்பளிக்கப்படவில்லை' என்று La Francophonie என்ற பிரெஞ்சுமொழியின் நலன், அபிவிருத்திக்கான, பிரெஞ்சுபேசும் நாட்டு அரசுகள் அங்கம் வகிக்கும் அமைப்பின் செயலாளர் நாயகம் Abdou Diouf குற்றஞ் சாட்டியிருந்தார். செனகல் நாட்டு முன்னை நாள் அதிபர் இவர். 'அதிகாரபூர்வமான இரு மொழிப் பயன்பாடுடைய கனடாவில் பிரெஞ்சு மொழிக்கு இந்த ஒலிம்பிக் போட்டிகளிலும் தகுந்த இடம் கொடுக்கப்படும் என்ற என் எதிர்பார்ப்பு பொய்த்துப்போனது' என்று இன்னொரு முன்னணி நாளிதழான Le Devoirக்குத் தனது விசனத்தைத் தெரிவித்திருந்தார் அவர்.

> "கியூபெக் மாநிலத்தவர்களுக்கு, தங்கள் மொழிக்கு உரிய மரியாதை கொடுக்கப்படவில்லை என்ற எண்ணம் தோன்றியதும் அங்கிருந்து எழுந்த ஒற்றுமையான குரல் எங்கள் காதுகளிலும் விழவேண்டும். அவர்களைப் பார்த்தென்றாலும் திருத்துவோம்... திருந்துவோம்."

புளொக் கியூபெக்குவா கட்சிக்கு அது அவல் கிடைத்த மாதிரி. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், ஒட்டாவாவில் பதிப்பிக்-கப்பட்டு ஒட்டாவாவிலும் ஒட்டாவாவையண்டிய கியூபெக் மாநிலத்து Gatineauஇலும் சுற்றுப் பகுதிகளிலும் விற்பனையாகும் Le Droit நாளேட்டின் ஞாயிறு வெளியீட்டுக்கு, தான் அதிருப்தியும் அதிர்ச்சியுமடைந்திருப்பதாகக் கூறினார்.

கனடிய, பாரம்பரிய அமைச்சர் Jame Moore, "தொடக்க நிகழ்வுகளில் பிரெஞ்சுமொழிக்கு இன்னமும் இடம் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்" என்று ஒத்துக்கொண்டார். பிரபல அரசியல் விமர்சகர் Chantal Hebert, அமைச்-சரின் புத்திசாலித்தனமான இந்தப் பதிலைப் பாராட்டிவிட்டு, "இந்தவிடயத்தில் அரசியல்-வாதிகளின் பொதுக்கருத்து, நிறைவு நிகழ்வு-களின்போது பிரெஞ்சுமொழிக்குக் கூடிய நேரம் கொடுக்கப்படுவதற்கு ஏதுவாகலாம்" என்றும் கூறியிருந்தார்.

தொடக்க நிகழ்வுகளில், முந்திய ஒலிம்பிக் போட்டியொன்றில் பதக்கம் வென்ற கியூபெக் மாநிலத்து வீரர் ஒருவர் கலந்து கொள்ளா-ததற்கும் ஒலிம்பிக் குழுவின் புறக்கணிக்கும் மனப்பான்மையே காரணமெனவும் கியூபெக் ஊடகங்கள் குற்றஞ்சாட்டுகின்றன. 'முக்கிய மான, அதிகாரபூர்வமான உரைகளுக்கு பிரெஞ்சு மொழிபெயர்ப்பு வழங்குவதோடு மட்டும் நின்றிருக்கக்கூடாது. இந்நாடு இரு பெரும் மக்கள் பிரிவினரால் உருவாக்கப்-பட்டதென்பதனையும் கனடாவின் மக்கள் தொகையின் கால் பங்கினரை கியூபெக் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது என்பதையும் உலகிற்குக் காட்டியிருக்கவேண்டும்' என்றும் குற்றப்பத்திரிகை நீளுகின்றது. '2010 ஒலிம்பிக் போட்டிகள் நடத்துவதற்கு, கியூபெக் நகரமும் போட்டியிட்டது. அந்த வாய்ப்புக் கிடைத்-திருந்தால், கனடாவின் ஏனைய பகுதிகளுக்கும் உரிய மரியாதையைக் கொடுத்திருப்போம்' என்றும் பிரெஞ்சுமொழி ஊடகங்கள் எழுதித் தள்ளுகின்றன.

இது தொடர்பான இணையத்தளச் செய்திக-ளுக்கான கருத்தைப் பதிவுசெய்தோருள் ஓர் 20 வயது யுவதி "எங்கள் மொழிதான் எங்கள் அடையாளம். 'நாம் பிரான்சிலிருந்து வந்த பிரெஞ்சுக்காரர்கள் என்று எம்மை அடையா ளப்படுத்திக் கொள்வதில்லை'. நாங்கள் கியூபெக்கைச் சேர்ந்தவர்கள், பிரெஞ்சுக் கனடியர்கள்" என்று பதிவு செய்திருந்தார். இன்னொருவர், தங்கள் கலாச்சாரத்தையும் தனித்துவத்தையுமிட்டுப் பெருமை கொள்வ-தாக எழுதியிருந்தார். இப்படியாக இந்த விடயம் வயது வேறுபாடின்றி அனைத்துத் தரப்பின-ரையும் பேசவைத்திருக்கின்றது. ஊடகங்கள், La Francophonie அமைப்பு ஆகியவற்றின் மூலம் சர்வதேசமயமாகிவிட்டிருக்கின்றது. ஆனால், 'இவையெல்லாம் வீண் விவாதம். ஒலிம்பிக் போட்டியினை நடத்துவது வன்கூவர் நகரம்தான். கனடா எனும் நாடல்ல. பிரெஞ்சு மொழிக்குக் கொடுக்கப்பட்ட இடம் போது-மானது' என்று எதிர்க்கருத்தையும் இணை-யத்தளங்களில் காணக்கூடியதாயிருந்தது.

ஒலிம்பிக் குழுவோ, பிரிட்டிஷ் கொலம்பியா மாநிலத்தின் 55,000 பிரெஞ்சுபேசும் மக்களி-டமிருந்து போதுமான தொண்டர்களைத் திரட்ட முடியவில்லையென்று தெரிவித்தது. "வன்கூவர் வீதிகளில் நிறைய பிரெஞ்சுமொழி-யைக் கேட்கமுடிந்தது. இந்த ஒலிம்பிக் போட்டிகளுக்கான கியூபெக் காவல்துறையி-லிருந்து 'இரவல்' பெறப்பட்ட காவலர்களோடு பிரெஞ்சில் உரையாடமுடிந்தது. அதேயளவுக்கு பஞ்சாபி, சீன, ஜப்பானிய மொழிகளையும் கேட்கமுடிந்தது. ஆனாலும் வன்கூவர் ஓர் ஆங்கிலம் பேசப்படும் நகரம். இதைவிட அதிகம் பிரெஞ்சை எதிர்பார்க்கக்கூடாது. சரியாகச் சொல்வதென்றால் வன்கூவரின் ஆசிய அடையாளம் தான் ஒலிம்பிக் தொடக்க நிகழ்வுகளில் காணாமல் போயிருந்தது.



கந்தசாமி கங்காதரன்

பிரெஞ்சுமொழி அல்ல" என்று ஒரு பிரெஞ்சு பேசும் வலைப்பதிவர் எழுதியிருக்கிறார்-ஆங்கிலத்தில்.

'ஒரு நிகழ்வில் பிரெஞ்சுமொழிக்கு போதுமான இடமளிக்கப்படவில்லை' என்று ஒரு மாநி-லத்தின் ஊடகங்கள், அரசியல்வாதிகள், இளையோர் முத்தோர் எல்லாத் தரப்பிலிருந்-தும் கண்டனக்குரல்கள் எழுகின்றன. தங்கள் மொழி மீதான பற்றை, சங்கங்கள் அமைத்து அவர்கள் ஒலிவாங்கிகளில் முழங்கவில்லை. குரல்கொடுக்கவேண்டிய நேரத்தில் ஒற்று-மையாகக் குரல் கொடுக்கின்றார்கள். ஆனால் தமிழனுக்கு.... தமிழுக்கு.... ஓர் இழுக்கென்-றால், நாம் என்ன செய்கின்றோம்? தமிழ-னைக் கேவலப்படுத்துபவர்களிடம் போய் தமிழரின் புனர்வாழ்வுக்கு அள்ளிக்கொடுக்-கின்றோம். தமிழனின் அழிவில் ஆதாயம் தேடமுனைகின்றோம் எங்கேயாவது தமிழ் சரியாக உச்சரிக்கப்படவில்லை, எழுதப்பட-வில்லையென்றால் என்ன செய்கின்றோம்?

அண்மையில் ஒரு மதிப்புமிக்க தமிழ் அமைப்-பின் விழாவில் தமிழ் கடித்துக் குதறப்பட்டது. நிகழ்ச்சித் தொகுப்பாளர் தமிழை அன்று ஒருவழி பண்ணிவிட்டார். தமிழின் பெயரைச் சொல்லி... தமிழரின் பெயரைச் சொல்லித் தமிழரால் தமிழருக்காக நடத்தப்படும் அந்த அமைப்புக்கு இது தொடர்பாக இருக்கவேண்-டிய பொறுப்பையும் அக்கறையையும் யாரும் சொல்லிக் கொடுக்கவேண்டியதில்லை. தமிழர்களே தமிழரின் பெயரை, தமிழில் அறிவிப்புச் செய்யும்போது ஒரு மாதிரியாக-வும் ஆங்கிலத்தில் அறிவிப்புச் செய்யும்போது ஒரு மாதிரியாகவும் உச்சரிப்பார்கள். கேட்டால் 'கணபரிப்பில்லாய்' என்றுதான் ஆங்கிலத்தில் உச்சரிக்கவேண்டும் என்று வியாக்கியானம் செய்வார்கள். நானும் நீங்களும் பேசுகின்ற, எழுதுகின்ற, வாசிக்கின்ற எங்கள் தமிழில் யாரேனும் தவறிழைத்தால் அதைச் சுட்டிக்-காட்டவேண்டியது எங்கள் ஒவ்வொருவரினதும் கடமையல்லவா? ஊடகங்களில் தமிழில் எங்கும் தவறு கண்டால் தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் அதைப் பற்றிய அக்கறை வேண்டும். திருத்த வேண்டியதும் திருந்த வேண்டியதும் அனைவரின் பொறுப்பு.

கியூபெக் மாநிலத்தவர்களுக்கு, தங்கள் மொழிக்கு உரிய மரியாதை கொடுக்கப்பட-வில்லை என்ற எண்ணம் தோன்றியதும் அங்கிருந்து எழுந்த ஒற்றுமையான குரல் எங்கள் காதுகளிலும் விழவேண்டும். அவர்-களைப் பார்த்தென்றாலும் திருத்துவோம்... திருந்துவோம்.

gangatharan.k@thaiveedu.com

■ ■ ■

### குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள்

1924இல் முதலாவது குளிர்கால ஒலிம்பிக் பிரான்சில் நடைபெற்றது. அதற்கு முன்னர் ஐஸ் ஹொக்கி, Figure Skating ஆகியன கோடைகால ஒலிம்பிக்கில் இடம் பெற்றன. கோடைகாலப் போட்டி நடைபெறும் அதே ஆண்டில் வேறொரு நாட்டிலே நடைபெற்று வந்த குளிர்கால ஒலிம்பிக், 1992இலும் பிரான்சில் நடைபெற்றது. அவ்வாண்டின் கோடைகால ஒலிம்பிக் ஸ்பெயினில் நடை-பெற்றது. 1994இல் நோர்வேயில் நடை-பெற்ற குளிர்கால ஒலிம்பிக் போட்டியின் பின்னர் கோடைகால, குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் 2 ஆண்டுகள் இடைவெளியில் நடைபெற்று வருகின்றன.

### La Francophonie அமைப்பு

பாரிஸ் நகரில் தலைமையகத்தைக் கொண்ட இந்த சர்வதேச அமைப்பில் கனடா உள்ளிட்ட 56 பிரெஞ்சு பேசப்படும் நாடுகள் அங்கம் வகிக்கின்றன. 3இணை அங்கத்துவ நாடுகளும் 14 பார்வையாளர் நாடுகளும் உள்ளன. 1970இல் தொடங்-கப்பட்டது இவ்வமைப்பு. தமிழுக்கும் இவ் வாறோர் அமைப்பிருந்தால்...?

**A Z வாகன சாரதிகள் தேவை**

கனடாவிற்குள் கனரகவாகனம் செலுத்துவதற்கு மூன்றுவருடத்திற்கு மேல் அனுபவமுள்ள A Z வாகன அனுமதிப்பத்திரம் வைத்திருக்கும் சரதிகள் தேவை.

தொடர்புகட்கு:

பிரபா: 416 716 6785



வளமான வாழ்விற்கு
வதிவிடம் வாங்கிட......
RED CARPET®
Royal Realty Ltd., Brokerage
® INDEPENDENTLY OWNED AND OPERATED
$158,900
Neilson/Mclevin
2 Bedrooms, 2 Washrooms
Approx 1077 Sq. Ft. With Balcony
$99,000
Markham/Sheppard
1 Bedroom, 1 Washroom
Investment Potential For Startups
$143,900
Dixie/Bloor
2+1 Bedrooms, 2 Washrooms
Close To The Highway
$659,000
Brampton
4+1 Bedrooms, 4 Washrooms
Over 3000 Sqft With Breaktaking View
$309,000
3 Bedrooms, 3 Washrooms
Steps To Lake And Park
$345,000
Keele/Sheppard
3 Bedrooms,3 Washrooms
Near To Hwy 401, 407
$519,900
9th Line/14th Ave.
4 Bedrooms, 3 Washrooms
New Home In Desirable Location
$99,000
Eglinton/Markham
2 Bedrooms, 2 Washrooms
Walk To Schools, Transit
இரஞ்சன் பிரான்ஸிஸ்
Sales Representative
Bus: 416.284.5555
Dir: 416.816.1220
Tax Time!
வருமான வரி படிவங்கள் செய்து தரப்படும்
செல்வா / இரஞ்சன் பிரான்ஸிஸ்
416.816.1220
To Fill any Forms (Sponsors, ODSP, Tax & etc...)
880 Ellesmere Road. Suite 204, Scarborough, ON.




முழு நேர வீடு விற்பனை முகவர்
Finch & Kippling
$154,900
2+1 Bedrooms,
2 Washrooms
Fully Renovated
Midland & Lawrence
$156,900
3 Bedrooms,
2 Washrooms
2 Balconies, Central Air
Mclevin & Neilson
$174,900
2 Bedrooms,
2 Washrooms
Immaculate Corner Suite
Finch & Islington
$209,900
2+1 Bedrooms,
2 Washrooms
$10,000 On Upgrades
(416) PUNCH - ME
Neilson & Finch
HOUSE FOR RENT
BASEMENT APT. FOR RENT
416.786.2463
Morningside & Finch
$339,900
3+1 Bedrooms,
3 Washrooms
Bright & Spacious
Finch & Neilson
$349,900
3+1 Bedrooms,
3 Washrooms
Basement Apt Sep. Entrance
Century 21
Affiliate Realty Inc. Bus.: 416.290.1200
SHIAMALA RATNASABAPATHI
Sales Rep.
PUNCH SOCKALINGAM 416-786-2463
Broker

# வன்னியிலிருந்து வன்கூவர்...

5ம் பக்கத் தொடர்ச்சி...

நாளொன்றுக்கு இரு வேளையாக மட்டுப்படுத்தியிருந்தோம். நோய்த்தெற்றுக்கள் எதுவும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் மிக மிகக் கவனமாக இருக்கும் வண்ணம் கழிப்பறைகள் மற்றும் பாவனையுடன் கூடிய அனைத்து இடங்களிலும் சுகாதாரத்தைப் பேணினோம். அத்துடன், வெப்பம் கூடிய நாட்களில் மூன்று நாட்களுக்கு ஒரு முறை முதலில் கடல் நீரிலும் பின்னர் நன்னீரிலுமாக எமது குளியல் இருந்தது. ஆனால் மழை வந்து விட்டால் இரவு நேரமாக இருப்பினும் மகிழ்ச்சியாக மழையில் நனைந்து முழுகுவோம். இந்த மழைநீரைச் சேர்த்து போத்தல்களில் சேகரித்தோம். காலப்போக்கில் ஏற்பட்ட குடி நீர்ப்பிரச்சனையின் போது, சேகரித்த நீரை வெப்பமாக்கி குடிநீராகவும் தேநீர் தயாரிக்கவும் பயன்படுத்தினோம். இவ்வாறு நாங்கள் தேவைகளைச் சமாளித்த போதும் இயற்கை எமக்கு ஏற்படுத்திய சோதனைகளைத் தாங்கிக் கொண்டமை ஒரு மறக்க முடியாத அனுபவமே. பசுபிக்கடல் பற்றி எத்தனையோ கட்டுரைகளில் வாசித்தும் கேட்டும் அறிந்திருந்தேன். ஆனால் இந்தப் பயணமானது பசுபிக் பற்றியதான மறக்க முடியாத பட்டறிவாக அமைந்தது. கடல் அலைகள் எப்போதுமே எமது கப்பலுக்கு மேலாகவே இருந்தன. (எமது கப்பல் மிகவும் உயரமானது). அந்தப் பீதியின் மத்தியிலும் நூற்றுக்கு மேற்பட்ட டொல்பின்கள் ஒன்றாக அலையுடன் பாய்ந்து விளையாடும் காட்சிகள் மனதிற்கு இனிமையைத் தந்தன. டேற் லைன் எனப்படும் சர்வதேச தேதிக் கோட்டினை நாம் கடந்த அனுபவமும் கிடைத்தற்கரியது.

நாம் சந்தித்த ஆறு புயல்களில் இறுதியாக ஒக்டோபர் நடுப்பகுதியில் சந்தித்த புயலானது மிக மிக அபாயகரமானது. அத்துடன் அந்த பயங்கரத்தினை எடுத்துச் சொல்ல என் அறிவுக்கு எட்டிய வரை வார்த்தை எதுவும் என்னிடம் இல்லை. (இதனைப்பற்றி கூறும் போது அவரது முகம் உண்மையிலேயே உறை நிலையை அடைந்திருந்தது)

உதைபந்தாட்டத்தில் உதைபடும் பந்தினைப் போன்று நாம் கப்பலின் அடிப்பாகத்தில் பந்தாடப்பட்டோம். கூடியிருந்து ஜெபித்தோம், தேவாரங்கள் பாடினோம். இறுதியில் மனதிலிருந்த இறுதித் தன்னம்பிக்கையும் இழந்த நிலையில் அனைவரது முகங்களிலும் மரணத்தை நோக்கிய அச்சம் குடி கொண்டது. இந்நிலையில் மாற்றத்தினை ஏற்படுத்த இறுதி முயற்சியாக ஆடிப்பாடத் தொடங்கினோம். சில நிமிட நேரத்தில் அனைவரது கவனமும் எமது செயற்பாட்டின் மீது திரும்பியது, இன்னும் சில நிமிடத்தில் கைகளை தட்டிய வண்ணம் பாடலுடன் கூடிய ஆடலுடன் அனைவரும் சேர்ந்து கொண்டனர். புயலில் நாம் மாட்டிக் கொண்டிருக்கின்றோம் எனும் நினைப்பு அனைவரது மனதிலிருந்தும் ஓரளவேனும் அகன்றிருப்பதை நான் உணர்ந்தேன்.

ஆனால் வெளியே எஞ்சின் பகுதியில் கடல் நீர் புகுந்தது மட்டுமல்ல, எஞ்சினும் தானாகவே நின்று போனது. இந்த அபாயத்தின் உச்ச நிலையை நாம் எவரும் உணர்ந்திருக்கவில்லை. இதனை விட சமையல் அறை, மற்றும் கப்பலின் மேற்பாகத்தில் இருந்தவர்கள் விழுந்தும் தூக்கி வீசப்பட்டும் அல்லல் பட்டமையை பின்னர் அறிந்தோம். 'எல்லாம் முடிந்தது' என்று விரக்தியின் விளிம்பில் நின்ற நிலையில், எம்மைப் பெற்றவர்கள் செய்த புண்ணியமாக இருக்க வேண்டும் - புயல் தானாக ஓய்ந்தது. ஒடுங்கிக் கிடந்த உயிர் மீண்டும் உயிர்த்தது. நின்று போயிருந்த இயந்திரமும் சில மணி நேரப் போராட்டத்தின் பின் இயங்கத் தொடங்கியது.

அன்றைய தினம் இரவு நேர உணவு தயாரிக்க முடியாமல் இவ்விரண்டு கப் நூடில்ஸ் மட்டுமே சாப்பிட்டோம். காற்று ஓரளவு குறைந்த நிலையில் ஒருவரை ஒருவர் கைகளைப் பற்றிய வண்ணம் இவ்விருவராக வெளியே வந்தபோது, வெளியே தண்ணீர் நிரப்பி வைக்கப்பட்டிருந்த பரல்கள் தூக்கி வீசப்பட்டிருந்தன. அவை ஏற்கனவே அசையாத வண்ணம் நேர்த்தியாக ஏற்றவகையில் பொருத்தி வைக்கப்பட்டிருந்தவை என்பது குறிப்பிடத்தக்கது. இப்படியாக அந்தப் பயங்கர புயலில் இருந்து தப்பிய பின்னரும், அடுத்து வந்த ஒரு கிழமை தொடர்ச்சியாக மிக மிக வேகம் கூடிய காற்று வீசியது. வெளியே எவரும் தனியாக மேல் தளத்திற்கு வரமுடியாத நிலையே காணப்பட்டது. உணவைச் சமைப்பதுவும் தொடர்ச்சியாகச் செய்ய முடியாத நிலை காணப்பட்ட பொழுதிலும் சிறு சிறு ஓய்வின் நடுவே வேகமாக தயாரித்துப் பரிமாறப்பட்டது. ஊழி அலைகளாய் ஆழிக் கூத்தாடிய பசுபிக் சமுத்திரத்தின் கோரத் தாண்டவத்தில் இருந்து மீண்டு



எப்படியும் கனடாவைச் சென்றடைந்து விடுவோம் எனும் தன்னம்பிக்கை வென்றது என்பது மட்டும் உண்மை. (என்று கூறும் போது அவரது முகத்தில் அந்த அசையாத தன்னம்பிக்கையின் தோற்றப்பாட்டினை எம்மாலும் காண முடிந்தது)

2009 ஒக்டோபர் 16ம் திகதியை எம் வாழ்வில் மறக்க முடியாது. அன்றுதான் கனடாவை நாம் அண்மித்துவிட்டோம் என்பதை உணர்ந்தோம். வானத்தில் தோன்றிய கனடிய விமானங்கள் எம்மை வட்டமிட்டன. நாம் அனைவரும் வெளியே வந்து கைகளை அசைத்து மகிழ்ச்சி ஆரவாரத்துடன் உதவி கோரினோம். கனடாக்கரையை நெருங்குகின்றோம் என்ற நினைப்பு பெரும் மன ஆறுதலை எமக்குத் தந்தது. சற்று நேரத்தில் கனடிய கடற்படைக்கப்பல் எம் பின்னால் வரத் தொடங்கியமை நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தியது.

மறுநாள் கப்பல் முற்றாக கனடிய கடற்படையால் முற்றுகையிடப்பட்டது. கப்பலில் வந்த எல்லை சேவை அதிகாரிகளால் எமது அடையாள ஆவணங்கள் கோரப்பட்டன. மதியம் அளவில் விக்டோரியா இறங்கு துறைமுகத்தினைக் கப்பல் சென்றடைந்தது. அவசியம் ஏற்பட்ட சிலருக்கு மருத்துவப் பரிசோதனைகள் நடத்தப்பட்டன, அனைவரையும் உடற்பரிசோதனைக்கு உட்படுத்தியும் சில ஆவணங்கள் நிரப்பப்பட்டும் முதற்கட்ட விசாரணை விக்டோரியத் துறைமுகத்தில் நடத்தப்பட்டது. பின்னர் அனைவரும் விக்டோரியா நகரில் உள்ள ஒரு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டோம்.

அன்றைய இரவுப் பொழுதினை விக்டோரியா சிறையில் கழித்தோம். மறுநாள் வன்கூவருக்கு அழைத்து வரப்பட்டு வேறு ஒரு சிறையில் தங்கவைக்கப்பட்டோம். அதன் பின்னர் எமக்கான விசாரணைகள் நடைபெற்றன. இந்த விசாரணைகளை நடாத்திய அதிகாரிகள் எமது பிரச்சினைகளையும் எமக்கு சிங்கள அரசால் ஏற்பட்ட அவலங்களையும் கேட்டறிந்தனர்.

இக் காலப்பகுதியில் எம்மை கனடியத் தமிழர் பேரவை தொடர்பு கொண்டமை எமக்கு பெரும் ஆறுதலைத் தந்தது. உண்மையிலேயே யாருமற்ற அனாதைகள் என்ற மனோநிலையில் இருந்த பலருக்கு நாங்கள் உங்களுடன் இருக்கின்றோம் எனும் மனத் தைரியத்தினை கனடியத் தமிழர் பேரவையின் செயற்பாடுகள் ஏற்படுத்தின. அதுமட்டுமல்ல, ஒவ்வொருவருக்கும் தேவையான திறமைமிக்க வழக்கறிஞர்களை நியமித்ததிலும், நாட்டிலுள்ள எமது உறவுகளுடனான தொடர்புகளுக்கும், எமது அடையாள ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதிலும் இறுதிவரை தோள் கொடுத்து சேவை ஆற்றியது கனடியத் தமிழர் பேரவை. அது மட்டுமல்ல, எமக்கு வழக்கறிஞர்களுடன் உரையாடுவதில் இருந்த மொழிப் பிரச்சினைக்கும் கனடிய தமிழர் பேரவை உதவியது. அனைவருக்கும் தொலைபேசி உரையாடலுக்குச் சிறு பண உதவியை ஏற்படுத்தியமையையும் குறிப்பிட்டாக வேண்டும்.

நாம் வந்து இறங்கியவுடன் எம்மைப் பற்றி சிங்களப் பேராசிரியர் ரொகான் குனரத்னா வெளியிட்ட தகவலானது, எல்லோரையும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியது. இத்தனை தூரம் இயற்கையுடன் போராடி வந்தும் இங்கும் சிங்களத்தின் கைவரிசை எம்மைத் துரத்துகிறதே என வேதனைப்பட்டோம். ஆனால் காலப்போக்கில் அவரது தகவல்களில் இருந்த பொய்ம்மைத்தன்மையை கனடிய அரசு விளங்கிக் கொண்டது மட்டுமல்ல, எமது வழக்கறிஞர்களும் அவரை குறுக்கு விசாரணை செய்து பொய்ம்மைத் தன்மையை உறுதிப்படுத்தினர்.

நாம் சிறையில் இருந்த காலகட்டங்களில் எங்களுடன் வந்து உறவாடியும் வெளியிலிருந்து எம் விடுதலைக்காகப் பாடுபட்டு, பிரார்த்தனைகளை மேற்கொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் அமைப்பினருக்கும் இவ்விடத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மனிதர்கள், இயந்திரங்கள் போன்று வாழ்ந்து கொண்டிருக்கும் இந்நாட்டில் தன்னலம் கருதாது குறிப்பாக கிழமை தோறும் தவறாது வந்து எம் உள்ளங்களை ஆற்றுப்படுத்திய மதிப்பிற்குரிய அருட்தந்தை தனிநாயகம் அடிகளாருக்கும் போதகர் அஜித் பிரியந்தன் அவர்களுக்கும் நாம் என்றும் கடமைப்பட்டுள்ளோம். இவர்களது வருகை சில வேளைகளில் தாமதமானால் நாம் எதையோ இழந்தவர்கள் போன்று தவித்த உணர்வும், கண்டவுடன், பிள்ளைகள் பெற்றோரிடம் உரிமையுடன் நடந்து கொள்வதைப் போன்று, ஏன் நேற்று வரவில்லை? என நாம் கேட்பதையும் தற்போது எண்ணிப் பார்க்கின்றேன். அந்தளவு எம் மனதில் இவர்கள் இடம் பிடித்திருந்தனர். எம் நினைவுகளில் என்றுமே நிலைத்து வாழ்வார்கள். இவர்கள் இருவரையும் ஒழுங்கு செய்தது மட்டுமன்றி எங்கள் நலனில் அக்கறை கொண்ட மனிதராக சிறைச்சாலை நிருவாகத்தில் பணியாற்றும் Chaplain (மதகுரு) அவர்களையும் எம்மால் மறக்க முடியாது. அதே போன்று சிறை நிருவாகமும் அதிகாரிகளும் எம்மை சிறப்பாக வழி நடத்தினர். அவர்களுக்கும் எமது நன்றி.

Chaplain அவர்கள் மூலமாக சிறைச்சாலை நிருவாகத்திடம் அனுமதி பெற்று கடந்த டிசம்பர் 29 திகதி போதகர் அஜித் பிரியந்தன் எமது கலாச்சார உணவை மதிய உணவாக வழங்கினார். அன்றைய தினம் எமக்கு ஏதோ ஒரு கொண்டாட்ட நாள் போன்று அமைந்திருந்தது. எமது நாக்குகள் மீண்டும் உயிர்ப்பித்ததைப் போன்று நாம் அனைவரும் உணர்ந்தோம். உண்மையில் எமக்கு அந்த உணவை ஏற்பாடு செய்த உள்ளங்களுக்கும் சமைத்து பரிமாறிய அந்த உணவகத்திற்கும் அனுமதி பெற்றுத்தந்த Chaplainக்கும் சிறை நிருவாகத்தினருக்கும் எமது போதகருக்கும் மனமார நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவற்றுடன் நாம் விடுதலையானபோது எம்மை நீதிமன்றத்திலிருந்து கூட்டிச் சென்று எமக்கான சில தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்து, உணவு தந்து, அன்றைய நள்ளிரவு விமான நிலையம் கூட்டிச் சென்று ஏற்றி விடும் வரைக்கும் போதகரும் கனடிய தமிழர் பேரவையினரும் பெரும்பங்காற்றினர்.

கனடா என்றுமே மனியதநேயம் உள்ள ஒரு நாடு என்பதாலேயே அத்தனை தூரம் நாம் உயிரைப் பணயம் வைத்து எத்தனையோ புயல்களையும் எதிர்கொண்டு வந்து சேர்ந்தோம்.

அதுபோலவே எமது பிரச்சினைகளை ஆறஅமர இருத்தி, கேட்டு, சட்டதிட்டத்திற்கு அமைவாக விடுதலை செய்த கனடிய அரசாங்கத்திற்கும் அமைச்சருக்கும் அதிகாரிகளுக்கும் நாம் என்றும் நன்றியுடையவர்களாக இருப்போம் என்று கூறிக்கொள்வது மட்டுமல்ல, எப்போதும் இந்த நாட்டுச் சட்ட திட்டங்களைப் பெரிதும் மதித்து நடப்போம் எனவும் உறுதிபடத்தெரிவித்துக் கொள்கின்றோம், அத்துடன் எமது தேவைகள் குறித்து அக்கறை செலுத்திய கனடிய மனித உரிமை அமைப்பு (CHRV), கனடிய செஞ்சிலுவைச்சங்கத்தினர், யூனிசெப் போன்ற தொண்டர் அமைப்புக்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம் எனக் கூறி மௌனமானார் அந்த அன்பர்.

இவ்வாறு இந்த உறவு தன்னுடைய அனுபவங்களை நம்முடன் பகிர்ந்து கொண்டார்.

வன்னிப் போரில் உணர்வைத் தொலைத்து, பின் வதை முகாம் கொடுமைகளில் இருந்து மீண்டு, கடலில் இயற்கையின் சோதனைகளுடன் 45 நாட்கள், வன்கூவர் சிறையில் 4 மாதங்கள் என போராடிக் களைத்து, மீண்டும் உயிர்த்ததைப் போன்ற உணர்வை கனடா நாடு அவருக்குக் கொடுத்திருக்கின்றது. எனினும் தன் குடும்பத்தைப் பிரிந்திருக்கும் ஆளாத்துயரம் அவரைக் கடுமையாக வாட்டுவதையும் என்னால் கண்டு கொள்ள முடிந்தது.

அவர் தம் குடும்பத்துடன் எப்போது இணைவார்? கனடா அரசு விரைவில் விசாரணைகளை முடித்து அவர்களை அகதிகளாக அங்கீகரிக்குமா? துயரத்தின் தொடர்ச்சியான இந்த வினாக்களுக்கு அவர் விழிகள் விடையைத் தேடுகின்றன.

**நேர் கண்டவர்: மாறன்**

■ ■ ■


**இணைந்து கொள்ளுங்கள்**

**'தாய்வீடு' facebookஇல்**

**www.facebook.com/thaiveedu**

**www.thaiveedu.com**

# வாழ்கை சுவர்க்கமாவது இனிய இல்லமொன்றில்...

## Elaguppllai (Mike) Srinathan B.Sc

**Sales Representative**

**Dir: 416-276-1225 Off: 905-470-9800**

**Email: esrinathan@trebnet.com**




**Brimortan/Lawrence**



**$309,900**
Detached Bungalow Bed rooms 3+2, Washrooms 3

**Sheppard And Conlins**




**$312,888**
Townhouse 2 Storey. Bed rooms 3, Washrooms 2 Close To Ttc, Shopping And U.O.T., Scarborough Campus Well Maintained,

**Hwy48/9th Line**



**$329,000**
Townhouse, 2 Story Bed rooms 3, Washroom 2 4 Years New!, Porch Enclosure, Fully Fenced Backyard, Walk To The Park, School

**Kennedy/Steeles**



**$369,000**
Detached 2 story, Bed rooms 3+1, Washrooms 3 Finished Basement.Home Office In Garage.Covered Front Porch

**9th Line/14th Avenue**



**$394,900**
Semi Detached 2 Story Bedrooms 3, Washrooms 3, Great Neighbourhood!Close To Hwy 407, Shopping, Banks, Hospital, Schools

**9th Line/Reeves Way**




**$419,000**
Detached 2 Story, Bedrooms 3, Wasroom 3 2 Yrs New, Upgraded Kitchen Cabinet,Stainless Steel Appliances,Double Door Entry

**Cornell Centre/16th Ave.**




**$419,000**
Detached 2 Story, Bed rooms 4 Washromss 3,Over 2200Sf. Oak Hardwood,Backyard Red Cedar Fence. Professinoal Landscaping

**9th Line/Reeves Way**



**$424,900**
Detached 2 Story, Bed rooms 4 Washrooms 3 Large Pantry, Breakfast Area, Stone & Perennial Lands

**Finch & Morningside**



**$434,900**
Detached 2 Story, Bed rooms 4+1, Washrooms 4 Amazing Neighbourhood, 1800 Sq/Ft,Thousand Of Dollars Spent On Upgrades

**Markham/Bur Oak Ave**



**$439,900**
Detached 2 story, Bed rooms 4 Washrooms 3, Double Entrances,Driect Access To Garage, Close To Park, Step To School

**Major Mackenzie/ Markham**




**$448,800**
Semi Detached 2 Story, Bedrooms 3, Washrooms 3, Hardwood&Ceraminc Floor, Tall Cabinets, Basement W/R/I 3Pc Bath

**Hoover Pl/ 10th Line**



**$454, 900**
Detached 2 Story, Bed rooms 3+1, Washrooms 3 Approx. 2000 Sqft. Fully Upgraded Top To Bottom, Close To All Possible Amenities

**Brimley/Denison**



**$459,000**
Link 2 Story, Bedrooms 4+2, Washrooms 5, Upgraded Executive Home Outstanding New Roof, Walking Distance To Ttc, School,

**9th Line & 16th Ave**



**$469,900**
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 3, Super-Sized Backyard, Super Floor-Plan With Separate Living & Dining Rooms

**9th Line & 14th Ave**




**$479,900**
Detached 2 Story, Bedrooms 4, Washroom 3 Upgraded Kitchen Cabinets, Fully Fenced Backyard, Extended Driveway

**9th Line/14th Avenue**



**$486,000**
Detached 2 Story, Bedrooms 3, Washrooms 3, Maple Hardwood Floor, Hardwood Stairs, Direct Acc Fr Garage, Fenced Yard,

**Markham Road/14th Ave**



**$489,900**
Detached 2 Story, Bedrooms 4+2 Washrooms 4 Close To School, Shopping And Park.

**Middlefield/Denison**



**$529,900**
Detached Bungalow, Bedrooms 4+2 Washrooms 5, Walking Distance To Ttc, Close To Schools, Shops, 2 Br Basement Apartment

**9th Line & 14th Ave.**



**$599,000**
Detached 2 Story Bed rooms 4, Washrooms 4 Close To New Shopping Plaza And 407 Exit. 3,237 Sq.Ft, Lots Of Upgrades

**Kennedy /16th Ave**




**$638,000**
Detached 2 Story Bed rooms 4+1, Washrooms 3, Many High Quality Upgrades Maple Hardwood Floor, Marble Counter Tops

**Birchmount/Ellesmere**



**$249,900**
Condo Apt. Bed rooms 2, Washrooms 2, A Luxury High Demand Building, 24 Hrs Security Guard

**Pickering Beach/Bayly**



**$359,900**
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 3 Approx. 2300 Sq. Ft.Hardwood Floors And A Fully Remodelled Kitchen

**Sales of Business**

**$525,000 For Sale**
Sale Of Business Without Property Gas Stations. Full Service Gas Station On A Very Busy Highway 41

RE/MAX
**Realtron Realty Inc. Brokerage**
**Independently Owned and Operated**
**7800 Woodbine Ave. Penthouse, Markham,ON. L3R 2N7**

**'I can also assist you with: Mortgage Financing Home Inspection, Real Estate Lawyer'**

# HOMELIFE FUTURE REALTY

7 Eastvale Dr #205
Markham, Ontario
L3S 4N8

Office: 905-201-9977
Fax: 905-201-9229

*OPEN HOUSE*
Sunday.March.7th
2pm - 4pm

## McCowan/Steeles



**$459,000**

- 4+2 Bedrooms
- 4 Washrooms
- Fin.Bsmnt w/Sep.Ent
- Broadloom+Hardwood
- New Paint/Garage Door

## Lawrence/Midland



**$149,900**

- 2 Bedrooms
- 1 Washroom
- New Kitchen/Washroom
- New Paint
- Large Balcony



**LOKAN SUNDARAM**
*Broker*

*416-450-3984*
*lokan.homelife@gmail.com*

HOMELIFE HIGHER STANDARDS

# வைத்திய பரிசோதனையற்ற ஆயுட் காப்புறுதி Non-Medical Insurance

No medical exam required.
Offered to individuals from 40 to 85 years of age.
Premiums and coverage that will never change.
Coverage ranging from $1,000 to $50,000.
Immediate coverage — no waiting period.
Benefits that could triple in case of accidental death.

| வயது | காப்புறுதி தொகை | மாதாந்த கட்டணம் | |
|---|---|---|---|
| | | ஆண் | பெண் |
| 60 | $ 25,000 | $ 102.00 | $ 82.49 |
| 60 | $ 50,000 | $ 199.04 | $ 159.57 |
| 65 | $ 25,000 | $ 142.00 | $ 107.80 |
| 65 | $ 50,000 | $ 278.60 | $ 210.20 |
| 70 | $ 25,000 | $ 199.19 | $ 146.21 |
| 70 | $ 50,000 | $ 392.99 | $ 287.01 |
| 75 | $ 25,000 | $ 282.53 | $ 201.62 |
| 75 | $ 50,000 | $ 559.67 | $ 397.85 |
| 80 | $ 25,000 | $ 420.64 | $ 293.15 |
| 80 | $ 50,000 | $ 835.88 | $ 580.91 |
| 85 | $ 25,000 | $ 629.26 | $ 481.68 |
| 85 | $ 50,000 | $ 1,253.12 | $ 957.96 |



**KEN KIRUPA** 759 Warden Ave., Toronto, ON
Life Insurance Broker

CELL 416-294-9322
OFFICE 416-759-5453

INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. · Assumption Life · Unity Life of Canada · Canada Protection Plan

E & O E

# உங்கள் வீட்டை விற்பது எப்படி?

வீட்டை விற்பதற்கு ஒரு முகவர் உதவியை நாடுவதில் உள்ள நன்மை பற்றி கடந்த அலகுகளில் பார்த்தோம்.

## வீடு, விற்பனை முகவர்

ஒரு வீடு விற்பனை முகவரை உங்கள் வீட்டை விற்பதற்கு அனுமதி வழங்கும்போது அவர் உங்களுடைய பிரதிநிதியாவார். AGENT என்ற சொல் வீடு விற்பனைத் தொழிலில் ஈடுபட்டுள்ள அனைவரையும் குறிப்பிடும் விதத்தில் தவறாக உபயோகிக்கப்பட்டுள்ளது. வீட்டு விற்பனை முகாமையாளர் மட்டுமே உங்கள் பிரதிநிதியாக உங்கள் விற்பனையைச் செய்ய முடியும். நீங்கள் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதியின் நிறுவனம் ஒன்றுக்கு மேற்பட்ட Brokers அல்லது Sales Persons னைக் கொண்டிருக்கும். அந்த நிறுவனத்தின் வேலை செய்பவராகவோ அல்லது அவர்களால் நியமிக்கப்பட்டவர்களாகவோ அந்த புறோக்கர் இருப்பார்.

அப்படி புறோக்கராக (Broker) வருவதற்கு ஒருவர் 2வருட வீடு விற்பதில் அனுபவமும் தேவையான கல்வித் தகைமையும் கொண்டிருக்க வேண்டும். அவர் உங்களிற்கும் Brokerageற்கும் உள்ள உறவை உறுதிப்படுத்தும். உங்கள் சம்மதத்தைப் பெறும் ஆவணங்களில் கையொப்பம் பெறுவார்.

## இந்த முகவர் யாருக்கு வேலை செய்கிறார்?

இது சில வேளைகளில் ஒரு சிக்கலான கேள்வியாக இருக்கலாம். எனவே இந்த விற்பனையில் ஈடுபட்டுள்ள சகல பிரிவினரும் இந்த உறவில் உள்ள உண்மை அறிந்து கொள்ள ஒரு சில நிமிடம் ஒதுக்க வேண்டும்.

ஒன்றாறியோ வீட்டு விற்பனையில் Brokerageக்கும் விற்பவர், வாங்குபவர்களிற்குமிடையிலுள்ள உறவு நிலை நாட்டப்படும். விற்பவரின் அல்லது வாங்குபவரின் பிரதிநிதியாகவோ அல்லது இரு பகுதியினரதும் பிரதிநிதியாகவோ இருப்பர். உண்மையில் அங்கு நான்கு விதமான உறவுமுறை காணப்படும்.

அவையாவன:-

Seller Repres Entation.
Buger Representation.
Multiple Representation.
Customer service.
Seller Representation.

இப்படிப்பட்ட ஏஜன்சி உறவுமுறையில் (Brokerage) மற்றும் விற்பனை பிரதிநிதிகள் யாவரும் விற்பனையாளர்களைச் சார்ந்தவர்களாக இருப்பார்கள். விற்பனையாளரின் பிரதிநிதிகள் பட்டியல் இடப்பட்ட சொத்தை பெறுமதி மிக்கதாகக் காண்பிப்பர். விற்பனையாளரைப் பற்றிய விபரங்களை இரகசியமாக வைத்திருந்து தங்களுடைய விற்பனைத் திறனைக் காண்பிப்பதுடன் விற்பனையாளரின் நன்மைக்காகப் பாடுபடுவர்.

ஒரு விற்பனையாளரின் பிரதிநிதி வாங்குபவரைப் பற்றிய தனக்குத் தெரிந்த சகல விடயங்களையும் கூற வேண்டும். அந்த சொத்தை வாங்குபவர் அதற்கு அதிக பணம் கொடுத்து வாங்கத் தயாராக இருந்தால் அந்த செய்தியை விற்பனையாளரிடம் பங்கிட்டுக் கொள்ள வேண்டும்.

## வாங்குபவரின் பிரதிநிதி (Buger Representation )

இந்த ஏஜென்சியின் செயற்பாட்டின்படி சகல விற்பனையாளர்களும், தரகும் வாங்குபவரை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. வாங்குபவரின் பிரதிநிதி, வாங்குபவர் தேவைக்கேற்ற சொத்தைத் தேடுவார். வாங்குபரின் பிரதிநிதி வாங்குபவரின் விருப்பத்திற்கு அமைய ஒரு சொத்தைத் தேடுவார். வாங்குபவரும் தரகர் (Broker)ம் Buyer Representation Agreement ஏற்படுத்திக்கொள்வார்கள். வாங்குபவரின் தரகருக்குரிய தரகுப்பணம் சொத்தை விற்றவுடன் கொடுக்கப்படும். சில விற்பனைகளில் தரகுப்பணம் நேரடியாகத் தரகரிடம் கொடுக்கப்படும். வாங்குபவரும் தரகரும் ஓர் ஒப்பந்தம் செய்துகொள்வார்கள். அது அவர்களுடைய உறவை வரையறுக்கும். பல விற்பனைகளில் விற்பனைப் பணத்தில் இருந்து Commission நேரடியாகவோ கொடுக்கப்படும் சில விற்பனைகளில் வாங்குபவரே நேரடியாக Commission தொகையைக் கொடுப்பார். தரகுக்குரிய தொகையை வீட்டு உரிமையாளர் கொடுக்க விரும்பாமல் இருக்கலாம்.

## பன்முகப் பிரதிநிதித்துவம் (Multiple Representation)

சிலவேளைகளில் தரகர் வாங்குபவர் விற்பவர் ஆகிய இருவரின் பிரதிநிதியாக இருக்கக்கூடும். இந்தச் சந்தர்ப்பத்தில் வாங்குபவரும் விற்பவரும் தங்கள் சம்மதத்தினை எழுத்துமூலம் தெரிவிக்க வேண்டும். அத்துடன் இருவரும் தரகருக்குரிய பணத்தை சம பங்காகக் கொடுத்துவிட வேண்டும்.

## நுகர்வோர் சேவை (Customer service)

ஒரு வீடு விற்பனைத் முகவர் பிரதிநிதித்துவம் இல்லாமலே சேவை செய்யலாம். இதனை நுகர்வோர் சேவை என அழைப்பர். (Customer Service) இந்த ஒழுங்கின்கீழ் பல நல்ல பெறுமதியான சேவையை நேர்மையான முறையில் வழங்கலாம். இந்த ஒழுங்குமுறையை வாங்கும் அல்லது விற்கும் நுகர்வோர் ஒப்பந்தத்தின்மூலம் ஏற்படுத்திக்கொள்ளலாம்.

## ஒரே முகவரூடாக வாங்குவதும் விற்பதும்

ஒரே முகவரூடாக வாங்குவதையும் விற்பதையும் நீங்கள் செய்யலாம். இரண்டு முகவர்களுடன் வேலை செய்யவதைவிட இது சுலபமாகும். வேறு ஒரு சந்தைக்குச் சென்றாலும் உங்களுடைய முகவர் ஓர் அனுபவம் மிக்க ஓர் முகவருக்கு உங்களை அறிமுகப்படுத்தலாம். (இதைப் பற்றிய விபரங்களடங்கிய How to buy your home என்னும் புத்தகத்தை ஒன்றாறியோ வீட்டு விற்பனை முகவர் சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.)

## உங்களுக்கு ஏற்ற முகவரை எப்படிக் காண்பது

தற்போது உள்ள உங்கள் வீட்டை வாங்கித் தந்த முகவர் அதை விற்கவும் உதவுவார். அவர் ஏற்கனவே உங்களையும் உங்கள் வீட்டையும் நன்கு அறிந்திருந்தபடியால் உங்களுடைய வேலையை அவரால் சுலபமாக முடித்துத்தர முடியும்.

எப்படியாகிலும் நீங்கள் வேறு ஒரு முகவரைத் தேர்ந்து எடுப்பதாக இருந்தால் பத்திரிகை விளம்பரங்களில் இருந்தும் ஓர் முகவரை நீங்கள் தேர்ந்து எடுக்கலாம்.

## கவனிக்க வேண்டிய பகுதிகள்

உங்கள் முகவர் வதிவிடங்களை விற்பவரா, வியாபார இடங்களை விற்பவரா என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்.

நீங்கள் வாங்க இருக்கும் வீட்டின் பெறுமதியளவிற்கு உள்ள சொத்துக்களை வாங்கி விற்பவரே உங்களிற்குப் பொருத்தமான முகவராவார்.

## நற்பெயர் (Reputation)

நீங்கள் தொடர்ச்சியாக ஒரு இடத்திலோ சமூகத்திலோ வாழ்ந்தால் அவ்விடத்திலுள்ள வீடுகளின் விலைகளைப் பற்றியும், முகவரைப் பற்றியும் ஓரளவு அறிந்திருப்பீர்கள். எனவே தகுதியான ஒரு முகவரைத் தேர்ந்தெடுப்பது உங்களிற்கு எவ்வித கஷ்டமும் இருக்காது.

## தனிநபர் தேர்வு:

நீங்கள் பல வாரங்களிற்கோ அல்லது மாதங்களிற்கோ உங்கள் வீட்டு முகவருடன் வேலை செய்ய வேண்டியிருப்பதால் நீங்கள் தேர்ந்தெடுக்கும் முகவர் உங்களிடம் ஒத்துப்போக வேண்டியவராகவும், உங்கள் கேள்விக்கும் பதில் சொல்லக்கூடியவராகவும், வீட்டு விற்பனைத் துறையில் தங்களிற்கென ஒரு இடத்தை ஏற்படுத்தியவராகவும் இருக்க வேண்டும்.



S.K. பாலேஸ்
- வீடு விற்பனை முகவர் -

உங்களுடைய நோக்கம், உங்கள் முகவரும் அவர்சார்ந்த நிறுவனமும் உங்களிற்கு, எப்படி உங்கள் வீட்டிற்கு ஒரு விலையை நிர்ணயித்தார்கள் என்பதிலும், எப்படி சந்தைப்படுத்தப்போகிறார்கள் என்பதிலும் இருக்க வேண்டும்.

## உங்களுடைய வீட்டிற்கு அதிக விலையை நிர்ணயிப்பவரை நீங்கள் உங்கள் முகவராக நியமிப்பீர்களா?

சில வேளை நீங்கள் அப்படிச்செய்ய யோசிக்கலாம். ஆனால் அதற்குமுன் அவர் எப்படி உங்கள் வீட்டிற்கு விலையை நிர்ணயித்தார் என்பதையும், வீட்டுச் சந்தையின் நிலவரம் எப்படியுள்ளது என்பதையும் உங்கள் வீட்டின் விலை, அதைப்போல வேறு வீடுகளை ஒப்பிடும்போது ஓரளவிற்கு நியாயமானதாக உள்ளதா என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

## எவ்வளவு செலவாகும்?

முகவர் நிர்ணயிக்கும் தரகுப்பணத் தொகை முகவர்களால் நிர்ணயிக்கப்படுவதாகும். இது அநேகமாக விற்பவராலும், முகவராலும் நிர்ணயிக்கப்படுவதாகும்.

skbales@thaiveedu.com

■ ■ ■


தமிழ்க் கலைத் தொழில் நுட்பக் கல்லூரியால் நடாத்தப்படும்
நான்காவது இலக்கிய வட்டம்

தமிழ் இலக்கிய வட்டம் - இலக்கியக் கருத்தரங்கு

மார்ச் 13
சனிக்கிழமை மாலை 6:30

1160 Brichmont Road, Unit - B
416 757 2006






House for Sale

Birchmount & Lawrence
3+1 Bedrooms,
2 Washrooms

S.K. BALES

416 801 3219



Canadian Home Appraisals Inc.
Residential & Commercial
Appraisals
CHAI
CANADIAN HOME APPRAISALS INC.
S_K_Bales
CRA, CAR, MVA, FRI, CRES
Managing Director
Tel: 905-201-0929
Fax: 905-201-8482
www:chainc.ca
email:.chai@chainc.ca

MY PROFESSIONAL DESIGNATIONS:
- CRA (Canadian Residential Appraiser)
Designation with Real Estate division of University of British Columbia and The Appraisal Institute of Canada
- Car: ( Certified Appraisal Reviewer)
Designation with Canadian National Association of Real Estate Appraisers.
- MVA( Market Value Appraiser-Residential
Designation with The Canadian Real Estate Association
- FRI (Fellow of the Real Estate Institute)
Designation with Real Estate Institute of Canada
- CRES ( Certified Real Estate Specialist)
Designation with Real Estate Institute of Canada
- RESIDENTIAL AND COMMERCIAL REAL ESTATE BROKER
Real Estate Broker licence with Real Estate Council of Ontario.

Century 21.
Affiliate Realty Inc.

S.K.Bales
CRA, CAR, MVA, FRI, CRES
Real Estate Broker
Residential & Commercial
TEL: 416-290-1200
CELL: 416-801-3219
Commercial Member

# மருத்துவக் கேள்வி பதில்



இராஜசேகர் ஆத்தியப்பன்

**டாக்டர், எனக்கு வயது 46. கடந்த சில மாதங்களாக உதிரப்போக்கு அதிகமாக உள்ளது. கை – கால்களில் விறைப்புத் தன்மையும் காணப்படுகின்றது. மருந்துகள் எதுவும் பலனளிப்பது போல் தெரியவில்லை என்ன செய்யலாம்?**

செல்வராணி ஸ்ரீதர்

இது பெரும்பாடு (Menoria) என்ற நோய் மாதவிடாய் நிற்பதற்கான (Menopause) அறிகுறியாக இத்தகைய உதிரப்போக்கு இருப்பதுண்டு, இதனால் இரும்புச் சத்துக் குறைபாடு, தாது இழப்பு போன்ற பல வினைகள் நடைபெறுவதால் உடலில் சோர்வு, ஞாபக சக்தி குறைவு, மனஉளைச்சல், கோபம், எரிச்சல் போன்றவை ஏற்படும். ஹார்மோன் குறைபாடு நிகழ்வதால் பைத்தியம் பிடிப்பது போல் இருக்கலாம். கடைகளில் கிடைக்கும் அத்திப்பழம் நல்ல தீர்வு, காலை, மதியம், பின்நேரம் என 2 அத்திப் பழங்களைச் சாப்பிட்டு வந்தால் உங்கள் பிரச்னை எளிதில் தீர்ந்து விடும்.

**எனது அத்தைக்கு நுரையீரலில் ஒரு நோய் இருப்பதாக இந்தியாவிலுள்ள அப்பல்லோ மருத்துவமனையிலிருந்து கூறியுள்ளார்கள். எங்களுக்கு அது என்னவென்றே விளங்கவில்லை குழப்பமாக உள்ளது.**

மோகனவல்லி முரளி.

சித்த மருத்துவத்தில் கப நோய்கள் 20 என்று கணக்கிடப்பட்டுள்ளது. இருபது கப நோய்களும் நுரையீரல் மற்றும் சுவாச உறுப்புகளான இதயம் போன்றவற்றைத் தாக்கக் கூடியவை. இதன் உச்சகட்டமாக புற்று நோயைப் போல அதிகமான நீரை நுரையீரலில் உற்பத்தி செய்து சுவாசிக்கத் தடை ஏற்படுத்தும்.

சளித்தொல்லை, சுவாசக் கோளாறு போன்றவை ஏற்படும் போது ஆரம்பநிலையிலேயே ஆயுர்வேதத்தின் துணையை நாடவேண்டும். இயற்கையில் கிடைக்கும் நெல்லி, ஆடாதொடை, தூதுவளை, கண்டங்கத்தரி போன்றவைகளைப் பயன்படுத்தி இத்தகைய நோய்களை வெற்றி கொள்ளலாம்.

**டாக்டர், எனக்கு முதுகு வலி, இடுப்பு வலி மற்றும் முழங்கால் வலி, இதற்காக கல்ஷியம் எடுக்க ஆரம்பித்தேன். இப்போழுது வலி இன்னும் அதிகமாகிவிட்டது. தங்கள் உதவியை நாடுகின்றேன்.**

கிரேஸ் பானு.

உங்களுக்கு சிறுநீரகக் கல் இருக்க அதிக வாய்ப்பு இருக்கின்றது. இத்தகைய பிரச்சினைகளுக்கு கல்ஷியம், கோவா, பால், முட்டை போன்ற அனைத்தையும் தவிர்க்க வேண்டும். மாறாக, நீங்கள் கல்ஷியத்தையே எடுத்துள்ளீர்கள். இதனால் வலியும், இதயத்துடிப்பும், அதிகமாகும் யோகராஜ் குக்லு, ஆனை நெருஞ்சில், சிறுபீளை போன்ற எளிய மருந்துகள் ஆயுர்வேதத்தில் உண்டு. விரைவாகக் குணப்படுத்தி விடலாம். இல்லையென்றால் சத்திரச் சிகிச்சை வரைத் தேவைப்படுகின்ற அபாயமும் ஏற்படலாம்.

**டாக்டர், எனது மகன் 10 வயது ஆகியும் சில அவயங்கள் போதுமான வளர்ச்சி இல்லை. அவனது எதிர்கால குடும்ப வாழ்க்கையைக் கருத்தில் கொண்டு இந்தக் கேள்வியைக் கேட்கின்றேன்.**

மிரமிளா தேவராஜன்.

இதற்கான ஆலோசனையை நீங்களும் உங்கள் கணவரும் நேரடியாக வந்து பெற்றுக்கொள்வது நலம். கோரக்கர் மூலிகை என்று ஒன்று இருக்கின்றது. இதனை கோரக்கர் என்ற சித்தரின் பெயரால் அழைக்கின்றார்கள். இந்த மூலிகையின் நச்சுத்தன்மையை நீக்கி (களிம்பு நீக்குதல்) நெய் அல்லது பாலுடன் அமுக்ரா போன்ற மூலிகையையும் சேர்த்து ஒரு நாளைக்கு 500 மி.கி அளவு கொடுத்து வர வேண்டும். சுமார் ஆறு மாதங்கள் முதல் ஒரு வருடம் வரை இப்படிச் செய்யலாம். அபரிதமான வளர்ச்சிக்கு உத்திரவாதம். இத்துடன் கருஞ்சீரக எண்ணெய்யை வெற்றிலையில் தடவிக் கட்டலாம்.

**டாக்டர், எனக்கு வயது 52 சமீப காலமாக எனது கண்பார்வை மங்கலாகிக்கொண்டே வருகின்றது. வெண்பனிப் படலம் போன்று ஒரு திரை மறைப்பதாக உணர்கின்றேன். இதற்கான ஆயுர்வேதத் தீர்வு என்ன?**

சங்கரவள்ளி நாயகம்.

உங்களுக்கு சர்க்கரை நோய் இருக்குமானால் அதனைக் கட்டுக்குள் வைத்திட வேண்டும். ஐசோடைன் (Isotine) என்ற ஆயுர்வேத சொட்டு மருந்தை தினம் இருவேளை ஒரு துளி வீதம் கண்களில் இடவேண்டும். magnetic eyeglass – காந்தக் கண்ணாடி அணிந்து தினம் இருபது நிமிடம் கண்பயிற்சி செய்யவேண்டும். கேரட், சிலரி, மற்றும் கருஞ்சீரகம் கலந்த பானத்தை தினமும் அருந்த வேண்டும். கண்களை வெதுவெதுப்பான நீரினால் கழுவவேண்டும். ஒளியுள்ள விழிகள் ஒரு மாதத்தில் உங்களுக்கு சொந்தம். இதனோடு சூரியகலையும் செய்யலாம்.

**டாக்டர், கருஞ்சீரகத்தைப் பற்றி நீங்கள் பலமுறை குறிப்பிடுகின்றீர்கள். இது சர்வரோக நிவாரணியா?**

வசுமதி குலேந்திரன்.

கிரேக்கர்களின் யுனானி மருத்துவத்தில் மிகவும் சிறப்பு பெற்றிருந்த கருவஞ்சீரகம், பிற்காலத்தில் இஸ்லாமியரோடு ஒட்டிக் கொண்டது. முகமது நபி அவர்கள் கருஞ்சீரகத்தைப் பற்றி இவ்வாறுக் குறிப்பிடுகின்றார், 'மரணத்தைத் தவிர எல்லாவற்றிற்கும் நல்லது'. என்னுடைய அனுபவத்தில், நீங்கள் எந்த மருந்து எடுத்தாலும் அதனுடன் கருஞ்சீரகத்தைச் சேர்த்துக் கொண்டால் அது விரைவாகச் செயல்படும். அதாவது, கருஞ்சீரகம் ஒரு தலை சிறந்த வினையூக்கி, கடைகளில் எண்ணெயாக, மாத்திரையாகக் கிடைக்கின்றது. வறுத்துப் பொடித்தும் பாவிக்கலாம்.

**டாக்டர், தூதாயீம் பழம் சாப்பிடு மாறு எனது மருத்துவத் தோழி அறிவுறுத்துகின்றாள். தூதாயீம் பழம் எதற்கு நல்லது, அதன் ஆங்கிலப் பெயர் என்ன?**

சலோமினா வின்சென்ட்.

தூதாயீம் என்பது எபிரேய வார்த்தை இந்தப் பழத்தைப் பற்றியக் குறிப்பு விபிலியத்தில் (BIBLE) காணப்படுகின்றது. இதன் ஆங்கிலப் பெயர் MANDRAKE FRUIT என்பதாகும். இந்தப் பழம் மலட்டுத் தன்மையை நீக்குவதாக நம்பப்படுகின்றது. இந்தத் தாவரத்தின் வேரை பேய் விரட்டுவதற்கும் மனநோய் சம்பந்தப்பட்டவற்றிற்கும் ஐரோப்பாவில் பயன்படுத்தி வருகின்றனர். சீனர் ஒருவர் இதிலிருந்து மது தயாரித்து விற்று பெரிய பணக்காரர் ஆகியிருப்பதாகத் தகவல்.

**டாக்டர், மஞ்சட்காளான் படை நோய் தீர என்ன செய்யவேண்டும்.?**

விஜயன்.

நீங்கள் குறிப்பிடுவது தற்காலத்தில் சொரியாஷிஸ் (PSORIASIS) என்று அழைக்கப்படுகின்றது. இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள் முதலில் குடலைக் கழுவ வேண்டும். பின்னர் கல்லீரலில் படிந்திருக்கும் மாசுவை நீக்கவேண்டும். அதன் பின் இரத்தத்தை சுத்தம் செய்ய வேண்டும். இந்த மூன்றும் நடைபெற குறைந்த பட்சம் ஆறு மாதகாலம் தேவை. ஒவ்வாமையுள்ள பொருட்களான முட்டை, கத்தரிக்காய், மீன், கச்சான், பருப்பு, கடலுணவு, போன்றவற்றையும், புளிப்பு, போன்றவற்றையும் தவிர்த்திடல் வேண்டும். நேரடி ஆலோசனை மிக மிக அவசியம்.

**டாக்டர், நல்லமலர் இதயத்திற்கு நல்லதாமே நல்லமலர் என்பது என்ன?**

அமுதா குமாரசாமி.

ஏதோ ஒரு தகவலை அறைகுறையாகக் கேட்டு வைத்தியம் செய்யக் கூடாது. நல்ல மலர் என்பது தாமரையைக் குறிக்கும். ஒளவையார் பாடிய விநாயகர் துதி என்ற பாடல் வரிகளில், 'வாக்குண்டாம் நல்ல மலருண்டாம்... தும்பிக்கையான் பாதம்' என்று மூலிகைக் குறிப்புகள் காணப்படுகின்றன. தாமரை, செருபடை, தும்பை, கையான் (தகரை) என்ற மூலிகைகளை இரு பொருட்பட ஒளவையார் பாடி வைத்துள்ளார். அதாவது இதில் குறிப்பிடப்பட்டுள்ள மூலிகைகளை பக்குவப்படுத்தி உட்கொண்டால் கொலஸ்ட்ரல், கொழுப்பு போன்றவை நீங்கி இதயம் வலுவாக இருக்கும். நாம் உண்மையான பொருளை மறந்து தவறான பொருளை கற்பித்து வருகின்றோம்.

**டாக்டர், உடல் எடை குறைய எளிய மருந்து என்ன?**

ஸ்டெல்லா சின்னத்துரை.

திரிபலா மற்றும் LIV-52. திரிபலாவைத் தினந்தோறும் எடுக்கவேண்டும். Liv.52 இரண்டு மாதங்கள் எடுத்தால் போதும்.

**டாக்டர், டான்சில் (Tonsilitis) நோய்க்கு என்ன தீர்வு?**

அருண் ராஜா.

சுவாச மண்டலத்தில் ஏற்படும் பாதிப்புகளில் ஆஸ்துமாவுக்கு அடுத்து முக்கியமான காரணி தொண்டைச்சதை (TONSILITIS), சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு, சினா கற்கண்டு, என்று வகைக்கு 50 கிராம் எடுத்துக் கொண்டு அனைத்தையும் பொடி செய்து வைத்துக்கொண்டு காலை, மாலை இரு வேளையும் 1 கிராம் அளவு சுடு நீருடன் சாப்பிட்டு வர தொண்டைச் சதை கரையும்.

**டாக்டர், நான் வீட்டிலேயே அறுகம் புல் வளர்க்கின்றேன். இதனை மருந்தாக உட்கொள்ளலாமா?**

கங்காதரன்.

அறுகம்புல் மிகவும் அருமையான மூலிகை. உடலின் தாது வெப்பு அகற்றி, தாகம் தணித்து, சிறுநீர் பெருக்கி, நோய் நீக்கி, உடல்தேற்றி காமம் பெருக்க உதவும். மஞ்சளுடன் அரைத்து உடலில் பூசி சில மணி நேரம் கழித்துக் குளித்தால் தோல் நோய்கள் தீரும். 30 கிராம் புல்லை அரைத்துப் பாலில் கலந்து அருந்தி வந்தால் இரத்த மூலம் சுகமாகும். அருகம்புல், மாதுளை இரண்டையும் சம அளவு எடுத்து அரை லிட்டர் தண்ணீரில் காய்ச்சி கால் லிட்டராகக் குறைத்து 50 மி.லி அளவு இரண்டு மணி நேரத்திற்கு ஒரு முறை குடித்துவந்தால் காது, மூக்கு, ஆசனவாய், இரத்த ஒழுக்கு நிற்கும். வெப்பம் தணியும், மாதவிலக்குச் சிக்கல் நீங்கும்.

**பி.கு: மேற்கூறிய குறிப்புக்களை வைத்தியரின் ஆலோசனையுடன் பின்பற்றுவதே சிறந்தது.**

rajasekar.a@thaiveedu.com

■ ■ ■



ஆனந்தமான அனுபவம் ! தகவல்களின் சுரங்கம்
இசையும் ஆழ்ந்த அறிவும் தமிழின் பலமே!
கலசம்
www.KALASAM.com
தமிழின் சுவைகூறும் இணையத்தள ஒலிபரப்பு

# கேரளா ஆயுர்வேதா

314-4005, டான்மில்ல்ஸ் ரோடு, டான்மில்ல்ஸ்/ஸ்டீல்ஸ்
தொலைபேசி: 416 995 0416
**www.ayurvetha.com / ayurvetha@gmail.com**




- வெண்புள்ளி - Viteligo.
- காளான்படை - Psoriasis.
- படர் தாமரை.
- கண்டமாலை.
- சொரி, சிரங்கு.
- கரப்பான்.
- கட்டி.
- அடங்காத தோல் நோய்கள்.
- அரையாப்பு.
- கிரந்தி.
- காலாணி.
- குட்டம்.
- செற்றுப் புண்.
- படுக்கைப் புண்.
- முகப் பரு.
- தேமல்.
- தலை பொடுகு (சொடுகு).
- யானைத்தோல் சொரி.
- தவளைச் சொரி.
- பித்த வெடிப்பு
- கால் ஆணி.
- நரம்பு சிலந்தி.
- மேக நோய்.
- தோல் புற்று நோய்.
- முடி உதிர்தல்.
- வெள்ளைப்படுதல்.
- கர்ப்பப் பை கட்டிகள்.
- உதிரப் போக்கு.
- மாதவிடாய் வலி.
- கரு தங்காமை.

போன்ற பிரச்சினைகளுக்கு
மருந்துகள் தயாரித்து வழங்குவோர்.

## ஜீவ சப்தம் ஆஸ்ரமம் மருத்துவமனை, குற்றாலம், தென் இந்தியா.

இந்தியாவில் தங்கி சிகிச்சை பெற முன்பதிவு செய்யவும்
001 91 81447 88248,

கனடாவில் டாக்டர் இராஜசேகர் ஆத்தியப்பன், M.D.,F.H.M.S.S.,
416 995 0416.

# பங்குச்சந்தையில் முதலிடுவது எப்படி...?

கண்ணன் காங்கேசு



எதை எழுதலாம் என்ற நீண்ட போராட்டத்தின் பின் பங்குச்சந்தையே என் தெரிவானது. எனது இந்த முயற்சியின் மூலம் யாராவது ஒருவர் நானும் share markerல் பெட்டிக்கடை-யாவது போடுவேன் என நினைத்தாலே அது என் முயற்சிக்குக் கிடைத்த வெற்றி. எல்லா முயற்சிகளும் இறுதியில் Positive அல்லது Negative என்பதில் முடிவுறும். அதுபோல இந்த சந்தையிலும் நன்மைகளும், தீமைகளும் உண்டு. இதிலுள்ள நன்மைகள், நமக்கு போட்டி என்று கண்முன்னால் எவரும் இல்லை. 18 வயதிற்குப்பின் யாரும் தொடங்-கலாம். (பங்குசந்தையின் பிதாமகனாக Warran Buffet 11 வயதில் முதல் பங்கை வாங்கினார்) மிகக்குறைந்த மூலதனத்தில் தொடங்கலாம். Lease contract, வாடகை, தொலைபேசி, Employee என்ற எதுவும் இல்லை. தேடலும் அறிவுமே எமது பலம் (Knowledge is the power) ஆனால் பேரா-சையே பலரது பலவீனம். (தெரியாமல் கால் வைத்தால் கால் இருக்காது.)

பங்குச் சந்தை வெளிப்புறத்தில் சூதாட்டம் போலத் தோன்றினாலும் அதன் நுட்பம் அறிந்து ஏற்படும் இழப்புக்களை குறைத்து பொறுமை யாக மதிநுட்பத்துடன் முதலீடு செய்தால் இது பணத்தை அள்ளக்கூடிய இடம்தான். அடுத்தவரின் Tipsஐ மட்டும் நம்பாமல் (Including mine) தினசரி செய்திகளையும் அது பங்குச்சந்தையில் ஏற்படுத்தக்கூடிய பாதிப்புகளையும் கணிக்கவேண்டும். (Try to connect the dots)

பங்குச் சந்தை பற்றி பார்ப்பதற்கு முதலில் பங்குகள் என்றால் என்னவென்று பார்ப்போம். பங்குகளா?... எனக்குத் தெரிந்த ஒரே பங்கு ஆட்டுபங்குகள்தான்... (என்றாலும் பரவா-யில்லை...).

சொந்த முதலீட்டில் ஒரு நிறுவனத்தை (Private Company) வைத்திருந்தால் அது வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம். அதுவே கூடுதலான முதலீட்டிற்காக எவ்வாறு பணத் தைச் சேர்க்கலாம் ஒன்று வங்கியில் கடன் வாங்கலாம். அல்லது அந்த நிறுவனத்தில் குறிப்பிட்ட அளவு முதலீடுகளை பல பங்கு-களாகப் பிரித்து விற்று வரும் வருமானத்தை முதலீடு செய்து மேலும் மேலும் நிறுவனத்தை வளப்படுத்திக் கொள்ளலாம். இங்குதான் பங்குகள் ஆரம்பமாகின்றது. இதற்கு முதலில் ஒரு கம்பனியை Private Companyயில் இருந்து பொது நிறுவனமாக (Public Companyஆக) அரசாங்க சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு மாற்ற வேண்டும். ஒரு சிறு உதாரணத்தைப் பார்ப்-போம். ஒரு Companyயின் மொத்த முதலீடு 100 Dollar என்று வைத்துக்கொள்வோம். 51 Dollar பெறுமதியை வைத்துக்கொண்டு, மீதி 49 Dollarஐயும் ஒவ்வொரு பங்கும் ஒரு Dollar வீதம் விற்றல் 49 பங்குகள் 49 டொலரிற்கு விற்கலாம். இப்போது இந்தப் பங்குகள் வாங்கும் ஒவ்வொருவரும் அந்த நிறுவனத்தின் பங்குதார்கள். இப்படி ஒரு நிறுவனம் பங்குகளை முதன் முதலில் வெளியிடுவதை 'துவக்கப் பொது வெளியீடு' (Initial Publish Offering) என்பர், இப்படி பங்குகளை வெளியிடும்போது வாங்க முடியா விட்டால், இங்குதான் பங்குச்சந்தை தேவைப்-படுகின்றது.

இப்போது எமது பக்கத்துக்கு வருவோம் ஒருவர் ஒரு பங்கை வாங்கிவிட்டார். அந்த நிறுவனம் லாபகரமாக ஓடிக்கொண்டிருக்-கின்றது. வருட இறுதியில் மொத்த இலாபம் 100 Dollar, அதாவது Companyயின் ஒரு பங்கை வேண்டியவருக்கு லாபம் 1 Dollar, இப்போது அவர் அந்தப் பங்குகளை விற்க-லாம் என எண்ணுகின்றார். நிறுவனம் நன்றாக ஓடிக்கொண்டிருப்பதால் அதிக விலை கொடுத்து வாங்க பலரும் போட்டிபோடுகின்-றார்கள். அவர் அந்தப்பங்கை 5.00 Dollarக்கு விற்றால் அதுதான் பங்கின் சந்தை மதிப்பு (Market price).

பங்குசந்தை இரண்டு வகைப்படும் முதன்மை பங்குசந்தை (Primary Market)-Issuing first stocks to public, இங்கு வாங்கிய பங்குகளை விற்பதற்கோ அல்லது மேலும் பங்குகள் வாங்குவதற்கோ நாம் அணுகவேண்டிய இடம் Secondary Market – உலகில் புகழ்பெற்ற பங்குச்சந்தைகளாக New York Stock Exchange, London Stock Exchange, Nasdag, Hong Kong Stock Exchange என பல உண்டு.

### வேண்டிய பங்குகளை வேண் டாம் என்று திருப்பிக் கொடுக் கலாமா?

உதாரணமாக: Walmart பங்குகளை வாங்கு கின்றோம் என்று வைத்துக்கொள்வோம். பங்குகள் விலை கொஞ்சம் குறைகின்றது. உடனே ஓடிப்போய் WalMart கதவைத் தட்டக் கூடாது, ஐயா ஆளைவிடுங்கோ பங்கை எடுத்துக் கொண்டு பணத்தைத்தாங்கோ என்று. DVD playerஐ வேண்டுமானால் மெல்லமாக படத்தை பார்த்துவிட்டு இதுவேணாம் Skip பண்ணுது என்று கூறலாம். ஒரு நிறுவனம் பங்குகள் விற்றுவிட்டால் ஒரு போதும் எம்மிடம் இருந்து திரும்ப வாங்காது. சில நேரங்களில் நட்டப்பட்டு Company மூடினால், அதன் எல்லா கடன்களும் அடைத்து மீதி ஏதாவது இருந்-தால் மட்டும் பங்குதாரருக்கு வழங்கும்.

> “ பங்குச் சந்தை வெளிப்புறத்தில் சூதாட்டம் போலத் தோன்றினாலும் அதன் நுட்பம் அறிந்து ஏற்படும் இழப்புக்களை குறைத்து பொறுமையாக மதிநுட்பத்துடன் முதலீடு செய்தால் இது பணத்தை தரக்கூடிய இடம்தான். ”

பங்குகள் எவ்வாறு உருவானது, அத்தோடு பங்குச் சந்தை என்பது பங்குகள் வாங்கும் விற்கும் இடம் என்று தெரிந்து கொண்டோம். இனி பங்குகளின் விலை மாறுவதற்கான காரணங்களைப் பார்ப்போம்.

**What causes stocks prices to change.**

சாதாரணமாக அதிகம்பேர் வாங்க நினைத்-தால் விலை அதிகரிக்கும் விற்க நினைத்தால் விலை குறைவடையும். இது கத்தரிக்காய் சந்தைக்கும் பொருந்தும்.... இங்கும் அப்படித் தான்.

### பங்குச்சந்தையில் மாற்றங்க-ளை நிகழ்த்தும் காரணிக-ளைப் பார்ப்போம்.

- ஒரு நிறுவனத்தின் மேல் கூறப்படும் செய்தி (அதாவது முதலீட்டாளர்கள் Company மேல் வைத்துள்ள நம்பிக்கை).
- நிறுவனத்தின் சந்தை மதிப்பு - Market Capitalization (ஒரு நிறுவனத்தின் மொத்தப் பங்குகளை ஒரு பங்கின் விலையால் பெருக்க வருவது உதாரணமாக ஒரு பங்கு $50 Dollar, மொத்தப் பங்குகள் 100,000 ஆகவே சந்தை மதிப்பு – Market cap = 50x100,000 - $5,000,000 Dollar).
- ஒரு நிறுவனத்தின் ஆண்டு வருமானம்.
- நாட்டின் பணவீக்கம் - Inflation (இன்று 100 dollarக்கு வாங்கும் பொருள் அடுத்த ஆண்டு 105 dollar என்றால் பணவீக்கம் 5%).
- நாட்டின் பொருளாதாரநிலை,
- அந்நிய முதலீடுகள்.
- மத்திய வங்கியின் செய்திகள்.
- எண்ணெய் விலை – Oil Price.
- அமெரிக்க பொருளாதார மாற்றங்கள்.

என பல்வேறுபட்ட காரணிகளால் பங்குச்-சந்தையில் மாற்றங்கள் நிகழும்.

### பங்குச்சந்தையின் முதலீட்டின் அளவை வைத்து நிறுவனங் களை 3 வகையாக பிரிக்கலாம்.

- Small cap companies – 250 Million to 2 Billion
- Mid cap companies – 2 Billion to 10 Billion
- Large cap companies or Blue chips – 10 Billion or more

பங்குகளை வாங்கு முன் ஒரு நிறுவனத்தின் நிதிநிலை. எதிர்கால நடவடிக்கைகள். அது செய்யும் தொழில் போன்றவற்றை அறிந்து கொள்ளவேண்டும். நாம் பங்குகளைப் பற்றி ஆராயும் போது முதலீடு செய்யும் பங்குக-ளின் உண்மையான மதிப்பு, சந்தைவிலை, நிறுவனத்தின் வருமானம், சந்தையில் பங்கு களின் விலை சரியானதா போன்ற பல காரணிகள் ஆராய வேண்டும். இதனை Fundamental Analysis என்பர். அதாவது ஒரு குறிப்பிட்ட நிறுவனம் வளரும் வேகம் அதன் நிகரலாபம் இந்த வளர்ச்சி விகிதப்படியே பங்குகளின் விலை ஏற்ற இறக்கமும் அமையும். அவ்வப்போது சூழ்நிலைக்கு ஏற்ப சந்தையில் பங்குகளின் விலை கூடிக்குறைந்தாலும் நீண்டகால நோக்கில் பங்குகளின் விலை நிறுவனத்தின் வளர்ச்சியை சார்ந்தே இருக்-கும். இந்த வளர்ச்சியைப் பார்த்து பங்குகளை வாங்க பல அளவுகோல்கள் உண்டு.

முதலாவதாக EPS (Earning Per Shares) என்றால் என்று பார்ப்போம். உதாரணமாக ஒரு நிறுவனத்தின் ஒரு பங்கு $100 Dollarக்கு 1000 பங்குகள் வெளியிட்டால் அதனுடைய Share capital $100,000 Dollar அதன் முதல் வருட இலாபம் $20,000 Dollar என வைத்துக் கொண்டால் நிறுவனத்தின் EPS 20,000/10,000=$2.00 அதாவது Net profit/Number of shares இதன்படி இந்த நிறுவனத்தின் ஒவ்வொரு பங்கும் வருடம் 2 Dollarஐ வரு-மானமாகப் பெறுகின்றது, ஒரு நிறுவனத்தின் இலாபத்தை பங்குகளின் சந்தைவிலை பிர-திபலிக்க வேண்டும். அவ்வாறு இருந்தால் அந்தப்பங்குகள் சரியான விலையில் இருப்-பதாகப் பொருள். அப்படி இல்லாமல் குறை வாக இருந்தால் வாங்குவதற்கு தகுதியானது. அதிகமாக இருந்தால் விற்கப்பட வேண்டியது. நிறுவனத்தின் வளர்ச்சி விகிதத்தைப் பொறுத்து EPS மாறுபடும். EPS மட்டும் வைத்து பங்கு-களை வாங்கத் தீர்மானிக்க முடியாது. இந்த உதாரணத்தைப் பார்ப்போம். இரண்டு நிறு-வனங்களின் நிகரலாம் 20,000 என வைத்துக் கொண்டால் இதில் ஒரு நிறுவனம் 2,000 பங்குகளை வெளியிடுகின்றது. மற்றையது 1,000 பங்குகளை வெளியிடுகின்றது. இலாபம் என்று பார்த்தால் சமமாக தோன்றுகின்றது. ஆனால் EPS என்று பார்த்தால் ஒன்று 10 மற்றது 20. இதில் இருந்து எமக்கு தெளிவாக தெரிவது companyயின் நிகரலாபம் அதன் EPS இரண்டையும் பார்க்கப் பழகிக் கொள்ள வேண்டும். மேலும் EPS பல்வேறு காரணிக ளால் மாற்றம்பெறும் EPS குறைந்தால் உடனே அந்த நிறுவனம் சரியில்லை என்ற முடிவுக்கு வரக்கூடாது. அதற்கு முன் அந்நிறுவனம் Bonos share கொடுத்ததா, புதிதாக பங்கு வெளியிட்டதா அல்லது Share Split செய்-யப்பட்டதா போன்றவற்றை ஆராய வேண்டும்.

### நல்ல நிறுவனத்தை அறிந்து கொள்வதற்கு மேலும் சில காரணிகளைப் பார்ப்போம்.

- நிறுவனத்தின் காலாண்டு அறிக்கையை கவனமாக கவனிக்க ஒவ்வொரு 3 மாதத்-திற்கு ஒரு முறை (காலாண்டு) நிதிநிலை அறிக்கை நிறுவனங்கள் பங்குசந்தையில் சமர்ப்பிக்கவேண்டும் என்பது சந்தை விதி.
- பங்கின் Book value என்ன என்பதை கவனிக்க. (Book value சந்தை விலையை நிர்ணயிப்பதில்லை.)
- Share holders patternஐ கவனத்தில் கொள்வது அவசியம்(நிறுவனத்தை ஆரம் பித்தவர்கள் எவ்வளவு பங்குகள் வைத்-திருக்கின்றார்கள்).
- Mutual Fund எவ்வளவு முதலீடு செய்-துள்ளது.
- Balance Sheet – நிதி நிலை அறிக்கை (Every Quarter and Every Year Endஇல் ஏதாவது ஒரு குறிப்பிட்ட நாளில் நிறுவ-னத்தின் கடன் மற்றும் முதலீடு போன்ற வற்றை உள்ளடக்கியது).
- Reserved and Surplus பெற்ற இலாபத்தில் இருந்து எதிர்காலத்திற்கு ஒதுக்கி வைத்-திருக்கும் தொகை. (இதிலிருந்துதான் ஒரு பங்கின் புத்தக மதிப்பு கணக்கிடப்படுகின்றது).
- Secured loans, Unsecured loans பொது-வாக 3-4 வருட Balance sheetஐ பார்ப்பது நல்லது,
- கடன் எவ்வாறு அந்நிறுவனத்தின் EPSஇல் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. என்பதையும் கணக்கிடவேண்டும். உதாரணமாக $10 Dollar படி 20,000 பங்குகளை விற்று (Market cap-$200,000) ஒரு நிறுவனம் 80,000 Dollarஐ இலாபமாக பெற்றது என வைத்துக்கொள்வோம். இதில் 25% வரி கட்டினால் நிகரலாபம் 60,000 Dollar எனவே EPS =60,000/20,000=3 அதே நிறுவனம் $100,000 கடனாகவும் (10% வட்டிக்கு) 100,000 பங்குகளாகவும் விற்று பெற்ற இலாபம் $80,000Dollar இதில் வட்டி $10,000Dollar என வைத்துக்கொண்டால் (வட்டிக்கணக்கு சரியோ பிழையோ ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்) இலாபம் 70,000 Dollar அதற்குரிய வரி $17,500 போக நிகரலாபம் $52,500 இப்போது EPS =52,500/10,000 =5.25 கடன் வாங்கியதால் EPS அதிகரிக்கின்றது. EPS கூடினால் பங்கின் மதிப்பு சந்தையில் கூடும். கவனம் – அதிக கடன் வட்டிகட்ட முடியாமல் நிறுவனத்தை மூடவேண்டியும் வரலாம்.
- Assets பகுதியில் Miscellaneous Expenses Not Written Offஆக இருக்கிறதா என்று கவனிக்க வேண்டும். அதாவது ஏற்கனவே செலவு செய்து இலாப நட்டக் கணக்கில் காடட்டாமல் வைத்திருப்பது, பின்னர் Net worth/Book Value கணக்கிடும்போது இந்தத் தொகை Reserves and surplusஇல் இருந்து கழிக்க வேண்டும்.

என்ன தலை சுற்றுகிறதா? மேலே கூறப்பட்ட எல்லாவற்றையும் இலகுவாக அறிந்து கொள்ள 5நிமிடம் போதும், ஏன் இவ்வளவு விளக்கம். ஒவ்வொன்றையும் தெளிவாக தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக, நீச்சல் தெரியாத-வரை நீருக்குள் தள்ளிவிட்டால், தமிழ் சினி-மாவில் சொல்வதுபோல், தண்ணிக்குள்ள போய் தாத்தாவைப் பார்க்க வேண்டியதுதான்' (குடும்பத்தை யார் பார்ப்பார்?) காலையாவது நனையுங்கப்பா... மீண்டும் சந்திப்போம்.

kannan.kankesu@thaiveedu.com

■ ■ ■

# MORTGAGE

- 1st & 2nd Mortgages
- New Immigrants / Self Employed
- Refinance
- Equity Line of Credit
- Renewal
- All other Financial Arrangement

**Kethes Sivasubramaniyam**

Mortgage Agent - (Lic # M08006105)

**Cell : 416.873.5780**

Via Financial (Lic # 10669) Services Inc.



5200 Finch Ave. E, Suite 304, Scarborough, ON. M1S 4Z5
Tel : 416-548-8005 Fax : 416-548-8006
Head Office : 120 Traders Blvd. Suite 206, Mississauga, ON. L4Z 2H7

# வருமானவரிச்சேவையில் பலவருடம் அனுபவம் வாய்ந்தவர்களினால் நம்பிக்கையான சேவை

- Personal Tax
- Small Business Tax
- E-File Services
- Arrange RRSP
- Maximum Refund
- Tax Saving Advice




**KETVAR**
**TAX & ACCOUNTING**

304-5200 Finch Ave.E, (Middlefield & Finch)
Toronto. ON M1S 4Z5
**Tel : 416-873-5780 / 416-548-8005**
Email : ketvar@gmail.com



Since 2003

# Kannan Kankesu

REAL ESTATE & MORTGAGE BROKER

Mortgage/Refinance 2.15%....

**Cell: 416 418 5189**

Bus: 416 284 5555

www.bestinfo.ca

RED CARPET. Royal Realty Ltd., Brokerage

**9th & 14th**




| | |
|---|---|
| $689,900 | 4 Bedroom |
| 4 Years Only | Library |
| 3000-3500 | 4 Washrooms |
| On Boxgrove | 110k+Upgrades |

880 Ellesmere Road, Suit 204, Toronto, ON    kkankesu@gmail.com

**Major Mack/Jane**




$499,900 — 2nd Floor Family Room
3+1 Bedroom — Finished Basement

**Chinguacousy/Botavia**




$349,000 — $$$$ Spent on upgrades
4Years Only — High End S.S Appl.

**McCowan/MajorMackenzie**





$488,000 — HardWood Floor
4 Bed Room — 3 Washrooms

**Tobram/Fathertobin**





$449,900 — Hardwood Floor
4 Bedroom — 3 Washrooms

**Markham/Passmore**





$399,800 — 3 Bed Room
Finished Basement

**McCowan/Eglinton**





$24,900+ — Sale of Business
Low Rent — Long lease

**Westney/Rossland**



$424,900 — Hardwood Floor
4 Bed Room — 3 Washrooms

**9th Line/14th Ave**




$499,999 — Detached 2 Story
4 Bedroom — 3 Washrooms

**Computek College**
BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY
Est. 1991
www.computek.edu
A Career College near you ...

**Get ready for job in 6 - 12 months !**

*If you are :*
- *Currently receiving E.I. benefits*
- *Received E.I. within 3 yrs*
- *Received maternity benefits within 5 yrs*

*You may be eligible for HRDC funding*

*Are you not qualified for HRDC Funding Assistance ?*
*Is your HRDC funding REJECTED?*

*You may still qualify for other Financial Assistance*
*Please call us for details*

**Looking for a Career in a Bank!**
Bank Teller
Personal Banking Officer
CSC (Canadian Securities Course)
IFIC ( Investment funds Institute of Canada)
FOREX Trading

**SAP Training**
- FI & CO
- BPC

Canadian Payroll Assoc (CPA) - Exam Prep
Food Handler Certification
A+ ( Computer Assembly &Troubleshooting )
CCNA (Cisco Certified Network Admin)
Programming (C++ / JAVA)

**Network Engineering**
- CompTIA A+
- CCNA
- Linux 1
- MCP, MCSA, MCSE
- Network +

**Personal Support Worker (PSW)**
*"In six months I was able to complete my diploma program in Personal Support Worker (PSW). I was able to find a job at the same nursing home where I had received the clinical training as a part of the PSW Diploma program" ,*
*Shamim Patel, Leisure World*

**Early Childcare Asst.(ECA)**
*" I always wanted to work with children. With my Diploma in Early Childcare Assistant(ECA) from Computek College, my dream was fulfilled. Thanks to Computek, today I am working with children"*
*Sara, Lee Wiggins Childcare Centre, York University*

**PSW, ECA**
**Weekend & Evening Classes!**
*( Financial assistance available for those who qualify)*

**Computerized Accounting**
**Business Administration**
**Medical Office Admin (MOA)**

For details of financial assistance, please contact our Financial Aid Officer

| Markham Campus | Scarborough Campus | Toronto Campus |
| --- | --- | --- |
| Markham / Steeles | Kennedy / Sheppard | Kennedy / Eglinton |
| 202 - 7 Eastvale Drive. | 301-2347 Kennedy Road | 248-2390 Eglinton Ave E |
| Markham L3S 4N8 | Scarborough M1T 3T8 | Toronto M1K 2P5 |
| 905.471.3344 | 416.321.9911 | 416.285.9941 |

NOT ALL THE COURSES ARE AVAILABLE AT ALL THE CAMPUSES

# கடனும் வங்கிக்...

13ம் பக்கத் தொடர்ச்சி...

னத்தினை செலுத்துவது அல்லது சாலையில் வரும் நெளிவு சுளிவுகள் தெரியாமல் போவது இவ்வாறான காரணிகளால் நடைபெறும். இந்தக் கோழித்தூக்கம் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தான் ஏற்படும் என ஆய்வுகள் கூறுகின்றன. அதாவது உடலானது தூக்கத்திற்கு பழக்கப்பட்ட அல்லது தூக்கத்திற்கென வகுக்கப்பட்ட மாலை மங்கும் நேரத்திலும், மதிய நேரத்திலும் ஏற்படுவதாக கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.

## நித்திரையின்மையும் உடல் நலப் பாதிப்பும்:

போதியளவு நித்திரையின்மை எவ்வாறு எங்கள் உடல் நலத்தினைப் பாதிக்கின்றது? இதனால் என்னென்ன வியாதிகள் அல்லது பிரச்சினைகள் ஏற்படுகின்றன?

"ஒரு நாளுக்கு ஒழி என்றால் ஒழியாய், இரு நாளுக்கு ஏர் என்றால் ஏராய்" என ஔவை வயிற்றைப் பற்றிப் பாடினார். வயிறானது ஒரு நாளுக்கு உண்ணாமல் இருக்கவும் மாட்டாது. உணவை ஒழித்த ஒரு நாளுக்காக மறுநாள் இரு மடங்கு சாப்பிடவும் மாட்டாது. ஆனால் தூக்கம் அப்படியல்ல. தூக்கத்தை முற்கடனாகப் பெற முடியாது. ஆனால் பாக்கியை வசூல் பண்ணத் தயங்காது. ஒரு நாள் உங்களுக்கு தூக்கம் போதாது இருந்தால் மறுநாள் சற்று அதிகம் தூங்கினால் உங்கள் உடல் அதனை ஈடு செய்யும் ஆற்றல் கொண்டது. ஆனால் கடன் அதிகமானால் கவனஈர்ப்புத் திறன், முடிவு எடுக்கும் திறன், செயற்படும் திறன் போன்ற பல உடற் செயற்பாடுகள் பாதிப்புறும்.

ஒரு நாள் நித்திரையினை இழப்பவர் மறுநாள் மிகவும் குழப்பம் மிகுந்தவராகவும் கோபம் அல்லது எதற்கும் எரிந்து விழும் தன்மை கொண்டவராகவும் மிகவும் களைப் படைந்தவராகவும் காணப்படுவர். ஒருவர் இரண்டு நாட்களுக்கு சில மணி நேர நித்திரையினை இழந்திருந்தால் அது அவருடைய நாளாந்த செயற்பாட்டினை குழப்புவதாக அமையும். அதுவே தொடர்ந்து மேலும் இரண்டு நாட்களுக்குச் செல்லும்போது பல சிக்கல்களை உருவாக்கும். ஒவ்வொரு நாளும் சிறிய சிறிய அளவிலான இந்த நித்திரைக் குறைப்பு அல்லது நித்திரை இழப்பு சேர்ந்து நித்திரைக் கடனாகின்றது என மனோதத்துவ நிபுணரும் ஸ்ரான்ஃபோட் பல்கலைக்கழக நித்திரை மையத்தினை அமைத்தவருமான வில்லியம் டென்மன்ற் என்பவர் கூறியிருக்கின்றார். 1997ம் ஆண்டில் நடாத்தப்பட்ட பரிசோதனையின் அடிப்படையில் ஒரு மனிதன் மூன்று முதல் நான்கு மணி நேர நித்திரையினை ஒரு வாரத்திற்கு இழந்திருந்தால் அவன் இரண்டு முழு நாட்கள் தொடர்ந்து தூங்கினால் தான் அவனுடைய நாளாந்த தொழிற்பாடுகள் சரியாக நடைபெறுவது சாத்தியமாகும் எனக் கண்டுபிடிக்கப் பட்டது. இந்த நித்திரைக் கடனானது ஒரு மனிதனது சிந்திக்கும் திறன் அவனது புத்திசாதுர்யமாக முடிவெடுக்கும் திறன் (emotional intelligence) போன்றவற்றைப் பாதிக்கும் எனக் கூறப்படுகின்றது. தினமும் நீண்ட நேரம் அமைதியாகத் தூங்குபவர்கள் எழுந்ததும் மற்றவர்களைவிடச் சுறு சுறுப்பாகவும், புத்திசாலித்தனமாகவும் செயல் படுகிறார்கள் என்பதை பெல்ஜியம் விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

ஆழ்ந்து உறங்குவதால் ஞாபக சக்தி கூட அதிகரிக்கிறதாகவும் அதே போல இரவுத் தூக்கத்திற்கும், நீண்ட ஆயுளுக்கும் தொடர்பு இருப்பதாக கலிபோர்ணியா மருத்துவப் பல்கலைக் கழக ஆய்வில் தெரிய வந்துள்ளது.

இந்த ஆய்வின்படி இரவில் 8 மணி நேரம் தூங்குபவர்களைக் காட்டிலும் இரவில் 5 மணி நேரத்திற்கும் குறைவாகத் தூங்குபவர்களுக்கு இறப்பு விகிதம் 70 விழுக்காடு அதிகம் உள்ளதாகவும், மேலும் இரவில் 7 முதல் 8 மணி நேரம் தூங்குபவர்களுக்கு நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிப்பதாகவும் கண்டறிந்துள்ளனர்.

தேவையான அளவு தூக்கத்தினைப் பெற்றுக் கொள்பவர்களது மூளை மிகவும் கூடியளவு ஞாபக சக்தியினைக் கொண்டிருக்கும் என ஹாவாட் மருத்துவக் கல்லூரியினைச் சேர்ந்த ஜெவ்ரி எலன்பேகர் என்பவர் கண்டறிந்துள்ளார். இரவில் மூளைக்குக் கிடைக்கும் ஓய்வு, அது பகலில் புதிய விஷயங்களை கிரகித்துக் கொள்ளவும், நினைவில் பதிந்து வைத்துக் கொள்ளவும் உதவுகிறது என்பதையும் ஆய்வின் மூலம் உறுதிப்படுத்தியுள்ளனர்

ஒருவருடைய தூக்கமானது வெவ்வேறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. அதில் இரண்டாவது மூன்றாவது பகுதிகளில் எங்கள் உடம்பிலுள்ள கலங்களின் தொழிற்பாடுகளும் அவற்றினைப் புதுப்பித்தல் அல்லது சீர் செய்யும் நடைமுறைகள் இடம் பெறுகின்றன. Alpha phase எனப்படும் இப் பகுதியில் முழுமையான உடலின் சீரமைப்புகள் இடம்பெறுவதாக மருத்துவ ஆய்வுகள் கூறுகின்றன. இந்த நேரத்தில் 'கொலாஜன்' எனப்படும் புரதமானது உடலுக்குத் தேவையான வெவ்வேறு பொருட்களாக மாற்றப்படும். அதாவது உடலிலுள்ள தசைகள், தசைநார்கள், கசியிழையங்கள் என்பவையினை புதுப்பிப்பதற்குத் தேவையான protein synthesis எனப்படும் செயற்பாடு நடைபெறுவதற்கு மிகமிக அவசியமானது நித்திரையின் ஒரு பகுதி அல்லது வகையான Alpha phase ஆகும். இதனால் நித்திரைக் கடன் உள்ளவர்களுக்கு தோல் சம்பந்தப்பட்ட வியாதிகளும் அத்துடன் தோல் தொய்ந்து விரைவில் வயது முதிர்ந்த தோற்றத்தினையும் கொடுக்கின்றது.

நித்திரைக் கடனானது எமது உடம்பில் cortisol என்னும் ஓமோனின் அளவினைக் கூட்டி விடுகின்றது. இவ் ஓமோன் எமது arteries இனைத் தடிப்படையச் செய்து விடுவதால் இதயவலி அல்லது இருதய நோய் வருவதற்கு ஏதுவாகி விடுகின்றது. மேலும் இந்த cortisol நாடி நாளங்களையும் (உள்ளே கல்சியம் படிந்து) தடிப்படையச் செய்வதால் இரத்த அழுத்தத்திற்குரிய வாய்ப்பினை ஏற்படுத்தும். இவை மட்டுமல்ல இன்சுலினின் அளவினை எமது கலங்கள் ஏற்றுக்கொள்ளும் தன்மை, தசை இழப்பு, மேலதிக கொழுப்பு சேகரிப்பு, எலும்பின் எடை குறைதல், மன அழுத்தம் போன்றவற்றினை ஏற்படுத்தக் காரணமாகி விடுகின்றது.

அத்துடன் மட்டும் நின்றுவிடாது பெண்களில் மார்பகப் புற்று நோய் வருவதற்குரிய சாத்தியக் கூற்றினை நித்திரைக் கடன் ஏற்படுத்துகின்றது. மேலதிக ஈஸ்ட்ராஜின் மார்பகப் புற்று நோயினைத் தூண்டும் என அறியப்படுகின்றது. ஈஸ்ட்ரஜினின் சுரப்பினை இரவில் சுரக்கப்படும் மெலரோனின் (இது மங்கலான வெளிச்சத்தில் தான் சுரக்கப்படும். இதன் காரணமாக இரவு வேலை செய்யும் பெண்கள் மார்பகப்புற்று நோயினால் பாதிக்கப்படுவது அதிகம்) எனப்படும் ஓமோன் கட்டுப்படுத்துகின்றது. அதாவது மெலரோனின் குறைந்தால் ஈஸ்ட்ரஜின் அதிகரித்துவிடும். இதுமட்டுமல்ல நித்திரையின்மை உடலில் பிறபொருள் எதிரிகளைச் சுரக்கும் வெண்குருதிச் சிறுதுணிக்கைகளின் அளவினைக் கட்டுப்படுத்தி விடுவதால் எமது உடல் நோய்களை எதிர்க்கும் சக்தியினை இழந்து விடுகின்றது.

ஆண்களை விட பெண்களுக்கு தூக்கம் கூடுதலாக தேவை என ஜேர்மனியா ஆய்வாளர்கள் கூறுகின்றனர். பின் தூங்கி முன் எழும்படி எமது முன்னாளில் கூறினாலும் பெண்களுக்குத் தான் கூடுதலான தூக்கம் தேவை என்கிறது விஞ்ஞானம். தூக்கம் என்பது ஒரு மர்ம மாளிகை போன்றது. அதன் வாசல்களைத் திறந்து விஞ்ஞானிகளும் ஆராய்ச்சியாளர்களும் இன்னமும் ஆராய்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் மர்மம் இதுவரை நூறு வீதமும் தெளிவாகவில்லை. ஆனால் இதுவரை கூறப்பட்டவை அனைத்தும் விஞ்ஞான ஆய்வுகளின் முடிவே. எனவே கடன்படாதீர். பட்டால் தொல்லைதான்.

pon.balarajan@thaiveedu.com

■ ■ ■

## AGRன் மூன்றாவது கிளை உங்கள் அருகாமையில்

# AGR FOREX

Personal & commercial transaction services

உலகளாவிய பணமாற்றுச் சேவை

15 Years in Customer's Satisfaction

1995 ல் ஆரம்பிக்கப்பட்ட எமது **AGR**ஸ்தாபனம் மூன்றாவது கிளையை இன்று புதுப்பொலிவுடனும் நவீன வசதிகளுடனும் பல ஆயிரம் வாடிக்கையாளர்களின் ஆதரவுடன் **1145** Morningside ல் ஆரம்பிப்பதுள்ளோம்.








**இலங்கை, இந்தியா, தூரகிழக்கு மற்றும் ஐரொபபிய நாடுகளுக்கு பணம் அனுப்பவும் எடுக்கவும்**

**Personal and Business Needs**

**வெளிநாட்டு நாணயங்கள்** (US, EURO, POUNDS) **வாங்கலாம் விற்கலாம்**

- இலங்கையில் எப்பாகத்தில் உள்ள வங்கிகளிலும் பணவைப்பு செய்யலாம்
- இலங்கையில் எப்பாகத்திலிருந்தும் கனடாவிற்கு பணம் எடுக்கலாம்
- கனடாவின் எந்தமாகாணத்திலிருந்தும் வீட்டிலிருந்தவாறே E-MAIL TRANSFER மூலம் பணம் அனுப்பலாம்.




Interac

**Tel: 416-261-0003**

**Fax: 416-261-9592**

Email: info@agrcanada.com www.agrcanada.com




1145 Morningside Ave, Unit #5, Scarborough, ON M1B 0A7 | 2637 Eglinton Ave E, Scarborough, ON. M1K 2S2 | 5005 Steeles Ave East, Scarborough, ON. M1V 5K1


Trusted for Service and
Respected for Results
22 Years Real Estate Experience & Multi Award Winner
RED CARPET
Royal Realty Ltd., Brokerage
880 Ellesmere Road,Suite 204, Toronto, ON.
Karu Kandiah FRI. CRES.
Real Estate Broker / President
Bus: 416-284-5555 Dir: 416-616-7278
To Buy or Sell your Home for the Right Price please call me...
$259,900
Liverpool / Hwy 2
2 Bedrooms, 1 Washroom
Modern Tridel Built 2 Bedroom Suite
$399,900
Whitby
4 Bedrooms, 3 Washrooms
Beautiful 6 Yrs Old house
$424,900
Westney/Rossland
4 Bedrooms, 3 Washrooms
Pot Lights In Family Room
$148,888
Morningside/Ellesmere
2 Bedrooms, 2 Washrooms
Near Uft, Centennial College, 401
$334,999
Markham/Eglinton
2+1 Bedroom, 2 Washrooms
5 Years Old Town Home
$1,500 For Lease
Durham
4 Bedrooms, 3 Washrooms
Close To University Of Ontario
$1,675 For Lease
Bristol/Kennedy
3 Bedrooms, 3 Washrooms
Close To Shops, Schools
$249,900
Midland/ Eglinton
3+1 Bedrooms, 2 Washrooms
*1350Sqft,*2 Parking Spots
$158,900
Neilson/Mclevin
2 Bedrooms, 2 Washrooms
Approx 1077 Sq. Ft. With Balcony
$99,000
Markham/Sheppard
1 Bedroom, 1 Washroom
Investment Potential For Startups
$143,900
Dixie/Bloor
2+1 Bedrooms, 2 Washrooms
Close To The Highway
$659,000
Brampton
4+1 Bedrooms, 4 Washrooms
Over 3000 Sqft With Breaktaking View
$309,000
Ajax
3 Bedrooms, 3 Washrooms
Steps To Lake And Park
$345,000
Keele/Sheppard
3 Bedrooms,3 Washrooms
Near To Hwy 401, 407
$519,900
9th Line/14th Ave.
4 Bedrooms, 3 Washrooms
New Home In Desirable Location
$99,000
Eglinton/Markham
2 Bedrooms, 2 Washrooms
Walk To Schools, Transit
Looking for a New Real Estate Career
Join a winning team for your success
• Free Real Estate Classes
• Regular Sales Training from Experts
• Referral leads
• Help & guidance for newly licensed agents

# நல்ல தருணம் இது... நழுவ விடலாமோ?

மிகக்குறைந்த வட்டி வீதம்
கட்டுபடியாகும் அடமானக் கட்டணங்கள்
புதிய வீடு வாங்கவும்,
ஏற்கனவே வீடு வைத்திருப்பவர்கள் கடன் பழுவைக் குறைத்துக் கொள்ளவும்
**நல்ல தருணம் இது... நழுவ விடாதீர்கள்...**



Veriable Rate • Fixed Rate • Closed Mortgage • Open Mortgage • Short Term • Long Term • Cash Back Mortgage
எதைத் தேர்ந்தெடுப்பது என்று குழப்பமாக இருக்கிறதா?

ஒவ்வொருவருடைய அடமானத் தேவைகளும், சூழ்நிலைகளும் வேறுபட்டவை. தனித்துவமானவை. உங்களுக்குப் பொருத்தமான அடமான வகையைத் தேர்ந்தெடுக்க அனுபவமும், நம்பிக்கையும் நிறைந்த ஒரு முகவரை நாடுங்கள்

## Das Narayanasamy

Mortgage Broker

**416-543-6614**

Fax: 1-888-511-8960
E-mail: das@centumoptima.com

Lic# M08007147



CENTUM
Optima Mortgages Inc.
Lic# 10894

என் பணி கடன் செய்து கொடுப்பதே!

- digi Media -

# கடன்தொல்லை?




- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

**நாங்கள் ஒரு புதிய ஆரம்பத்திற்கு வழிகாட்டுகிறோம், இனி**

- நிம்மதியான தூக்கம்
- மீண்டும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கலாம்
- ஏக்கத்தை விட்டொழிக்கலாம்
- உங்கள் மேலிருக்கும் அந்தச்சுமையை அகற்றிவிடலாம்
- உங்களைப் பற்றி பெருமையாயும், ஆனந்தமாயும் உணருங்கள்
- இனி கட்டவேமுடியாத Billகளைப்பற்றி கவலையில்லை.
- நண்பர்கள், உறவினர்களிடம் கடன் வாங்கும் சிறுமையும் இனி இல்லை

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**SRI**

**CREDIT SOLUTION CENTRE**

Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ்
இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்

80 Corporate Drive, Suite 309
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Fax: 416.439.0226
creditsolutioncentre@gmail.com



digi

# கனடாவில் தனிநபரின் வங்குரோத்து நிலை

## (Personal Bankruptcy in Canada)

### பகுதி - 4

வி. சிறி



### நீங்கள் வருமானவரி இலாகா-வுக்கு பெருமளவு பணம் வழங்க வேண்டிய நிலையில் இருக்-கிறீர்களா?

இவ்வாறான சூழ்நிலையின் போது நீங்கள் வருமானவரி இலாகாவிற்கு (Canada Revenue Agency or CRA) செலுத்த வேண்டிய பணத்தை கொடுப்பது உங்களுக்கு சிரமமானதாக உள்ளதா?

இது தொடர்பாக நீங்கள் சிறந்த பயனைப் பெறுவதற்கு கீழே தரப்பட்டுள்ள விபரங்களைப் பின்பற்றவும் CRA செய்யக்கூடியவை எவை என்று நீங்கள் விளங்கிக் கொள்ளவேண்டும்.

### CRAக் குரிய அதிகாரங்கள்:

நீங்கள் செலுத்த வேண்டிய வருமானவரிக் கடனைப் பற்றி மிகவும் அக்கறை எடுக்க வேண்டும்.

- எவருமே வரி செலுத்த விரும்புவதில்லை. எனவே பொது மக்கள் செலுத்த வேண்டிய வரியை அவர்களிடமிருந்து அறவிடுவதற்கு CRAக்கு பலமிக்க அதிகாரங்கள் உள்ளன.
- கால தாமதமான வருமானவரிக்குரிய தெண்டம், வட்டி என்பவற்றை அவர்களால் அறவிட முடியும்.
- உங்களது கடனை செலுத்தும் வரை உங்களது பிள்ளைகளின் CHILD TAX CREDIT, பாவனைப் பொருட்கள் சேவைகளுக்கான (GST) CREDIT ஆகிய கொடுப்பனவுகளை நிறுத்தி வைக்க முடியும்.
- உங்களது வங்கிக் கணக்கில் இருந்து அல்லது உங்களது சம்பளப் பணத்தில் இருந்து பணத்தை எடுக்க அவர்களுக்கு அதிகாரம் உண்டு என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.
- இவற்றை விட முக்கியமானது என்னவெனில், நீங்கள் செலுத்த வேண்டிய முழுப் பணத்திற்கு குறைந்த தொகையை CRA ஏற்றுக் கொள்ளமாட்டாது. (கனடாவில். பல மல்லியன் வரியிறுப்பாளர்கள் உள்ளனர். எனவே ஒருவரிமிருந்து பெறப்பட வேண்டிய வரித்தொகையின் ஒரு பகுதியை மட்டும் அறவிடுவதற்கு ஒப்புக் கொண்டு ஒரு தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்த CRA விரும்புவதில்லை.)

எனவே நீங்கள் செலுத்த வேண்டிய வருமானவரி கடனைப் பற்றி பெருமளவு கவனம் செலுத்த வேண்டும். அதனைச் செய்வதனை பின் போட்டால், அத்தொகை அதிகரித்து செல்லும். அத்துடன் உங்கள் வாழ்க்கையை பாதிக்கக் கூடிய நடவடிக்கைகளை CRA எடுக்கும் என்பதை நீங்கள் கவனத்தில் எடுக்க வேண்டும்.

### முதலாவதாக:

- நீங்கள் செலுத்த வேண்டிய வரித்தொகை என்ன என்பதை உறுதி செய்ய வேண்டும். அதன் அடிப்படையில் உங்களது தீர்வு அமைய வேண்டும்.
- நீங்கள் கடந்த வருடங்கள் யாவற்றிற்குமான வருமானவரிப் பத்திரங்களை சமர்ப்பித்துள்ளீர்களா என்று நிச்சயம் செய்து கொள்ளுங்கள்.
- கடந்த வருடங்களில் நீங்கள் சமர்ப்பித்த வருமானவரிப் பத்திரங்களை மீளாய்வு செய்து நீங்கள் செலுத்த வேண்டிய வரியை குறைப்பதற்கான எல்லா விடயங்களையும் பயன்படுத்தினீர்களா என்று நிச்சயம் செய்து கொள்ளவும். இது தொடர்பாக வருமானவரிப் பத்திரத்தை பூரணப்படுத்துகின்ற ஓர் தொழில்சார் வல்லுநரை கலந்து ஆலோசித்து அவரது உதவியை பெறுவது நன்மை ஏற்படுத்தும்.
- உங்களால் கட்டுப்படுத்த முடியாத சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக நீங்கள் வருமான வரி செலுத்த முடியாத நிலை ஏற்பட்டிருந்தால் இது தொடர்பாக CRA அமைப்பின் நியாயமான செயற்பாடுகளுக்கான ஆனைக்குழுவிடம் (FAIR PRACTIES COMMISSION OF CRA) விண்ணப்பச் செய்யலாம். உங்களது விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டால் நீங்கள் செலுத்த வேண்டிய வட்டியும், தெண்டமும் ரத்து செய்யப்படலாம்
- இயற்கை பேரழிவுகள் (Natural Disaters) கடுமையான நோய், CRA நடவடிக்கைகள், வேலை இழப்பு என்பவை இந்த ஆனைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய ஒரு சில காரணங்களாக அமையலாம்.

### பின்னர், சொற்படுத்தப்படக் கூடிய தீர்வுகளைப்பற்றி சிந்தி யுங்கள்.

வருமானவரிக் கடன்கள் தொடர்பான பல்வேறு தெரிவுகளைப் பற்றி அறிந்து அவற்றுள் உங்களுக்கு மிகவும் குறைந்த பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய தீர்வை தெரிவு செய்யுங்கள்.

உங்களது சந்தர்ப்ப சூழ்நிலை சிக்கலான-தாயின் அனுமதிப்பத்திரம் பெற்ற வங்குரோத்து பொறுப்பாளாரிடம் தொடர்பு கொண்டு அவரது ஆலோசனையை பெற்றுக் கொள்ளுங்கள்.

### நான் வங்குரோத்து நிலைக்கு விண்ணப்பம் செய்தால் அது என் வாழ்க்கைத் துனையை பாதிக்குமா?

அது உங்களது வாழ்க்கை துனையை நேரடியாக எந்த விதத்திலும் பாதிக்கமாட்டாது. உங்களது கடன் பொறுப்புக்களுக்கு நீங்கள் மட்டுமே பொறுப்பு. நீங்கள் வங்குரோத்து நிலைச் செயற்பாட்டுக்கு விண்ணப்பிக்கும் போது உங்கள் கடன்கள் அனைத்தும் முழுவதுமாக நீக்கப்படும். ஆனால் நீங்கள் பெற்ற கடனுக்கு, உங்களது துனைவர் உத்தரவாதமளித்திருந்தால் அல்லது அவரும் இணைக்கையெழுத்திட்டிருந்தால் (Co-signed) உங்களது துனைவரும் அந்தக் கடனுக்கான பொறுப்பை ஏற்க வேண்டும். ஒரு கடன் அட்டை உங்கள் இருவரினதும் பெயரில் இருந்தால், அந்த கடன் அட்டை மூலம் பெற்ற கடன் உங்கள் இருவரதும் பொறுப்பாக அமையும் என்பது கவனிக்கப்பட வேண்டிய விடயம்.

கடன்கள் யாவும் உங்களது பெயரில் மட்டும் இருந்தால், உங்களது வங்குரோத்து நிலைக்கான விண்ணப்பம் உங்களது துனைவரை மறைமுகமாக பாதிக்கும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும் ஏனெனில் உங்களது துனைவர் கடனுக்காக விண்ணப்பிக்கும் போது, நீங்கள் இனைக் கையெழுத்திடுபவராக ஏற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்படலாம் என்பதனை நினைவில் கொள்ளுவது நன்று.

இது ஒரு சிக்கான விடயம், ஏனெனில் ஒரு கடன் அட்டை ஒரு இணைக்கடன் அட்டையா (Joint Card) அல்லது ஒரு துனைக் கடன் அட்டையா (Supplementary Card) என வேறுபடுத்தியறிவது சில வேளைகளில் கடினமான ஒரு விடயமாக இருக்கலாம். நீங்கள் இது தொடர்பான சரியான விளக்கம் பெற விரும்பினால் வங்குரோத்து நிலைக்கான உங்களது நம்பிக்கை பொறுப்பாளிரிடம் கலந்துரையாடுங்கள்.

### வங்குரோத்து நிலைக்கு விண்ணப்பிக்கும் போது உங்களுக்கு குற்ற உணர்வு ஏற்பட வேண் டுமா?

பொதுவாக இல்லை என்பதே இதற்கான பதில். வழமையான செலவுகள் மாற்றமடையும் போது, அவர்கள் தமது கடனை திரும்ப செலுத்த முடியாத நிலையில் இருக்க வேண்டி நேரிடலாம் அவ்வாறான துரதிஷ்டவசமான சூழ்நிலையில். நீங்கள் பாதிக்கப்பட்டு வங்குரோத்து நிலைக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது. எனவே இது பற்றி உங்களுக்கு குற்ற உணர்வு ஏற்பட வேண்டியதில்லை தொடர்ந்து பல வருடங்களுக்கு உங்களது சம்பளத்தில் இருந்து பணம் கழிக்கப்படுதலை விட வங்குரோத்து. நிலைக்கு செல்வது சிறந்தது, ஏனெனில் நீங்கள் இவ்வாறான நிலைக்கு உங்களை உட்படுத்துவதை விட, உங்களது குடும்பத்தின் ஊறுப்பினர்களுக்கு உணவு உடை வழங்கி அவர்களுக்கு ஆதரவு வழங்குவதும். உங்களது வதிவிடத்திற்கான வாடகை செலுத்தவதும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது

### கடன் பெற்ற ஒருவர், கடன் பெற்றவர்களுக்கு முன்வைக்கும் ஆலோசனைகள் (Consumer Proposal).

வங்குரோத்து நிலைக்கு விண்ணப்பம் செய்வதற்கு மாற்றிடாக (Alternative Option) கடன் கொடுத்தவர்களுக்கு நீங்கள் முன்வைக்கும் ஆலோசனை என்ற மாற்றிடான ஒரு செயற்பாடு உண்டு. நீங்கள் வங்குரோத்து நிலையை தவிர்க்க விரும்பினால், நீங்கள் கடன் தந்தவர்களுடன் விரிவாக கலந்துரையாடி கடனை திரும்பச் செலுத்துவது தொடர்பாக ஒரு தீர்வை முன்மொழிதல் என்னும் செயற்பாடு (Consumer proposal) ஒரு பொருத்தமான தீர்வாக அமையலாம். இது உங்களுக்கு அதிக செலவை ஏற்படுத்தினாலும் கூட நீங்கள் கடன் தந்தவர்களுடன் சமரசமான முறையில் ஒரு தீர்வை ஏற்படுத்தினால் உங்களது குற்ற உணர்வு குறைக்கப்படலாம்.

sri.v@thaiveedu.com

■ ■ ■

இணையத்தளத்திலும்
'தாய்வீடு'
www.thaiveedu.com

N.K.S
Drapery & Blinds Fabric LTD



திறமையான சேவையால் பல விருதுகளை பெற்ற நிறுவனம்

உங்கள் வீட்டுக்குனுத் தேவையான சகலவித யன்னல் திரை வகைகளையும், கேட்டின் துணி வகைகளையும் மிகவும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள அழையுங்கள்.

கேதா நடராஜா
416.321.6420

Ketha Nadarajah
(President)
Tel: 416.321.6420, 905.944.0218
Fax: 416.321.2217
www.nksdrapery.ca

Drapery & Blinds Fabric Ltd., 210 Silver Star Blvd., Unit #825, Scarborough, ON M1V 5J9

அறியவில்லையானால் அறிந்துகொள்ளுங்கள் - கனடாவில் சில தகவல்கள்

# சிக்கல்கள் பல தீர்க்கும் 311 தொலைபேசி இலக்கம்

**ரொரன்ரோ நகரசபை எல்லைக்குட்பட்ட தேவைகள், பிரச்சினைகளுக்கு இலவச தீர்வு தேவையா? அழையுங்கள் 311 தொலைபேசி இலக்கம்!**

- ஒன்றிணைக்கப்பட்ட ரொரன்ரோ நகரசபை எல்லைக்குள் வசிப்பவர்கள்.
- வர்த்தகம், தொழில் செய்பவர்கள், தொழில் ஆரம்பிக்க விரும்புபவர்கள்.
- நகரத்திற்கு புதிதாக வருகை தந்தவர்கள்.
- நகரத்தில் பெறக்கூடிய சேவைகளை நகரத்திற்கு வெளியே இருந்து அறிய விரும்புபவர்கள். (நகரத்திற்கு வெளியேயிருந்து அழைக்க விரும்புபவர்கள் அழைக்க வேண்டியது 311 இலக்கம் அல்ல. (416) 392 2489 என்ற இலக்கமே அழைக்க வேண்டும்).

யாவரும் தங்களின் தேவைகள், பிரச்சினைகளுக்கு நகரசபை அதிகார வட்டத்தினுள் உள்ள சேவைப் பிரிவுகளிலிருந்து தீர்வுகான வேண்டுமாயின் அழைக்க வேண்டிய ஒரே ஒரு தொலைபேசி இலக்கம் 311 என்பதாகும். மிக விரைவான பதில்கள், துரிதகதியில் வழிகாட்டல்கள் யாவும் அற்புதமான முறையில் கிடைக்கும் என்பதனை அறிந்து கொள்ளுங்கள்.

- சுமார் 100 தொடர்பு நிலையங்கள் இயங்குகின்றது
- ஒரு கிழமைக்கு சராசரி 48,000 அழைப்புகளுக்கு தற்போது இந் நிலையங்கள் பதில் வழங்கிக் கொண்டு உள்ளன. அழைப்புகள் சம்பாஷணைகள் யாவும் ஒலிப்பதிவில் போவதால் அழைப்பு இலக்கம் (Reference number) தருவார்கள். அதே இலக்கத்தினை குறிப்பிட்டு தங்கள் அழைப்பினை என்றும் தொடரலாம்.

**தகவல் தொடர் - 38**

இச் சேவை நகரசபையினால் இலவசமாகவே வழங்கப்படுகின்றது.

மொழி என்பது ஒரு பிரச்சனையல்ல. பல்லின மக்கள் வசிக்கும் இந்நகரில் 180 மொழிகளில் சேவை வழங்குவார்கள். ஆங்கிலம் பேசத் தெரியாது, 'ரமிழ்' (Tamil) என குறிப்பிட்டால் போதும், தமிழ்மொழியில் சேவை வழங்கும் உத்தியோகத்தருக்கு இணைப்பு தொடர்புபடுத்தப்படும்.


ரொரன்ரோ நகரசபையின் அதிகாரத்தினுள் உள்ள சேவைகளாக இருத்தல் வேண்டும். சில நேரங்களில் கனடா மத்திய அரசு, மாகாண அரசின் அதிகார எல்லைக்குள் உட்பட்ட சேவையாக இருந்தால் அந்தந்த பகுதிகளுடன் தொடர்பு கொள்ளுமாறு ஆலோசனை வழங்கலாம். ஆனால் ரொரன்ரோ நகரசபையின் அதிகார வட்டத்தினுள் உள்ள பிரச்சினைகள், தேவைகளாக இருந்தால் அதனை தீர்ப்பதற்குரிய முழுமையான வழிகாட்டல்களும், ஆலோசனைகளும் இவ் அழைப்பின்போது வழங்கப்படும்.

பொதுவாக ரொரன்ரோவில் வசிக்கும் மக்களுக்கு உதாரணமாக பின்வரும் கேள்விகள் எழலாம்.

- எங்கள் பகுதியில் நாம் கட்டிவைக்கும் குப்பைகள், பொருட்கள், போன்றவற்றினை எப்போது எடுத்து செல்வார்கள்? வெளியே வீச என வைத்த கட்டில், மெத்தை, கழிவறை உபகரணங்களை எதற்காக இதுவரை எடுத்து செல்லவில்லை? வெளியே வைத்த உபயோகமற்ற குளிர்சாதன பெட்டி, அடுப்பு, போன்றவற்றினை யார் வந்து எடுத்து செல்வார்கள்? எப்போது எடுத்து செல்வார்கள்? உபயோகமற்று குப்பையில் வீசும் உபகரணங்களை எந்த விதிகளின் அடிப்படையில் ரொரன்ரோ நகரசபை எடுப்பது வழமையாகும்?
- ரொரன்ரோவின் தொடர்மாடிகளில் வாடகைக்கு குடியிருப்பவர்களின் தேவைகள் சரியாக நிறைவேற்றப்படவில்லையெனில் அதனை எங்கு முறைப்பாடு செய்து நடவடிக்கை எடுப்பது?
- ரொரன்ரோ நகரசபை அதிகாரத்தினுள் இயங்கும் அம்புலன்ஸ், பொலிஸ், தீயணைப்பு படைபிரிவுகளின் சேவையில் ஏதாவது சந்தேகங்கள், முரண்பாடுகள் என வந்தால் எப்படி கையாள்வது?
- தங்களின் வீடு என்ற ஒரு சொத்துக்காக செலுத்தும் சொத்துவரியில் (Property tax) நகரசபை செய்த மதிப்பீட்டில் சந்தேகமாய் உள்ளது. இதனால் அதிக பணம் செலுத்த வேண்டிய நிலையில் உள்ளேன் போல் தெரிகின்றது. இதற்கு எப்படி தீர்வு காணலாம்?
- அடுத்தவர் வளர்க்கும் நாய் ஒன்று திடீர் என கடித்து விட்டால் எங்கே முறைப்பாடு செய்து எப்படி நட்டஈடு பெறுவது?
- தங்கள் வீடுகளுக்குள் சில இடங்களில் பிராணிகள், மிருகங்கள் உள்ளே வந்து விட்டால் அதனை அகற்ற முடியாத நிலைமை ஏற்பட்டால் அடுத்து என்ன செய்வது? பக்கத்து வீட்டு நாய் அடிக்கடி குரைத்து நிம்மதியினை குழப்பினால் எங்கே முறைப்பாடு செய்வது?
- ரொரன்ரோ நகர எல்லைக்குள் வர்த்தகம், தொழில் செய்ய விரும்புவோர் அதற்குரிய லைசென்சுகளை எங்கே? எப்படி பெறுவது?
- நகரசபையினால் நடைமுறைப்படுத்தும் குழந்தைகள் பராமரிக்கும் நிலையங்களில் சேவைகளை எப்படி? எங்கே பெறுவது?
- நகரசபையின் நீர் குழாய்களில் (City's Sewer System) ஏற்படும் தாக்கங்கள் காரணமாக தங்கள் வீட்டினுள் உள்ள நீர்குழாய்களில் ஏதாவது வெடிப்புகளை உருவாக்கி அது பெரும் பாதிப்பினை உருவாக்கினால் நகரசபையின் உதவியுடன் எவ்வாறு அதனை நிவர்த்தி செய்வது?
- குறிப்பிட்ட துறைகளில் திறமையுள்ளவர்கள் உட்பட, பொதுவாக தொழில் ஒன்றினை ரொறன்ரோவில் தேடி எப்படிப் பெற்றுக் கொள்வது?
- வருமானம் குறைந்தவர்கள் நகரசபையின் உதவியுடன் விலை மலிவான குடியிருப்புக்களை எங்கே தேடி விண்ணப்பித்து பெற்றுக் கொள்வது?
- வீடுகளில் ஆண்களினால் துன்புறுத்தப்படும் பெண்கள், மற்றும் குடும்பத்தினரால் துன்புறுத்தப்படும் பிள்ளைகளுக்கான புகலிட வசிப்பிடம் (Government Shelter House) எங்கே? எப்படி? தேடி பெறுவது?
- தங்கள் வீட்டு எல்லைகளில் வேலி போடும் போது (Create the line of fence) பக்கத்து வீட்டுகாரனுடன் ஒரு உடன்படிக்கைக்கு வரமுடியவில்லையானால் அதனை எப்படி தீர்ப்பது?
- ரொரன்ரோ நகர எல்லைக்குள் இயங்கும் நூலகங்கள் தொடர்பான தகவல்கள்?
- நகரசபையினால் வழங்கப்படும் முதியோருக்கான சேவைகள் எங்கே? எப்படி பெறலாம்?
- நகரத்தினுள் வாடகைக் கார் அனுமதிப் பத்திரம் பெறவிரும்பினால் எப்படி? எங்கே பெறுவது?
- ரொறன்ரோ நகரத்திற்கு உல்லாச பிரயாணமாக வருகை தந்தவர் தேவையான தகவல்களை எப்படி பெறுவது? எங்கேயெல்லாம் சுற்றி பார்க்கலாம்? என்ற விபரங்களை வழங்கும் தகவல் இடம் எது?
- தங்கள் வீட்டு வளவுகளில் மரங்கள் ஏதாவது நாட்ட விரும்பினால் நகரசபையே அதனை இலவசமாக செய்து விடும். வீட்டின் முன்னால் உள்ள மரங்களை அகற்ற வேண்டுமானாலும் அது நகரசபையின் எல்லைக்குள் இருந்து அதில் தாங்கள் அவர்களின் அனுமதியின்றி கை வைத்தால் பெருந்தொகை நட்டஈடு கொடுக்க வேண்டிய ஆபத்தான நிலைமைகள் வரலாம். எனவே அதுபற்றிய விபரங்களைப் பெறுவதற்கு.
- ரொரன்ரோ போக்குவரத்து சேவை தொடர்பான தகவல்களை எங்கே? எப்படி பெறுவது?

மேற்குறிப்பிட்டவை உதாரணத்திற்காக ஒரு குறிப்பிட்ட கேள்விகள் மட்டுமே (Sample questions) இங்கு தரப்பட்டுள்ளது. இப்படி பல ஆயிரக்கணக்கான கேள்விகள் எழலாம். இயன்றவரை சரியான பதில்களும் வழிகாட்டல்களும் வழங்கவென நகரசபை பல மில்லியன் டொலர் செலவில் இத் தகவல் பிரிவினை ஏற்படுத்தியுள்ளது.

**பின்குறிப்பு:** ரொறன்ரோ, மிசுசாகா, பிரம்ரன், ஒட்டாவா, மொன்றியல் ஆகிய இடங்களில் 311 இலக்கத்தின் மூலம் இச்சேவையினைப் பெறும் இதேவேளை City of Vaughan 905 832 2281, City of Aurora 905 727 1375, Town of Stouffville 905 640 1900, City of Ajay 905 683 4550, City of Oshawa 1800 667 4292, City of Pickering 905 420 3660 என்னும் இலக்கங்களுடன் தொடர்புகொள்வதன் மூலமும் அந்தந்தப் பகுதியில் உள்ளவர்கள் இச் சேவையினைப் பெறமுடியும்.



சிவ பஞ்சலிங்கம்
- ஆயுட்காப்புறுதி பிரதிநிதி -
siva.panchalingam@thaiveedu.com

■ ■ ■

Law Office
T. JEGATHEESAN
(Barrister, Solicitor and Notary Public (on)



உங்கள் சட்டப் பிரச்சினை எதுவாகிலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆலோசனைகளுக்கும் சட்ட நடவடிக்கைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.
தி. ஜெகதீசன்
(Barrister, Solicitor and Notary Public (on)
Off: 416 • 266 • 6154
Res: 416 • 449 • 0358
Fax: 416 • 266 • 4677
2620 Eglinton Ave., East # 201
Scarborough. ON
M1K 2S3

உங்கள் சகல காப்புறுதிகளுக்கும்
பல்வேறு வகையான காப்புறுதி கம்பனிகளிலும் விலைகளை அறியவேண்டுமா
To shop around insurance price please call
Siva Panchalingam, B.Com.
(Licensed Insurance Broker)
Office: 1 888 651 1955
Home: 416-321-0999, Cell: 416-990-4908
400, Bradwick Drive., Suite 102, Concord, ON





# உங்கள் மனைகள் மாளிகைகளாகிட...

**$169,000**

**Midland/ Mcnicoll**
Office Building, Unit Has A Reception Area Wiht Four Rooms. Steps To T.T.C.Close To Every-thing

**$469,000**

**Father Tobin & Sunny Meadow**
Detached 2-Storey, 4+1 Bedrooms, 4 Washrooms, Finished Bsmt, Family Rm With Hardwood Floor

**$479,900**

**Jane/Major Mackenzie**
Detached 2-Storey, 4+1 Bedrooms, 3 Washrooms, Beautiful Open Concept Layout With Huge Kitchen

**$349,900**

**Mccowan/Egligton**
Att/Row/Twnhouse, 3 Bedrooms, 3 Washrooms, Free Hold, Fin Basement, Double Car Drive Way

**$539,000**

**Birchmount/Steeles**
Detached 2-Storey, 3+2 Bedrooms, 4 Washrooms, Walk To Schools,Parks,Ttc, Shopping Mall, Basement Sep. Entrance

**$220,000**
Convenience Store
**Brampton**

**$950,000**


**Toronto**
Gas Station

**$549,000**


**OwenSound**
Gas Station with Daisey, 6/49 & Resuaruant


**$1,100,000**


**Peterborough**
Gas Station with Subway Franchise Restaurant

**$799,900**


**Port Elgin**
Gas Station, (Esso) Convenient Store + Restaurant (Leased) + Four Apartments (Leased) With Steady Income

- digi Media -



முழுநேர வீடுவிற்பனை முகவர். Emerald, Platinum Award Winner

## சத்தி மருதப்பா

Sales Representative

**416.816.1500**

Not intended to solicit properties currently listed for sale.

மேலும் பல Gas Stationகளும் வியாபாரநிலையங்களும் விற்பனைக்குண்டு

Century 21
**Affiliate Realty Inc.**, Brokerage
208-80 Corporate Drive,Toronto, ON M1H 3G5
Bus: **416-290-1200**, Fax: **416-290-1900**

# THINKING OF BUYING OR SELLING CALL KRISH

**$469,900**

**Middlefield/Denison**
4+2 Bdrm & 4 Wrm

**$112,900**

**Morningside/401**
2+1 Bdrm & 2 Wrm

**$158,900**

**Kennedy/401**
3 Bdrm & 2 Wrm

**$234,900**

**Neilson/Sheppard**
4+1 Bdrm & 2 Wrm

**$219,900**


**Middlefield/Finch**
2+1Bdrm & 2 Wrm

**$249,000**



**Warden/Sheppard**
3 Bdrm & 2 Wrm

**$249,500**

**Pickering Pkwy/Vally Farm**
3 Bdm & 2 Wrm

**$349,900**

**Mccowan/Denision**
3 Bdm & 2 Wrm

**$214,900**

**Cedar/Phillip Murray**
4 Bdm & 2 Wrm

**$279,000**

**Veterans/Touchette**
3 Bdm & 3 Wrm

**$265,000**


**Eglinton/Kennedy**
3+1 Bdm & 2 Wrm

**$355,000**

**Brimley/Denision**
3+1 Bdm & 3 Wrm



## New Release Condo in GTA

**New release condos in Toronto, Scarborough and Markham**
**The VIP Specials & Floor Plan**
**Call Krish For More Details..**

## More houses visit :- www.krishome.ca



**Krish Sivapatham**
Sales Representative
**Full Time Realtor**
**Direct : 416-895-4457**
**HomeLife/ Future Realty Inc.,** Brokerage
205 - 7 Eastvale Dr, Markham, ON, L3S 4N7
Bus:905-201-9977 Fax: 905-201-9229
Indepently Owned and Operated, REALTOR
This is not intended to solicit properties Currently under conract/ some conditions may apply

HOMELIFE
HIGHER STANDARDS

**CENTUM**
Gold Mortgages
Looking out for your best interest

இது ஒரு நல்ல சந்தர்ப்பம், உங்கள் நிதிப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு...

- 1st, 2nd, 3rd MORTGAGES *
- COMMERCIAL MORTGAGE *
- LINE OF CREDIT *
- POWER OF SALE *
- SELF - EMPLOYED *
- BRIDGE FINANCING *
- SWITCHING *
- REFINANCING *
- BAD CREDIT *

**All Mortgages Needs**
☎: 416- 844-8692
supen71@hotmail.com

Prime -0.40% for Variable with close

PRIME +.50% FULLY OPEN mortgage

Fixed rate
5yrs 3.75%
3yrs 3.5%
(some conditions may apply)
2nd mortgae can arrange without income qualified



**Supen Subramaniam**
Mortgage Consultant (MO8006045)
*Some Condition Apply



Shan Thayaparan
Sales Representative
Dir: 416.567.7675
Bus: 416.321.2228
www.shan123.com
E mail: Shan123@rogers.com
RE/MAX
Above the Crowd!
Vision Realty Inc.
2210 MARKHAM ROAD, UNIT 01 TORONTO,ONTARIO M1B 5V6
Scarborough
$179,900
Largest Unit
Well kept & Well managed Condo. No worries about reserve funds. Newly painted, Newer Floor,Newer Appliances.
Markham
$569,900
SOLD
In 3 Days for Over Asking Price
2800 Sqf. New Starlane Home
Larger 4 Bedrooms, 3 Full Washrooms Upgraded Large Kitchen, Oak Staircases Formal Living and Dining & More
Ajax
$469,900
2371Sqf. Prestige Area
4 Bedrooms & Sunken Family room Double Garage, Walk-Put Basement, Full Brick Only 10 Minutes from Scarborough!!!
Brampton
$419,900
Aprox. 2500 Sqf.
Large 4 Bed Rooms, 2 Full Wash Rooms Steps to all schools, transit & shopping Double garage, Entrance to Garage
Brampton
$319,900
Affordable Semi
Large 3 Bed Rooms, Finished Basement 5 years new, Spacious, Bright House. Close to Schools, Go Station
Scarborough
$137,000
Great Starter Home!!!
2 Bedrooms, Steps to Schools, Mall. Upgraded Kitchen, Newer Floor, Ensuite Laundry and more...
Scarborough
$379,900
SOLD
Extra Large/Finished Bsmt
Large 3 Bed Rooms & 3Bedrooms in the Basement. Close to Scar. Town center School 401,& TTC
Ajax
$389,000
Gorgeous House
Large 3 Bed Rooms, Walk-Out Basement Looks like a model house. Large deck in the back. Minutes to 401 & 10 Minutes from Scarborough
Scarborough
$424,900
$Excellent Value$
4 Bed Rooms, Double door entry, Open concpt Close to Schools, UofT,TTC, Shopping & 401
Markham
$449,900
Lovely 4Br. Family Home
High demand location, Bright Eat-in- Kitchen Detached Double Garage. Over 2000Sqf.
Scarborough
$449,900
SOLD
Mattamy Built/ 4+2 Bedrooms
4 Bed rooms, 3 Full washrooms Finished Basement/ Separate Entrance Close Schools, TTC & Shopping.
Scarborough
$429,000
$$$Excellent Value$$$
4 Bed+2Bedrooms, 4 washrooms Finished Basement. Steps to School, Park TTC. Close to shopping, 401
Scarborough
$339,000
McCown/Finch
Full Brick Renovated Home, Large Driveway Close to TTC, Temple, Schools & Shopping 3 Bedrooms with Finished Basement
Scarborough
$429,000
$$Excellent Value$$
4 Large Bedrooms, 3 Washrooms Aprox. 2400 Sqf. New Painting, New Deck Steps to School & TTC
Need a House
Ajax
$319,900
SOLD
One Year Old Semi
Very Spacious, Well Maintained House Upgraded Kitchen, Washrooms, Stainless Appliances. Close to Transit, Shopping & 401
Daisy Mart
$99,000
Real Money Maker
Steady Weekly Sales $10,000. Ideal Family Business.
Stouffville
$345,000
SOLD
Beautiful Semi.
3 Large Bed rooms, 2 Full washrooms Upgraded Kitchen, Upgraded Washroom Stainless Appliances. Close to GO Station
Need a House
Spotless House
3 Large Bed rooms, 2 Full washrooms $$$ Spend on Hardwood floors, Kitchen Washrooms. Close to GO Station
RE/MAX
Above the Crowd!
Vision Realty Inc. Brokrage
2210 MARKHAM ROAD, UNIT 01 TORONTO,ONTARIO M1B 5V6
Viki Velauthan
Sales Representative
Dir: 416.457.7162
Bus: 416.321.2228
E mail: vvelauthan@yahoo.com

# நோயெதிர்ப்புத் தொகுதியும் செழுமைப்படுத்தலும்

கந்தையா பரநிருபசிங்கம்



### நோயெதிர்ப்புத் தொகுதியின் தொழிற்பாட்டை உயர்த்தும் சில பதார்த்தங்கள். (Some Substances Boosting The Tmmune System)

எமது உடல் நலனைப்பேண நோயெதிர்ப்புத் தொகுதி (Immune system) மிகவும் முக்கிய மானது. இதனுடன் தொடர்புடையதாக ஒரு தொடர் பாதுகாப்புச் செயன்முறைகள் உள்ளன. இவை வெளியிலிருந்து எங்கள் உடலை ஆக்கிரமிக்கும் பக்ரீறியாக்கள், வைரசுக்கள், பிறதொற்றுக்களிலிருந்து தொடர்ச்சியான பாதுகாப்பை வழங்குகின்றன. அத்துடன் இந்த ஆக்கிரமிப்பின் தொடர்ச்சியாக ஏற்படும் நோய் விருத்தியையும் தடுக்கின்றன. எமது நோயெதிர்ப்புத் தொகுதியும் அதனுடன் தொடர்புடைய மற்றைய தொகுதிகளும் போசணைக் குறைபாட்டினால் தொழிற்தரம் குன்றுகின்றன. எனவே பாரதூரமான வியாதிகள் வருவதைத் தடுக்கவும், இன்புழுவென்சா, குளிர்சுரம் போன்றவற்றிற்கு ஆட்படக்கூடிய இலகுதன்மையைக் குறைக்கவும் நோயெதிர்ப்புத் தொகுதி வலுப்படுத்தப்படவேண்டும். அதிர்ஷ்டவசமாக, நோயெதிர்ப்புத் தொகுதியை வலுப்படுத்தக்கூடிய பல பதார்த்தங்கள் எங்களிடம் கைவசம் உள்ளன.

இப்பொழுது நோடியதிர்புத் தொகுதியைப் பலப்படுத்தும் சில பதார்த்தங்களையும், அவற்றைப் பெற எவ்வகை உணவுகளை நாம் உண்ணவேண்டுமென்பதையும், அவற்றால் ஏற்படும் நன்மைகளையும் பின்வரும் பந்திகளில் கவனிப்போம்.

- பீற்றா குளுக்கன் (Beta-glucan),
- சல்பொறாபேன் (Sulforaphane),
- பல்காறினோல் (falcarional),
- பைற்றோகெமிக்கல்கள் (phytochemicals),
- பீற்றா-கரோட்டீன் (beta-carotene),
- குளுடாமீன் (glutamine),
- றெற்றினைல் அசற்ரேற்று (retinyl acetate),
- நாகம் (zine),
- லைக்கோபீன் (lycopene),
- அலியம் (allium),
- வைற்றமின் சி (Vitamine C)

போன்றன நோயெதிர்ப்புத் தொகுதியின் தொழிற்பாட்டைக் கூட்டும் சில பதார்த்தங்கள்.

இப்பொழுது மேற்கூறப்பட்ட பதார்த்தங்கள் ஒவ்வொன்றையும் அவைகாணப்படும் உணவு வகைகள், அவற்றின் நன்மைகள் என்ற அடிப்படையில் தனித்தனியாகக் கருதுவோம்.

### பீற்றா – குளுக்கன் (Beta-glucan)

**உணவுவகை:** அகாரிகஸ் பிளேசை மேறில் (Agaricus blazei murrill, ABM)எனும் காளான்.
**நன்மைகள்:** பொதுவாக நேயெதிர்ப்புத் தொழிற்பாட்டுடன் தொடர்புடையது.

### சல்பொறாபேன் (Sulforaphane)

**உணவுவகை:** புறக்கோலி (broccoli), கோலிபிளவர் (cauliflower), கோவா (cabbage), இவற்றுடன் தொடர்புடைய காய்கறிகள்.
**நன்மைகள்:** நாடிகளின் வீக்கத்தைத் தடைசெய்யும். இருதய வியாதி வராமல் தடுக்கும், கொலஸ்ரோலின் (cholesterol) அளவைக் குறைக்கும்.

### பல்காறினோல் (falcarinol)

**உணவு வகை:** கரட் கிழங்கு (carrot)
**நன்மைகள்:** எதிர்ஒட்சியேற்றியாகத் தொழிற்படும், புற்றுநோய் வரும் சாத்தியத்தைக் குறைக்கும்

### பைற்றோகெமிக்கல்கள் (phytochemicals)

**உணவுவகை:** பெரிப்பழங்கள் (berries)
**நன்மைகள்:** எதிர்ஒட்சியேற்றிகளாகத் தொழிற்படும், நோயெதிர்ப்பை செழுமைப்படுத்தும்

### பீற்றா – கரோட்டீன் (beta-carotene)

**உணவுவகை:** கரட்கிழங்கு, பூசணி, வத்தாளங்கிழங்கு, அப்பிறிக்கொட்(apricot), பெருமிளகாய் (pepper), பச்சைக்காய்கறிகள்.
**நன்மைகள்:** பொதுவாக நோயெதிர்ப்புத் தொகுதியை செழுமைப்படுத்தல்

### குளுடாமீன் (glutamine)

**உணவுவகை:** இறைச்சி (அதிகபுரதமுள்ள உணவு) சமைக்காத கோவா, பீற்றூட்டு.
**நன்மைகள்:** நோயெதிர்ப்புச் சவால் நிலையில் பிரியும்கலங்களுக்கு சக்தி வழங்கல். இது இல்லாதவிடத்து நோயெதிர்ப்புத் தொகுதி பிறள்வான தொழிற்பாட்டைக் காட்டும். (dysfunction)

### றெற்றினைல் அசற்றேற்று (retinyl acetate)

**உணவுவகை:** கரட்கிழங்கு, மீனெண்ணெய்
**நன்மைகள்:** காத்திரமான நோயெதிர்ப்பு நிலையைப்பேண முக்கிய ஆசாமி ஆகாத் தொழிற்படுகின்றது.

### நாகம் (zinc)

**உணவுவகை:** மதுவம், முட்டையின் மஞ்சட் கரு, ஈரல், சோயாபீன்ஸ், சூடைமீன், முழுத் தானியம், மற்றும் பல.
**நன்மைகள்:** நோயெதிர்ப்பு விளைவாக்கத்தில் (responses) முக்கிய பங்கு, குணமாக்கல் செயன்முறையில் முக்கிய பங்கு

### லைக்கோபீன் (lycopene)

**உணவுவகை:** தக்காளி, மற்றும் பல
**நன்மைகள்:** எதிர்ஒட்சியேற்றி புற்றுநோயைத் தடுக்க உதவும்

### அலியம் (allium)

**உணவுவகை:** உள்ளி
**நன்மைகள்:** நோயெதிர்ப்பை மெருகூட்டும். புற்றுநோய் தடுப்பில் முக்கிய பங்கெடுக்கும்

### வைற்றமின் சி (Vitamin C)

**உணவுவகை:** பழங்கள், காய்கறிகள்.
**நன்மைகள்:** வெண்குருதிச் சிறுதுணிக்கைகளின் உருவாக்கத்தைத் தூண்டும்.

மேற்கூறிய பதார்த்தங்களைவிட வைற்றமின்கள் E, B6, B12, D3, K மற்றும் அசிடோபிலஸ், திராட்சை விதைச்சாறு, மஞ்சள், போலிக்கமிலம் போன்றவையும் நோயெதிர்ப்புத் தொகுதியினை மெருகூட்டும்.

paranirubasingam.k@thaiveedu.com

■ ■ ■


# EQAO EXAM Grade 3, 6 & 9

Coaching class starts on Mar, 2010
Tutoring: Gr. 1 -12
• Teaching Math, English & Science
• Junior Readers and Magic Math Programs
• Weekdays and Weekend Classes

KENNEDY & EGLINTON
Contact: 416-546-7885


## விரைவில் காணாமல் போகவிருக்கும் 10 உபகரணங்கள்

Pixmania நிறுவனம் அண்மையில் வெளியிட்டிருக்கும் ஆய்வறிக்கை ஒன்றின் படி விரைவில் காணாமல் போகவிருக்கும் 10 தொழில் நுட்ப உபகரணங்களின் பட்டியல் இதோ. இவற்றில் சில ஊகித்தவை. சில ஆச்சரியம் தருபவை.

### The DVD Player



Blu-Ray தொழில் நுட்பத்துடன் கூடிய DVD-களும், இணையத்தினூடான பாவனையும் DVD Player களை விரைவில் இல்லாதொழித்துவிடும்.

### Fax Machine



மின்னஞ்சல் மற்றும் புதிய தொழில் நுட்ப வருகை தொலைப்படியை இல்லாது செய்யும்.

### Analogue TV



டிஜிட்டல் தொலைக்காட்சிகளின் வருகை இவற்றுக்கு எமனாகலாம்.

### The Landline Phone



Voice-over-IP தொலை பேசிகளும் செல்லிடப்பேசிகளும் இவற்றை இல்லாது செய்துவிடும்.

### The Cellphone Charger



Wireless Charging Mats அறிமுகமாகும்போது இவை காணாது போகலாம்

### The Wii Remote



### The GPS



இந்தப் பட்டியலிலுள்ள மிக இளமையான உபகரணம் இது. செல்லிடப்பேசிகளிலுள்ள GPS இவற்றை நிவர்த்தி செய்யலாம்.

### The 3G Dongle



மடிகணினிகளும் ஏனைய இணைய உபகரணங்களும் இவை இணைந்ததாகவே வரவிருப்பதால் இவை காணாமல்போகும்.

### The Mouse



புதிய தொழில் நுட்பங்களுடன் கூடிய Pointing Deviceகள் வரவிருப்பதால் இவையும் ஆபத்திலுள்ளன.

### Chip-and-Pin Cards



தொடுகையற்ற பணம் செலுத்தும் முறை அறிமுகமாகும்போது இந்த உபகரணங்கள் இல்லாது போய்விடுமாம். Tim Hortonsகளில் இந்த தொடுகையற்ற பணம் செலுத்தும் முறையே பாவனையிலுள்ளது.

-கருணா

# உள நலப் பாதிப்பும் நாமும்



**புஸ்பா கனகரட்ணம்**

எங்கள் ஆரோக்கியத்திற்கு உடலும் உள்ளமும் நலமாக இருக்க வேண்டும். எங்கள் எல்லோருக்கும் இது நன்றாகவே தெரியும். ஆனால் உளநலப் பாதிப்புகள் என்றதும் எங்களுக்குள் ஏதோ ஒரு அச்சம். அச்சம் ஏன் வருகின்றதென்றால், எங்களுக்கு உளநலத் தாக்கங்கள் பற்றிய விளக்கங்கள் குறைவாக இருப்பதே. அதனால் தான் உளநலப் பாதிப்பை நாங்கள் ஒரு பேசப்படக் கூடாத, வெட்கத்துக்குரிய ஒரு விடயமாகக் கருதுகிறோம்.

உளநலப் பாதிப்புகள், உடல்நலப் பாதிப்புகளைப் போல சாதாரணமாக யாருக்கும் ஏற்படலாம். ஒவ்வொரு ஐந்து கனடியர்களில் ஒருவருக்கு வாழ்நாளில் ஏதோ ஒரு கால கட்டத்தில் உளநலத் தாக்கம் ஒன்று ஏற்படுவதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. எங்கள் ஒவ்வொருவருக்கும் உளத்தாக்கத்திற்கு உட்பட்ட யாராவது ஒருவரைக் கட்டாயம் தெரிந்திருக்கும். அப்படியிருந்தும் உளநலப் பாதிப்புகள் பற்றி பல விடயங்கள் எங்களுக்குத் தெரிவதில்லை. உங்களுக்குண்டான கேள்விகளைக் கேட்டு அதற்கான பதில்களைப் பெறுவதன் மூலம், உளநலம் பற்றி மேலும் அதிகமான விழிப்புணர்வை நாம் ஏற்படுத்திக்கொள்ளலாம். இந்த இதழில் உங்களின் சில கேள்விகளுக்கான பதில்களை பார்ப்போம்.

**இப்போது அதிகமாக எனக்கு பதட்டம், கோபம், நித்திரை குறைவு, என்பனவற்றுடன் பொருளாதாரச் சிக்கல்களும் இருக்கின்றது. என் குடும்ப மருத்துவர் என்னை ஒரு Psychiatrist (உளநல மருத்துவர்) இடம் போகச் சொல்லி வற்புறுத்துகிறார். மருந்துகள் எடுக்கும் அளவுக்கு நான் Mental இல்லை நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

நீங்கள் அச்சப்படுவதற்கு ஒரு காரணமும் இல்லை. நீங்கள் பலகாலமாக உங்கள் குடும்ப மருத்துவரிடம் சென்று வருகிறீர்கள் என்றால் அவருக்கு உங்களில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள் பற்றி நன்கு தெரிந்திருக்கும். உங்கள் நாளாந்த வேலைகளை உங்களால் கவனிக்க முடியாமல், உங்கள் குடும்பம் மற்றும் உறவுகளோடும் நண்பர்களோடும் வழமை போல் பழக முடியாமல், உங்கள் பிள்ளைகளை (இருப்பின்) நன்கு கவனிக்க முடியாமல் இருப்பீர்கள். ஆனால், உங்களுக்கு உதவி தேவைப்படலாம். சிலர் கோயிலுக்கு சென்று ஆறுதல் தேடுவார்கள். நெருக்கமானவர்களுடன் கதைப்பதால் சிலருக்கு மன நிம்மதி ஏற்படும். சிலர் இசையில் அல்லது வாசிப்பதில் தங்கள் கவலைகளை, மனக் குழப்பத்தை மறக்க முயற்சிப்பார்கள். சிலர் தொலைக்காட்சி, திரைப்படம் என பொழுதைக் கழித்து துன்பங்களில் இருந்து விடுபட முயற்சி செய்வார்கள். சிலரோ, எதுவுமே தேவையில்லை - வேலையில், வேறு விடயங்களில் கவனத்தைச் செலுத்தி எல்லாம் தானாகவே சரியாகிவிடும் என்று நம்பிக்கை கொள்வார்கள். இப்படி நீங்கள் பலவற்றை முயற்சி செய்தும், உங்கள் கோபம், பதட்டம் எதுவும் குறையவில்லை எனில் - நீங்கள் உளவியல் துறை சார்ந்தவர்களை அணுகுவது நல்லது.

**“ உளநலப் பாதிப்புகள்,**

**உடல்நலப் பாதிப்புகளைப் போல சாதாரணமாக**

**யாருக்கும் ஏற்படலாம்.**

**ஐந்து கனடியர்களில் ஒருவருக்கு**

**ஏதோ ஒரு காலகட்டத்தில்**

**உளநலத் தாக்கம் ஒன்று ஏற்படுவதாக**

**புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. ”**

நீங்கள் தடிமன் காய்ச்சலுக்கோ, ஒரு வயிற்று வலிக்கோ வைத்தியரை அணுகுவது போல் தான் உளநலம் சார்ந்த பிரச்சினைகளுக்கு உளநல மருத்துவரையோ (Psychiatrist) உளநல நிபுணரையோ (Psychologist) அணுகுவதும். உளம் சார்ந்த பிரச்சினைகள் வந்து விட்டால் அதற்கு பயப்படத் தேவையில்லை. உடனே எங்களுக்கு Mental என்றோ அல்லது சித்தப்பிரமை பிடித்துவிட்டதோ, பிடித்துவிடப் போகிறதோ, அல்லது மற்றவர்கள் அப்படி நினைத்துவிடப் போகிறார்கள் என்றோ அஞ்சுவது தேவையற்றது. சாதாரணமாக யாருக்குமே இப்படியான சிக்கல்கள் ஏற்படலாம். திடீரென நடைபெறும் சம்பவமோ அல்லது பல நாட்களாக இருக்கும் ஒரு பிரச்சினையோ மனதில் தாக்கத்தை ஏற்படுத்தலாம். பல பிரச்சினைகள் ஒன்றாகச் சேர்ந்து சிக்கலை கொடுக்கலாம், அல்லது எப்போதோ நடைபெற்ற ஒரு விடயம் திடீரென பூதாகரமாக உருவெடுத்து மனக்குழப்பத்தை கொண்டு வரலாம். இது யாருக்குமே சாதாரணமாக நடைபெறக்கூடிய ஒரு விடயம். இப்படியான விடயங்கள் ஏற்படுத்தும் ‘மனத்தாக்கம்’ பொதுவாகவே பாரதூரமான உளநோய்களை ஏற்படுத்தாது. உளநோய்கள் எனும் போது சாதாரண உளத்தாக்கத்தினில் இருந்து யதார்த்த பிறழ்வு ஏற்படக்கூடிய அளவிற்கான உளநோய்கள் வரை இருக்கின்றன. எல்லாவற்றையும் நங்கள் ஒரு பதத்திற்குள் அடக்கி விட முடியாது. இவற்றை பிரித்தறிய உங்கள் குடும்ப மருத்துவர் உதவுவார். அல்லது தம்மால் முடியாது என்று கருதும் பட்சத்தில் ஒரு Psychiatrist அல்லது உளநல நிபுணரிடம் (Psychologist) உங்களை அவர்கள் தொடர்புபடுத்தி விடலாம். உளநல மருத்துவர் உங்கள் நோய் அல்லது மனத்தாக்கத்தின் அறிகுறிகளை கேட்ட பின்னர் உங்களுக்கு ஆலோசனை வழங்குவார். உங்களுக்கு மருந்துகள் பாவிப்பதால் உளத்தாக்கம் குறையும் என் அவர் கருதினால், உங்களுக்கு அவர் மருந்துகள் தருவார். மருந்துகள் தேவைப்படாது என்ற பட்சத்தில், உங்களுக்கு என்ன ஆலோசனைகள் தேவையோ, அதனைக் கூறுவார். சிலவேளைகளில், குறுகிய காலத்திற்கு மருந்துகளை பாவிக்கச் சொல்லலாம். அந்த சந்தர்ப்பங்களில் மருத்துவர் சொன்னபடி மருந்துகளை உட்கொள்வதும், அதன் பக்க விளைவுகளைப் பற்றி கேட்டு அறிந்து கொள்வதும், மருந்துகளின் விளைவுகள் - அதாவது அவை உங்களுக்கு உதவுகின்றவா இல்லையா – என்பது பற்றி உளநல மருத்துவருடன் ஒழுங்காக தொடர்பு வைத்து கேட்டு அறிந்து கொள்வதும் முக்கியமாகும். சில மருந்துகளை ஒரு சில வாரங்களுக்கு பாவித்த பின்பு தான் அதன் நன்மையை நீங்கள் உணரக்கூடியதாக இருக்கும். அதனால், உளநல மருத்துவரின் குறிப்புகளை நன்கு கேட்டு அதன்படி நீங்கள் மருந்துகளை உட்கொள்ள வேண்டும். மருந்துகளை வைத்தியரின் அனுமதியின்றி திடீரென ஒருபோதும் நிறுத்தக்கூடாது. சில வேளைகளில் இதுவும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். உங்கள் மனத்தாக்கத்திற்கான விளக்கம், மற்றும் அந்த குறிப்பட்ட மனத்தாக்கத்திற்கான அல்லது நோய்க்கான பதம் ஆங்கிலத்தில் என்ன என்பதை கேட்டு தெரிந்து கொண்டால் - அது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். நீங்கள் உதவி பெறும் அல்லது சேவைகள் பெறும் வேறு துறைசார் நிறுவனங்களுக்கோ, நபர்களுக்கோ இந்த ஆங்கிலப்பதத்தை சொல்லும் போது அவர்கள் இலகுவாக விளங்கிக் கொள்வார்கள். நீங்களும் கூட உங்கள் உளத்தாக்கத்தைப் பற்றி இணையத்தளத்தில் (Internet) அல்லது. வேறுவிதமாகவேனும் வாசித்து, கேட்டு அறிந்து கொள்ளலாம். எல்லா உளத் தாக்கங்களும் Depression அல்ல இதனை புரிந்து கொள்ளுங்கள். சிலவேளைகளில், உங்கள் குடும்ப மருந்துவரே உங்களுக்கு உளத்தாக்கங்களுக்கான மருந்துகளை தருவார். அந்த மருந்துகளைப் பற்றியும், அதனை நீங்கள் எடுக்கவேண்டிய காரணங்கள் பற்றியும் உங்கள் மருத்துவர், உங்கள் Pharmacy (மருந்துக்கடை), மற்றும் இணையத்தளத்தில் நீங்கள் விபரங்களைப் பெறலாம்.


**Haitiயில் நடந்த பூகம்பத்தை தொலைக்காட்சியில் சில நாட்களாக அவதானித்ததில் இருந்து, எனக்குள் அதிகமான துக்கமாக உணர்கிறேன். அங்கு மக்கள் படும் அவலம் எனக்கு ஊரில் எங்கள் உறவினர்கள், நண்பர்கள் படும் துன்பத்தையும் சுனாமியின் போது நடைபெற்ற கொடூரங்களையும் நினைவுபடுத்துகிறது. மனதைவிட்டு இந்த நினைவுகள் அகல மறுக்கின்றன. சிலவேளைகளில் “என்ன இந்த வாழ்வு?” என்ற சலிப்பு ஏற்படும் போது, பயமாகவும் உணர்கிறேன் இதிலிருந்து விடுபட, என்ன செய்யலாம்?**

போர், இயற்கை அனர்த்தங்கள் போன்றவை

48ம் பக்கம் பார்க்க...

TO LEARN FIRST AID & CPR IN ENGLISH AND TAMIL
தமிழிலும் ஆங்கிலத்திலும் முதலுதவி பயிற்சி
Dr. Kandiah Senthilathan
● Standard First Aid & CPR Level "C" - 2 Days Program ● Emergency First Aid & CPR Level "A" - 1 Day Program ● CPR Level "A" - 4 Hours Program (Adult)
● CPR Level "C" - 8 Hours Program (Adult, Child, Infant) ● CPR Level "C" - 4 Hours Program - Renewal (Adult, Child, Infant)
பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்
Registered Medical Officer (SLMC), Acupuncturist (MAcF), First Aid & CPR Instructor (Certified in Canada)
647-801-9252
416-502-9252
ஆறு மாணவர்களுக்கு மேல் சேருமிடத்தில், உங்கள் இடத்திற்கு வந்து கற்பிக்கப்படும்.

வீடு வாங்குவதற்கும் விற்பதற்கும்

Century 21
Service Plus
5855 Taschereau Blvd (Office)
Brossard, Quebec. J4Z 1A5
Email : sugumaran@sympatico.ca
Office : (514) 299-3186
(450) 926-1881

Sugumaran Sinnaiah
Chartered Real Estate Broker


# HomeLife/Future Realty Inc., Brokerage*

9th Line / 14th Ave



For Rent
- 3 Bed Room
- 3 Wash Room

Brimley & Ellesmere



For Rent
- 9 Bed Room
- 3 Wash Room
- 3 Kitchens
- Separate Entrance

Victoria Park & Finch



$439,900
- 4 Bed Room
- 4 Wash Room
- 2 Kitchens

Finished BSMT with 1 BD Room

7428 Markham Rd



$274,900
- 3 Bed Room
- 2 Wash Room

Morningside & Ellesmere




$112,900
- 3 Bed Room
- 2 Wash Room

Markham & 16th Avenue



$429,900
- 4 Bed Room
- 3 Wash Room

Downtown Condo



X2 & ICE2 & With More VIP Price Condos

Call NOW

Scarborough Condo



Starting Price $147,800

For Sale or Rent

Call NOW

Markham Condo



Starting Price $189,000

For Sale or Rent

Call NOW

16 YEARS ஆண்டுகள் தமிழர்களின் பேராதரவைப் பெற்ற NaNo Computer ஸ்தாபனத்தின் விரிவுபடுத்தப்பட்ட உங்கள் முகவர்



**RAJ NADARAJAH**
Sales Representative

வீடு வாங்க விற்க
இலவச ஆலோசனைகளுக்கு

**Direct: 416-333-6115**
Office: (905)-201-9977
FAX: (905)-201-9229

E-mail: nanohomes@gmail.com

7 Eastvale Dr., Unit 205, Markham, ON, L3S 4N8
*Independently Owned and Operated, REALTOR®

**Buying/Selling Your Home ?**

**Call Now! Lets Talk!**

---

# Century 21

King's Quay Real Estate Inc. Brokerage

For All Your Real Estate Needs

**HomeExpertTeam.com**

**416-496-2625**

Bus: 905-940-3428 Fax: 905-940-0293 7300 Warden Ave., Suite 401 Markham, On L3R 9Z6

**Committed to Providing Real Estate Service to attain results beyond your expectations.**

*Knowledge + Experience + Team work = Result*



**AMIR RAMALINGAM ***
Masters Hall of Fame
CENTURION Honor Society

**Flexible & competitive commission!**



**PRATHEEP BALASUBRAMANIAM ****
Masters Ruby (2003-2007)
Masters Diamond (2008)



**THAYA SUBRAMANIAM ***
Masters Silver (2007)
Masters Diamond (2008)



**JUGA SUREES ***



**ATHAVAN KULARAJASINGHAM ***

* Sales Representative ** Broker

உங்கள் வாடகைப்பணத்தில் சொந்தமாக வீட்டை அமைத்திட இன்றே அழையுங்கள்

**416-496-2625**

Top Producers Award Winning Team

முழுநேர வீடு விற்பனை முகவர்கள் உங்களுக்கு உதவக்காத்திருக்கின்றோம்
நம்பிக்கை நேர்மை நட்பான சேவை !

---



Plant Your Seed for a Great Investment Return

*Special V.I.P. Brokerage price*

*Discounted Up to $20,000*



encore at equinox

Scarborough Town Centre

*Available*

1 Br - From$ 189,990
1 Br + Den - From$ 235,990
2 Br - From$ 328,990

Monarch

*Modern City Living in the Liberty Village*

*One of Toronto's hottest King West neighbourhoods*

*Available*

Studio - From$ 177,900
1 Br - From$ 212,900
1 Br + Den - From$ 274,900











Call us today to reserve your units !!!

# உலகின் ஒரேயொரு 7 Star Hotel

UAE என்று உலகமக்களால் அழைக்கப்படும் United Arab Emirates என்ற நாட்டை வெளி உலகில் இருந்து பார்க்கும் போது ஏதோ பாலைவனம்தான் என்ற தப்பான கணிப்பு பலரின் மனதில் இருந்து வருகின்றது. பாலைவனச் சோலை என்பதை கண்கூடாகக்கண்டு களித்தபோதுதான் புரிந்தது.

பொதுவாக அரபு நாடுகள் என்றவுடன் மனதில் தப்பான எண்ணங்கள் தோன்றுவது இயற்கையாகிவிட்டது. கட்டுப்பாடுகள் அதிகம், மனித உரிமை மீறல்கள் அதிகம். பெண்களின் வாழ்க்கைமுறை வேறு. இப்படி தப்புத் தப்பாகவே அரபிய நாடுகளைப் பற்றி தப்புத்தாளங்கள் போடுவதையே நாமும் கேட்டுக் கொண்டு இருந்துவிட்டோம்.

அதுவும் பாரசீகக் குடாவின் முத்து என வர்ணிக்கப்படும் (Pearl of the persian gulf) Dubai நாட்டைக் காணக் கண்கோடி வேண்டும்.

Dubai நாடானது பல்கலைச்சாரம் விழுமியங்கள் நிரம்பியதாகக் காணப்படுகின்றது. பாலைவனக் கீற்றுக் காற்றின் மத்தியில் சகலவித தொழில்நுட்ப வேலைப்பாடுகளுடன் உலக நாடுகளை கவர்ந்து எழுந்து நிற்கிறது Dubai. 4ஆம் திகதி ஜனவரிமாதம் 2010இல் உலகின் உயர்ந்த கோபுரத்தை திறந்துவைத்து இன்னமும் உலகத்தை திகைப்பில் ஆழ்த்தி இருக்கிறது Dubai.

Dubaiஇன் அரசராக Sheikh Mohammed ஆண்டு கொண்டிருக்கின்றார். இன்று Dubai உலகின் கண்களை உறுத்தும் அளவுக்கு வளர்ச்சி அடைந்ததில் இவர் பங்களிப்பு மிகப் பிரதானமானது. தமது நாட்டை உல்லாசப் பிரயாணிகளின் வருகை மூலம் கணக்கிலடங்கா அளவுக்கு வருமானத்தைப் பெருக்கி எண்ணெய் வியாபாரத்தைவிட உல்லாசப் பிரயாணத்தில் கொடிகட்டிப் பறக்கிறது Dubai.

கம்பீரமாக காட்சியளிக்கும் Burj Khalifa கட்டடத்தை 2004ல் கட்ட ஆரம்பித்தார்கள். 500,000 சதுர அடி பரப்பளவில் கட்டடத்தின் கட்டுமானம் துவங்கப்பட்டது. மொத்தம் 28,000 கண்ணாடி சட்டங்களால் அலங்கரிக்கப்பட்டு 160 தரைதளங்களுடன், கட்டடம் பார்வைக்கு கோபுரம் போன்று எழிலான அழகுடன் கவர்ச்சிகரமாக காட்சியளிக்கிறது.

பல வகையான அலுவலகங்களுக்கும் மற்றும் குடியிருப்புக்களுக்கும் அதில் இடம் உள்ளது.

Burj Khalifaவின் உயரம் 828 மீட்டர் (2716 அடி) என அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகிலேயே பெரிய பரப்பளவு வசதியை கொண்ட தரைதளம், மிக உயரமான இடத்திற்கு செல்லும் Elevator வசதி மற்றும் 124வது மாடியில் வெளிப்புற காட்சியை கவனிக்க ஒரு வெட்டவெளி மேற்தளத்தையும் அது தன்னகத்தே கொண்டுள்ளது.

அதன் 76வது மற்றும் 158வது மாடிகளில் உலகிலேயே மிக உயரமான மசூதியும் (mosque) மற்றும் நீச்சல்தடாமும் உள்ளது.

Dubai மனிதனால் உருவாக்கப்பட்ட High tec cityஆக உருவெடுத்து Guinness record இல் பதிவாகி இருக்கிறது. ஆச்சரியத்திலும் ஆச்சரியம் என்னவென்றால் Dubaiஇன் சனத்தொகை 1.5 மில்லியன் என்பதே. 2400 Sq.m பரப்பளவுள்ளது. தமது அரச கரும மொழியாக அரபிய மொழியை வைத்திருந்தாலும் ஆங்கிலம் சரளமாகப் பேச்சில் கலந்திருக்கிறது. Dubai இரண்டு பிரிவாக பிரிக்கப்பட்டிருக்கின்றது. வடக்குப் பகுதி Deira என்றும் Bur Dubai கிழக்குப் பகுதியாகவும் பிரிக்கப்பட்டிருக்கிறது.

Dubaiஇன் கலாச்சாரப் பிண்ணனியானது இஸ்லாமியக் கோட்பாடுகளுக்கு அமைவாகவே பின்னப்பட்டிருக்கின்றது. Dubaiக்கு விஜயம் செய்பவர்கள் தமது இஸ்லாமிய மரபுகளுக்கு இடையூறாக இருந்துவிடக்கூடாது என்பதில் மிகவும் கண்ணும் கருத்துமாக இருக்கின்றார்கள். ஆனாலும் Dubai தான் மத்திய கிழக்கு நாடுகளின் பொழுதுபோக்கு நகரமாக மதிக்கப்படுகின்றது. அண்டைய அரபு நாடுகளைச் சேர்ந்தவர்கள் Dubaiக்கு வந்து தமது பொழுதை உல்லாசமாகக் கழிப்பதில் மகிழ்வு அடைவதை கண்கூடாகக் காணக்கூடியதாக இருக்கிறது. Night Clubs கொடிகட்டிப் பறக்கின்றன. மதுவகைகள் எந்தவித தங்கு தடையுமின்றி பரிமாறப்படுகின்றன.

தமது ஆடை அலங்காரங்களில் இஸ்லாமிய அழகை அள்ளிக்கொட்டி இருக்கின்றார்கள். ஆண்கள் நீளமான வெள்ளை ஆடைகளையும், பெண்கள் தலையை மறைத்து நீளமான இஸ்லாமிய பாரம்பரியத்தையும் எந்தவித குறையும் ஏற்படாது அணிகின்றார்கள். லெபனானைச் சேர்ந்த கத்தோலிக்க மதத்தவர்கள் தமது மத பாரம்பரியங்களை கடைப் பிடிப்பதில் எந்தவித தடையும் Dubaiஇல் இல்லை. மற்றைய மதத்தவர்கள் தமது மத நம்பிக்கைகளை கடைப்பிடிக்க சுதந்திரம் தாராளமாக வழங்கப்பட்டிருக்கின்றது.

Shopping செய்வதில் Dubaiல் ஒரு திரில் மனநிலையே ஏற்படுகின்றது. இதனால் தான் 'Shopping Capital of middle east' என்றே Dubaiஐ அழைக்கின்றார்கள். அதிலும் தங்கம் (Gold) வாங்க செல்வதாயின் கண்களைக் கட்டிவிடும் அளவுக்கு கொட்டிக்கிடக்கின்றது தங்க நகைகள். Al-Ain shopping centre, Al-Ghurair city, Burjamen center என்பவற்றினுள் புகுந்தால் எதை வாங்குவது என்று வாயைப் பிளந்துகொண்டு நின்றுவிட வேண்டியதுதான்.

நம்மவர்கள் கண்களைச் சுண்டி இழுப்பது என்றால் Gold souk என்ற இடத்திற்கு கட்டாயம் சென்றே தீரவேண்டும். தங்கத்தின் விதம்விதமான வளையல்கள், அட்டியல்கள், சங்கிலிகள் என்று கொட்டிக்கிடக்கின்றது. இங்கே தாயக மண்ணுக்குச் செல்லும் நம்மவர் பலரும் ஒரு நாள் Dubaiஇல் தங்கி Gold souk சென்று நகைகளை வாங்கிச் செல்வது செலவை மிச்சப்படுத்த உதவும். இவை எல்லாவற்றுக்கும் மேலாக Dubaiஐ Helicopter இல் வானத்தில் பறந்து இரசிக்க ஒழுங்குகள் செய்து தரப்படுகின்றது.

முக்கியமாக ஒட்டகத்தில் சவாரி செய்து பாலைவன சூட்டை ரசிக்காமல் நிச்சயமாக திரும்பிவிடக்கூடாது. Camel ride என்பது எல்லோருமே நிச்சயமாக வாழ்நாளில் ரசிக்க வேண்டிய கட்டாயம் Dubai சென்றால் கிடைக்கும்.

என்னதான் Dubaiஐ பற்றி எழுதித் தள்ளினாலும் வழ்நாளில் யாருமே மறக்காமல் சென்று தங்கி திரும்ப ஆசைப்படும் இடம் என்று ஒன்று நிச்சயமாக உண்டு. அதுதான் Burj al Arab என்றழைக்கப்படும் உலகின்



அழகு மிளிரும் Hotel, உலகின் ஒரேயொரு 7Star Hotel என அழைக்கப்படும் Burj Al Arab செயற்கையாக நிர்மாணிக்கப்பட்ட ஒரு தீவில் அமைக்கப்பட்டிருப்பது நமது நெற்றிப் புருவங்களை உயர்த்த வைக்கின்றது. ஒரு Sail Shapeஇல் அமைக்கப்பட்டிருக்கும் இந்த Hotelஇன் உச்சியில் அமைந்திருக்கும் Sky view Barஇல் இருந்து நகரின் அழகை ரசிக்கக் கொடுத்து வைக்க வேண்டும்.

இந்த Hotelஇல் இன்னுமோர் விடையம் அங்கு பார்க்குமிடமெல்லாம் தங்கமாக மின்னுகின்றது. தங்கத்தில் வார்த்தெடுத்த Hotel அது.



திரு மகேசன்

ஆம் அங்கே அமைக்கப்பட்டிருக்கும் அனைத்து தளபாட வகைகளும் தங்கமுலாமிடப்பட்டிருக்கின்றது (Golden Plated). Tolet Cover முதல் முகம் கழுவும் Tap வரை தங்கமாகவே மின்னுகின்றது. இங்கே தங்காதவர்களைக் கூட Day Tour என்று அழைத்துச் சென்று காட்டப்படுவதால் தமது வாழ்நாளில் மறந்து விடக்கூடாது என்பது போல Photo எடுக்கத்



தவறுவதேயில்லை.

மொத்தத்தில் Dubai என்றவுடன் இனி உங்கள் நினைவுகளில் வண்ணக் கனவுகளும், தங்கக் கனவுகளும் வரவேண்டும் என்பதே எனது பயணத்தின் நோக்கம். பார்க்கப் பார்க்க கண்களை விரியவைக்கும் Dubai நாமும் அனுபவித்ததுபோல் நீங்களும் அனுபவிக்கவேண்டும் என்பதே இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

mahesan.thiru@thaiveedu.com

■ ■ ■

இணையத்தளத்திலும்
'தாய்வீடு'
www.thaiveedu.com

ALL YOUR FINANCIAL NEEDS



V.S. Thurairajah
President, Commissioner of Oaths
COMMUNITY FINANCIAL SERVICE GROUP INC.
Serving You, For Your Secure Future
416-548-7300 / 647-829-4044
2100 Ellesmere Road, Unit 105,
Scarborough, ON. M1H 3B7
@ Markham & Ellesmere (North West Corner)

ALL YOUR MORTGAGE NEEDS
RBC Royal Bank
Logi Thurairajah
Mobile Mortgage Specialist
Royal Bank of Canada
1761 Victoria Street East,
Whitby, ON L1N 9W4
logi.thurairajah@rbc.com
Cell : 416-278-2972
Fax : 416-548-7865


TWO FULL TIME REALTORS
ONLY ONE COMMISSION
14th Ave. & 9th Line
$ 469,000
3 Bedrooms + 3 Washrooms
Westney & Rossland
$ 369,900
4 Bedrooms + 3 Washrooms
Eglinton & Kingston
$ 279,900
3 Bedrooms + 3 Washrooms
Salem & Williamson
$430,000
4+1 Bedrooms + 4 Washrooms
Mccowan & Steeles
$ 489,900
4+1 Bedrooms + 4 Washrooms
Brimley & Dennison
$ 459,000
4+2 Bedrooms + 5 Washrooms
Hardwood & Kingston
$ 369,900
3+2 Bedrooms + 3 Washrooms
Bur Oak & 9th Lane
$ 459,600
3+1 Bedrooms + 3 Washrooms
Bellamy & Lawerence
$359,000
3+3 Bedrooms + 2 Washrooms
Westney & Rossland
$ 389,000
4+2 Bedrooms + 3 Washrooms
Mccowan & Steeles
$ 215,000
2+1 Bedrooms + 2 Washrooms
Morningside & 401
$ 424,999
3+1 Bedrooms + 4 Washrooms
Mccowan & Steeles
$ 215,000
2+1 Bedrooms + 2 Washrooms
Lawerence & Bellamy
$359,900
4+2 Bedrooms + 2 Washrooms
Mccowan & Major Mac.
$ 649,000
4 Bedrooms + 4 Washrooms
Markham & 16th Ave.
$ 479,000
3 Bedrooms + 3 Washrooms
9th Lane & Hoover Park
$ 534,999
4 Bedrooms + 4 Washrooms
Markham & Dennison
$ 240,000
Retail Space
Markham & Nashdene
$226,900
Office Space
14thAve. & 9th Line
$ 699,000
5 Bedrooms + 4 Washrooms
*BUY - SELL - RENT*
Experience,Knowledge,Professionalism,Team work & No Pressure
YOUR HOME
SOLD
GUARANTEED !
Thamil Suberamaniam
Salesrepresentative
Direct: 416-358-6200
Mugunthan Nadarajah
Salesrepresentative
Direct: 416-276-8025
HomeLife/Future Realty Inc. Brokerage*
7 Eastvale Dr, Suit 205,Markham ON. L3S 4N8
Bus : 905-201-9977 Fax : 905-201-9229
www.realhouse.ca
*Independently Owned and Operated
SOLD
No Intended to Solicit Currently Listed Properties or Buyers Under Contract.

# புற்றுநோய்!
# பாதுகாத்துக்கொள்ள சில வழிகள்



சொக்கலிங்கம் பிரபாகரன்
- வீடு விற்பனைப் பிரதிநிதி -

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமாகும். நோயானது வந்தபின் வருந்துவதை விட வருமுன் காப்பதே சிறந்த வாழ்வுமுறைக்கு ஒரே வழி. நோய்களுள் அண்மைக்காலத்தில் பெருமாதிக்கம் செலுத்தும் நோயாக புற்று நோய் இருக்கின்றது. புற்று நோய் வருவதற்கு என்ன காரணிகளாக உள்ளன என திட்டவட்டமாக பட்டியலிட்டு கூற முடியாவிட்டாலும் தொடரும் ஆராய்ச்சிகளுடாக சில பல காரணிகளை ஆராய்ச்சியாளர்கள் அவ்வப்போது தெரிவித்து வருகின்றனர். இத்தகைய தகவல்களை அறிந்து கொண்டு எம்மை நாம் அறிவுறுத்துவதன் மூலம் புற்றுநோய் வராமல் ஓரளவுக்கு எம்மை பாதுகாத்துக்கொள்ள முடியும்.

அண்மையில் வெளியான ஒரு அதிர்ச்சியூட்டும் தகவலின்படி 3% - 5% விழுக்காடு வட அமெரிக்கர்களுக்கு அவர்களது ஆயுட்காலத்தில் ஏதேனும் ஒரு புற்றுநோய் வருகின்றது என கூறப்பட்டுள்ளது.

உங்களுக்கு ஒரு உண்மை தெரியுமா? மனிதர்களுக்கு வரும் புற்று நோய்களுள் 75% விழுக்காடு வரையான புற்றுநோய்கள் வராமல் தடுக்கக்கூடியவையாக உள்ளன.

எனக்குத் தெரிந்த நான் படித்த சில எளிய வழிமுறைகளை இவ்வாக்கத்தில் தருகின்றேன். புற்றுநோயிலிருந்து உங்களைப் பாதுகாக்க இந்த எளிய கட்டளைகளைக் கடைப்பிடியுங்கள்.

## புகைப்பிடித்தலை நிறுத்தவும்

புகை பிடித்தல் எனும் போது சிகரட் மட்டுமில்லாமல் Tobacco எனும் பதார்த்தம் உள்ள அனைத்தையுமே நுகராதீர்கள். நீங்கள் புகை பிடிப்பவராக இல்லாதிருந்தால் மட்டும் போதாது. உங்கள் வீட்டிலுள்ளவர்களும் புகை பிடிக்காதவர்களாக இருத்தல் அவசியம். அதாவது அருகிலுள்ள நபர் புகைப்பிடிக்கும் போது ஏற்படும் பாதிப்பானது புகைப்பிடித்தலைவிட அதிகமானது.

## சரியான உணவு உண்ணவும்

நாம் உண்ணும் உணவில் அதிகமாக மரக்கறிகள், பழங்களைச் சேர்த்து உட்கொள்ளவும். முழுத்தானியங்களும் நன்று. மீன் வகைகளை ஒரு வாரத்தில் 2, 3 நாட்களேனும் உண்ணவும், saturated fats எனப்படும் கொழுப்புணவுகளையும் சிவப்பு இறைச்சிகளையும் நன்கு பொரித்த உணவுகளையும் நன்றாக குறைக்கவும். சீரான உணவு முறையானது புற்று நோயிலிருந்து மட்டுமன்றி பலதரப்பட்ட நோய்களிலிருந்தும் எம்மை பாதுகாக்கின்றது.

## உடல்நிறையை குறைத்து உடலைப் பேணவும்

Obesity எனப்படும் அதிக உடல்நிறை கொண்டவர்களுக்கு பலதரப்பட்ட புற்றுநோய்கள் ஏற்படும் அபாயம் அதிகம் என கண்டறியப்பட்டுள்ளது. இயன்றவரை கலோரிகள் குறைவாகக் கொண்ட உணவுகளை உண்டு உடலை மெலிவாக வைத்திருக்க வேண்டும்.

## உங்களை சில நோய்களிலிருந்து பாதுகாக்கவும்

சில நோய்கள் வேறு பல நோய்களை உருவாக்க வல்லன. குறிப்பாக புற்றுநோயை உருவாக்கவல்ல சில நோய்ப்பாதிப்புகளிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். எடுத்துக்காட்டாக Hepatitis, HIV, Human Papilloma virus (HPV) போன்ற நோய்கள் புற்றுநோயை ஊக்குவிப்பதால் இந்நோய்கள் எமக்கு வராமல் பாதுகாக்க வேண்டும்.

## குறைந்த அளவு அஸ்பிரின் மாத்திரைகளை எடுத்து வருதல்

கிரமமாக Aspirin மாத்திரிகைளை எடுத்து வருபவருக்கு ஆண்குறி சுரப்பிகளில் வரும் புற்றுநோயான Prostate Cancer, குடலில் வரும் புற்றுநோயான Colon Cancer, போன்ற புற்றுநோய்கள் வரும் ஆபத்து குறைவு எனக் கூறப்படுகின்றது. அதாவது aspirin போன்ற anti-inflammatory மாத்திரைகள் சிலவகையான புற்றுநோய்கள் வராமல் பாதுகாக்கின்றன என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

## ஒழுங்கான உடற்பயிற்சி

தினமும் தவறாமல் ஒழுங்கான உடற்பயிற்சிகளைச் செய்து வந்தால் Colon Cancer, Prostate cancer, மார்பகப் புற்றுநோய், பாலுறுப்புகளில் வரும் புற்றுநோய்கள் போன்றன தவிர்க்கப்படுகின்றன.

## மதுவை விலக்கவும்

மேலதிக alcohol உள்ளெடுப்பானது சிலவகை புற்றுநோய்களை உருவாக்குகின்றன. குறிப்பாக வாய், தொண்டை, களம் (Esophagus), ஈரல், குடல் போன்றவற்றில் புற்றுநோய் உண்டாக மது அருந்தும் பழக்கம் பிரதான காரணியாக உள்ளதாகக் கூறப்படுகின்றது. மது அருந்தும் பெண்களுக்கு மார்பகப் புற்று நோய் உருவாகும் அபாயம் உண்டு. அதிக மது என பொதுவாக குறிப்பிட்டாலும் எவ்வளவுக்கு மேல் மது அருந்துவது ஆபத்தானது என எங்கும் திடமாகக் குறிப்பிடப்படாதமையால் இயன்றவரை மதுவை முற்றாக விலக்குவது ஆரோக்கியமானது எனக் கொள்ளலாம்.

## கதிர்வீச்சுகளில் இருந்து உங்களை பாதுகாக்கவும்

நவீன யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் கதிர் வீச்சிலிருந்து எம்மை தவிர்த்து வாழ்வது கடினம். எனினும் இயன்றவரை தவிர்க்க வேண்டும். குறிப்பாக சூரியனின் பல ஊறு விளைவிக்கும் கதிர்களில் இருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள Sunscreen lotion போட வேண்டும். சூரியனிலிருந்து வெளிப்படும் Ultraviolet radiation தோல் புற்று நோய் உருவாகக் காரணமாகின்றது என கூறப்படுகின்றது.

## இரசாயனங்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளவும்

சூழலிலுள்ள, வீட்டிலுள்ள இரசாயனப் பொருட்களிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ளப் பழகவேண்டும். குறிப்பாக Asbestos, benzene, aromatic amines, PCBS போன்ற பலவகைப்பட்ட இரசாயனங்களும் உடலுக்கு ஊறு விளைவிப்பவை. இவற்றை உரிய பாதுகாப்பு முறைமைகளுடாக பாவிக்கவேண்டும். இயன்றவரை இரசாயனங்களைத் தவிர்த்து இயற்கை முறைமைகளைப் பிரதியீடாக பாவிப்பது நன்று.

## விட்டமின் D:

விட்டமின் D 800-1000 (IU) (International unit) தினமும் எடுத்து வந்தால் ஆண்களுக்கு வரும் Prostate மற்றும் இருபாலாருக்கும் வரக்கூடிய (Colon Cancer) குடற் புற்றுநோய் போன்றவற்றை தவிர்க்க முடியும் என புற்று நோய் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

இவ்வுலகை அச்சுறுத்தும் நோய்களில் முதன்மை வரிசையில் புற்று நோய் உள்ளது. இதனை வராமல் தடுக்கும் வழி வகைகளை அறிந்து இந்நோயிலிருந்து பாதுகாத்துக் கொள்ள இயன்றவரை முயல்வோமாக. எத்தகைய நோயும் வந்தபின் வருந்துவதைவிட வருமுன் காப்பது நன்றல்லவா? அடிப்படையில் சிறந்த ஒழுங்கு முறையான வாழ்க்கை முறையை கடைப்பிடித்து வந்தால் புற்றுநோய் மட்டுமன்றி எத்தகைய நோயும் வராமல் எம்மை நாம் பாதுகாக்க முடியும்.

prabaharan.s@thaiveedu.com

■ ■ ■

**For Buying and Selling**

Commercial, Residential & Investments...
Call: 416•522•3314

**Sockalingam Prabaharan**
Sales Representative
3321 McNicoll Ave.
Toronto, ON M1V 5B3
Tel: 416 291 3000
Fax: 416 298 9963


PROPERTY MAX
Realty Inc. Brokerage



For Listing Lowest Commission Starting from 1%

$295,900

Brimorton/Lawrence
Spacious Detached Bungalow; Convenient Location; Family Oriented Street. Fireplace In Large 2 Bedroom

$325,000

Bellamy/Lawrence
3+2 Bedroom Bungalow In A Great Location!! Hardwood Floors In Living/Dining

$379,900

Birchmount/Steeles
Immaculate Starter Home Finished Bsmt With Separate Entrance. Large Eat In Kitchen Newer Thermo Window

$384,900

Markham & Steeles
6Yr Old Semi Detached House, Double Door Entrance, Close To Schools, Shopping Centres, Highways

$429,900

Markham & Steeles
Detached, Close To School, Shopping, All Brick, Majestically Upgraded Beautiful Location

$439,900

Mccowan/Highglen
Well Kept All Brick, Fully Detached. Steps To Schools, Park, Bus & Shopping

$439,900

Middlefield/ Denison
Very Well Maintained 4 Bedrooms Linked Detached House In A Very Demanding Area

$524,900

14 Ave /Markham
Value Family Home. 2419 Sq Ft. Water Sprinkler System, Backyard Fenced With Cedar Trees

$543,900

Brimley/Steeles
Shows A+++ Monarch Built Home. 9' Ceilings * Hardwood Floors Thru-Out Main & 2nd Floor

எலி பூச்சித் தொல்லையா...?

RUBAN PEST CONTROL



- வீடுகள்
- தொடர்மாடி வீடுகள்
- தொழிற்சாலைகள்
- வியாபார நிலையங்கள்

ஆகிய அனைத்து இடங்களிலும்
எலி, பூச்சித் தொல்லைகளை
அறவே நீக்க அழையுங்கள்!

KANTHAN
416•291•3997

# Financial Planning and Time Management



சக்திவேல்

- ஆயுட் காப்புறுதி முகவர் -

ஒருவரின் வாழ்க்கையில், இழந்ததை மீளப் பெறமுடியாத விடயங்கள் நேரம் (Time), மானம் (Self Respect/Integrity) இதை ஒரு முறை இழந்தால் மீளப் பெறுவது பரம கஷ்டம். வேலையை பொறுத்தவரை, அது சம்பள உத்தியோகமாக இருந்தாலும் சரி கமிஷன் உத்தியோகமாக இருந்தாலும் சரி எக்காரணத்தையிட்டும் பின் போடமுடியாது. அந்தந்த வேலைகள், அந்தந்த நாட்களில் அல்லது வாரத்தில் செய்து முடித்தேயாக-வேண்டும். தவறினால், வாடிக்கையாளரை இழக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும். அல்லது வேலையையே இழக்கவேண்டி நேரிடும்.

இதை எழுதிக் கொண்டு இருக்கும்போது எனது இளம் பிராயத்தில் எனது தாய் மாமனார் அடிக்கடி சொல்லும் வசனங்கள் ''எழுந்திரு! விழித்திரு! உன் கருமத்தில் கண்ணாயிரு!'' ''உனக்கு கடவுள் நம்பிக்கை முற்றாக இருக்குமானால் வேலை, அன்றாடம் செய்யும் பிரார்த்தனையாக இருக்க வேண்டும். அ∴து If you Believe in your god then work should be like a prayer'' இவர் மலேசியாவில் ஓர் பிரபல எழுத்தாளராகவும், முன்னாள் மலேசியா பிரதமரின் முக்கிய பொருளாதார ஆலோசகராகவும் இருந்தவர். அந்த நேரம் இவர் சொல்வது எல்லாம் ''செவிடன் காதில் சங்கு ஊதியது போலத்தான் இருந்தது''. அதன் முழு விளக்கமும் இன்று தினமும் காதில் ரீங்காரம் பண்ணியபடியே முழு அர்த்தத்தையும் புரிய வைக்கிறது.

உதாரணமாக வைத்தியர்கள், பிரபல வர்த்தகர்கள், சட்டத்தரணிகள் அனைவரும் 7 நாட்களும் வேலை செய்வது இல்லை. ஆனால் தினசரி 'வேலைக்கு' வந்ததும் குறைந்த பட்சம் ''8'' மணித்தியாலங்களாவது வேலை செய்கிறார்கள். வாரம் குறைந்தது 1 1/2 நாட்கள் ஓய்வும் எடுத்துக் கொள்கிறார்கள். இவர்கள் எம்மைப்போலத்தான். என்ன விதத்தில் சாமர்த்தியமாக தொழில் புரிகிறார்கள் என்று அவதானித்தோமேயானால் உண்மை தெட்டத் தெளிவாக புரியும். இவர்களின் இதே பாணியில் நாமும் வேலை செய்வோமேயானால் நிச்சயம் இவர்களால் சாதிக்க முடிந்ததை நாமும் சாதிக்க முடியும். சொந்த தொழில் புரிவோர், உதாரணமாக வீடு விற்பனைமுகவர்கள், காப்புறுதி முகவர்கள், அடமான கடன் வசதி செய்து கொடுப்போர், Credit பிரச்சனையை தீர்த்து கொடுப்போர், மக்கள் தொடர்போடு பணிபுரியும் பத்திரிகையாளர்கள், பிரசுரிப்பு செய்வோர் (Printers) இடமிருந்து அடிக்கடி நாம் கேட்கும் பொது வசனங்கள் ''நேரமில்லை'' ''மறந்து போனேன்'', ''மன்னித்து கொள்ளுங்கள்'' என்பனவாகும். சரியான காரணம் அதுவல்ல. முக்கிய காரணங்களில் ஒன்று செய்வதற்கான நேரத்தை முக்கியமாக ஒதுக்குவதில்லை. எழுதி வைப்பதும் இல்லை. 'மறதி' என்பது மனிதருக்கு இயற்கையாக வருவது சாத்தியம்தான். அதனை அந்தந்த நாட்களுக்கு எழுதி வைத்தோமேயானால் இந்த சாட்டை முற்றாக அகற்றிவிடலாம்.

> "ஒவ்வொரு வருடம் (அதாவது 365 நாட்கள்) எத்தனை நாட்கள் நீங்கள் வேலை செய்ய இருக்கிறீர்கள்.
>
> எத்தனை நாட்கள் விடுமுறைக்காக ஒதுக்க இருக்கிறீர்கள்,
>
> எத்தனை நாட்கள் குடும்பத்திற்காக ஒதுக்க இருக்கிறீர்கள்
>
> என முன்பே கணித்துத் திட்டமிடுங்கள்.
>
> வாழ்க்கை சிறப்பாகும்."

இனி இந்த மாதிரியான தொழிலில் உங்கள் இலட்சியத்தை அடைய தேவையான அணுகு முறைகளை பரிசீலிப்போம். ''பாய முதல் பார்க்க வேண்டும். அ∴து ''Look Before you Leap'' என்ற கூற்றை அடிக்கடி கேள்விப் பட்டிருப்போம். உதாரணமாக சொந்த தொழில் புரிவோர்கள் வருட ஆரம்பத்திலேயே அந்த வருடத்தில் என்னென்ன இலட்சியத்தை அடைய விரும்புகிறார்கள்? அந்த இலட்சியம் புதிய வீடு வாங்குவது, புதிய வாகனம் வாங்குவது, பிள்ளைகளின் மேலதிக உயர் படிப்பிற்கான செலவை எதிர்நோக்குவது, வருமானத்தை அதிகரிக்க இருப்பது, ஓய்வூதிய திட்டத்திற்காக ஒதுக்குவது, வியாபாரத்தை விஸ்தரிப்பதற்கான செலவை மேற்கொள்வது என பல வகைப்பட்டதாக இருக்கலாம். அந்த குறிப்பிட்ட வருடம் (அதாவது 365 நாட்கள்) எத்தனை நாட்கள் நீங்கள் உண்மையாக வேலை செய்ய இருக்கிறீர்கள். எத்தனை நாட்கள் விடுமுறைக்காக ஒதுக்க இருக்கிறீர்கள், எத்தனை நாட்கள் குடும்பத்திற்காக ஒதுக்க இருக்கிறீர்கள் என கணித்து கொள்ளவும். உதாரணமாக, அந்த வருடத்தில் 9 மாதங்கள் மட்டும் தான் வேலை பார்க்க இருக்கிறீர்கள் என்றும் அந்த வருடம் குறைந்தது $100,000 உழைக்க இருக்கிறீர்கள் என்றும் கருத்தில் கொள்வோம். இக் கருத்துப்படி மாதா மாதம் $11,111 வருமானம் தேவை என்பது தெளிவாக புலப்படும். அதாவது 40 கிழமைகளில் (52-12=40) $100,000 உழைக்க வேண்டும். இக்கணிப்பின்படி ஒவ்வொரு கிழமையும் $2,500 வருமானம் பெறவேண்டும். சுருக்கமாக கூறின் ஒவ்வொரு நாளும் $354.14 வருமானம் வரத்தக்கதாக உங்கள் தொழிலை திறம்பட நடாத்த வேண்டும். இதை படிக்கும் ஒரு சில வாசகர்களுக்கு, வர்த்தகர்க்கு இது ஒரு 'கேளிப்'பை ஏற்படுத்தலாம். $100,000இனை உழைக்க வேண்டும் என்று கணிக்கும் போது

48ம் பக்கம் பார்க்க...


## சக்தி என்றால் காப்புறுதி



1983ஆம் ஆண்டிலிருந்து காப்புறுதித்துறையில்
முழுநேர நெறியான சேவை

''சகல காப்புறுதி நிறுவனங்களினதும் பிரதிநிதி''

- பாரபட்சமின்றி எந்த நிறுவன திட்டமாக இருப்பினும் தெளிவான துல்லியமான இலகுவில் கிரகிக்கும் வண்ணம் விளக்கம்.
- 10,000 இற்கும் மேற்பட்ட திருப்திகரமான வாடிக்கையாளர்கள்
- 160 துரித காப்புறுதி இழப்பீடுகள். 30 நிரந்தர ஊன இழப்பீடுகள்
- எனது வாடிக்கையாளர் பட்டியலில் ஒருசில
  - வருமான வரி இலாகா, கணக்கியல் சோதனையாளர்கள் (Revenue Canada Auditors) ,
  - நிதியமைச்சு அதிகாரிகள் (Ministry of Financial Services),
  - காப்புறுதி பிரதிநிதிகள், அவர்கள் குடும்ப அங்கத்தவர்கள், முதியோர், சிறார்கள்,
  - பிரபல வர்த்தகர்கள், குடும்பத்தவர்கள்,
  - பிரபல எழுத்தாளர்கள்,
  - வைத்தியர்கள்,
  - வழக்கறிஞர்கள்
- 85 வயதுக்குட்பட்ட எவருக்கும், எச்சூழ்நிலையிலும், நிச்சயமாக காப்புறுதியளிக்கும் திறமை (நிறுவனங்களின் நிபந்தனைப்படி)
- எக்காப்புறுதித் திட்டமாக இருப்பினும், விளக்கத்துடன் மன ஆறுதல் திட்டமாக பெற்றிட தயங்காமல் நாடுங்கள்
- மருத்துவ ரீதியின்றி 375,000 வரை காப்புறுதி

**- சக்திவேல் -**

தொலைபேசி: **416.706.3530, 905.428.9299, 905.763.8912**

Fax: 905 428 9307 Email: george14@sympatico.ca

**மன்னிக்கவும்!**

வாகனக் காப்புறுதி (Car Insurense), தீ காப்புறுதி (Fire Insurance) செய்வதில்லை!



## மருத்துவ ரீதியின்றி ஆயுள் காப்புறுதி

.85 வயதிற்குட்பட்ட எவரும் **$375,000** வரை மனுச்செய்யலாம்.

.சலரோகம், சலரோக தடுப்பூசி, மாரடைப்பு, இரத்த அழுத்தம் (**BLOOD PRESSURE**), கொழுப்பு சத்து கூடியுள்ளவர்கள் (**HIGH CHOLESTEROL**).

.பகுதி ஊனம், நிரந்தர ஊனம் உள்ளோர்.

.மற்ற காப்புறுதி நிறுவனங்களினால் நிராகரிக்கப்பட்டோர்.

.நிறை கூடியுள்ளோர் (**OVER WEIGHT**)

.அதிகூடியான கை கால் வலி, மூட்டு வலியுள்ளோர்.

உங்கள் வருத்தங்களை பொறுத்து, நிலவரத்தை பொறுத்து தகுந்த காப்புறுதி திட்டத்தை நிச்சயமாக அளிக்க நான் கடமைப்பட்டுள்ளேன்.

**சக்திவேல்**

**416 706 3530**

# உளநலப் பாதிப்பும்...

42ம் பக்கத் தொடர்ச்சி...

எங்கள் நாளாந்த வாழ்க்கையை நிச்சயமாக பாதிக்கின்றன. இது எங்களுக்கு நேரடியாக பாதிப்பை ஏற்படுத்தி இருக்கலாம் அல்லது எங்களைச் சார்ந்தவர்களை பாதித்திருக்கலாம். தொலைக்காட்சியில் இப்படியான சம்பவங்களை பார்ப்பதும், நாளிதழ்களில் படிப்பதும் கூட எங்களுக்கு மனத்தாக்கத்தை ஏற்படுத்தலாம். இலங்கைத் தமிழர்களுக்கு இப்படியான விடயங்கள் ஒன்றும் புதிதல்ல. எத்தனையோ ஆண்டுகாலமாக பல துன்பங்களை சந்தித்து வருகிறோம். எம்மில் பலர் இந்த துன்பங்களுக்குள் இருந்து மீண்டு வந்து வாழப் பழகிக் கொண்டிருக்கிறோம். ஆகையால் நீங்கள் சஞ்சலப்படத் தேவையில்லை. முன்பு உங்களுக்கு நடந்த சில கொடூர அனுபவங்கள், அல்லது இப்பொழுதும் கூட தாய்நாட்டில் இருக்கும் உங்கள் உறவுகளுக்கு நடைபெறும் துன்பங்கள், இப்பொழுது Haiti யில் நடந்த அனர்த்தத்தை கேள்விப்படுகையில் உங்கள் மனதை கஷ்டப்படுத்தலாம் அல்லது பழைய நினைவுகளை மீளக் கொண்டு வந்து உங்களை துன்பப்படுத்தலாம். இந்த நேரத்தில் உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும் நீங்கள் அதிக அக்கறையுடன் கவனித்துக் கொள்ள வேண்டும்.

எந்தநேரமும் இப்படியான நிகழ்வுகளைப் பற்றி வானொலியில் கேட்பதையோ, தொலைக்காட்சியில் பார்ப்பதையோ நீங்கள் கொஞ்சம் குறைக்க வேண்டும். என்ன நடைபெறுகிறது என்பதை தெரிந்துகொண்டதும், வானொலியை அல்லது தொலைக்காட்சியை நிறுத்தி விடுங்கள். உங்கள் குடும்பத்தினர், நண்பர்கள், மற்றும் உங்களுடன் தொழில் புரிபவர்களுடன் உங்கள் உணர்வுகளை பகிர்ந்துகொள்வது நல்லது. நேரம் தவறாமல் உணவு அருந்துங்கள். இயலுமானவரை ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். ஓய்வு என்பதன் அர்த்தம் படுத்து நித்திரை செய்வது மட்டும் அல்ல. உங்கள் உள்ளத்தை சாந்தப்படுத்தக் கூடிய விஷயங்களை நீங்கள் செய்யலாம். நல்ல இசையை கேட்கலாம், புத்தகங்களை வாசிக்கலாம், குளிர்காலம் அல்லாத காலங்களில் தோட்டம், பூச்செடிகள் வைத்திருப்பின் அவற்றை கவனித்துக் கொள்ளலாம், வெளியில் காலாற நடக்கலாம். உடற்பயிற்சிகள் செய்யலாம். இவையும் உங்கள் மனதுக்கு ஓய்வு கொடுப்பவை தான். உங்கள் உடலை ஆரோக்கியமாக வைத்திருந்தால், உளமும் ஆரோக்கியமாக இருக்கும். அனர்த்தத்தை பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பதை விடுத்து உங்கள் நாளாந்த நடவடிக்கைகளில் கவனத்தை செலுத்துங்கள். ஏதாவது விதத்தில் உங்களால் உதவ முடியுமானால், உதவி புரியும் நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றுவதன் மூலம், துன்பத்தில் இருக்கும் மக்களின் வாழ்வில் நீங்கள் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தலாம். இது உங்களுக்கும் ஒரு மனத்திருப்தியை கொடுக்கும்.

இப்படியான அனர்த்தங்கள் சிறுவர்களின் மனதிலும் தாக்கத்தை ஏற்படுத்தும். அவர்கள் கேள்விகளையும், கவலைகளையும் கேட்டு, அவர்களுக்கு கதைக்கின்ற சந்தர்ப்பத்தை நீங்கள் வழங்க வேண்டும். அவர்களுக்கு உண்மையான பதில்களை கொடுக்கவேண்டும். பெரியவர்களான நீங்கள், அவர்களுக்கு பாதுகாப்பையும் ஆறுதலையும் வழங்குவீர்கள் என்பதை அவர்களுக்கு புரியவைக்க வேண்டும்.

சாதாரணமாகவே பிரச்சினைகளை எதிர்கொள்ளும் மனவலிமை எங்களிடம் இருக்கிறது என்பது நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். எல்லோர் வாழ்விலும் சிக்கலான சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. அவற்றை பொதுவாகவே நாம் தாங்கிக் கொண்டு முன்னோக்கி நகர்கிறோம். இப்படியான அனுபவங்கள் எங்களை மென்மேலும் அனுபவசாலிகள் ஆக்குகின்றன. உங்கள் சக்திக்கு உட்பட்டு உங்களால் என்ன செய்ய முடியுமோ, அதனை செய்யுங்கள். மற்றவர்களுக்கும் நம்பிக்கையை கொடுங்கள். சம்பவங்களின் தாக்கங்கள் எல்லோருக்கும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. மனத்தாக்கத்தை வெளிப்படுத்தும் விதமும் ஒவ்வொருவருக்கொருவர் வேறுபடும்.

எப்படி இருப்பினும், நித்திரைப் பிரச்சனை (அதிக அல்லது குறைவான நித்திரை), மற்றவர்களை தவிர்த்து தனிமையை நாடுவது, தலைவலி, வயிற்றுவலி மற்றும் உடல் நோக்கள், அழுவது, பதட்டமாக அல்லது மனச சோர்வாக உணர்வது, கோபம், இயலாமை, விரக்தி அல்லது மரத்துப் போவது போன்ற உணர்வு நிலை, குழப்பம், பூகம்பம் (அல்லது சுனாமி) பற்றிய அதிக சிந்தனை, அதிகமான தொலைக்காட்சி பார்வையிடல் (பூகம்பம் பற்றி), வீட்டை விட்டோ கட்டிலை விட்டோ வெளியேற விருப்பமின்மை, கவனக்குறைவு, அதிகமாக உணவு உண்ணல் அல்லது உணவு உண்ண விருப்பமின்மை, பொறுமை இழத்தல், அதிகமாக மருந்து எடுத்தல் அல்லது மதுபானம் அருந்துதல், அன்புக்குரியவர்களின் பாதுகாப்புப் பற்றி அதீத கவலை, மற்றும் வீட்டை விட்டு பயணம் செய்வதற்கு அச்சம் போன்ற அறிகுறிகள் இருப்பின் - துறைசார் நிபுணர்களிடம் உதவி பெறுவது நல்லது.

மேற்குறிப்பிட்ட அறிகுறிகளில் ஒன்றையோ பலவற்றையோ நாங்கள் யாருமே உணர்ந்திருக்கக் கூடும். ஆனால் இப்படியான அறிகுறிகள் இருவாரங்களுக்கு மேல் நீடித்தாலோ, இதனால் உங்கள் நாளாந்த விஷயங்களை செய்ய முடியாமல் போனாலோ, அதீத இயலாமை மற்றும் தற்கொலை உணர்வுகள் தோன்றினாலோ – உங்கள் குடும்ப வைத்தியர், தாதி, உளவளத் துணையாளர், அல்லது உளநல நிபுணர்/மருத்துவரை அணுகுவது அவசியம்.

Pushpa.kanagaratnam@thaiveedu.com

■ ■ ■

# Financial Planning...

47ம் பக்கத் தொடர்ச்சி...

பெரும்பாலும் இது இயலாத காரியமாக தென்படும். ஆனால் மேற்கண்ட கருத்தின்படி நாள்வீதம் கணிப்பு செய்யும்போது "நிச்சயம் முடியும்" என்ற பரிபூரண நம்பிக்கை ஏற்படும். என பொதுவாக அழைப்பார்கள்.

| தொடர்பு கொள்ள வேண்டியவர் விவரம், தொ.பேசி எண், | அவசரமாக செய்ய வேண்டிய விடயங்கள், | அன்றாடம் செய்ய வேண்டிய மற்றய விடயங்கள், | Appointment details, | திரும்பவும் தொடர்பு கொள்ளவேண்டிய வேலை, திகதி, விவரம் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| சமூகத்தில் முக்கியமான, பிரபல்யமாவர்கள் மூவரின் பெயர் தொலைபேசி எண் | | | | |

1991ஆம் ஆண்டு மார்கழி மாதம் Canada lifeஇல் முழுநேர பிரதிநிதியாக இருந்தபோது நடந்த சம்பவம் ஞாபகத்திற்கு வருகிறது. இங்கு உங்களுடன் பகிர்ந்துகொள்வதும்

இதையே ஆங்கிலத்தில் "Goal Setting" என அழைக்கிறோம். வருடம் உழைக்க இருக்கும் வருமானம் உங்கள் Long Term Goal Setting" ஆகவும் அதை சுருக்கமாக நாள் வீதமாக கணிக்கும்போது அது "Short Term Goal Setting"ஆகவும் கருதப்படும். இதன்படி Short Term Goalஆக உள்ள பணத்தொகை ஒரு பெரிய சுமையாக தெரியாது. ஒவ்வொரு மாதமோ, இரண்டு மாதமோ முடிவில் நீங்கள் போட்ட கணக்கின்படி போகிறீர்களா என்று அவதானித்து அதன்படி போகவில்லையென் றால் விதம் விதமான முறைகளை (அ.:து Techniques or Hard Work) கையாண்டு இந்த இலட்சியத்தை நிறைவேற்றலாம். அதுவும் முடியாவிடின் விடுமுறைக்கும், குடும்பத்துக்குமாக ஒதுக்கப்பட்ட நாட்களை ஓரளவு குறைத்து இதை நிறைவேற்றுவதற்கான வழிமுறைகளை கையாளலாம். இதையே ஆங்கிலத்தில் "Plan your work and work your plan" பொருத்தமானதாக இருக்கும் என நம்புகின்றேன்.

ஒவ்வொரு பிரதிநிதியும் தனது 1992ஆம் ஆண்டிற்கான திட்டத்தை மனேஜரிடம் சமர்ப்பிக்கவேண்டும். அதன்படி எனது முறை வரும் போது எனது 1992க்கான திட்டத்தை சமர்ப்பிக்கும்போது எனது முதலாவது இலட்சியம் வாகனம் ஓட்டும் அனுமதிப்பத்திரத்தினைப் பெறவேண்டும் என்று போட்டதும் ஆத்திரம் அடைந்து உனக்கு லைசன்ஸ் இல்லையா? ஏன் இதனை இந்த நிறுவனத்தில் சேரும்பொது சொல்லவில்லை? நீ எங்களை ஏமாற்றிவிட்டாய் என்று கோபப்பட்டார். பதிலுக்கு நான் சொன்ன மறுமொழி 'வாகனம் இருக்கிறதா என்ற கேள்விக்கு ஆம் என்று பதில் எழுதிக் கொடுத்திருந்தேன். காரணம், வாகனம் இருந்தது. மனைவி பெயரில் தான் இருந்தது. ஆனால் வாகனம் ஓடுவதற்கு லைசன்ஸ் இருக்கிறதா என்ற கேள்வி கேட்கப்படவில்லை. அதனால் நானும் குறிப்பிடவில்லை. இதுவரை Busஇலும், கால்நடையிலும்தான் எனது தொழிலை நடாத்தி நீங்கள் கேட்டபடி மாதம் 12இலிருந்து 15 பத்திரங்களை உங்களுக்கு அளித்து வருகிறேன். பல விருதுகளையும் பெற்றிருக்கிறேன். இது குற்றமா என பதிலளித்தேன். இதனை எப்படி உன்னால் செய்ய முடிந்தது என்று கேட்டதற்கு "மனமுண்டானால் இடமுண்டு" என்று பதிலளித்து 1992ம் ஆண்டு எனது வாகனம் ஓட்டும் லைசன்ஸ்-இனையும் பெற்று அதனையும் சமர்ப்பித்தேன். அன்றிலிருந்து புதிதாக சேர்ந்த பிரதிநிதிகளிடம் இந்த கேள்வியை அவர் கேட்கவில்லை.

மேற்கண்ட முறைகளை திறம்பட கையாளுவதற்கான முறைகளை குறைந்த செலவில் கூடிய பயனைக் கொடுக்கும் வழிகளை ஆராய்வோம்.

இதற்கு தேவையான பத்திரங்கள்:

- 2 1/2" to 3" Three hole Binder with inside paper holders,
- Ruled Papers. with three Hold Punch.
- 1,2,3 என 31 வரை இலக்கம் உள்ள பிரிவுத்தாள்கள் Dividers (3 மாதத்திற்குரிய திட்டமாயிருப்பின் இதில் 3 மொத்தமாக தேவைப்படும்)
- January, February, March என December வரை பிரிவுத்தாள்கள் (Dividers) இந்த மாதிரியான பிரிவுத்தாள்கள் (Staples, Grand and Toy அல்லது office Depotஇல் பெற்றுக்கொள்ளலாம்.)

Ruled papersஇனை பொறுத்தவரை பின்வரும் அட்டவனையைத் தயாரித்து ஒவ்வொர நாளுக்கும் 2 அல்லது 3 தாள்களை ஒதுக்கி 3 மாதத்திற்கும் ஒதுக்கிவிட்டு மேலதிக தாள்களை Binderஇன் கடைசி Paper Holderஇல் ஒதுக்கி வைக்கவும்.

சமூகத்தில் முக்கியமானவர்கள் அரசியல் வாதியாகவோ, எழுத்தாளராகவோ, பல்வேறு துறைகளில் உள்ளவர்களை நன்கு தெரிந்தவர்களாகவோ இருக்கலாம்.

உதாரணமாக ஒரு குறிப்பிட்ட நிருபரை நீங்கள் தொடர்பு கொண்டு அதன் பிரதிபலிப்பாக அல்லது அதனைத் தொடர்ந்து அவரைத் திரும்பவும் தொடர்பு கொள்ள வேண்டிய சந்தர்ப்பம் கிடைக்குமாயின் அந்தக் குறிப்பிட்ட தினத்தில் முக்கியமான விடயமாக இதைக் குறிப்பிடுவதனால் 'மறப்பதற்கு' ஒருவிதமான சாத்தியமும் இல்லை. அதே நேரம் முக்கியமான விடயங்களை நீங்கள் பரிசீலிப்பதற்கு பரிமாறுவதற்கு அல்லது படிப்பதற்கு தேவைப்படின் அந்தத் தாள்களை Binderஇன் உள்ளே உள்ள Paper Holderஇல் போட்டு வைக்கலாம். இதனால் அதனைத் தொலைப்பதற்கும் சாத்தியம் கிடையாது. இந்த மாதிரியான ஒழுங்கு முறைகளை கையாளுவதற்கு ஆரம்பத்தில் சோம்பல் காரணமாக, நேரப்பழு காரணமாக கடினமாக இருப்பினும் காலப்போக்கில் "Daily Prayer" போல நாளாந்தம் செய்யும் கருமமாக இருக்கும். அத்துடன் அடுத்த நாள் செய்ய வேண்டிய விவரங்கள் என்ன என்பது முதல் நாளே தெரியும் அல்லது அடுத்த நாள் காலை வேலைக்குப் போகுமுன்னரே தெரியும். பிறருக்கு ஏதாவது Appointment கொடுப்பதனாலும் எத்தனை மணிக்குக் கொடுப்பது நிச்சயம் என்பதும் தெரியும்.

மேற்கண்டமுறை, இலகுவானதும், செலவு குறைந்த ஒரு செயற்பாடும் ஆகும். இதைவிட செலவு கூடிய முறைகளும் இருப்பினும் அவரவர் வசதிக்கு ஏற்ப தேவையான முறையைக் கையாண்டு தொழிலை செவ்வனே செய்யலாம்.

saththivel@thaiveedu.com

■ ■ ■


GP TELECOM

இரமணன் திரு

(முன்னாள் பெல் கனடா, ரோஜேர்ஸ் ஊழியர்)

For Your Business We

- Install, Repair, Sell
- Meridian Phone Systems & System Phones
- Structured Voice & Data Cabling
- Install, Repair Home Phone Wiring
- TV Cable (RGB)
- Network Cable

உங்கள் அழகிய வீட்டில் பழுதுகள் ஏதும் ஏற்படாமல் சுவர்களுக்கு உள்ளால் வயர் எடுத்து கொடுக்கப்படும்

416.203.0344






You can keep smiling...

# CREDIT RECOVERY CANADA

One Stop
**SOLUTION!**
**Call: 416 264 1272**

## Consumer Proposals

- Reduce your debts up to 75%
- Stop collection calls & legal actions
- Salary Garnishments
- Protect your home, car, RRSP & RESP
- One monthly payment without bankruptcy

## Tax & Financial Services

We work with professional accountants and former CRA tax auditors. Call us now!

- Personal & Corporate Tax
- Estate Tax, Trust Tax & Business Incorporation
- Tax Audits
- Tax Amnesty
- RRSP, RESP, Life Insurance

## Legal Services

We take care of all your legal services. If you want more information, please contact us now!

- Family Law (divorce, separation, custody)
- Civil Litigation (negligence, personal injury)
- Commercial Law (leases, contracts, incorporation)
- Other legal services (please inquire)

Experienced lawyers with proven results;
Registered with the Law Society of Upper Canada.

## Immigration Services

We work with Certified Canadian Immigration Consultants

Do you need Immigration Services? Give us a call now!

- Family Sponsorship
- Business Class
- Caregiver
- Skilled Worker Class
- Canadian Experience Class

CRC

**Suren Sornalingam**
55 Town Centre Court, Suite 700
Scarborough ON M1P 4XP
416.264.1CRC(272) 416.332.0914
info@creditrecoverycanada.com
creditrecoverycanada.com
**416 264 1272**





STS ADS 647 281 9084

***Services are available in Tamil and English.***


CTCC
Canadian Tamils' Chamber of Commerce®
presents
Chamber Nite 2010
Saturday April 10, 2010 at 5:30 P.M.
Fairmont Royal York, Toronto
Free Parking
Contact:
Ken Kirupa: 416.294.9322
Sri Thurairajah: 416.918.9771
Sinna Jeyakumar: 416.816.4970
Tickets: $150.00
Corporate Sponsors
TD Canada Trust
RBC Royal Bank
Scotiabank
IA INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.
XIIth
AWARDS GALA

# "Top Producing Team"

2009 இல் மட்டும் 10 மில்லியனுக்கும் மேலான Real Estate பரிமாற்றங்களை திறம்பட நிறைவேற்றிய அனுபவசாலிகள்

*Count on the team that transacted over $10 Million Dollars in year 2009 alone !!!*



LIMITED TIME OFFER **1%** LISTING COMMISSION



***மேலதிகமாக உங்கள் வீட்டிற்கு பின்வரும் சேவைகளும் கிடைக்கும்**

இலவச வேர்ச்சுவல் டுவர் | இலவச இணையதள பெயர் பதிவு | ஒபின் ஹவுஸ்

**எவ்வாறு பயனடைவீர்கள்?**

குறைவான பதிவுக் கட்டணம் | எமது விற்பனைகள் ஒன்றுக்கு மேற்பட்ட கேள்விகள் பெற்றதற்கான பதிவுகள் | கேள்விக்கு மேற்பட்ட விலையில் விற்கப்பட்ட சொத்துக்கள் | அதிக எண்ணிக்கையான எமது வாடிக்கையாளர்கள் | சிறந்த தொழில் ரீதியான சேவை

## Never take a chance, work with the team, See the difference...

**இவ்வாரப் புதிர்**

நீங்கள் வீடு பார்க்கும் போது கூரையில் கறை தென்பட்டால் அதற்குரிய காரணம் என்ன?

a: மாடியின் குளியல் தொட்டியில் ஒழுக்கு b: திரவ ஒடுங்கல் (Condensation)

c: தண்ணீர் பாதையில் ஒழுக்கு (water line leakage) d: மேற்கூறிய அனைத்தும்

தொலைநோக்கும் நிபுணத்துவமும் வாய்ந்த இவர்களின் சேவையால் என்போன்றோர் அதிகளவு பயன்களை பெற்றுள்ளோம். ஒவ்வொரு தடவையும் இவர்களின் சேவையை பெறும்போது இவர்கள் மீதான மதிப்பு இன்னும் உயர்கிறது.

**கந்தையா இராமசந்திரன்**

Absolutely amazing experience. Knowledgeable, skillful and resourceful. It is my privilege to get a chance to work with them. I will Confidently refer them to all my friends and family.

**Peter,** Amiconn

**Dirresh Krishnapillai** *B.Sc., MBA, CMA*
*Broker*
Dir **416.819.4373**

**Naanan Sathiyamoorthy** *B.Sc.(Eng) Ctext, ATI*
*Sales Representative*
Dir **416.795.4663**



**Homelife Future Reality Inc.**



* Some conditions may apply

## Services Offered ...

- Property Management
- Accounting & Tax advisory
- Mortgages
- Lease & Rental



Toronto - Abudhabi - Colombo
From $975 + Tax
After 19th March Price will be $995
Toronto - Brussels - Chennai
From $625 + Tax
Toronto - London - Colombo
$1270 + Tax
SriLankan Airlines
Toronto - Dubai - Colombo
$1280 + Tax
Emirates
Toronto - Abudhabi - Chennai
$715 + Tax
الاتحاد ETIHAD AIRWAYS
After 19th March Price will be $753
Toronto - Dubai - Chennai
$925 + Tax
Emirates
Colombo - Jaffna
Expo Aviation Tickets Avialble Here
Toronto - London - Colombo - Chennai $1270 + Tax
Sri Lankan AirLines
SPECIAL GUIDED TOURS
India • Malaysia • Thailand • Cambodia • Indonesia
Vietnam • Laos • Myanmar • Hongkong
China • Korea • Japan
SriLankan ETIHAD Emirates
JET AIRWAYS QATAR AIRWAYS KUWAIT AIRWAYS
TICO 50012691
IATA
www.serandibtravel.com
Serandib Travel
Your satisfaction is our success
2075 Lawrence Ave, E, Suite 202, Toronto, ON (Warden & Lawrence)
416.750.0009
7 Eastvale Drive, Unit 207 Markham, ON (Markham & Steeles)
905.201.6660
New Location
Montréal : 514-448-1389, Calgary: 403-770-9647
Vancouver: 604-625-0495, Mississagua: 905-564-7564
* Above fares are seat sale fares. Certain conditions and restrictions apply. Prices are subject to availability of the seats. Taxes vary from $325 - $400.
- digi Media -

‘சிறப்புத் தேவையுள்ள பிள்ளைகள்’ இனங்காணுதலும் இணைந்துவாழ்தலும் - Identifying special needs children

# பதகளிப்பு ஒழுங்கீனம்

## (Anxiety disorder)

**இக் கட்டுரைத் தொடர் சிறப்புத் தேவையுள்ள (Special needs children) பிள்ளைகளை இலகுவாக எவ்வாறு இனங்காணல் என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டது. அநேகமான பெற்றோர் தமது பிள்ளைகள் ஏன் இப்படி நடந்து கொள்கிறார்கள் என்ற குழப்பத்தில் ஆழ்ந்து போகிறார்கள். இக் குழப்பங்களால் சூழப்பட்டிருக்கும் பெற்றோருக்கு இக்கட்டுரைகள் உதவும் என்னும் நோக்கத்திலேயே இவை எழுதப்படுகின்றன. எனினும் வளர்ந்தோரின் குணவியல்புகளும் சில சந்தர்ப்பங்களில் ஒப்பிட்டு நோக்கப்படும். அத்துடன் இத்தகைய அறிகுறிகளால் பாதிக்கப்பட்டோர் மொத்தக் குடித்தொகையில் எத்தனை வீதம் என்பதுடன், அவர்களது மருத்துவ சிகிச்சை முறைகளும் கூறப்படுகின்றது.**

ஜீவா திசைராஜா



தொடர் 4

சிறப்புத் தேவையுள்ள பிள்ளைகளை இனங் காணல் எனும் தொடரில் இம்முறை பதகளிப்பு ஒழுங்கீனம் (Anxiety disorder) என்பதை கருத்தில் கொள்வோம்.

பதகளிப்பு (Anxiety) என்பது ஒரு இயற்கை யான மனித உணர்வாகும். பதகளிப்பென்பது: ஏக்கம், என்ன நடந்து விடுமோ என்ற அதீத கவலையைக் குறிக்கும். ஒவ்வொருவரும் சிற்சில சந்தர்ப்பங்களில் பதகளிப்படைதல் அல்லது அளவுக்கு மீறி கவலைப்படுதல் (Worried) அனுபவத்திற்கு உட்பட்டிருப்பார்கள். பள்ளி முன்பருவ பிள்ளைகள் இருட்டைக் கண்டு பயப்படல், பெற்றோரிடமிருந்து பிரிந் திருப்பதை நினைத்து பதகளிப்படைதல் போன்ற நிலைமைகளை, வெளிக்காட்டலை நாம் அறிந்திருப்போம்.

எனினும், சில பிள்ளைகள், மற்றவர்களை விட மிக அதிகமாக பதகளிப்படைதல், அவர்களது நாளாந்த வாழ்க்கைச் செயல்முறைகளில் இந்த பதகளிப்பு பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதாக இருக்குமானால் அது பதகளிப்பு ஒழுங்கீனம் (Anxiety disorder) எனக் கருத்தில் கொள்ளப்படும். சிறு பிள்ளைகளிலும் வளரிளம் பருவ (Adolescents) பிள்ளைகளிலும் ஏற்படும் பதகளிப்புக்கு, பிரிவு (separation), பயங்கள் (Fears), ஏதாவது அசம்பாவிதமாக நடத்தல், நியாயந் தீர்க்கப்படல் (உதாரணமாக பிள்ளை செய்வது பிழை அல்லது இன்னும் சரியான முறையில் நடந்திருக்கலாம் எனக் கூறப்படல்), ஏதாவது நடக்க முன்னரே அதை நினைத்துக் கவலைப்படல், பரீட்சையில் அதிகளவு புள்ளிகளை பெற வேண்டியிருத்தல், பள்ளிக் கூடத்திற்கு செல்ல வேண்டியிருத்தல் அல்லது சமூக நிகழ்வுகளில் கலந்து கொள்ள வேண்டியிருத்தல் போன்றன காரணங்களாகலாம்.

பிள்ளைகளையும் (Children), பதின்ம முன்வயதினரையும் (PreTeenagers) பாதிக்கும் மிக பொதுவான மனநல பிரச்சனையாக (Most common mental health problem) பதகளிப்பு ஒழுங்கீனம் காணப்படுகின்றது.

### சில உதாரணங்கள்:

எட்டு வயதுடைய சார்லி 3ஆம் வகுப்புக்குச் செல்லப் போகிறான். முன்பள்ளிக் காலத்திலிருந்து ஒவ்வொரு செப்டம்பரும் பாடசாலைக்குச் செல்வதென்பது அப் பிள்ளைக்கு கஷ்டமானதொன்றாக இருந்தது. இந்த வருடம் அவர்களது குடும்பம் இடம் மாறிச் செல்ல வேண்டியிருந்ததால், புதிய பாடசாலைக்கு சார்லி செல்ல வேண்டி ஏற்பட்டது. அதன் பின்னர் செப்டம்பரில் இருந்து நவம்பர் வரை வயிற்று வலியையும் தலைவலியையும் காரணம் காட்டி 26 நாட்கள் பாடசாலைக்குச் செல்வதைத் தவிர்த்து விட்டான். பாடசாலையில் அவனது கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன. வீட்டு வேலைகள் அதிகமாகக் கொடுக்கப்பட்டன. தனது தாய் இல்லாமல் தான் பாடசாலையில் அவற்றைச் செய்ய முடியாது என வற்புறுத்தினான். தான் பாடசாலையில் இருக்கும் போது வீட்டில் தாயிற்கு ஏதாவது பாதகமாக நடந்து விடுமோ என அஞ்சினான். மருத்துவரீதியில் சார்லி, பிரிவு ஏக்கத்தை (Separation Anxiety) கொண்டிருப்பதாக இனங்காணப்பட்டான்.

பதினான்கு வயது பிரியாவை பாடசாலைக்குப் பின்னர் நடைபெறும் செயற்பாடுகளில் பங்கு பற்ற வைக்கவும், பார்ட்டிகளில் (Parties) கலந்து கொள்ள வைக்கவும் தாயார் மிகவும் முயற்சி செய்தார். அவற்றிற்குச் செல்வதற்குப் பதிலாக தான் வீட்டில் இருந்து புத்தகம் வாசித்துக் கொண்டிருப்பேன் என பிரியா கூறினாள். தனது வகுப்பு மாணவர்களுடன் தான் பொருந்தக் கூடியதாக (Fit in), அவர்களுக்குத் தகுதியாக இருக்க முடியுமா என தான் அச்சப்படுவதாகவும், அவர்கள் கதைக்கும்போது அதற்கு தான் எவ்வாறு பதில் கூறுவது எனத் தெரியாதிருப்பதாகவும் கூறினாள். வகுப்பு செயற்பாடுகளில் பங்குபற்றாமல் இருந்த காரணத்தினால் பிரியாவின் வகுப்புத் தரங்கள் (grades) குறைந்தன. அவள் சமூக குழுக்களில் கலந்திருக்கும்போதும், திடீரென அச்சப்படுவதுடன் அவளது இதயத்துடிப்பும் விரைவடையும். மருத்துவரீதியில் பிரியாவிற்கு சமூகத்துடன் பழகுவதில் அதீத பயம் இருப்பதாக (Social Phobia) இனங்காணப்பட்டாள்.

பத்து வயது வினயா அவர்கள் குடும்பத்தால் ‘கவலை நிபுணி’ என அழைக்கப்பட்டாள். அவள் அநேக விஷயங்களைக் குறித்துக் கவலைப்படுவாள். தனது கணக்குப் பரீட்சையில் தேறிவிடுவேனா? (நான் தோற்றுப் போய் விடுவேன்!), வகுப்பு நாடகத்தில் தனது பங்கைச் சரியாக செய்ய முடியுமோ (இவை எல்லாவற்றையும் என்னால் மனனம் செய்ய முடியாது!), கோடைவிடுமுறையில் குடும்பத்தார் திட்டமிடுவது நடக்குமா (விமானத்தில் பயணம் செய்வது ஆபத்தானது, எனக்கு இப்போது நினைத்தாலும் பதட்டமாக இருக்கிறது!) போன்ற அநேக விடையங்கள் இவள் கவலைக்கு காரணமாக இருக்கிறது. வினயாவிற்கு பொதுவாக்கப்பட்ட பதகளிப்பு ஒழுங்கீனம் (Generalized Anxiety Disorder) காணப்படுகின்றது என இனங்காணப்பட்டாள்

சில பிள்ளைகள் ஞாயிற்றுக்கிழமை பின்னேரமே, திங்கள் கிழமை பாடசாலைக்குச் செல்வதை நினைத்து அச்சப்படவும், வயிற்று வலி, தலைவலி பிரச்சினைகளைச் சொல்லவும் ஆரம்பித்து விடுவர். அல்லது முரட்டுத் தனமான நடவடிக்கைகளிலும் இறங்கி விடுவர். பிள்ளைகளிலும், பதின்ம முன்வயதினரிடையேயும் ஏற்படும் பதகளிப்பு வித்தியாசமான வடிவங்களைக் கொண்டிருக்கும்.

> “ஒன்பது தொடக்கம் பதினேழு வயது வரைக்குமான பிள்ளைகளில் 100க்கு 13 பிள்ளைகள் ஏதோ ஒருவகையான பதகளிப்பு ஒழுங்கீனத்தைக் கொண்டிருப்பதாகவும், பதகளிப்பு ஒழுங்கீனம் கொண்டிருக்கும் பிள்ளைகளில் அரைவாசிக்கும் அதிகமானோர் இன்னோர் (உதாரணமாக மனஅழுத்தம்) பதகளிப்பு ஒழுங்கீனத்தைக் கொண்டிருப்பதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.”

### ஆபத்தில் இருக்கும் பிள்ளைகள்

ஒன்பது தொடக்கம் பதினேழு வயது வரைக்குமான பிள்ளைகளில் ஒவ்வொரு 100 பிள்ளைகளுக்கும் 13 பிள்ளைகள் ஏதோ ஒருவகையான பதகளிப்பு ஒழுங்கீனத்தைக் கொண்டிருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பதகளிப்பு ஒழுங்கீனம் ஒன்றினைக் கொண்டிருக்கும் பிள்ளைகளில் அரைவாசிக்கும் அதிகமானோர் இன்னோர் பதகளிப்பு ஒழுங்கீனத்தையும், உதாரணமாக மனஅழுத்தத்தைக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. அத்துடன் பதகளிப்பு ஒழுங்கீனங்கள், சிகிச்சை தேவைப்படுமளவுக்கு உடலியல் ஆரோக்கிய நிலைமைகளுடனும் தொடர்பு கொண்டிருக்கின்றன. உடல்பிரச்சினைகளைச் சிந்திக்கும் நாம் அதற்கு அவர்களது மனநிலை பிரச்சினைகளே காரணம் என்பதை அறிந்துகொள்ள வேண்டும்.

### வயது:

பதகளிப்பு ஒழுங்கீனங்கள் எந்த வயதிலும் ஆரம்பிக்கலாம். சில ஒழுங்கீனங்கள் மிக வயது குறைந்த பிள்ளைகளிடத்தில் காணப்படும் அதே வேளை சில பிள்ளைகளுக்கு வளரிளம் பருவத்திலேயே (Adolescents) ஆரம்பிக்கின்றது. பொதுவாக பிள்ளைகள் 6-8 வயதிற்கிடையில் இருக்கும் போதே பிள்ளைகளின் பதகளிப்பு ஒழுங்கீனங்களை அவதானிக்குமாறு ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இந்த வயதில் பிள்ளைகள் இருட்டைக் கண்டோ அல்லது கற்பனை பூச்சாண்டிகளைக் கண்டோ அதிகமாக பயப்படமாட்டார்கள், ஆனால் பாடசாலை நடவடிக்கைகள் தொடர்பாகவும் சமூகத்துடன் பழகுவது தொடர்பாகவும் பதகளிப்படைய ஆரம்பிப்பார்கள். இந்த வயதில் பிள்ளைகள் அச்சமடையத் தொடங்குதல் வாழ்க்கையின் பிற்பகுதியில் பதகளிப்பு ஒழுங்கீனம் ஏற்படுவதற்கான அறிகுறியாகும்.

### பால்:

பெண் பிள்ளைகள், ஆண் பிள்ளைகளை விட அதிகமாக பதகளிப்பு ஒழுங்கீனத்தால் பாதிக்கப்படுகின்றனர்.

### குடும்ப வரலாறு:

பதகளிப்பு ஒழுங்கீனத்தை பெற்றோரில் ஒருவராவது கொண்டிருக்கும் போது அவர்களின் பிள்ளைகளும் இவ்வாறான பாதிப்புக்கு உட்படும் சாத்தியம் அதிகமாக இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. எனினும் இந்த ஒழுங்கீனங்கள், மரபணுவினாலா அல்லது சூழலினாலா அல்லது இரண்டினாலுமா ஏற்-

71ம் பக்கம் பார்க்க...



# சக்தி விரயங்களைத் தடுக்க Energy Audit

பிரபா
சின்னா



இக்கட்டுரையை முக்கியமாக Furance A/C, Basement, Attic, wall Insulation செய்ய திட்டமிட்டுள்ளவர்கள் வாசிப்பதன் மூலம் அரசாங்கத்திடம் இருந்து Rebate எடுக்கும் வழிமுறைகளை அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.

கடந்த காலங்களில் எனது Energy Audit செய்யும் அனுபவத்தினூடாக நான் அறிந்த-வற்றையும் அப்போது எனக்கு ஏற்பட்ட அனுபவங்களையும் சந்தேகங்களையும் மக்களுக்கு எடுத்துக் கூறுவதன் மூலமாக, 'Energy Audit' இன் சந்தேகங்களை தீர்ப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

முதலாவதாக அரசாங்கம் எதற்காக இவ் வேலைத்திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது என்பதை நாம் தெரிந்து கொள்வது முக்கியமானதாகும்.

தற்போது உலகத்தின் வெப்ப நிலை வர வர கூடிக்கொண்டு செல்லும் செய்தியினை நாம் பல தடவை கேட்டும் வாசித்தும் இருக்கின்றோம். பல உலக நாடுகள் இதனைத் தடுப்பதற்கு கூட்டு முயற்சியாக பல முயற்சிகளை செய்து கொண்டிருக்கின்றார்கள். இவ்வேலைத் திட்டத்தில் கனடிய அரசாங்கத்தின் பங்களிப்பின் ஒரு திட்டமாகவே இவ் 'Eco Energy' யின் 'Energy Audit' வேலைத்திட்டம் அமைகின்றது. இதன் மூலமாக உலக நாடுகளிடம் நம் கனடா நாடு அதன் பங்களிப்பை புள்ளி விபரங்களுடன் வெளியிட முடிகிறது. அத்தோடு மட்டுமல்லாமல் Energy பாவனைக்குரிய கட்டணம் குறைக்கப்படுவதன் மூலம் நம் நாட்டவர் எதிர்காலங்களில் ஏற்படும் விலை ஏற்றத்தைத் தாக்குப்பிடிக்க முடியுமான ஒரு சூழலையும் ஏற்படுத்துகின்றது.

அத்தோடு மட்டும் நின்றுவிடாமல் இது நம் நாட்டில் பாதிப்படைந்திருக்கும் பொருளாதாரத்தையும் சீர் செய்கிறது.

இதை மேலும் விபரமாக பார்ப்போமானால் வீட்டு உரிமையாளர்களுக்கு அவர்கள் தங்கள் வீட்டின் சக்தி உபகரணங்களை நவீனப்படுத்தி அதன் மூலமாக சக்தி விரயமாவதை கட்டுப்படுத்த உதவுகின்றது.

வீட்டில் உள்ளவர்கள் சுகாதாரமாகவும் சௌகரிகமாகவும் வாழக்கூடிய ஒரு சூழலை உருவாக்குகின்றது.

நாட்டின் Economyஐ சீர் செய்யும் விதமாக பல வேலைவாய்ப்புக்களையும் பல புதிய திருத்த வேலைகளையும் இது உருவாக்குகின்றது.

எனவே எல்லா வழிகளிலும் இது சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் இலாபங்களையே தேடித் தருகின்றது. எனது அனுபவங்களில் பல வீட்டு உரிமையாளர்கள் பலதரப்பட்ட கேள்விகளை முன் வைத்திருக்கின்றார்கள். அக்கேள்விகளில் முக்கியமானவற்றை இங்கு விளக்கமளிப்பதன் மூலமாக இவ் 'Energy Audit'ரைப் பற்றி எல்லோரும் தெரிந்து கொண்டு, வீட்டு உரிமையாளர்கள் அதன் முழுப் பலனை அடைய முடியும் என்று நம்புகின்றேன்.

## Energy Audit என்றால் என்ன?

மத்திய அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட 'Ecoenergy' வேலைத்திட்டத்தின் ஒரு செயல் வடிவமே இவ் 'Energy Audit' ஆகும். இத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகையை வீட்டு உரிமையாளர்களுக்குக் கொண்டு சேர்ப்பதற்கு அதற்கான Channel ஆக இவ் 'Energy Audit' செயல்படுகின்றது. அது மட்டுமல்லாமல் வீட்டு உரிமையாளர்களுக்கு அவர்களினுடைய வீட்டு சக்தி விரயங்களை எடுத்துரைத்து அதை நிவர்த்தி செய்யும் வழிமுறைகளையும் எடுத்துரைப்பதும் இத்திட்டத்தின் முக்கிய பங்காக அமைகின்றது. அத்துடன் இது வீட்டின் பெறுமதியையும் கூட்டுகிறது. நாம் மீள் தொகையை பெறுவதோடு மட்டுமல்லாமல் மாதாந்தம் பணத்தையும் சேமிக்கின்றது.

## இத்திட்டத்தினால் அரசாங்கத்திடமிருந்து நாம் பெறக்கூடிய ஆகக்கூடிய மீள் பணத்தின் (Rebate) தொகை என்ன?

Federal governmentஇல் இருந்து மொத்தமாக 10,000 டொலர்களையும் அத்துடன் நீங்கள் Toronto Cityஇல் வசிப்பவராக இருந்தால் மேலதிகமாக insulation பகுதிக்குரிய 1,000 டொலர்களையும் சேர்த்து மொத்தமாக 11,000 டொலர்களை பெறமுடியும்.

## இந்த மீள்பணம் (Rebate) பெற நாம் பின்பற்ற வேண்டிய வழி முறைகள் என்ன?

வீட்டின் உரிமையாளர்களாகிய நாம் முதலில் வீட்டின் சக்தி விரயங்களை முழுமையாக தெரிந்து கொள்ளவும் அத்துடன் அரசாங்கத்தின் இந்த மீள் பணத்தைப் பெறவும் நாம் கண்டிப்பாக அங்கீகாரம் பெற்ற (Certified) Energy Advisor மூலமாக Energy Audit செய்ய வேண்டும்.'Energy Audit' energy Audit செய்வதன் மூலம், செய்தபின் செய்யும் திருத்த வேலைப்பாடுகளுக்கு மட்டுமே நீங்கள் மீள்பணம் பெறமுடியும்.



## Energy Audit செய்வதன் மூலம் மேலும் என்ன நன்மைகளை பெறமுடியும்?

Energy Audit செய்வதன் மூலம் மீள்பணம் பெறுவதோடு மட்டுமல்லாமல் நாம் எம் வீட்டின் சக்திப் பயன்பாடுகளையும் அதன் வீண் விரயங்களையும் முழுமையாக அறிந்து கொள்ள முடியும். அதன் பிற்பாடாக நன்கு திட்டமிட்டு நாம் அன்றாட பொருளாதாரங்களுக்கு இடம் கொடுக்கும் வகையில் திருத்த வேலைகளை செய்வதன் மூலமாக பழு இன்றி இலகுவாக நாம் சக்தி விரயங்களை கட்டுப்படுத்த முடியும்.

## 'Energy Audit எவ்வாறு வீடுகளில் மேற்கொள்ளப்படுகின்றது?

- முதலில் வீட்டினுடைய பகுதிகள், உபகரணங்கள், Insulation போன்றவற்றை பரிசோதனை செய்தல்.
- Furnace, A/C போன்ற சக்தியைப் பயன்படுத்தும், வீட்டின் முக்கியமாகக் கருதப்படும் உபகரணங்களை பார்வையிடுதல்.
- வீட்டில் உள்ள வெளிக்காற்று உள்புகும் வெளியேறும் air leacksவழிகளை (holes) வீட்டை Pressure test செய்து உங்களுக்கு அறியத்தருதல்.
- சேகரிக்கப்பட்ட விபரங்களை உள்ளடக்கி உங்கள் வீட்டிற்காக 'Energuide' Rating Evaluation report தயாரித்தல்.
- அரசாங்கத்தின் இவ்வேலைத்திட்டத்தையும், அதனுடைய உள் வடிவங்களையும் தெளிவு படுத்தி உங்கள் திருத்த வேலைகளுக்கான அறிவுரைகளை வழங்குதல்.
- மேலும் சக்தியை மிச்சப்படுத்தும் மற்றைய வழிமுறைகளை பரிந்துரைத்தல்.

போன்ற பல நிகழ்ச்சி நிரல்கள் இங்கு அடங்கும்.

## Energy Audit செய்தபின் எப்படி அத்திருத்த வேலைகளை நடைமுறைப்படுத்தும் பொழுது கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டியவை எவை?

இவ்வேலைத்திட்டத்தில், முக்கியமாக நீங்கள் சீர்திருத்த வேலைக்குச் செலவிடும் பணத்தொகை முக்கியமற்றதாகும். நீங்கள் ஒரு திருத்தவேலையைச் செய்யக்கூடியவராக இருப்பீர்களானால் நீங்களே அதைச் செய்து முடிக்கலாம். ஆனால் அதேநேரம் நீங்கள் அவ்வேலையைச் செய்ததன் அத்தாட்சியை உறுதிப்படுத்தவேண்டும். அத்தோடு மட்டுமல்லாமல் நீங்கள் பொருத்தும் உபகரணங்கள் குறிப்பிட்ட தகுதியைப் பெற்றிருக்க வேண்டும். உதாரணமாக Furnace 94% AFUE or Higher, A/C 14.5 SEER or Higher. நீங்கள் செலவிட்ட தொகையையே வீட்டின் அளவையே கருத்தில் எடுக்காமல் அரசாங்கம் குறிப்பிட்ட தொகையை வழங்குகின்றது. உதாரணமாக 5,000sqft கொண்ட வீடும் 1,000sqft கொண்ட வீடும் Basement Insulation செய்வதன் மூலமாக மொத்தமாக 2,500 வரை பெறமுடியும். அத்துடன் வீட்டின் Air Leakஐ இலகுவாக Pressure test செய்து அறிவதன் மூலம் மிக்க பணச் செலவு அல்லாமல் அந்த இடத்தை அடைக்கமுடியும். அரசாங்கம் அதற்காகவும் மீள் பணத்தை வழங்குகின்றது.

## Energy Auditஇன் பிரிவுகள்

Energy Audit இரண்டு பிரிவுகளாக உள்ளன.

Pre-Rutrofit – Audit

உங்கள் திருத்த வேலைகளை செய்வதற்கு முன்பாக Pre Audit செய்வதன் மூலமாக நீங்கள் இத்திட்டத்தில் பங்கெடுத்துக் கொள்ள முடியும். இதை எல்லா வீட்டு உரிமையாளர்களும் செய்து தங்கள் வீட்டின் சக்தி விரயத்தை அறிந்து கொள்ள வேண்டுமென்பதற்கு இலகுவாக Ontario government $150ஐ நீங்கள் செலுத்தும் Pre Audit கட்டணத்திலிருந்து மீளக் கொடுக்கின்றது. இதற்கான விண்ணப்பத்தை 'Energy Auditors' செய்வார்கள்.

அடுத்ததாக நீங்கள் உங்கள் திருத்த வேலைகளை March 2011 வரை செய்து கொள்ளலாம். இதன்போது நீங்கள் வாங்கும் பொருட்களோ அல்லது ஒப்பந்தகாரர்களிடமிருந்து பெறப்படும் 'Invoice'க்களையோ சேமித்து வைத்துக் கொள்ளுங்கள். அவற்றுடன் Insulation போன்ற, கன்களால் பார்த்து Energy Auditorsஆல் உறுதிப்படுத்திக் கொள்ள முடியாத வேலைப்பாடுகளை செய்யும்போது அதனைப் புகைப்படம் எடுத்துக் கொள்வது மிகவும் முக்கியமானது. இதனால் அத்தாட்சிப்படுத்துவது மிகவும் சுலபம். இதனைப் பெறுவதன் மூலமாக அரசாங்கத்தினாலும் Auditorsஆலும் உங்கள் திருத்த வேலைகளை அத்தாட்சிப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

நீங்கள் உங்கள் திருத்த வேலைகள் நிறைவுற்றதும் Energy Auditorsஐ திருப்பி அழைத்து Post-Audit செய்வதன் மூலமாக உங்கள் திருத்த வேலைகளை அத்தாட்சிப்படுத்த முடியும். இதன்போது உங்களிடம் இருக்கும் 'Invoice' மற்றும் புகைப்படப் பிரதிகளைப் பெறுவதன் மூலமாக உறுதிப்படுத்த முடிகின்றது. இதன்போது வீட்டில் திரும்பவும் 'Pressure Test' செய்வதன் மூலமாக நீங்கள் எவ்வளவு 'Air leaks'ஐ குறைத்துக் கொண்டுள்ளீர்கள் என்று அறிய முடியும். இதன்பின் உங்களிடம் சேகரித்த விபரங்களுடன் Energy Auditors மீள் தொகைக்கான விண்ணப்பத்தை அரசாங்கத்திடம் உங்கள் சார்பாக விண்ணப்பிப்பார்கள். எக் கட்டத்திலும் நீங்கள் நேரடியாக அரசாங்கத்திற்கு இதற்கான எந்த விதமான விண்ணப்பத்தையும் அனுப்ப முடியாது. இந்த மீள் பணத்தை Energy Auditors களினூடாக மட்டுமே விண்ணப்பித்து பெற முடியும்.

## அனைத்துத் திருத்த வேலைகளையும் ஒரே நேரத்தில் செய்ய முடியாதவிடத்து, பகுதி பகுதியாக பிரித்துச் செய்தால் அதற்கான மீள் தொகையைப் பெற முடியுமா? எவ்வளவு நாட்களில் பணம் கிடைக்கும்

இவ்வேலையை நீங்கள் இரண்டு தடவைகளாக மட்டுமே பிரித்துச் செய்ய முடியும். ஒவ்வொரு தடவையும் நீங்கள் Post-Retrofit Audits செய்ய வேண்டும். நீங்கள் Post Audits செய்தபின் 2-3 மாதங்களுள் அரசாங்கத்திடமிருந்து பணம் கிடைக்கும். இவ் வேலைத் திட்டத்தில் ஒரு தடவை (Pre-audit) மட்டுமே வீட்டு உரிமையாளர்கள் பங்கேற்க முடியும்.

## நாட்திருத்த வேலைகளின் போதும் பொருட்களை கொள்வனவு செய்யும்போதும் கவனத்தில் எடுக்க வேண்டியவை.

நாம் செய்யும் திருத்தவேலைகள் அரசாங்கத்தில் 'Recommendation'க்குள் அமைகின்றனவா என முக்கியமாக கவனத்தில் எடுக்க வேண்டும். இதற்கான தகவலை உங்களுக்கு தரப்படும் 'Report' மற்றும் Grant Sheet மற்றும் அரசாங்கத்தினுடைய websiteஆன www.nrcan.gc.ca அல்லது energyan.com போன்ற தளத்திற்குச் செல்வதன் மூலமாக பெறமுடியும்.

## Energy Audit செய்தபின் பரிந்துரைக்கப்பட்ட எல்லாத் திருத்த வேலைகளையும் வீட்டு உரிமையாளர்கள் கட்டாயம் செய்ய வேண்டுமா?

இல்லை, பரிசோதகரால் சொல்லப்பட்ட பரிந்துரைகள் மட்டுமே. வீட்டுச் சொந்தக்காரர்கள் தன்னுடைய வசதிக்கேற்ப தமக்கு விரும்பியவற்றை மட்டுமே தெரிவு செய்து திருத்த வேலைகளைச் செய்யலாம். அதற்குரிய பகுதி மீள் பணம் மட்டுமே அவருக்கு கிடைக்கக் கூடியதாக இருக்கும். மேலும் மார்ச் 2011க்கு முன்னதாக இரண்டு "Post-audit" மட்டுமே செய்து பணத்தைப் பெற முடியும்.

உங்களிடம் இதுபற்றிய கேள்விகள் ஏதும் எழுமேயாயின் prabha.sinna@thaiveedu.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பி வையுங்கள் முடிந்தவரையில் அதற்காக பதிலைத் தருகின்றோம்.

இக்கட்டுரை உங்களுக்கு பயனுள்ளதாக அமைந்திருக்கும் என்ற நம்பிக்கையுடன் மேலும் பல புதிய தகவல்களுடன் மீண்டும் உங்களை சந்திப்போம்.

prabha.sinna@thaiveedu.com

■ ■ ■

தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.

*E-mail:thaiveedu@gmail.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*

# First step to receiving government rebates of up to $ 11,000 is an

# ENERGY AUDIT

**Prabha Sinna**
(Government Certified)
**416.655.9464**

ENERGY AUDIT செய்தபின் உங்கள் வீட்டை Energy Efficient ஆக்குவதனால் அரசாங்கத்தின் Rebate பெறுவதோடு மட்டுமல்லாமல் உங்கள் மாதாந்தக்கட்டணத்தையும் குறைத்துக்கொள்ளலாம்.

Energy Audit செய்வதன் மூலம் மட்டுமே இச்சலுகையைப் பெறமுடியும்.

| | Federal & Provincial | Toronto |
|---|---|---|
| Doors/Windows/Skylights(rough opeing) | each $ 80 | |
| Heating System | $1,580 | |
| Cooling System | $500 | |
| Ventilation System | $750 | |
| Tankless Water Heater | $750 | |
| Attic Insulation | upto $1,500 | $ 200 |
| Exterior Wall Insulation | upto $ 3,750 | $ 500 |
| Basement Insulation | upto $ 2,500 | $ 300 |
| Toilet Replacement | each $ 130 | |

**Do the pre-audit > Do the retrofit > Do the post-audit > Get the cheque in the mail**

**Do the pre-audit**

You must complete the pre-audit to qualify for the grants. It's the first step to saving energy and money. The goverment of Ontario rebates up to $150 for just doing the pre-audit.

**Do the retrofit**

Upon completing the pre-audit, homeowners may go forward with their retrofits.

**Do tbe post-audit**

You must complete the post-audit in order to collect the necessary information by the energy advisor to apply for rebates.

**Get the cheque in the mail.**

Upon completion of the post-audit, the applications are sent in by the energy advisor. The government rebates will then be mailed directly to the homeowner.

**Personalized report, PREPARED, PRINTED, DELIVERED in house**

Receive $150 rebate from the Ontario government after the completion of the pre-audit

**Tel: 416.655.9464** **www.energyan.com** **Prabha@energyan.com**

# CELL TEL MOBILITY

Cell Tel Mobility

For all your cellphone and accessory needs...

**We sell new & used cellphones, Pagers and accessories for:**

**ROGERS WIRELESS, FIDO, TELUS MOBILITY, BELL MOBILITY**

# Grand Opening Special !!!

**Grand Opening Special !!!**
This offer Only available at 14th avenue store
Geunine Leather Case
From $1.99
Reg. $19.99
Validity period - March 1st 2010 to March 31st 2010
One coupon per family. Customer must bring this coupon to the store. The coupon must be redeemed during the valid redemption period. Cell Tel Mobility Reserved the rights to terminate the offer any time without notice.

**Grand Opening Special !!!**
This offer Only available at 14th avenue store
Smart car charger
From $1.99
Reg. $29.99
Validity period - March 1st 2010 to March 31st 2010
One coupon per family. Customer must bring this coupon to the store. The coupon must be redeemed during the valid redemption period. Cell Tel Mobility Reserved the rights to terminate the offer any time without notice.

**Grand Opening Special !!!**
This offer Only available at 14th avenue store
Headset
From $1.99
Reg. $19.99
Validity period - March 1st 2010 to March 31st 2010
One coupon per family. Customer must bring this coupon to the store. The coupon must be redeemed during the valid redemption period. Cell Tel Mobility Reserved the rights to terminate the offer any time without notice.





-Car charger
-Leather case
-Head sets
-Home charger
-Clear case
-Bluetooth headset
-Bluetooth dongle
-Data cables
-Batteries
-Belt clip/Holder
-Antenna booster
-Flashing antenna
-Flashing light






**Call Toll free:- 1.877.312.5123** ***SHOP ONLINE*** @ www.celltelmobility.com

## CELL TEL MOBILITY WIRELESS REPAIR CENTER



NOKIA, MOTOROLA, SONY ERICSSON, SAMSUNG, LG
HTC,BLACKBERRY,iPHONE.

***Display,Antenna Replacement and all other Repairs (Software & Hardware).***

| 2637 Eglinton Ave. East,<br>Eglinton Ave/Midland Rd<br>**416.266.6818** | 5C - 2950 Birchmount Rd<br>Birchmount / Finch Ave<br>**416.495.7776** | 5A - 1162 Morningside Ave<br>Morningside Ave/ Sheppard Ave<br>**416.281.2355** | NEW LOCATION<br>49 - 45 Karachi Dr<br>Markham Rd / 14 th Avenue<br>**905.201.4859** |
|---|---|---|---|

# வீட்டின் விலையேற்றம் வீதிக்கு வருமா?



அலன் சிவசம்பு
- வீடு விற்பனைப் பிரதிநிதி -

கனடாவில் வீட்டின் விலை ஏற்றம் எதிர்பார்க்காத அளவிற்கு அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. இதை அனேகமானோர் வீட்டின் விலை அதிகரிப்பானது ஒரு நீர்க்குமிழி போன்றதா எனப் பெரிதும் பயப்படுகின்றார்கள். இது ஒரு குமிழியாக இருந்தாலும் ஒரு கட்டத்தில் வெடிக்கும். அப்போது அதனுள் மிஞ்சுவது எதுவும் இருக்கமாட்டாது. அதாவது எமது அயல் நாட்டில் இரண்டு வருடங்களுக்கு முன்பு நடந்தது போன்று, கனடாவின் பொருளாதாரத்தில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தலாம். தற்போது கனடாவில் கொண்டுவரப்பட்ட புதிய ஈட்டுக்கடன் நிபந்தனையில் ஒன்றான ஐந்து வருடத்திற்கு ஈட்டுக்கடனை நிரந்தரப்படுத்தல் வேண்டும் என்பது ஒரு நல்ல செயலாகும். பலர் இதற்குப் பலவகையான விளக்கத்தைக் கொடுத்தாலும் என்னைப் பொறுத்தவரை இது ஒரு பாதுகாப்பான முறையாகவே கருதுகின்றேன். தற்போதைய நிலையில், வீட்டின் விலைகள் குறுகிய காலத்தில் 20 சதவீதத்தால் அதிகரிப்பு ஏற்பட்டதால் வீட்டின் சராசரி விலை $328,537 ஆக உயர்ந்து உள்ளதாகக் கணிப்புக் கூறுகின்றது. இந்த அதிகரிப்பு இளவேனிற் காலத்திற்கும் தொடரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போதுதைய அரசாங்கத்தின் புதிய நிபந்தனைகள், இவ்வதிகரிப்பில் சிறிய மாற்றத்தை மட்டுமே ஏற்படுத்தும் என்பது நிபுணர்களின் கணிப்பு. காரணம் இப்புதிய நிபந்தனை குறுகிய காலத்தில் வீடு ஒன்றை வாங்கி விற்கும் முதலீட்டாளர்களுக்கு மட்டுமே ஒரு சவாலாக இருக்கும். இருந்தாலும் விற்பனைக்கு வரும் வீடுகளின் எண்ணிக்கை அதிகளவில் குறைவாகவே இருக்கின்றது. அத்துடன் முதன்முறை வீடு வாங்குபவர்களுக்குஇந்தப் புதிய நிபந்தனை பெரும் மாற்றத்தை ஏற்படுத்தாததினால் வீட்டின் விலையில் தொடர்ந்தும் ஒரு சாதாரண அளவில் அதிகரிப்பு இருக்கும் என எதிர்பார்க்கின்றார்கள்.

அடுத்ததாக முதலீட்டு உரிமையாளர்கள் 20 சதவீதத்தை முதலீட்டுதான் ஒரு வீட்டை வாங்கமுடியும் எனும் புதிய நிபந்தனை, முதலீட்டாளர்களுக்கு ஒரு தாக்கத்தைக் கொடுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. TD Bankஐச் சார்ந்த ஒரு பொருளாதார நிபுணரின் கணிப்பின்படி பதினைந்து சதவீதமான ஈட்டுக்கடன் பெறுவோர் முதலீட்டிற்காக கடன் பெறுபவர்களாகும். ஆகவே தற்போதைய சந்தைக்குத் தேவையான வீடுகளின் எண்ணிக்கையில் சிறிய மாற்றம் ஏற்பட்டாலும் வீடு வாங்கி வசிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கும் சந்தர்ப்பங்கள் உள்ளது எனலாம். ஆகவே வீட்டின் விலை தொடர்ந்து அதிகரிக்கும் என எதிர்பார்த்தாலும், தற்போதைய வேகத்தில் அதிகரிக்காமல் இருப்பதற்குச் சந்தர்ப்பங்கள் உள்ளன. ஆகவே இப்புதிய நிபந்தனை ஒரு சராசரியான நிலையில் பொருளாதாரத்தைக் கொண்டு செல்வதற்கும் உதவியாக இருக்கும். அதே நேரத்தில் CMHC பலவகையான வீட்டுக்கடன்களான Dublex, Condo, Owner Occupied Properities அத்துடன் வீடுதிருத்துவதற்கான கடன்களுக்கும் உத்தரவாதம் கொடுப்பதால் நுகர்வோர் தமக்குத் தரமான செலவில் கடன் பெற உதவியாக இருக்கும்.

அடுத்ததாகப் புதிய நிபந்தனையில் ஒன்றான ஐந்து வருட வீட்டுக்கடன் என்பது பெரிய மாற்றத்தைக் கொடுக்கமாட்டாது என நிபுணர்கள் எதிர்பார்க்கின்றார்கள். காரணம் தற்போதைய நிலையில் ஒருவர் ஈட்டுக்கடன் பெறுவதற்கு அவர்கள் மூன்று வருட ஈட்டுக்கடன் வட்டிக்குத் தகுதியுள்ளவர்களாக இருத்தல் வேண்டும். தற்போதைய ஐந்து வருடம் சிறிய மாற்றத்தையே ஏற்படுத்தும். ஆனால் இது நுகர்வோருக்குச் சாதகமாகவே அமையும். காரணம் இவர்கள் அடுத்த ஐந்து வருடங்கள், ஈட்டுக்கடன் வட்டிவீதத்தில் அதிகரிப்பு ஏற்பட்டாலும் இவர்கள் தொடர்ந்தும் வீட்டைப் பாதுகாப்பாக வைத்திருக்க உதவுகின்றது. ஆகவே இப்புதிய நிபந்தனை கூடுதலாக risk எடுப்பவர்களுக்கு ஒரு தடையாக இருக்கலாம். அகவே கூடுதலான நிபுணர்களின் கணிப்பின்படி வீட்டக் குமிழி எனும் பிரச்சினை வருவதற்குச் சந்தர்ப்பங்கள் குறைவாகக் காணப்படுகின்றது என எதிர்பார்க்கின்றார்கள். அத்துடன் Bonds, equities அத்துடன் வீட்டு விலைகள் 2008இல் ஏற்பட்ட இழப்புகள் ஒரு அளவிற்குப் பழைய நிலைக்கு வந்துள்ளதால், நாம் இந்தக் குமிழியின் பிரச்சனையில் சிக்கமாட்டோம் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆகவே வீட்டின் விலை ஏற்றம் வீதிக்கு வரமாட்டாது என எதிர்பார்க்கப்படுகின்றது.

alan.sivasambu@thaiveedu.com

■ ■ ■

South Asian Autism Awareness Centre
presents




1st Gala Dinner Dance
All proceeds towards therapies for Children with autism

Saturday March 6, 2010
J&J Swagat Banquet Hall
Ticket Price: $40
Time: 6:00 PM

Raffle Tickets: $5.00/ticket
Prizes:
1st prize: Round Trip to Florida
2nd prize: 42" Television
3rd prize: Laptop
Many More To Be Won!

For Tickets Call: 416-824-8847
E-mail: saaacinfo@gmail.com

INPROBUS REALTY CORPORATION
Specialty Investment, Property and Business Brokers

Men's clothing store
For sale
22yrs in Business

---

Office space for lease
close to Subway.
Good location for Mississauga, Etobicoke and Down town clients.

Inprobus Realty Corporation

Call : Alan 647-504-2536

SP Electronics
TV, VCR, DVD, Players-Telephone-Computers
உங்களுக்குத்தேவையான அனைத்துத் தமிழ் வானொலிகளுக்கும், திருத்த வேலைகளுக்கும்
416 264 6400
2641 Eglinton Avenue East ( Brimley & Eglinton)

# கல்வி



சிவவதனி பிரபாகரன்

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"
- திருவள்ளுவர்

கல்வி என்பது கடலளவு விரிந்திருந்தாலும் நாம் கற்பதென்னவோ ஒரு கைபிடியளவிலும் குறைந்தளவை மட்டுமே. கல்வியின் சிறந்த பயன் கற்றபடி ஒழுகுதலாகும்.

கல்வியின் சிறப்பை வகை வகையாக 'கல்வி' என்னும் அதிகாரத்திலும் கல்லாதிருத்தலின் தீயபலன்களை 'கல்லாமை' என்னும் அதிகாரத்திலும் மிகச் சிறப்பாக திருவள்ளுவர் எடுத்துக் கூறியுள்ளார்.

"கண் உடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண் உடையர் கல்லாதவர்"
- திருவள்ளுவர்

ஏன்னும் குறளில் கற்றவர்கள் முகத்தில் இருப்பவை மட்டுமே இவ்வுலகைக் காண உதவும் மெய்யான கண்கள் என்றும் அவ்வாறு கல்லாதவர் முகத்தில் இருப்பவை கண்களல்ல அவை வெறும் புண்களே என்றும் கூறியுள்ளார். கற்றல் என்பது வெறுமனே நூல்களைக் கற்பதால் மட்டும் முழுமை பெறுவதில்லை. வாழ்க்கையை விட சிறந்த நூல் உலகில் வேறு எதுவுமில்லை. வாழ்வு கற்றுத்தரும் பாடங்களைச் சரிவரப் புரிந்து கற்று வாழப் பழகுபவன் வாழ்வில் வெற்றியை எய்துகின்றான்.

"ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது" என்பர். எப்பேர்பட்ட கற்றோராயினும் வாழ்வை அழகாக மேன்மையாக வாழத் தெரியாது போனால் அவர்கள் வாழ்வில் எத்துணை கற்றவராயினும் தோற்றவராகின்றனர்.

அறிஞர் அஸ்ரத் அலியிடம் ஒரு அறிஞர்குழாம் வந்து "உங்களிடம் ஒரு கேள்வியை மட்டும் நாங்கள் முன் வைக்கின்றோம். அதற்கு உங்களால் வெவ்வேறு பதில்களை தரமுடியுமா?" எனக் கேட்டனர். அவரும் சம்மதிக்கவே "செல்வம், கல்வி இரண்டில் எது சிறந்தது?" என வினவினர்.

அலி சிரித்தவாறே பின்வரும் பதில்களை வெவ்வேறாக அந்நபர்களிடம் தனித்தனியாகச் சொன்னார்.

"அறிவு தீர்க்கத்தரிசிகள், ஞானிகள் ஆகியோரின் பரம்பரை சொத்து. ஆனால் செல்வமோ கொடுங்கோலரின் ஆயுதம். எனவே அறிவே சிறந்தது"

"உங்களிடம் செல்வம் இருந்தால் நீங்கள்தான் அதைக் காப்பாற்ற வேண்டும். ஆனால் அறிவோ உங்களை எப்போதும் காப்பாற்றும். எனவே அறிவே சிறந்தது"

"செல்வந்தனுக்கு எப்போதும் பகைவர்கள் அதிகம் ஆனால் அறிஞர்களுக்கோ நண்பர்களே அதிகம். ஆகவே அறிவே சிறந்தது"

"செல்வம் பிறருக்கு கொடுக்கக் கொடுக்கக் குறைந்து செல்லும். அறிவோ வழங்க வழங்க வளர்ந்து கொண்டே செல்லும். ஆகவே அறிவே சிறந்தது"

"அறிவுள்ளவன் வாரி வழங்கும் பரோபகார தாராள சிந்தையோடு இருப்பான். ஆனால் செல்வமுள்ளவனோ செல்வம் வீணாக்கப்படக் கூடாது என்ற எண்ணத்தோடு அடுத்தவர்க்கு ஈயாமல் தேக்கி வைத்திருக்க முயல்வான். எனவே அறிவே சிறந்தது"

"செல்வத்தை கள்வர் திருடக்கூடும். ஆனால் அறிவை எவராலும் திருடமுடியாது. எனவே அறிவே சிறந்தது"

"செல்வம் காலவோட்டத்தில் கரைந்து போகலாம். ஆனால் அறிவைக் காலவோட்டம் எதுவும் செய்யமுடியாது. ஆகவே அறிவே சிறந்தது"

"செல்வத்திற்கு எப்போதும் எல்லையுண்டு. ஆனால் எல்லையில்லாதது கல்வி. எனவே கல்வியே சிறந்தது"

"செல்வம் உள்ளத்தின் ஒளியை விரட்டி மனதை இருள வைத்து சுருங்க வைக்கின்றது. அறிவோ இருண்ட உள்ளத்தில் ஒளி பாய்ச்சி அதை ஒளியூட்டி விரிய வைக்கின்றது"

அறிஞர் அஸ்ரத் அலி அவர்கள் கல்வியின் மேன்மையைப் பற்றி அளித்த விளக்கங்கள் அறிவின் சிறப்பை மிகச் சிறப்பாக விளக்கிக் கூறுகின்றன.

வள்ளுவரும் தனது குறளில் இவ்வாறு கூறுகின்றார்.

"கேடு இல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடு அல்ல மற்றையவை"

அதாவது ஒருவனுக்கு உலகிலேயே மிகச் சிறந்த மாசற்ற செல்வம் கல்வியே என்றும் மற்றைய செல்வங்கள் யாவும் செல்கின்ற செல்வங்களேயன்றி நிலைத்து நிற்பவையல்ல என்றும் கூறுகின்றார். அது மட்டுமன்றி

"தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு"

என்னும் குறளினூடாக தோண்டத் தோண்ட நிலத்திலிருந்து ஊறும் நீரூற்றுப்போல் கல்வியானது கற்கக் கற்க வளர்ந்து கொண்டே செல்லும் என்று அறிவை வளர்க்கும் வழியையும் சிறப்பாக விளக்குகின்றார்.

உலகம் அறிவுக்கடலாக விரிந்துகிடக்கின்றது. அவற்றிலிருந்து எம் அறிவுத்தாகம் போக்க நாம் அருந்தும் அறிவோ சில துளிகளே. அகிலத்திலுள்ள அறிவு நீர் அள்ளிக் குடிப்பதற்கு எங்கள் ஆயுள் போதாது. கற்றல் என்பது வெறுமனே நுனிப்புல் மேய்வதாக இருக்கக் கூடாது. மேம்போக்காக கற்கும் கல்வியில் பயனேதும் இல்லை.

"ஐயம் திரிபுறக் கற்பது" தான் சிறந்த கற்றலின் பண்பு. இதையே வள்ளுவர் அழகாகக் 'கசடறக் கற்க' என்கின்றார்.

வாழ்வு மேம்பட கல்வி உதவுகிறது. அதே வேளை வாழ்வில் மேம்பட மட்டும் கற்றால் போதும் எனக் கற்றலை இடை நிறுத்திவிடக் கூடாது. வையகம் மேன்மைபெறவும் தன் தாய் நாடு சிறக்க நல்லன செய்யவும் மானிட சமூகத்தின் மேம்பாட்டிற்கும் நம்மாலானதைச் செய்யவும் தமது கற்றலின் பயன்கள் இருப்பதற்கான கல்வித் தேடல் ஒவ்வொரு மானிடருள்ளும் இருக்க வேண்டும். எனின் உலகம் உயர்ச்சிகளைக் கண்ணுற்று மேம்படும்.

சிறந்த நூல்களைத் தேடித் தேடிக் கற்று எம்முள் மீண்டும் ஆன்ம சக்தியை வளர்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு வளர்த்துக் கொள்கின்ற ஆன்ம சக்தியின் துணைகொண்டு அருட் செயல்களை சாதனைகளாக்க வேண்டும்.

இன்றைய உலகில் அறிவைத் தேடுவதற்கு பயன்படுத்தவல்ல அரிய பொழுதுகளை நாம் இன்று பல வழிகளில் விரயமாக்குகின்றோம். சோம்பல் எங்கள் ஆக்கத்திறனை அழிக்கின்றது. வீணான களியாட்டங்களின்பால் பாழாகிச் செல்லும் மனதை அறிவைத் தேடும் நாட்டத்தின்பால் திசைதிருப்பக் கற்றுக் கொள்ள வேண்டும்.

> " எப்பேர்பட்ட கற்றோராயினும்
> வாழ்வை,
> அழகாக மேன்மையாக வாழத்தெரியாது போனால்
> அவர்கள் வாழ்வில் எத்துணை கற்றவராயினும்
> தோற்றவராகின்றனர் "

"பணத்தின் குணம் சேர்க்க ஆரம்பித்தால் செலவழிக்க விடாது. சோம்பலின் குணம் சுகப்பட ஆரம்பித்தால் வியர்வை சிந்த விடாது" என்கின்றார் இறையன்பு.

வாழ்க்கையை நேசிப்பவர்கள் நேரத்தையும் நேசிப்பவர்கள். நேரத்தைப் பொன்னென மதிப்பார்கள். வாழ்வில் நாம் கடக்கும் ஒவ்வொரு கணங்களும் மறுபடியும் வாராதவை என்பதை உணர்ந்து பொழுதைப் பயன்பெற பயன்படுத்த வேண்டும்.

"நேரத்தைக் கொன்று விடுவது கொலையல்ல. அது ஒரு தற்கொலை!" என்கின்றார் அறிஞர் மார்ட்டிலென்.

காலம் பொன்னானது. அதைக் கண்ணெனக் கொள்வது எம் கடன். திட்டமிட்டு பட்டியலிட்டு முன்னுரிமை வரிசைப்படுத்தி ஆயத்தங்கள் செய்து நிறைவேற்றி முடிக்கும் மனோ திடத்தோடு எமது அன்றாட காரியங்கள் ஒவ்வொன்றும் இருக்கும் எனின் எமது வாழ்நாட்கள் ஒருபோதுமே வீணாக மாட்டாது. கடைசி நேரம் வரை வேலைகளை செய்யாமல் வைத்திருப்பதால் காரியங்கள் நிறைவேறாத நிலை உருவாகக் கூடும்.

தெளிவில்லாத சிந்தனைகளும் உறுதியில்லாத செயல்களும் இலக்கற்ற மானிடர்களாக எம்மை மாற்றி விடும். காலத்தை மதிப்பது போல் காலந்தவறாமையையும் (Punctuality) மதிக்க வேண்டும். காலந் தவறிடின் காலத்தாழ்வு ஏற்படும். கால ஒழுங்கை மதிப்பவர்கள் குறிக்கோளிலும் கவனமாக இருப்பர். காலத்தை மதிப்பவரைக் காலமும் மதித்து உயர்த்தும்.

"Early bird catches the prey" என்பர். அதிகாலையிலேயே எழுந்திருந்து சுறுசுறுப்பாக இயங்கக் கற்கவேண்டும். அதிகாலையில் கற்பவை இலகுவில் மனதில் பதிந்து விடுகின்றன.

ஒருமைப்பட்ட மனதும் கொள்கைப் பற்றும் இலட்சிய வெறியும் உள்ளவர்கள் கல்வியில் மட்டுமல்ல வாழ்வினிலும் தாம் வகுத்த இலக்குகளை நிச்சயம் என்றோ ஒருநாள் அடைந்தே தீருவர்.

வெற்றிகளை விட தோல்விகளே சிறந்த பாடங்கள். அதற்குச் சிறந்த உதாரணம் மின்குமிழைக் கண்டுபிடித்த அறிஞர் தோமஸ் அல்வா எடிசன் அவர்கள். அவர் தனது மின் குமிழ் கண்டுபிடிப்பில் பல தோல்விகளின் பின்னரே 'டாங்ஸ்டன்' இழையை வைத்து செய்த மின்குமிழைக் கண்டுபிடித்து வெற்றியை எய்தினார். எனினும் அவர் தன் முயற்சியைப் பதிவாக்கும் போது தான் முன்னெடுத்துத் தோற்ற பரிசோதனைகளையும் பதிவாக்கினார். ஏனெனில் அதன் விளைவுகளையும் உலகம் அறிந்திருப்பின் மீண்டும் அத்தகைய பரிசோதனை முயற்சிகளைச் செய்து தோற்காமல் இருப்பதற்காக. உலகுக்கு உதவியாக இருக்கும் என்ற அவரது ஆழ்ந்த நற்சிந்தனையால் தோல்விப்பாதையில் முயற்சிகள் மறுபடியும் தொடராமல் இருக்கின்றன.

எமது உயர்ச்சி என்பது முயற்சிக்கு ஏற்பவே பலன் தருகின்றது. இதையே வள்ளுவரும்

"வெள்ளத்து அனைய மலர் நட்டம் மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு"

என்ற குறளில் சிறப்பாகக் கூறியுள்ளார். நீர் மட்டம் உயர உயர அதற்கு மேலே மிதக்கும் பூவும் நீண்டு உயர்கிறது. அதே போன்றே எங்கள் ஊக்கத்திற்கேற்பவும் உளப்பாங்கிற்கேற்பவும் எங்கள் வாழ்வும் உயர்கின்றது.

ஊக்கம் ஆக்கத்திற்கு உரம் தருகின்றது. ஊக்கம் குன்றாத கற்றலினால் ஆக்கத்திறன் மிக்க கல்விமானாக மாறமுடியும்.

கல்வியின் முழுமை சமூகத்தில் ஒரு சான்றோனாகி நாம் வகிக்கும் முதன்மைப் பங்கிலேயே தங்கியுள்ளது. ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்வினை ஒரு வரலாறாக மாற்றும் வகையில் வாழ முயல வேண்டும். குறைந்த பட்சம் வரலாற்றை படைக்கும் எழுத்தாணிகளாகவேனும் வாழ வேண்டும். இதையே அறிஞர் க.ப. அறவாணன் அவர்கள்.

"முயன்று வரலாற்றைப் படி
இயன்றால் வரலாற்றைப் படை
முடிந்தால் வரலாறாகவே வாழ்"

என்று கூறியுள்ளார். சிகரங்களைத் தொடும் சாதனைப் பயணத்தால் கல்வியின் துணையோடு உயர்ந்து சிறந்து வாழுங்கள்.

sivavathani.p@thaiveedu.com

■ ■ ■

**Saree Blouse**

உங்கள் சகலவிதமான

சாறி புளவுஸ் (Saree Blouse) தைப்பதற்கும்

அழையுங்கள்.

**416 264 6400**

**Tution Classes**

(McCowan & Dennison சந்திப்பிற்கருகில்)

தமிழ், ஆங்கிலம் (English), கணிதம் (Math), ஓவியம் (Art), விஞ்ஞானம் (Science), வீட்டுவேலை உதவி (Homework Help).
இளமழலை முதல் தரம் 12 வரையான மாணவர்களுக்கு.
1 to 1 or Group classes

Please call

**905-554-2496, 416-522-3314.**

# வேட்டை நாய்களும் Toyotaவின் முதலீட்டாளர்களும்

பெரியளவில மீள அழைப்பிற்கு உள்ளான நிறுவனங்களின் பங்குகளை வாங்குவது சாதாரணமாக நல்ல முடிவு. Toyota பங்குகளின் விலை 16 வீதத்திற்கு மேல் குறைவடைந்துள்ள நிலையில் முதலாவது அலை செய்தியின் தாக்கம் பெரிதாகத் தெரிகிறது. ஆனால் இங்கு முதலீட்டாளர்கள் கவனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

1982ல் Johnson and Johnson 31 மில்லியன் Tylenol போத்தல்களை திருப்பி அழைத்தது. எப்படியோ சில போத்தல்களில் நஞ்சூட்டப்பட்டிருந்ததால் ஏழு பேர் இறந்தனர். இதனால் ஏற்பட்ட மீள அழைப்பினால் மூன்றில் ஒன்றாக இருந்த சந்தைக்கூறு 7 வீதமாகக் குறைந்தது. மீள அழைத்தற்கும் மீள உற்பத்தியை ஆரம்பித்தற்கும் J and J 100 மில்லியன் டொலர்களைச் செலவிட்டது. வருமான இழப்பு அதை விட பன்மடங்கு அதிகம். ஆனால் நிர்வாகத்தினரின் முயற்சிகள் மிகுந்த பலனைத் தந்தது.


**தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.**

***E-mail:thaiveedu@gmail.com***
***Fax: 416-849-0594***
***Tel: 416-646-3422***


தைலனோல் என்ற பெயரை அழிப்பதை விடுத்து மெருகூட்டி நிறுவனத்திற்கு நன்நடத்தைப் பாராட்டையும் பெற்றுத்தந்தது.

அப்போது தலைமைத்துவத்தில் இருந்த திரு. James Burke எனபார் நிறுவனத்தின் பேச்சாளர் ஆக மாறினார். என்ன நடந்தது இனி என்ன செய்ய இருக்கிறார்கள் என்பதை மக்கள் மத்தியில் தெளிவாக எடுத்துரைத்தார். நுகர்வோருக்கும் யார் பொறுப்பு என்பது தெளிவாக இருந்தது. பின்பு திறக்க முடியாத போத்தல்களில் தைலனோல் வெளிவந்த போது இலகுவில் ஏற்கப்பட்டது. மீளழைப்பு நடந்து ஒரு ஆண்டில் தைலனோலின் சந்தைப்பங்கு 30 வீதத்தை அடைந்தது.

முதலீட்டாளர்களைப் பொறுத்தமட்டில் J and J இன் லாபத்தில் 17 வீதம் தைலனோலில் இருந்து வந்ததால் பங்கின் விலை பெரிதளவில் பாதிக்கப்பட்டது. ஆனால் அந்த வீழ்ச்சியடைந்த நேரத்தில் வாங்கியிருந்தால் வெற்றியாளர்களாக மாறியிருக்கலாம். இரண்டு மாதங்களில் வீழ்ச்சியடைந்த விலையைச் சரி செய்து விட்டது. அந்த வீழ்ச்சியடைந்த நேரத்தில் 1982ல் 1,000 டொலர்களை முதலாக மாறியிருக்கும். இத்துடன் காலாண்டு தவறாமல் dividend கூடக் கிடைத்திருக்கும்.

இதற்கு கருத்து இந்த மீளழைப்புக்கள் நீதிமன்றத் தீர்ப்புக்களும் எந்தவொரு தாக்கத்தையும் தராது என்பது அல்ல.

Toyota இதற்கு 2 பில்லியன் டொலர் செலவாகலாம் என்று சொல்கிறது. அதாவது முதலீட்டாளர்கள் நம்புவதை விட இது குறைவாகவே இருக்கிறது. இந்தப் பிரச்சினைகள் 1982 J and J பிரச்சனையைவிட பாரதூரமானது அல்ல. ஆனால் Toyota நிலை சற்று வித்தியாசமானது.

Washington GMஇலும் Chryslerஇலும் 80 பில்லியன் டொலர்களை முதலிட்ட நிலையில் இந்த நிறுவனங்களின் சந்தைப் பங்கு அதிகரிப்பதில் அமெரிக்க அரசுக்கு நிறைய ஆர்வம் உண்டு. முதலாவதாக இது நல்ல வேலை வாய்ப்புகளை அதிகரிக்கும். இந்த முதலீடு நல்ல முதலீடு வெற்றிகரமான முதலீடு என்று அரசியல் வெற்றியாக மாற்றிக் கொள்ளலாம். ஆத்துடன் சிக்கலில் இருக்கும் அமெரிக்க கார் நிறுவனங்களின் அத்திவாரத்தை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

போக்குவரத்துச் செயலாளர் Ray Lahood Toyota சொந்தக்காரர்கள் கார் திருத்தப்படும் வரை கார்களை ஓடக்கூடாது என்று சொல்லியிருக்கிறார். இது Toyota சொந்தக்காரர்கள் மத்தியில் ஒரு கலக்கத்தை ஏற்படுத்தியதாக் கூறப்படுகின்றது. ஆனால் அவர் தவறுதலாகப் பேசியதாகக் கூறியிருக்கிறார். அத்துடன் பிரதிநிதி John Dingwall Toyotaவின் பாதுகாப்பு தொடர்பாக கடந்த காலங்களில் National Highway Transportation Agency மெத்தனமாக இருந்ததாக குற்றம் சாட்டியுள்ளார். இதனால் அரசாங்கமும் ஊடகங்களும் மிகக் கவனமாக Toyotaவை அலசப் போகின்றன. அத்துடன் Toyota முழுமையாக, உண்மையாக, வெளிப்படையாக வரவில்லை.




மாறன் செல்லையா
- நிதி திட்டமிடல் ஆலோசகர் -


இது சில ஆண்டுகளுக்கு முன் நடந்த ford Firestone tire பிரச்சனையைப் போன்றது. அப்போது ரயர்கள் வெடித்து 100 பேர் வரையில் கொல்லப்பட்டார்கள். அதைப் போலவே பல்வேறு திசைகளிலும் முறைப்பாடுகள் வந்த வண்ணமே இருக்கின்றன. ஆத்துடன் Toyota கடுமையான குடியியல் தண்டங்களுக்கு முகம் கொடுக்க வேண்டி வரும். சில ஆய்வாளர்களின் கருத்துப்படி 16 million வரையில் இருக்கலாம். சில ஆண்டுகளுக்கு முன்பு GM இப்படி குற்றப்பணம் செலுத்தியது. அது ஒரு மில்லியன் மட்டுமே. அப்போது ஊடகங்களின் கவனம் அங்கு இருக்கவில்லை. ஆனால் இம்முறை பத்திரிகைகளின் கவனம் Toyota வில் இருக்கிறது.

Toyota இப்போதும் உலகின் பெரிய கார் தயாரிக்கும் நிறுவனமாகும். பங்குகளின் விலை கவர்ச்சியாக இருந்த போதிலும் அமெரிக்காவில், அமெரிக்க உற்பத்தியை வாங்க வேண்டும் என்ற பிரசாரம் உச்சியில் நிற்கும் நேரம். அரசியல்வாதிகள் வேட்டைநாய்கள் போல திரியும் காலம். கவனம் தேவை. Toyotaவிற்கும் அதில் முதலிட்டவர்களுக்கும்.

maran.chelliah@thaiveedu.com

■ ■ ■


# வீட்டுக்கடன் காப்புறுதி திட்டம்
## Mortgage Life Insurance

**வங்கிக் கடன் காப்புறுதி**

01. வங்கியே உடமைக்காரர்.
02. வங்கியின் அதிகாரத்தில் இருக்கிறது.
03. கடன் தவணைகள் தவறினால் காப்புறுதி செயலிழந்து விடும்.
04. வங்கியே பாத்தியக்காரர்.
05. உங்கள் காப்பு தொகை குறைந்துகொண்டே வரும்.
06. காப்புறுதிக்கு திரும்பவும் விண்ணப்பிக்கவேண்டும்.
07. காப்புறுதி தொகை, கடன் தொகையை தாண்டக்கூடாது.
08. கடனை முற்றிலும் தீர்க்கவேண்டும்.
09. நீட்டவோ மாற்றவோ முடியாது.
10. திட்டமில்லாத வைப்புகளுக்கு சலுகை இல்லை.
11. காப்புறுதி எடுத்தவர் இறந்த பிற்பாடே வங்கி அதன் தராதரங்களை முற்றாக ஆராயும்.
12. வங்கி காப்புறுதி மிகவும் கூடிய செலவு.
13. வங்கி காப்புறுதியை எப்பவும் லண்டன் லைஃப் காப்புறுதிக்கு மாற்றலாம்.
14. முடிவு உங்களுடையது, வங்கியுடையது அல்ல.

**லண்டன் லைஃப் காப்புறுதி**


01. காப்புறுதி எடுத்தவரே உடமைக்காரர்.
02. காப்புறுதி எடுத்தவரே அதிகாரம் கொண்டவர்.
03. கடன் தவணைகள் தவறினாலும் காப்புறுதி செயலிழக்காது.
04. உங்கள் பாத்தியக்காரராக யாரையும் நீங்கள் நியமிக்கலாம்.
05. உங்கள் காப்பு தொகை நிரந்திரமானது, காப்புறுதி தவணையும் ஒரே அளவானது.
06. கடன் உதவியவரை மாற்றினாலும் காப்புறுதி தொடரும்.
07. காப்புறுதி தொகையை உங்கள் தேவைப்படியும், வசதிப்படியும் தீர்மானிக்கலாம்
08. உங்கள் உரிமைக்காரர் பணத்தை தக்கவைத்துக்கொண்டு அதன் வருமானத்தில் தவணைகளைக் கட்டலாம்.
09. உங்கள் காப்புறுதியை மிண்டும் புதுப்பிக்கலாம் மாற்றலாம்.
10. திட்டமில்லாத வைப்புகளுக்கு சலுகை உண்டு.
11. காப்புறுதிகளின் தராதரம் விண்ணப்ப சமயத்தில், தீர்மானிக்கப்படும்.
12. எங்களுடையது போட்டிகளை எதிர்த்து நிற்கும் வல்லமை கொண்டது.
13. மேற்சொன்ன காரணங்களினால் இதுவே சிறந்தது.

Freedom 55 Financial
A division of London Life Insurance Company



**பாலா பாலசுந்தரம்** B. Eng
சிறந்த விற்பனையாளருக்கான விருது பெற்றவர்
**Office: 416-291-0451 Ext.227**
**Cell: 416-518-9489**
**300-2075 Kennedy Rd, Toronto. ON M1T 3V3**

**E-mail: bala.balasundaram@freedom55financial.com | Now Representing Manulife, Sunlife & Greatwest Life.**








# இசைமழையில் இளந்தளிர்களின் இனிய சங்கமம்

www.manonmusic.com



'ஒரு மாணவன் ஒரு துறையில் சிறந்து விளங்குகின்றான் என்றால் அதற்கு அவனின் செயற்பாடு மட்டுமல்ல அதற்குரிய ஆசிரியரின் கற்பித்தல் திறனும், அவரின் அணுகுமுறையும், தன்னடக்கமான செயற்பாடும் தான் மாணவனை இத்துறையில் விருப்புடன் ஈடுபடவும், அதில் திறனுடன் செயற்படவும் வைக்கிறது"

கடந்த வருடத்திலும் பார்க்க 'மனோன் இசைக்கல்லூரி"யின் வளர்ச்சி மும்மடங்காக அதிகரித்திருப்பதை பார்க்கும் போது பெற்றோர்களும் பிள்ளைகளும் சரியான நம்பிக்கையான நிறுவனங்களை இனங்கண்டு அதனுடன் தம்மை இணைத்துக் கொண்டார்கள் என்பது புலனாகின்றது. இவ் வளர்ச்சிக்குரிய காரணத்தைப் பார்க்கும் போது ஏற்கனவே இணைந்த மாணவர்களின் திறமையான செயற்பாடும் பெற்றோர்கள் ஆசிரியரிடம் கொண்ட நம்பிக்கையுமே பல புதிய மாணவர்களின் பிரசன்னமாகும். 'செய்யும் தொழிலே தெய்வம்" என்று தன்னை ஒரு குடும்ப அங்கத்தினனாக மாணவர்களுடன் இணைந்து அன்புடன் பணியாற்றும் ஆசிரியர் அஜித்குமார் வியப்புக்குரியவர்.

புலம் பெயர்ந்த இந்நாட்டில் கல்வியிலும், பொருளாதாரத்திலும், நாகரீகங்களிலும் தம்மை உயர்தினால் போதும் என்ற நிலை மாறி கலைகளின் தனித்துவமான திறன்களை வளர்த்துக் கொள்வதில் பெற்றோர்கள் தம் வேலைப்பளுவையும் மறந்து பாடுபடுவதைப் பார்க்கும் போது அவர்களைப் பாராட்டுவது எனக்கு மிகவும் மகிழ்வைத் தருகிறது. அன்று பல வசதியீனங்கள் காரணமாக தம் ஆர்வங்களை அடி மனதில் புதைத்து, இன்று தம் பிள்ளைகளின் வாயிலாக அதற்கு உயிர் கொடுப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது.

மூன்று நாள் நிகழ்விலும், ஆரம்பித்த நேரத்தில் இருந்தே மிகவும் எதிர்பார்புடன் பெற்றோர்கள் அமர்ந்திருப்பதையும் தாம் ஒவ்வொருவரும் இசை ஞானிகள் எனற நீதியில் மாணவர்கள் பங்காற்றி அந்நிகழ்வை விறுவிறுப்பாக்கியிருந்ததும், ஆசிரியர் அஜித்குமார் தான் பரீட்சைக்கு தோற்றும் மாணவன் போல் தன் மாணவர்கள் அனைவருமே சரியாக செய்ய வேண்டும் என்ற தவிப்புடன் நின்றதையும் பார்க்கும் போது ஓர் நல்லாசிரியன் வழித்துணையுடன் மாணவரும் பெற்றோரும் சரியாகவே தம்மை இனங்காட்டியதாகவே எனக்கு புலனாகிறது.

சாந்தினி நிரோஷன்

# மாற்று எரிபொருள்

இன்று வாகனச் சொந்தக்காரர்கள் எல்லோ-ருக்கும் பெட்ரோலின் விலை உயர்வு தலையிடியாயுள்ளது. மலேரியா சுரம் வந்தவர் உடல் சூடு கூடுவது போல் விலை கூடிக்-கொண்டே செல்கிறது. சில காலத்துக்கு முன் பெட்ரோல் வளநாடுகளில் ஏற்பட்டுள்ள அரசி-யல் காரணங்களால் விலை மிக அதிகரித்-திருந்தாலும் தற்போது ஓரளவிற்கு கட்டுப்-பாட்டுக்குள் வந்துள்ளமையை யாரும் மறுக்க மாட்டார்கள் ஆனால் நாம் கவனிக்கவேண்டிய பெரிய உண்மையாதெனில் எமது பூமிக்கடியில் உள்ள பெட்ரோலின் அளவு குறைந்து கொண்டு செல்கிறது. அவ்வளவு பொட்ரொ-லையும் உறிஞ்சிய பின் வாகனங்களை என்ன செய்வது. இது கார், பஸ், லொரி என்பதுடன் விமானம், கப்பல் என எல்லா போக்குவரத்து வாகனங்களும் பரனுக்குமேலே வைக்கவேண்டி வரலாம். போக்குவரத்தில்லாத ஒரு உலகத்-தை நினைத்துப்பார்க்க கூட கடினமான விடயம்.

பொதுவாக ஆங்கிலத்தில் ஒரு வாசகம் ‘Necessity is the Mother of Invention’ அதாவது தேவைதான் கண்டுப்பிடுப்புகளின் அன்னை. இன்று புது வகையான எரிபொருளுக்கு தேவை வந்துள்ளது. இங்கு ஐந்து மாற்று எரிபொருள் பற்றி சற்று விளக்கமாக தருகிறேன்.

இது ஒரு சாதாரண குடிமகனும் அறிந்தி-ருக்க வேண்டி அத்தியாவசிய தகவல்கள் மட்டுமே.

## பெட்ரோல் எத்தினோல் கூட்டு.

**செயற்பாடு:** நாங்கள் குடிக்கும் மதுவில் எமக்கு உற்சாகத்தை தரும் பகுதிதான் எத்தினோல். இது கனடாவில் கோதுமையிலும், சோளத்திலும் இருந்து பெறப்படுகிறது. இந்த அல்கஹோல் பெட்ரோலுடன் எழிதாக கலக்கும் தன்மையுடையது.

**இன்றைய நிலை:** இன்றைய வாகன தயாரிப்பாளர்கள் 85 சதவீதம் எத்தினோல் 15 சதவீதம் பெட்ரோல் கலவையில் செலுத்தும் வாகனங்களை தயார் செய்யும் ஆற்றல் பெற்றுள்ளார்கள். இவ்வாண்டிற்குள் கனடா-விலுள்ள அனைத்து பெட்ரோல் நிலையங்-களிலும் குறைந்த பட்சம் 5 சதவீதம் எத்தி னோல் கலந்த பெட்ரோல் விற்கப்படவேண்டும் என்று சட்டம்மீட்டப்பட்டுள்ளது.

**நன்மைகள்:** கனடியன் கமக்காரர்களுக்கு இது மிக நல்ல செய்தியாகும். அவர்களின் விளை பொருட்கள் விலை உயர்வதனால் கூடிய லாபத்தை பெறுவார்கள். மேலும் இன்று வீதிகளில் சென்று வரும் எல்லா பெட்ரோல் வாகனங்களும் 10 சதவீதம் வரை எத்தினோல் கலந்த பெட்டோலில் செலுத்த முடியும்.

**தீமைகள்:** சில வல்லுனர்கள் எத்தினோல்-லிலிருந்து பெறப்படும் சக்தியிலும் கூடிய சக்தியை அது பெறுவதில் செலவிட வேண்-டியுள்ளது எனச் சுட்டிக்காட்டியுள்ளார்கள். இன்னும் சிலர் எத்தினோல் பெறுவதற்காக பெருமளவு நிலத்தில் சாகுபடி செய்யவேண்டி-யுள்ளதால் சுற்றாடலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தலாம் என அச்சம் தெரிவித்துள்ளனர்.

**எதிர்காலம்:** மலிவாகவும் எழிதாகவும் எத்தினோல் பெறுவதற்கு வேண்டிய தொழில் நுட்பம் வளர்ச்சி பெற பல தசாப்தங்கள் வேண்டிவரலாம்.

## டீசல் - பயோடீசல் கலவை:

செயற்பாடு: பயோடீசல் தாவர எண்ணையி-லிருந்து தயாரிக்கப்படுகிறது, அதனை டீசலுடன் கலப்பார்கள். பெரும் பகுதி கனோலா எனும் தனியத்திலிருந்து தான் இது பெறப்-படுகிறதெனினும் சோளம் போன்ற தானிய வகையிலிருந்தும் Bio diesol பெறப்படுகிறது. இந்த Biodiesol பொரித்த எண்ணையிலிருந்தும் மிள்பெற முடியும் என்பது இதன் சிறப்பாகும்.

**இன்றைய நிலை:** கனடிய அரசாங்கம் 2012ம் ஆண்டிலிருந்து பெட்ரோல் நிலையங்-களில் குறைந்தது 2 சதவீதம் Biodiesol கலந்த டீசல் விற்கப்பட வேண்டும் என சட்டம் இயற்றியுள்ளது.

**நன்மைகள்:** இதுவும் கனடிய சாகுபடி-யாளர்களுக்கு நல்ல செய்தியே கனோலாவின் விலை உயர்வடைகிறது. பையோ டீசல் வாகனத்தில் தேய்ப்பை (friction) குறைப்ப-தனால் வாகனத்தின் பாகங்கள் கூடிய காலம் பாவிக்கக்கூடியதாயிருக்கும்.

**தீமைகள்:** எங்கள் தேவைக்கேற்றவண்ணம் சாகுபடி செய்வது இயலாத காரியமாயிருக் கும் என கணித்துள்ளார்கள். மேலும் சாகு-படிக்குப் பாரிய சக்தி செலவிடவேண்டியி-ருக்கும்.

**எதிர்காலம்:** எங்கள் தேவைகளை குறைப்-பதுடன் வாகனங்களின் தொழில் நுற்ப வளர்ச்சி மூலம் அரசாங்கத்தின் எதிர் பார்ப்பை அடையலாம் என நம்பிக்கை தெரிவிக்கப் பட்டுள்ளது.

## பெட்ரோல்/மின் வாகணம்:

**செயற்பாடு:** இத்தகைய வாகணங்கள் எரி பொருள் மூலம் உந்து சக்தியை பெறுவதுடன் வாகணத்தில் பாரிய மின்கலன் (Battery) ஒன்றும் வைக்கப்பட்டிருக்கும். இந்த மின்-கலன்கள் மீள் சக்தி (Rechargable) பெறக்-கூடியதாயிருப்பதுடன் உந்து சக்தியையும், குளிரூட்டல் கருவி செயற்படவும் உதவும்.

**இன்றைய நிலை:** தற்போது பல ஐபிரிட் (Hybroid) எனப்படும் வாகணங்கள் தயாரிக்-கப்படுகின்றன. இவை மக்களால் பெரிதும் வரவேற்கப்படுகிறதற்கு காரணம் குறைந்த அளவு எரிபொருள் மட்டுமே பாவிப்பது. இவை சுற்றாடலிலும் குறைவாகவே தாக்கத்தை ஏற்படுத்தும். அரசாங்கமும் இத்தகைய வாக-ணம் வாங்குபவர்களுக்கு சலுகைகள் செய் துள்ளார்கள்.

**நன்மைகள்:** இவை பெட்ரோளாலும், மின்-சக்தியாலும் செலுத்தப்பாடுவதால் பெரிதளவில் சந்தைப்படுத்துவதில் மற்றம் வேண்டிவராது. மேலும் குறைக்கவே எரிபொருள் பாவிக்கப் படுவதனால் சுற்றலில் குறைவாகவே பாதிப்-பை ஏற்படுத்துவதனால் வரவேற்கப்படுகிறது. மேலும் நளாந்த செலவும் குறைகிறது.

**தீமைகள்:** பெரும் பிரச்சனை அதன் விலை. மற்றைய வாகணங்களைவிடப் பல்லாயிரம் டொலர்கள் அதிக விலையுடையானவாயுள்ளன.

**எதிர்காலம்:** இன்னும் ஒரு பத்து அல்லது பதினைந்து வருடங்களில் அனேகமான சிறு, மத்தியதரவாகனங்கள் பெட்ரோல் மின் இயக்கவாகணங்களாகவே வரும்.

## மின்னியக்க வாகணம்:

**செயற்பாடு:** மின்னியக்க வாகணங்களில் மின்கலன்கள் காலத்துக்குக் காலம் சக்தி ஏற்றப்பட்டு (Charge) செலுத்தப்படுகிறது. தற்காலத்திலுள்ள மின்னியக்க வாகணம் ஒவ்வொரு 50 முதல் 80 கிலோமீட்டர் தூரத்-தில் 8 மணித்தியாலம் மின் ஏற்றவேண்டிய நிர்பந்தத்தில் உள்ளது.

**இன்றையநிலை:** இன்று டொரன்டோவில் உள்ள ZENN (Zero Emission No Noise) எனும் ஸ்தாபனம் மணிக்கு 40 கிலோமீட்டர் செல்லக்கூடிய வாகணத்தை $15,000ற்கு சந்தைப்படுத்தக்கூடியதாயுள்ளது. ஆனால் கனடிய வீதிச்சட்டம் தனியார் வீதிகளில் மட்டும் பயனிக்க அனுமதி வாங்கியுள்ளது.

**நன்மைகள்:** மின்னியக்க வாகணங்கள் நகரப்புற ஓட்டத்திற்கு மிகவும் சிறந்தது. அவை பெரிதும் சத்தம் செய்யாமலும் குறைந்த செலவிலும் செலுத்தக்கூடியன அவற்றின் செலவை பெட்ரோல் வாகணத்துடன் ஒப்பிடு-கையில் லிட்டர் ஒன்றிற்கு 100 கி.மீட்டர் செல்லும் விலைக்கு ஒத்திருக்கும்.

**தீமைகள்:** நெடுந்தூரம் பயனிக்க முடியாமை ஒரு பெரும் குறையாக உள்ளது. மேலும் அதனை மீள் சக்தியூட்ட பாவிக்கும் மின்சாரம் சுற்றாடல் அசுத்தப்படுவதாக அமையக்கூடும் என்பதாகும், அவை நிலக்கரி எரிப்பதால் மின்சக்தியை பெறுவதாயிருக்கலாம்.

**எதிர்காலம்:** பல உற்பத்தியாளர்கள் மின்-னியக்க வாகணங்களை போட்டிபோட்டுக் கொண்டு தயாரிக்கிறார்கள். சிலர் நெடுஞ்-சலைகளில் பயனிக்கக்கூடிய வாகணங்களை செய்வதில் முனைவாக உள்ளார்கள்

## எரிகலன்:



செந்தூரன் புனிதவேல்
- காப்புறுதி முகவர் -

**செயற்பாடு:** இவை பல வாயுக்களை கொண்டு மின் சக்தியை உற்பத்தி செய்கின்-றன. குறிப்பாக ஐதரஜன் வாயுவை மின் உற்பத்திக்கு பாவிக்கிறார்கள்.

**இன்றைய நிலை:** கனடியன் நிறுவனங்கள் எரிகலன் தயாரிப்பதில் உலகில் முன்னனி வகிக்கிறார்கள். இவை பேருந்துகளில் பாவிக்-கக் கூடிய அளவிற்கு தயாரித்திருப்பினும் பெருமளவில் தயாரிப்பதில் பல முட்டுக்கட்டை-களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

**நன்மைகள்:** ஐதரஜனை பாவித்து மின் சக்தியை பெறுகையில் எச்சமாக மிஞ்சுவது நீராவியே. இது சுற்றாடலை ஒரு விதத்திலும் அசுத்தம் செய்யாது.

**தீமைகள்:** இவற்றின் உற்பத்திச் செலவு மிக அதிகமாயுள்ளது ஒரு பெரும் குறையாகும். இன்றைய நிலையில் ஒரு வாகனம் பல-நூறாயிரம் விலையுடையதாயிருக்கும். அதவது நீங்கள் வாங்குவதயிருப்பின்.

**எதிர்காலம்:** காலாகாலத்தில் இவற்றை மலிவாக தயாரிக்கவேண்டிய தொழில் நுட்பத்-தை பெற்றால் பின் இத்தகைய வாகணங்கள் மலிந்து காணலாம்.

இது ஓர் அறிமுகம் மட்டுமே.


senthuran.punithavel@thaiveedu.com

■ ■ ■

KESAVAN LAW OFFICE

இலவச ஆரம்ப ஆலோசனை
மாலை, வார இறுதி நாட்களிலும்
சந்திக்கலாம்

- Real Estate
- Business Law
- Immigration Law
- Family Law
- Last Wills
- Power of Attorney
- Affidavits



சட்டம் சம்பந்தமான சகல
தேவைகளுக்கும்
கேசவன் சட்ட நிறுவனம்

THANGAVEL M. KESAVAN
(Barrister & Solicitor)

Tel: 416-754-9843
Fax: 416-754-2362

5200 Finch Ave. East, Unit 302,
Scarborough, ON M1S 4Z5
(Middlefield & Finch)
Web: www.lawyers.com/kesavanlaw
E-Mail: kesavanlawoffice@bellnet.ca

ABC Private Tutoring & Homework Help

**French -** For grade 4 to grade 10 By a native French speaking teacher from France **Math -** For grade 5 to grade 12 In English or French medium Intersection

Victoria park & Ellesmere

Mr. Shanthakumar

Tel: 647 262 9430

# சமூகச் சந்தைப்படுத்தல் முறை

## (Social Marketing)

- பொன் குலேந்திரன் -

சமூகம் பல விதமான பிரச்சினைகளை எதிர்நோக்குகிறது. சுவையான உணவில் தான் ஆபத்து அதிகம். உதாரணத்துக்கு சுவையான ஐஸ் கிரீம் தேகநலத்திற்கு உகந்ததல்ல. அதே போன்று உணர்ச்சியைத் தூண்டும் குடிபானம், புகைத்தல், போதை மருந்து என்பன உடலுக்கு நல்லதல்ல. இவற்றால் எற்படும் தீங்குகளை அதிகமாக மக்கள் அறிந்திருப்பதில்லை. அதுவே அவர்களது ஆயுளைக் குறைக்கிறது என்பது அவர்களுக்கு தெரிவதில்லை. ஒரு சமூகத்தின் சராசரி ஆயுட்காலம் குறையும்போது நாட்டின் உற்பத்தி பாதிப்படைகிறது. அதனால் பொருளா தார வளர்ச்சி தாக்கத்துக்கு உள்ளாகிறது.

உற்பத்தியாளர்கள் தமது முதலீட்டாளர்களைத் திருப்திப்படுத்த பல விதமான பொருட்களை தயாரித்து மக்களுக்கு வழங்குகிறார் கள். அதானால் சமூகத்தில் ஏற்படும் விளைவு களைப்பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை. பல பொருட்களும், சேவைகளும் சமூகத்தில் மக்களிடையே பெரிதளவில் தாக்கத்தை உண்டாக்குகிறது. உதாரணத்துக்கு வெகு வேகமாக ஓடும் மோட்டார் வாகனம் விபத்துகள் ஏற்பட ஏதுவாகிறது. சூழல் பாதிபபடைகிறது. சிகரட் உற்பத்தியினால் மக்களின் தேக நலம் பாதிக்கப்படுவதுமட்டுமன்றி புற்றுநோய், இருதய நோய் பரவ ஏதுவாகிறது. ஆரம்பத்தில் புகைத்தோம், சிலவருடங்களுக்கு பின்னர் அதை கைவிட்டுவிட்டோம் என்று சொல்வதால் பயனில்லை. அதன் தாக்கம் பின்னரும் தெரியும். அதே போன்று மக்டொனல்ட், கென்டக்கி சிக்கன் போன்ற உணவுவகைகளும், கொக்கோ கோலா போன்ற பானங்களும் உடல் நலத்திற்கு ஏற்றவையல்ல. ஆனால் அவற்றைப் பெரும் பாலும் இளம் சமுதாயம் விரும்பி உண்பதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. இது போன்று குழந்தைகளுக்கெனத் தயாரிக்கப் படும் விளையாட்டுப் பொருட்கள் பல தீங்கை விளைவித்ததினால் பல நாடுகளில் தடைசெய்யப்பட்டுள்ளதை நாம் அறியக்கூடியதாக இருக்கிறது. உதாரணத்துக்கு வன்முறையைத் தூண்டும் ஏ.கே 47 போன்ற துப்பாக்கி விளையாட்டு பொருட்கள் சிறுவர்களுக்கு உகந்தாக இல்லை என்பதை பல பெற்றோர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். இவை போன்ற பல பொருட்களை உற்பத்தி செய்வதினால் பொருளாதாரமும், வேலை வாய்ப்பும் அதிகமானாலும் சமூகத்திற்கு அவற்றால் ஏற்படும் தீங்கு அதை விட அதிக மடங்காகும். இதனால் சமூகச் சந்தைப்படுத்தல் முறை என்ற கோட்பாடானது 1970ல் சந்தைப்படுத்தும் துறையில் பேராசிரியரான பிலிப் கொட்லர் (Philip Kotler) என்பவரால் முன்வைக்கப் பட்டு இன்று பிரபல்யமாகிவருகிறது.

### சமூகச் சந்தைப்படுத்தல் முறை என்றால் என்ன?

சமூகத்தில் பாதிப்படைந்த ஒரு குறிக்கப் பட்ட மக்களுக்கென அவர்கள் பாதிக்கப்பட்ட பிரச்சினையை ஆராய்ச்சி செய்து, அதன் காரணங்களை அறிந்து, நிவர்த்தி செய்யும் வழியினைத் திட்டமிட்டுச் செயல்படுத்தி, செயற்பாடு சரிவர இயங்குகிறதா, மக்கள் அதனை ஏற்று பயனடைகிறார்களா என்பதை அவதானித்து கட்டுப்படுத்துவதே சமூகச் சந்தைபடுத்தும் முறை என்பதின் விளக்கமாகும். இந்த முறையில் சந்தை ஆராய்ச்சி மூலம் எந்தப் பகுதி மக்கள் வெகுவாக பாதிப்படைகிறார்கள், அதன் காரணம் என்ன என்பதை முதலில் அறிவது அவசியமாகிறது. பரம்பரை பரம்பரையாக இருந்து வந்த அறியாமையும், வெகு காலம் சமூகத்தில் இருந்துவந்த கலாச்சாரத்துடன் தொடர்புள்ள மூடநம்பிக்கையும், சரியான தொடர்பின்மையும் காரணங்களாக இருக்கலாம். உதாரணத்துக்கு கட்டுப்பாடற்ற தாம்பத்திய உறவினால் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரிக்கலாம். வருமானம் குறைந்த குடும்பம் அதனால் பாதிப்படையலாம். குழந்தைகளைப் பெற்றால் மட்டும் போதாது அவர்களை நல்ல சூழ்-

நிலையில், நல்ல ஆரோக்கியத்துடன் வளர்த்து சமூகத்திற்கு உபயோகமுள்ளவர்களாக உருவாக்குவது பெற்றோரின் கடமை. பின் தங்கிய சமூகத்தினர் தமது மூதோர் பல குழந்தைகளைப் பெற்றவர்கள் ஆகவே தாமும் அதே வழியினைப் பின்பற்ற வேண்டும் என்ற கருத்துள்ளவர்கள் பலர் சமுதாயத்தில் உண்டு. கட்டுபாடில்லாது பல பெண்களுடன் உறவு வைப்பதினால் எயிட்ஸ் போன்ற பாலியல் நோய்கள் பரவ காரணமாகிறது. இன்று சிம்பாப்வே, தென் ஆபிரிக்கா போன்ற நாடு களில் இந்நோய் கட்டுக்கடங்காமல் போய் கொண்டிருக்கிறது. பால் உறவின்போது ஆண் பெண்கள் பாவிக்கும் பாதுகாப்பிற்கான உறை போன்றவை பற்றி மக்கள் தெரிந்து வையாமையே நோய் பரவ ஏதுவாகிறது. ஆனால் அவர்கள் பல காலம் கடைப்பிடித்து வந்த பழக்கத்தை மாற்றுவது என்பது அவ்வளவு இலகுவான காரியமில்லை.

சமூகச்சந்தைப் படுத்தல் ஆதாயத்தை குறிக் கோளாகக் கொண்டு நடத்தப்படுவதில்லை. மக்களின் நலன்களை கருத்தில் கொண்டு, வாழ்நாட்களை அதிகரிக்கவும் நோயற்ற வாழ்வு வாழ்வதற்குமே செயல்படுத்தப்படும் முறையாகும். அறியாமையைப் போக்குவது மட்டுமே நோக்கமல்ல. பல காலமாக கடைப்பிடித்து வரும் பழக்கத்தையும், போக்கினையும் மாற்றுவதே முக்கிய நோக்கமாகும். இந்த செயல் முறையினை அமுல்படுத்த, வணிகத்தில் பாவிக்கப்படும் சந்தைப்படுத்தும் கோட்பாடுகளை நாடுவது அவசியமாகிறது.

### சமூகச் சந்தைப்படுத்தலும் பொருளைச் சந்தைப்படுத்தலும்

தேகநலத்தினைக் காப்பதனை கருவாகக் கொண்டு சந்தைப்படுத்தலும் பொருளை விற்பனை செய்வதும் பல விடயங்களில் பொதுவானவையாகவிருந்தாலும் பல வித்தியாசங்களும் அம்முறைகளுக்கிடையே உண்டு. தேகநலத்திற்கான பிரச்சாரம், முக்கியமாக வாடிக்கையாளர்கள் கடைப்பிடிக்கும் பழக்கத்தை மாற்றுவதற்காக நடத்தப்படும். ஆனால் பொருள் விற்பனை வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய நடத்தப்படுபவை. மேலும் மேலும் அதிக வாடிக்கையாளர்கள் அப்பொருளை வாங்க தூண்டும் விதத்தில் சந்தைப்படுத்தும் முறை அமையும். இதில் சிகரட் உற்பத்தியாளர்கள் புகைக்கும் பழக்கத்தை தூண்டும் விதத்தில் தமது சந்தை முறையைச் செயல்படுத்துவார்கள். சந்தையின் பங்கு சிறிதளவு கூடினால் அதுவே உற்பத்தியாளர்களுக்கு பெரும் இலாபத்தை கொடுக்கும். சமூகச் சந்தைப்படுத்தல் மக்க ளின் தேகநலத்தின் நலம் கருதி ஆதாயமின்றி செயல்படுகிறது. சமூக சந்தைப்படுத்தும் முறை புகைத்தலுக்கு எதிராக இயங்கும். ஆதலால் ஏற்படும் தீங்கினைச் சுட்டிக்காட்டும். அதோடு மட்டுமன்றி சூழல் பாதுகாப்பினை கருவாகக் கொண்டு வாடிக்கையாளர்கள் கடைப்பிடிக்கும் முறையினை மாற்றும் விதத்தில் அமையும். ஆனால் தமது சந்தை

71ம் பக்கம் பார்க்க...



# உங்களுடைய நலனுக்காக பணிபுரியும் ஒரு காப்புறுதி முகவரைத் தேர்வு செய்யுங்கள்

## காப்புறுதி நிறுவனத்தின் நலனுக்காக பணிபுரிபவரை அல்ல...

ஒரு ஆயுட்காப்புறுதியைத் தேர்வு செய்வதற்கு முன் சரியான முறையில் திட்டமிடுங்கள். உங்களுக்கு எவ்வளவு தொகைக்கு ஆயுட்காப்புறுதி தேவை? எவ்வளவு தொகையை உங்களால் செலுத்தமுடியம்? எவ்வளவு காலத்துக்கு செலுத்தமுடியும்? மாதாந்த கட்டுத்தொகையில் மாற்றம் ஏற்படுமா? என்பவற்றை சரியான முகவரின் ஆலோசனையுடன் திட்டமிட்டு தேர்வு செய்யுங்கள். இதனால் நீங்கள் அடிக்கடி காப்புறுதியை மாற்றவேண்டி வராது.

- நிதி மற்றும் காப்புறுதித் துறையில் 25 ஆண்டுகால கனடிய அனுபவம்
- 3000க்கும் மேற்பட்ட பூரண மனத்திருப்பதியுடன் கூடிய வாடிக்கையாளர்கள்
- பல முன்னணி காப்புறுதி நிறுவனங்களுடனான சேவை
- 40க்கும் மேற்பட்ட தரமான காப்புறுதி முகவர்களை உருவாக்கியவர்
- அனுபவம், அறிவு, நம்பிக்கையுடன் கூடிய சேவை



ROYAL BROKERS Corporation

# Siva Kandiah

Insurance & Investments Broker

Cell: **416.315.8100**

80 Nashdene Rd., Unit 25&26, Toronto, ON M1V 5E4
Tel: 416.298.4722, Fax: 416.298.4664
E-mail: sivakandiah@royalbrokers.com

RBC Insurance
Manulife Financial
Canada Life
Assumption Life
INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.

-digi Media-

# Timing Belt மோசமாகிவிட்டதா?



அதீசன் சர்வானந்தன்

### கழிவுப்புகை கசிந்தொழுகுதல்

உங்கள் வாகனத்தின் கழிவுப்புகைக் குழாய் (Musffler) மிகவும் முக்கியமான பாகம். ஏனென்றால் என்ஜினினால் எரிபொருள் எரிக்கப்பட்ட பின் கழிவு வாயுக்கள் அதன் மூலம் தான் காரிலிருந்து வெளியேறும். கழிவுப்புகை குழாயில் ஏதாவது சேதம் அல்லது துவாரங்கள் ஏற்பட்டிருந்தால் அது உங்கள் காரின் செயல் திறனை மிகவும் பாதிக்கும். அதேவேளை காரினுள் அப் புகைக்கழிவு வெல்லுமாயின் உயிருக்கு ஆபத்துவிளைவிக்கும் Carbon monoxide என்ற நச்சுவாயு கசிந்தொழுகி விடும் என்பதால், கழிவுப்புகை குழாயின் துவாரங்கள் ஏற்பட்டுள்ளனவா என்பதை கண்டு பிடித்து அவற்றை பழுது நீக்குவது மிக முக்கியம்.

### வெளிப்புறத்திலுள்ள சேதம் மற்றும் ஒழுக்குகள்.

கண்ணுக்கு தெரியும் அளவில் வாகனத்தின் கழிவுப்புகை குழாயின் வெளிப்புறத்தில் ஏதாவது சேதம் அல்லது கீறல்கள் உள்ளனவா என்பதை சோதித்துப் பாருங்கள். மேலும் கழிவுப்புகை குழாயின் வால் பகுதியில் கரிப் புகை படிந்துள்ளது என்பதற்கான அறிகுறி தென்பட்டால், ஏதாவது துவாரத்திலிருந்து தான் கரிப்புகை (Carbon) கசிந்தொழுகுகிறது என்று தெரிந்து கொள்ளலாம்.

கார் ஓட்டிச் செல்லும் போது ஏதாவது வேகத்தடை அல்லது செங்குத்தான கல் மீது தட்டி விட்டால், சாதாரணமாக கழிவுப்புகை குழாயின் தான் சேதம் ஏற்படும் இப்படி துவாரங்கள் மற்றும் கீறல்கள் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் கழிவுப்புகை குழாயில் ஒழுக்குகள் ஆரம்பித்துவிடும். வாகனத்தின் அடிப்பகுதி சேதமடைந்தால், அதில் பொருத்தப்பட்டுள்ள Oxygen sensorம் சேதமடைந்துவிடும். அதனால் கழிவுப்புகை குழாயில் நிறைய ஒழுக்குகள் உண்டாகிவிடும். உங்கள் வாகனத்தின் அடிப் பகுதிகளில் துருப்பிடித்துள்ளதா என்பதை சோதியுங்கள். அதனால் துருவினால் அரிக்கப்பட்டு கழிவுப்புகை குழாயின் கசிவுகள் ஏற்பட்டிருக்கலாம். அனேகமாக கசிவுகள் ஒட்டப்பட்ட (welding) இணைப்புகளில் தான் ஏற்படும். எனவே அனைத்து இணைப்புகளிலும் துருப்பிடித்து சேதம் அடைந்துள்ளதா என்று சோதனை செய்யுங்கள்.

### உதறல் மற்றும் சத்தம். (Shaking and Noise)

வாகனத்தின் கழிவுப்புகை குழாயில் கசிவுகள் இருந்தால் வாகனம் சிவப்பு விளக்கில் நிற்கும் போது உதறலுடனும் மற்றும் ஓசையுடனும் காணப்படும். 'பட்' என்ற ஒரு வித்தியாசமான சத்தத்தை வெளியிடும். மேலும் இந்த கசிவு களினால் உரத்த சத்தமும் வாகனத்திலிருந்து உருவாகும். ஆகையால் ஒரு நண்பரை காரில் உட்கார வைத்து என்ஜினின் இயக்கத்தை மெல்ல மெல்ல அதிகரிக்கச் செய்யுங்கள். நீங்கள் வாகனத்தின் hoodஐ திறந்து வெளியில் நின்று கொண்டு வாகனத்திலிருந்து வெளிவரும் சத்தம் ஒழுங்காக ஆழமானதாக அல்லது உரத்த ஓசையுடன் வித்தியாசமானதாக உள்ளதா என்பதை கவனியுங்கள்.


### வாயு மணம் (Gas smell)

உங்கள் காரின் ஜன்னல்கள் மூடிய நிலையில் இருக்கும் போது ஏதாவது ஒரு வாயு மணம் வந்தால், கழிவுப்புகை குழாயில் வாயு கசிந்தொழுகுகிறது என்று அர்த்தம். குளிர்ச்சியான மாதங்களில் ஜன்னல்கள் மூடிய நிலையிலும் மற்றும் சூடான காற்றிற்காக காற்றோட்டத் திறப்புகள் திறந்த நிலையிலும் இருக்கும் போது இந்த வாயு மணத்தை எளிதாக உணர்ந்து கொள்ள முடியும். வாகனத்தின் வெளிப்புறத்தில் மணம் அவ்வளவாக இல்லாவிட்டாலும். நீங்கள் வாகனத்தை ஓட்டிச்செல்லும் போது அதனுள்ளே மணத்தை அதிக அளவு உணர முடியும்.

இதுபோன்ற அறிகுறிகள் தென்படும்பட்சத்தில் ஒரு தரமான வாகனத் திருத்தினரை அணுகி திருத்தவேலைகளை மேற்கொள்ளுங்கள்.

### Timing Belt மோசமாகிவிட்டது என்பதற்கான அறிகுறிகள்

என்ஜினின் valveகளின் timingஐ ஒரு timing belt ஒழுங்குபடுத்தும். ஒரு timing belt திடீரென அறுந்து போனால், சில வகை என்ஜின்கள் பாழாகிவிடும். ஆகையால் உங்கள் கார் பரிந்துரை செய்யபட்ட மைல்களின் எண்ணிக்கையை ஓடி முடித்தவுடன், அல்லது timing belt மோசமாகிவிட்டது என்பதற்கான அறிகுறிகள் உங்களுக்கு தென்பட்டவுடன். அதை நீங்கள் புதிதாக மாற்றுவது தான் சிறந்த தீர்வு.





Interference மற்றும் Noninterference என இரண்டு வேறுபட்ட வகைகளிலான என்ஜின்கள் உள்ளன. ஒரு interference என்ஜின் மீதுள்ள ஒரு timing belt அறுந்து போகவோ அல்லது நழுவி விடவோ செய்தால். என்ஜின் அதிக அளவில் படு மோசமாக சேதமடைந்து, பழுது பார்க்க உங்களுக்கு பெரும் செலவைத் தந்துவிடும். ஆனால் ஒரு Noninterference என்ஜின் மீதுள்ள ஒரு timing belt அறுந்து போனால் என்ஜின் சேதமடைந்தாலும் interference engineக்கு உள்ளது போன்று பழுதுபார்க்க அவ்வளவு செலவு ஆகாது.

### Timing Belt மற்றும் Timing Chain

சிலவகை கார்கள் timing beltஐயும் சில வகைகார்கள் timing chainஐயும் கொண்டிருக்கும். ஒரு timing belt ரப்பரால் செய்யப்பட்டிருக்கும் என்பதால் ஒரு timing chainஐ போன்று வலிமையுடன் இருக்காது, எளிதில் முறிந்துவிடும். ஒவ்வொரு 80,000 மைல்களுக்கு ஒரு முறை timing beltஐ மாற்ற வேண்டும் என்று பரிந்துரை செய்யப்படுகிறன்து. அதே வேளையில் காரின் ஆயுள் காலம் முழுவதும் timing chainஐ மாற்ற வேண்டிய தேவையில்லை என்று சில வாகன நிறுவனங்கள் கூறுகிறன. உங்கள் கார் பற்றிய குறிப்பு புத்தகத்தில் கூறப்பட்டுள்ள பரிந்துரைகளின்படி உங்கள் timing beltஐ மாற்றுங்கள்.

### அறிகுறிகள்: அதிக அளவில் கழிவுப்புகை வெளியேறுதல்.

உங்கள் காரில் ஒரு வித்தியாசமான மாறுபாட்டுடன் அதிக அளவு கழிவுப்புகை வெளியேறினால், உங்கள் timing belt பழுதுடைய நேரிடலாம்.

### காரை start பண்ணுவதில் சிரமம்

உங்கள் கார் பயணம் செய்த தொலைவு (mileage) அதிகமாக இருந்தால் மற்றும் உங்கள் காரை start பண்ணுவதில் சிரமம் ஏற்பட்டால், அனேகமாக உங்கள் timing belt பழுதடைந்து விட்டது என்று கொள்ளலாம்.

### உஷ்ணமான மற்றும் கசிந்தொழுகும் என்ஜின்கள்.

உங்களுடையது பழைய ரபர் timing beltகள் என்றால் உஷ்ணமான வெப்ப நிலையிலும் மற்றும் motor oil படுவதினாலும் எளிதில் உருகிவிடும். உங்கள் காரின் என்ஜின் உஷ்ணமானதாகவும் மற்றும் கசிந்தொழுகவும் செய்தால் timing beltஇன் ஆயுள் குறைந்து விடும். தற்போது வெப்பத்தை தடுக்கும் பொருள்களிலான timing beltகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவைகளுக்கு இந்த பிரச்சினை ஏற்படாது.

### கார் உதறுகிறது.

Valveகள் மற்றும் pistonகளுக்கு தக்கவாறு ஒழுங்காக இயங்கும்படி timing belt சரி நேர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும். Belt பழுதடைந்து சரியாக இயங்கவில்லை என்றால் கார் உதற ஆரம்பித்து விடும்.

### ஒரு Timing Belt Tensioner பழுதடைந்து விட்டது என்று எப்படி தெரிந்து கொள்வது.

ஒரு வாகனத்தில் உட்புறத்தில் இருக்கும் என்ஜினின் ஒரு உறுப்பு தான் timing belt tensioner. Timing belt ஒரே சீரான வேகத்தில் இயங்க இது உதவுகிறது. இந்த tensioner தேய்ந்து போகவோ, உடைந்து போகவோ அல்லது கிழிந்து போகவோ செய்தால், timing beltஐ crank shaftடன் இணைக்கும் gear மற்றும் chain அமைப்புகள் சரியாக வேலை செய்யாது. அனைத்தையும் முழுவதுமாக பிரிந்துப்பார்த்தால் தான் timing belt மற்றும் tensionerஐ சரியாக ஆய்வு செய்யமுடியும் என்பதால், timing belt tensionerஇல் ஏதாவது கோளாறு ஏற்பட்டு சில வித்தியாசமான சத்தங்கள் வருகின்றனவா என்பதை நீங்கள் கூர்ந்து கவனிக்க வேண்டியது அவசியம்.

- ஏதாவது இரைச்சல் ஓசை கேட்கிறதா என்று கவனியுங்கள். நீங்கள் உங்கள் காரை start பண்ணும் போதோ அல்லது அதன் வேகத்தை கூட்டும் போதோ. ஏதோ இரைச்சல் ஓசை வந்தால் tensioner pulley மீது அதிக அழுத்தம் ஏற்பட்டுள்ளது அல்லது அது உடைந்துவிட்டது என்று அர்த்தம்.
- நீங்கள் குறைந்த வேகங்களில் சென்று கொண்டிருந்தாலும் உங்கள் காரின் வேகத்தை நீங்கள் கூட்டும்போது RPMஇல் துரிதமான மாற்றங்கள் ஏற்படுகின்றனவா என்பதை கவனியுங்கள். Tensioner சரியாக வேலை செய்யவில்லை என்றால் உங்கள் காரின் வேகத்தை மெதுவாக அதிகரிப்பது என்பது மிகசிரமமான காரியமாகிவிடும்.
- Oil கசிவுகள் உள்ளனவா என்பதை சோதியுங்கள் crank shaftஇல் அல்லது அதை சுற்றியுள்ள பகுதியில் oil கசிந்துள்ளது என்பதற்கான அறிகுறிகள் தென்பட்டால் tensioner உடைந்து போய்விட்டது அதனால் grease என்ஜினின் உள்ளே கசிந்து விட்டது என்று பொருள்.
- முரணான, ரீங்காரம் போன்ற ஒரு சத்தம் வருகிறதா என்பதை கவனியுங்கள். இப்படி விட்டு, விட்டு வருகிற ரீங்காரம் போன்ற சத்தம் Tensioner bearingகள் தேய்ந்து போகவோ அல்லது பிய்ந்து போகவோ செய்திருந்தால் தான் ஏற்படும்.
- Gearகளை நீங்கள் மாற்றும் போது *'கீச்'* என்ற ஒலி வருகிறதா என்பதை கவனியுங்கள். மித மிஞ்சிய அழுத்தத்தின் கீழ் இருக்கும் ஒரு tensioner தான் gearகளை மாற்றும் போது இந்த மாதிரியான *'கீச்'* என்ற சப்தத்தை எழுப்பும். Tensioner தேய்ந்து போய்விட்டது. அதற்கு பதிலாக புதிதாக ஒன்று மாற்ற வேண்டும் என்பதற்கான அறிகுறியாக இது இருக்கலாம்.

atheesan.s@thaiveedu.com

■ ■ ■

TRAFFIC TICKETS!
● SPEEDING ● STOP SIGN
● RED LIGHT ● ACCIDENT
● CARELESS ● TICKETS
TRAFFIC TICKETS $100 மட்டுமே



CALL
PETER JOSEPH
பீற்றர் ஜோசப்
416.757.7707
416.757.7797
2425 Eglinton Ave, E., Unit 1A
(Kennedy & Eglinton)



HONDA
HELLO.
We're Honda Owners.
The only car we'd give up our old Honda for, is a new 2010 Honda.
We all love to drive our Hondas. We all love Honda's RELIABILITY. Most of all, we love Honda's AFFORDABILITY! And now, this great new 5-year purchase offer cuts financing costs dramatically! So, we're even more anxious to test drive the new 2010 models and take advantage. Join us today!
JUST ANNOUNCED Purchase Financing FOR 5 YEARS 0.9%†
2010 CIVIC
PRICE LOWERED BY $1,000¥
TURN-KEY PRICE‡ $17,420 For Civic DX Sedan
Includes Freight & Fees
LEASE FOR / APR $148* @ NEW OFFER 2.9%£
PER MONTH FOR 48 MONTHS WITH $3,726 DOWN
ON APPROVED CREDIT
Includes $1,430 Freight & Fees
Civic 12
BEST SELLING CAR IN CANADA 12 YEARS IN A ROW*
2010 ACCORD
PRICE LOWERED BY $500¥
TURN-KEY PRICE $26,475 For Accord LX Sedan
Includes Freight & Fees
LEASE FOR /APR $248* @ NEW OFFER 2.9%£
PER MONTH FOR 48 MONTHS WITH $5,286 DOWN
ON APPROVED CREDIT
Includes $1,685 Freight & Fees
2010 CR-V
PRICE LOWERED BY $1,500 ¥
TURN-KEY PRICE $28,015 For CR-V LX 2WD
Includes Freight & Fees
LEASE FOR /APR $268* @ NEW OFFER 2.9%£
PER MONTH FOR 48 MONTHS WITH $5,083 DOWN
ON APPROVED CREDIT
Includes $1,725 Freight & Fees
FIND OUT WHAT HONDA OWNERS ALREADY KNOW.
LOW COST OF OWNERSHIP • HIGH RESALE VALUE • AFFORDABLE • RELIABLE • FUEL EFFICIENT • ADVANCED SAFETY • FUN TO DRIVE!
ATHEESAN (SHAN) SARVANANTHAN
CELL (416) 720-1184
FORMULA HONDA
2240 MARKHAM ROAD, SCARBOROUGH, ONTARIO M1B 2W4. TEL: 416-754-455 EXT.2705, FAX: 416-754-9465
HONDA

# கடந்த மாதத்தில்... நினைவில் நிற்கும் நிகழ்வுகள் சில...

புகைப்படங்கள்: தாய்வீடு பத்திரிகைக்காக கணா ஆறுமுகம் - www.ninaivukal.com








ஒட்டாவா, தேசியத் தலைநகரத் தமிழ்ச் சங்கத்தின் 5வது பனிக்கால வருடந்த ஒன்று கூடல் நிகழ்வில் (புகைப்படம்: உமாகாந் திருஞானம்)

கனடா தமிழர் வர்த்தக சம்மேளனம் 20.02.2010 அன்று நடத்திய 'Quarterly Meeting' நிகழ்வில் (புகைப்படம்: Ken Photos)






தமிழ் மரபுத் திங்கள் நிகழ்வில்








கனடா தமிழர் வர்த்தக சம்மேளனம் நடத்திய 'OPEN HOUSE' நிகழ்வில் (புகைப்படம்: கென் கிருபா)

நீதன் சானின், ரொறன்ரோ மாநகரசபை உறுப்பினர் தேர்தலுக்கான நிதி சேகரிப்பு நிகழ்வில்








மெலிஞ்சி முத்தனின் 'வேருலகு' கனவுகளின் தொகுப்பு நூல் வெளியீட்டு நிகழ்வில்

நாடு கடந்த தமிழீழ அரசு ஆலோசனைக் குழுவினர் நடத்திய தகவல் கூட்ட நிகழ்வில்









**Protest - In front of Indonesian Consulate, Toronto by Canadian HART**

கனடியத் தமிழர் பேரவையின் எட்மன்டன் கிளையின் முதலாவது ஒன்று கூடல் நிகழ்வில்

உங்கள் விழாக்களின் படங்களும் இங்கு இடம்பெறவேண்டுமாயின், விழா பற்றிய விபரங்கள் மற்றும் தொடர்பிலக்கங்களுடன் **events@thaiveedu.com** என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

**உங்கள் நிகழ்வுகளைப் பார்ப்பதற்கும் பதிவதற்கும் www.inayam.net**

# Your life.
# Your career.
# *Your call.*

If you're looking for a career that offers the potential for financial success and have the drive, discipline, energy, and self-confidence to run your own business, then consider becoming a Sun Life Financial advisor. Contact us to learn more about this rewarding career opportunity.



**Chandran Rasalingam**
Sales Manager
Bus 416-412-0401 ext 305
Cell 416-909-0400
Fax 416-412-1438
gnanachandran.rasalingam@sunlife.com

2075 Kennedy Road, Suite 1300
Scarborough ON M1T 3V3

Sun Life Financial

Sun Life Financial advisors are contracted with Sun Life Financial Distributors (Canada) Inc., registered in Quebec as a financial services firm.
© Sun Life Assurance Company of Canada, 2008.


வர்த்தக நிறுவனங்கள் வாங்க, விற்க
Home Life
GTA Realty Inc., brokerage
206-1711 McCowan Road, Scarborough, ON. M1S 3YS
Bus: 416-321-6969 Fax: 416-321-6963
HOMELIFE
HIGHER STANDARDS
Baskaran Sinnadurai
Commercial & Residential Sales Representative
416-880-8585
Medical Office,
Professional Finished
Kennedy/Finch
List: $399,000
BRAMPTON
Bovaird/Chinguacoucy
1,211 Sq Ft
$ 320 for sale OR
$30.00 Per Sq Ft for lease
MARKHAM
$25.00 Sq Ft Net
Markham/Highland
MARKHAM
Riverwalk Dr/9th Line
4 Bedroom 4 Washroom
$629,900
TORONTO
$ 240,000 1,440 Sq Ft
Markham Rd
Steeles Ave


S.P.IMPORTERS
Furniture
SP
அனைத்து தளபாடங்களும் மிக மிக மலிவு விலையில்
NO PAYMENT INTEREST for 1 YEAR
416-266-3077
கொள்வனவு விலையில்
மலிவு விற்பனை
S.P.IMPORTERS
Sealy
Posturepedic
Special Sealy
Mattress on SALE
ஒரே பிளாசாவில் 4 தனிப்பெரும் ஸ்தாபனங்கள்...
2861 Lawrence Ave. East, Scarborough, ON M1P 2S8
(Brimley & Lawrence சந்திப்பில்)

# வரவு செலவுத் திட்டம்

# கனடா தலைமை தாங்கலாம் - தாங்குமா?



ராகுலன்
- Accountant -

## கனடிய தலைமைத்துவம்

வரவிருக்கும் மத்திய அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டத்தில் கனடாவின் இனிவரும் பத்து ஆண்டுகளுக்கு போட்டி போடத்தக்க தகைமையைக் காட்ட முடியும். ஆனால் அதிகமான ஆர்வலர்கள் வரிகளை உயர்த்தி ஒரு பெரிய அரசாங்கத்தை அமைத்து சுருக்க முடியாத நிலைமைக்கு தள்ள விரும்புகிறார்கள். விசேடமாக பொருட்களுக்கும் சேவைகளுக்குமான வரியை உயர்த்த விரும்புகிறார்கள்.

கனடாவானது கடனில் மூழ்கிய நாடுகளைப் போலல்லாது ஒரு நல்ல நிலைமையில் இருக்கின்ற நாடு. வளரும் அரசாங்கக் கடன் பாரிய அரச நிதி நிலைமைகளில் மாற்றங்களைக் கொண்டுவரும். உலகின் பெரிய பொருளாதார நாடுகள் எல்லாம் பெரிய கடன் பாரத்தில் உள்ளன. அவற்றின் கடன் சுமை காரணமாக அரச செலவீனங்களுக்கு நிறையப் பணம் கைவசம் இருக்காது. அதனால் அவை வரிகளை உயர்த்துவதன் மூலம் மக்களின் கைகளில் பணத்தை விடமாட்டா. இதனால் மற்றைய நாடுகளைப் போலல்லாது கனடாவின் மத்திய மாநில மாநகர அரசுகள் நல்ல நிலைமையில் இருக்கின்றன. ஒரு 40 வீதமான தனியார் வளங்களை எடுத்து அரசியல் நடத்தும் பொது வேலைத்திட்டங்களுக்குப் பயன் படுத்தகின்றன.

கடந்த ஆண்டின் பொருளாதாரப் பிரச்சினைகள் அடங்கும் போது சர்வதேச நிலவரங்களின் படி வளர்ந்து வரும் நாடுகள் வளர்ந்த நாடுகளை விட அடுத்த பத்து ஆண்டுகளுக்கு வரி விகிதங்களை குறைவாகப் பேணவும் அரசாங்கக் கடன்களை மொத்தப் பொருளாதாரத்தின் 40 வீதமாகப் பேணவும் முடியும். கனடியர்களின் நிலை இதைவிட நல்ல நிலைமையாகும்.

வளர்ந்த நாடுகளின் கடன் நிலவரம் மொத்தப் பொருளாதாரத்தின் 120 வீதமாக மாற இருக்கிறது. பொருளாதாரப் பின்னடைவுக்கு முன்பிருந்ததைவிட கடன் நிலவரம் 40 வீதம் அதிகமாகும். இது 1990ல் கனடா அடைந்த 110 வீதத்தை விட அதிகமாகும். உலகின் பெரிய பொருளாதாரமான அமெரிக்க பொருளாதாரத்தின் கடன் நிலவரம் 2008இல் 60 வீதமாகவும் 2014ல் அதைவிட இரட்டிப்பாகவும் இருக்கும்.

> “ கடனில் மூழ்கிய நாடுகளைப் போலல்லாது
> கனடா
> நல்ல நிலைமையில் இருக்கின்ற நாடு.
> வளரும் அரசாங்கக் கடன் பாரிய அரச நிதி
> நிலைமைகளில் மாற்றங்களைக் கொண்டுவரும். ”

இந்தக் கடன் பிரச்சினைகளால் வளர்ந்த பொருளாதாரங்கள் இனிவரும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் போகலாம். இதைவிட முதிர்ந்து வரும் சனத்தொகை கூட போட்டிக்கு முகம் கொடுக்கும் தன்மையைக் குறைக்கும். இந்த முதிரும் சனத்தொகை விசேடமாக வட அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் யப்பானிலும் கூடுதலாகக் காணலாம். இந்தப் பிரச்சினை வேலை செய்யக்கூடிய வேலையாட்களின் எண்ணிக்கையிலும் முதிர்ந்தோரது சுகாதார ஆரோக்கிய செலவீனங்களிலும் பாதிப்பை ஏற்படுத்தும். ஓய்வு ஊதியத் திட்டங்களிலும் பாதிப்பை ஏற்படுத்தும். வேலை செய்யும் சனத்தொகை குறையும் போது அது வரி சேகரிப்பிலும் பாதிப்பை ஏற்படுத்தும்.

ஆரோக்கியமற்ற நிதி நிலையுடனும் மேற்கூறிய சனத்தொகைப்பிரச்சினைகளாலும் ஆசியாவினதும் தென்னமெரிக்காவின் பெரிய பொருளாதாரங்களுடனும் போட்டி போடும் தன்மையை வளர்ந்த பொருளாதாரங்கள் இழக்கும். ஆனால் இந்த நிலைமைகள் இன்னும் மக்களின் மீது முதலீடுகளை வேண்டி நிற்கும். ஆனால் தற்போது படும் கடன்கள் அப்பேர்ப்பட்ட முதலீடுகளுக்கு இடைஞ்சலாக இருக்கும். ஆனால் கனடிய அரசாங்கங்கத்தின் நிதி நிலைமைகள் அப்படி பாரதூரமாக இல்லாதபடியால் வினைத்திறனைக் கூட்டும் வகையில் முதலீடுகளைச் செய்யலாம்.

அடுத்த ஐந்து ஆண்டுகளில் மத்திய அரசு வரவு செலவுத்திட்டத்தை சமன் செய்யலாம். சம்பள அதிகரிப்புக்களையும் புதிய செலவீனங்களையும் நிறுத்துவதன் மூலம் 10 பில்லியன் டொலர்களைச் சேமிக்கலாம். தொகுதிகளை வெல்ல பணத்தைச் செலவிடுவதை விடுத்து பொருளாதார முன்னேற்றத்தை நோக்கிச் செலவீனங்கள் இருக்க வேண்டும். பொருளாதார வளர்சியை முன்னெடுத்துச் செல்லும் வகையில் திட்டங்கள் சீர்திருத்தம் செய்யப்பட வேண்டும்.

பலன் தராத ஊக்கிவிப்பு வரிச் சலுகைகளை ரத்துச் செய்ய வேண்டும். பத்து வருடங்களுக்கு முன்னால் முன்னைநாள் ஒன்ராரியோ நிதியமைச்சர் மக்களைக் கேட்டது போல் கடனைக் கட்ட மக்கள் உதவியைக்கூட நாடலாம்.

ragulan@thaiveedu.com

■ ■ ■






# சிந்திக்கச் சில நிமிடம்

விழாக்களுக்குப் பிரதமவிருந்தினர், சிறப்பு விருந்தினர், கௌரவவிருந்தினர் என்று அழைத்து இவர்களுக்காக முன்வரிசையில் ஆசனங்களை ஒதுக்கிவைக்கிறோம். பல ஆசனங்கள் இடைவேளைவரையும், சில ஆசனங்கள் இறுதிவரையும் ஒதுக்கப்பட்ட அடையாளங்களுடன் வெறுமனே காணப்படும். அழைப்பை கௌரவம் செய்து குறித்த நேரத்திற்கு வருகை தந்து விழாவைக் கௌரவிப்பவர்களை ஒதுக்கி வைத்த ஆசனங்களில் அமரச்செய்து கௌரவிக்கலாம்.

●

இறந்தவரின் பூதவுடலைப் பார்வைக்கு வைத்திருக்கும் நேரங்களிலும், இறுதிச் சடங்கு வேளையிலும் பண்ணோடு, அல்லது பக்தியோடு இனிமையாகத் திருமுறைகளைப் பாடக்கூடியவர்கள் இல்லை என்றால் பண்ணுடன் பாடப்பட்ட திருமுறைகள் அடங்கிய இறுவட்டுகளை ஒலிக்கச் செய்யலாம்.

●

எங்கள் திருமணவைபவங்களில் மணமக்களை வாழ்த்துவதற்கு நாங்கள் நீண்ட நேரம் வரிசையில் நின்று பின்னர் உணவு எடுத்து அருந்த எல்லோரும் மீண்டும் நீண்ட வரிசையில் நிற்காமல் அரைப்பங்கினர் வாழ்த்திவிட்டு உண்ணலாம். மிகுதி உணவு அருந்தியபின் வாழ்த்தலாம். நெரிசலும் குறையும் நேரமும் குறையும்.

●

சனி, ஞாயிறு தினங்களில் தாமதமாக எழுந்து தாமதித்து சென்று தரம் குறைந்த பொருட்களைத் தேடி நீண்டவரிசையில் நின்று நேரத்தை விரயமாக்கி வாங்காமல், அங்காடி திறக்கும் நேரத்திற்குச் சென்று அழகாக வரிசைப்படுத்தி வைத்திருக்கும் தரமான பொருட்களைத் தாமதம் இன்றி வாங்கலாம்.



●

வாகனம் ஓட்டும்போது கைத்தொலைபேசி பாவிப்பதைப் பலநாடுகள் தடைசெய்து வருகின்றன. ஆனால் ஓட்டுனர் அருகில் அமர்ந்து இருப்பவரின் இம்சை ஓட்டும் கவனத்திற்கு, கைத்தொலைபேசியை விட பல மடங்கு பங்கம் விளைவிப்பதாக ஆய்வுகள் கூறுகின்றபடியால், அருகில் அமர்பவரின் பேச்சு, செயல் முதலியவற்றிற்கு வெகுவிரைவில் தடைவர வாய்ப்பு உண்டு.

●

**- கதிர் துரைசிங்கம் -**

கணினியும் பரிசோதனை வசதிகளும் வைத்தியர்களை சுயமாகச் சிந்திக்க விடுவதில்லை. நோயாளிதான் வைத்தியரைச் சிந்திக்க வைக்கவேண்டும். விபரமாகவும், விளக்கமாகவும், வியாதிபற்றி எடுத்துரைப்பதும் விதம்விதமான கேள்விகள் கேட்பதும் வைத்தியருக்குச் சுகமாகவும், உங்கள் சுகத்திற்கு ஆதாரமாகவும் அமையும்.

●

எங்கள் பரதநாட்டிய அரங்கேற்றங்களில் நட்டுவாங்கம் தமிழில், பாடல்கள் தமிழில், அரங்கேறும் பிள்ளையின் பெற்றோர் தமிழ் விளங்கவும், வாசிக்கவும் தெரிந்த தமிழர்கள் (சிலர் விதிவிலக்கு) சுற்றத்தவர், பார்வையாளர்கள் யாவரும் தமிழ் விளங்கவும், வாசிக்கவும் தெரிந்த தமிழர்கள் (சிலர்விதி விலக்கு). தமிழ் தெரியாத, தமிழ் விளங்காத சில விதிவிலக்குகளுக்காக, நிகழ்ச்சி நிரலை ஆங்கிலத்தில் மட்டும் அச்சிட்டு அறிவித்தலையும் ஆங்கிலத்தில் மட்டும் செய்யாமல், தமிழ் ஆங்கிலம் இருமொழிகளிலும் நிகழ்ச்சி நிரலை அச்சிட்டு அறிவித்தலையும் இரு மொழியிலும் செய்தால் உலகோரும் வாசித்து அறியவும் கேட்டு விளங்கவும் வசதியாக அமையும்.

kathir.thuraisingam@thaiveedu.com

■ ■ ■

# பதகளிப்பு ஒழுங்...

53ம் பக்கத் தொடர்ச்சி...

படுகின்றது என்பதை ஆய்வுகள் நிரூபிக்கவில்லை.

## காரணம்:

பதகளிப்பு ஒழுங்கீனங்கள் குடும்பத்தில் நடைபெறும் நிகழ்வுகள் மற்றும் உடலியல் காரணங்களினால் ஏற்படுகின்றது. சிறு பிள்ளைகள் பிறப்பிலிருந்தே அல்லது பழக்கமில்லாத சூழலில் வெட்கப்படுபவர்களாக இருந்தால், அவர்கள் பதகளிப்பிற்கு உட்படும் சாத்தியம் அதிகமாக இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. சில ஆய்வுகளின்படி உடலில் சில இரசாயன சமநிலையின்மை ஏற்படுவதால் பதகளிப்பு ஏற்படுகின்றது என கூறப்படுகின்றது. வேறு சில ஆய்வுகளின்படி, ஹோமோன் மற்றும் சுவாசதொகுதி செயற்பாடுகளின் காரணமாக பதகளிப்பு ஏற்படுவதாக கூறப்படுகின்றது. முன்பே கூறியபடி மரபணுக்கள் காரணமாக இருக்கலாம் எனக் கூறப்படுகின்ற போதும், இது இன்னமும் நிரூபிக்கப்படவில்லை.

## நோயைக் கண்டறிதல்:

ஒரு சிறு பிள்ளை அல்லது வளரிளம் பிள்ளை பதகளிப்பு ஒழுங்கீனத்தைக் கொண்டிருக்கின்றதா என்பதை அறிவதற்கு எவ்வளவு காலத்திற்கு ஒருதடவை இத்தகைய பதகளிப்பை வெளிக்காட்டுகின்றது, இதனை நீக்குவதற்கு முயற்சி செய்த போதும் இத்தகைய தன்மைகளை தொடர்ந்தும் வெளிக்காட்டுகின்றதா போன்ற தகவல்கள், சிகிச்சையளிக்கும் நிபுணர்களுக்கு தேவைப்படுகின்றன. பிள்ளையின் வயதிற்கு இத்தகைய பயங்கள் சாதாரணமானதா, பிள்ளையின் நாளாந்த வாழ்க்கைச் செயற்பாடுகளை இவை எந்தளவில் பாதிக்கின்றன என்பதை இவர்கள் மதிப்பிடுவார்கள். பிள்ளையின் வாழ்க்கைச் சூழலைச் சுற்றியிருக்கும் வளர்ந்தோர், பிள்ளைகளது வாழ்க்கை நிலைமைகளையும் பற்றி கூர்மையாக ஆராய்வர். பலவகையான சிகிச்சை முறைகளை இணைந்து பெற்றுக் கொள்வதன் மூலம் இத்தகைய பிள்ளைகள் பயனடைவர்.

## சிகிச்சை:

### அறிதல் - நடத்தை சிகிச்சை (Cognitive – behavioural treatment – CBT)

இதில் இளம் பிள்ளைகள் தாம் சிந்திப்பது மற்றும் தமது நடத்தைகளை மாற்றிக் கொள்வதன் மூலம் பதகளிப்பை சரியான முறையில் கையாளும் முறைகளைக் கற்றுக் கொள்வர். இதன் மூலம் பதகளிப்பைக் கட்டுப்படுத்தி சாதாரண வாழ்க்கை வாழ அறிந்து கொள்வர். CBT என்பது பிள்ளைகளுக்கு அறிவைக் கொடுக்கும் ஒரு சிகிச்சையாகும். இதனுள் ஆரோக்கியமற்ற, எதிர்மறையான நம்பிக்கைகளையும் (Negative beliefs) நடத்தைகளையும் கைவிடுவதற்கும், அவற்றுக்குப் பதிலாக நல்விளைவுகளைத் தரக்கூடிய நடத்தைகளையும், நேரான சிந்தனைகளையும் (Positive thinking) அத்துடன் பதகளிப்புடன் தொடர்புடைய உடலியல் ரீதியான உணர்வுகள், எதிர்மறையான சிந்தனைகள், பிரச்சனை தரக்கூடிய நடத்தைகளை எவ்வாறு சமாளிப்பது என்பதும் கற்றுக் கொடுக்கப்படுகின்றது. CBT மூலமாக இளம் பிள்ளை ஒருவர் பதகளிப்பை ஏற்படுத்தக் கூடிய நிலைமைகளை படிப்படியாக கட்டுப்படுத்தக் கூடிய முறைகளை அறிந்து கொள்வார்.

### பதகளிப்பை உருவாக்கிக் கட்டுப்படுத்தல்

பதகளிப்பு ஏற்படக் கூடிய சூழ்நிலைகளை செயற்கையாக உருவாக்கி அதற்கு பதில் தாக்கம் ஏற்படுவதை கட்டுப்படுத்தல் (Exposure and Response Prevention – ERP)

பதகளிப்பை ஏற்படுத்தக் கூடிய நிலைமைகளை ஓர் கட்டுப்பாட்டு சூழலில் ஏற்படுத்தி அதனை எவ்வாறு கையாள்வது என்பதை கற்றுக் கொடுத்தல். இச் சிகிச்சை மூலம் நோயாளிகள் இச் சந்தர்ப்பத்தில் எவ்வாறு நடந்து கொள்வது என்பதை படிப்படியாக கற்றுக் கொள்வதால் இறுதியில் எத்தகைய நிலையிலும் பதகளிப்படைவதை கைவிட்டு விடுவர்.

- பழக்கத்தை மாற்றும் பயிற்சி (Habit Reversal Training – HRT)
- மனதை ஓய்வாக வைத்திருக்கும் நுட்பங்கள் (Relaxation techniques)
- உடலியல் பின்னூட்டல் (Biofeedback) (தசைப்பையும் தசைநார் பதட்டத்தையும் கட்டுப்படுத்துவதற்கானது)
- குடும்ப சிகிச்சை (Family therapy)
- பெற்றோருக்கு அறிவூட்டல் (Parent training)
- மத்திய நரம்புத் தொகுதியிலும் (Central nervous system) மூளையிலும் நேரடியாக லேலை செய்யக்கூடிய மருந்துகள் இள வயதினரை அவர்கள் நாளாந்த வேலைகளை அமைதியாகச் செய்வதற்கு உதவு முகமாக கொடுக்கப்படலாம்.


இக் கட்டுரைத் தொடரில் கூறப்பட்டுள்ள அறிகுறிகள், உங்களில் அல்லது நீங்கள் கரிசனை கொண்டவரில் காணப்பட்டு அது பற்றிய மருத்துவ அறிவுரைகள் பெற்றுக் கொள்ள விரும்பினால் தயவு செய்து உங்கள் குடும்ப வைத்தியரை அல்லது வைத்திய நிபுணரை அணுகுங்கள்.

உசாத்துணை:
www.nationalyouth.com/mooddisorders.html
www.anxietydisordersontario.ca
www.canmat.org
www.macanxiety.com
www.socialphobia.org
www.kidsmentalhealth.ca

jeevathisairajah@thaiveedu.com

■ ■ ■


கனடிய தமிழ் வழக்கறிஞர்



The Law Office of
Raphael Maharaja
Barrister & Solicitor

Tel: 416-847-7077
416-847-7093 (Injury Claims)
Fax: 416-847-7088

GTA SQUARE
5215 Finch Ave, East, Unit 219
Toronto, Ontario, M1S 0C2 (Middlefield & Finch)

www.maharajalaw.com


# INCOME TAX

**Keele & Finch**
1315 Finch Ave. West, Unit 407
647-885-3012

**Markham & Denision**
23 Taplane Dr.
416-494-4777

LIFE INSURANCE | CRITICAL ILLNESS INSURANCE
NON MEDICAL INSURANCE | RESP | RRSP

- **ஆயுட்காப்புறுதி**
  10, 15 அல்லது 20 வருடங்களில் செலுத்தி முடிக்கலாம்
- **வயோதிபர்களுக்கான காப்புறுதி**
  மருத்துவ பரிசோதனை எதுவும் இல்லாமல் பெற்றுக்கொள்ளலாம்.
- **கொடிய நோய்களுக்கான காப்புறுதி**
  காப்புறுதித் தொகையைப் பெற்றுக்கொள்ளலாம் அல்லது கட்டிய பணம் முழுவதும் திரும்பப் பெறலாம்.
- **குழந்தைகளின் உயர்கல்விக்கான சேமிப்புத்திட்டம்**
  20% அரச மானியத்துடன் எமது நிறுவனத்தால் 15% சலுகையும் வழங்கப்படும்.
- **ஈட்டுக்கடன் காப்புறுதி**
  Mortgage Insurance



Apex Creations - 416-297-0707

**வசந்த் விநாயகமூர்த்தி**
காப்புறுதி முகவர்
**647-885-3012**

LiLAND INSURANCE INC. | IA INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.

759 Warden Ave. Toronto, ON. M1L 4B5 Tel : 416-759-5453 ext. 362


# சமூகச் சந்தைப்...

62ம் பக்கத் தொடர்ச்சி...

முறை மூலம் நிச்சயமாக தாம் குறி வைத்த நோயானது பழக்க வழக்கத்தை மாற்றினால் முற்றாக தீரும் என உறுதி செய்யமுடியாது. உதாரணத்துக்கு பல வருடங்கள் சிகரட் புகைத்த ஒருவர் புகைத்தலை நிறுத்தினால் இருதயம் தாக்கத்திற்கு உள்ளாகாது என உறுதி அளிக்க முடியாது. ஆனால் பொருளை சந்தைப்படுத்தும் முறைமூலம் தாம் உறுதி செய்த பயன்களை வாடிக்கையாளர்கள் பெறலாம் என்பது ஓரளவுக்கு நிச்சயமாகிறது. அதனால் சந்தைப் பங்கு அதிகரிக்கிறது. சமூகச் சந்தைப்படுத்தும் முறையினால் ஏற்படும் விளைவுகளை அறிய அதிக காலம் எடுக்கும். அந்த முறை மூலம் விற்பனை செய்யப்படும் பயன்கள், சூழ்நிலை பாதுகாப்பதனை நோக்கமாகக் கொண்டவை. இதற்கு மாறாக, பொருளை விற்பவர்கள் குறிப்பிடும் பயன்களை உடனடியாக உணரக் கூடியதாக இருக்கும்.

வாடிக்கையாளர்களுக்கு தக்க காரணங்களைக் காட்டி விளைவுகளை எடுத்துச் சொல்லி, நம்பிக்கையை உருவாக்குவது சமூகச் சந்தைப்படுத்தல் முறையில் முக்கியமானதொன்றாகும். சந்தைப்படுத்துவதினால் அவர்களுக்கு ஆதாயம் ஏதும் கிட்டுவதில்லை என்பதை வாடிக்கையாளர்கள் உணரவேண்டும். இது ஒரு சமூக சேவை என்பதை அவர்கள் அறியவேண்டும்.

சமூகச் சந்தைப்படுத்தும் முறையினை செயல் படுத்த தேவையான வரவு செலவுத் திட்டம் குறைந்தளவே. பல தொழிற் ஸ்தாபனங்களின் நிதி உதவியும், தொண்டர்களின் கடுமையான உழைப்பும் வெற்றிக்கு வழி வகுக்கிறது. இவ்வரவு செலவுத் திட்டத்துடன் ஒப்பிட்டும் பார்க்கும் போது பொருளைச் சந்தைப்படுத்த தேவைப்படும் வரவு செலவு திட்டம் அதிகமானதே.

சந்தைப்படுத்த முதல் சமூகத்தில் நிலவும் பிரச்சினை எது, எந்தப் பகுதி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள், பிரச்சினை உருவாகுவதற்கு காரணம் என்ன போன்ற கேள்விகளுக்கு முதலில் ஆராய்ச்சி மூலம் பதில் காணவேண்டும். சமூகத்தை பாதிக்கும் பிரச்சினைகள் பல. உதாரணத்துக்கு நோய்களை பொறுத்தமட்டில் தற்பொழுது உலகில் முக்கியமானதா கருதப்படுவது எயிட்ஸ் வியாதி. ஒரு காலத்தில் இதன் பெயரோ, விளைவுகளோ மக்களுக்கு தெரியாது. காச நோய், பால்வினை நோய்கள், சின்னம்மை, பெரியம்மை போன்றவை பல்லாயிரக் கணக்கான மக்களின் உயிர்களை அழித்தன. ஆனால் மக்களுக்கு அந்நோய்களைப் பற்றி எடுத்துச்சொல்லி எவ்வாறு தம்மைப் பாதுகாத்து கொள்ளவேண்டும் என எடுத்துச் சொன்னதால் அந்நோய்களின் உக்கிரம் குறைந்தது. அதோடு மட்டுமன்றி அந்நோய்களுக்குத் தேவையான மருந்துகளும் உற்பத்தி செய்ய வழிவகுக்கப்பட்டது. ஆனால் தற்போது எயிட்ஸ் நோயினைப் போன்று, இருதய நோய், பவிதமான புற்று நோய்கள், வைரஸ்களால் தோன்றிய சார்ஸ் போன்ற நோய்கள் சமூகத்தில் பீதியைக் கிளப்பியுள் ளது. இவை தோன்றியதற்கான காரணம் முக்கியமாக அறியாமையே. அதனால் சமூகச் சந்தை முறையில் மக்களின் அறியாமையைப் போக்குவதை குறிவைத்து நடத்தப்படுகிறது. புகைத்தல், தேக நலத்தைப் பாதிக்கும் கொழுப்பு சத்துள்ள உணவை வகைகளை உண்ணுதல், கடுமையாக உழைத்து இரத்த அழுத்தத்தை உருவாக்கல், நீரிழிவு, போன்ற வியாதிகள் தோன்ற ஏதுவாகிறது. காலத்தோடு கலாச்சாரம், பழக்க வழக்கங்கள் மாறுகிறது. வசதிகள் கூடும்போது மனிதன் சோம்பேறியாகிறான். புதுப்புது வியாதிகள் உருவாகிறது. அதோடு மட்டுமன்றி உற்பத்தியாளர்கள் புதுப் பொருட்களை விற்பனை செய்வதன் மூலம் அவற்றின் தாக்கம் தேகநலத்தைப் பாதிக்கிறது. இதனாலேயே சமூக நலத்தைப் பேண புது சந்தைப்படுத்தும் முறை உருவாகியுள்ளது.

வியாதிகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் மட்டுமன்றி மற்றைய ஒழுக்கம், சூழ்நிலை தொடர்புள்ள சிக்கல்களைத் தீர்ப்பதற்கு இச்சந்தை முறை பயன்படுகிறது. புகை பிடித்தல், கருத்தடை, மீண்டும் பாவித்த பொருளைப் பதப்படுத்தல் ( Recycling of goods), சூழலை அசுத்தப்படாது காத்தல், போக்குவரத்தினால் ஏற்படும் விபத்தினைக் குறைத்தல், இன வெறியைத் தவிர்த்தல், பெண்கள், முதியோர், குழந்தைகள் போன்றவர்களை துன்புறுத்துவதை நிறுத்தல், போதை மருந்து பாவிப்பதை தவிர்த்தல் போன்ற சமூகப் பிரச்சினைகளுக்கு வழிகாண சந்தை படுத்தும் முறையில் முக்கிய கலவையான இடம், பொருள், விலை, விளம்பரம், நிலைப்படுத்தல் (Positioning) போன்றவற்றை பாவித்தல் அவசியமாகிறது.

## ஒன்பது P உள்ளடக்கிய சந்தைக் கலவை

பொருளைப் பொருத்தமட்டில் தோற்றமுள்ள தொன்றாகவும் தொட்டு உணரக் கூடியதாகவும் இருக்கவேண்டும் என்பது அவசியமில்லை. சேவையாகவும் சந்தைப்படுத்தும் பொருள் இருக்கலாம். கருத்தடைக்கு பாவிக்கும் உறை, இலவச பரிசோதனைகள், தாய்ப்பால் கொடுப்பதைப்பற்றி விபரம், இருதய நோயினைத் தவிர்பதற்காக வழிவகைகள், தேகாப்பியாசம், உண்ணும் உணவுகள் உள்ளடங்கிய விபரங்கள், சூழலைப் பாதுகாக்கும் முறைகள் போன்ற விபரங்கள் உள்ளடக்கிய துண்டு வெளியீடுகள் ஆகியன உள்ளடங்கும். இதில் முக்கியமாக கருத்தில் கொள்ளவேண்டியது சமூகத்தில் மக்களை எவ்வளவுக்குப் பாதித்துள்ளது என்பதும் அவர்கள் அதற்கு பரிகாரம் காண வேண்டிய நிலையை அடைந்திருக்கிறார்கள் என்பதேயாம்.

சந்தைப்படுத்துவோரின் நோக்கம் மக்களைப் போயடைய முக்கியமாக ஊடகங்களில் விளம்பரமும், மக்கள் தொடர்பும் அவசியம். கலந்துரையாடல், பட்டறைகள், வைத்தியர்களின் நோய்பற்றிய விளக்க உரைகள் போன்றவற்றை ஒழுங்கு செய்தல் வேண்டும்.

இவை நான்கோடு சமூக சந்தைப்படுத்தல் முறையில் மக்களையும் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும். இங்கு சந்தைப்படுத்தும் வெளிக் குழுக்களும் உட் குழுக்களும் உள்ளடங்கும். வெளிக் குழுக்களில் பொருளை அடைய வேண்டிய மக்கள், அதைப் பற்றி அறிய விரும்பும் மக்கள், திட்டமிடுவோர் உள்ளடங்குவோர். உட் குழுக்களைச் சார்ந்தவர் திட்டத்தை அமுல் படுத்துபவர்கள். திட்டமிடும் போதுபோது பழக்க வழக்கங்களை மாற்றுவதுமட்டுமன்றி திரும்பவும் பழைய நிலைக்குத் திரும்பாமல் இருக்கவும் பார்த்துக் கொள்வது அவசியம். அணுகும் பிரச்சினையுடன் தொடர்புள்ள பல ஸ்தாபனங்களுடன் இணைந்து சந்தைப் படுத்துவது அவசியம். சந்தைப்படுத்துவோருக்குத் தேவையான நிதி வழங்க வங்கிகள், அரசு சார்பற்ற ஸ்தாபனங்கள் (NGO), மற்றும் தொழில் ஸ்தாபனங்கள் முன்வருவது வழக்கம். காரணம் நிதியுதவி செய்வதால் மக்களிடையே நற்பெயர் கிட்டும். அதோடு அரசிடமிருந்து வரி விலக்கும் பெறலாம். பல ஸ்தாபனங்களில் நடைபவனி, போன்ற சமூகச் சேவைக்கென நிதி ஒதுக்கி வைப்பது வழக்கம்.

சமூகச் சேவைக்கென பயன்படும் மேலே குறிப்பிட்ட ஒன்பது P எனப்படும் சந்தைக் கலவையினை ஆங்கிலத்தில Product, Price, Place, Promotion, Publics, Partnership, Policy, Purse Strings என்பர்.

**முடிவுரை:** இறுதியாக, சந்தைப்படுத்தும் முறையினால் சமூகத்தில் எதிர்பார்த்த மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதா என்பதை அவதானித்து தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆரோக்கியமான மக்களை உள்ளடக்கிய சமூகத்தை வளர்க்க சமூகச் சந்தைப்படுத்தும் முறை பெரிதும் பயன்படுகிறது.

pon.kulendiran@thaiveedu.com

■ ■ ■

# CTR தகவல் பலகை

## ROOMS / BASEMENT RENT

**DON MILLS & SHEPPARD**
3 Bedroom
Pathi: 416-502 -8053

**WARDEN & FINCH**
Walk out Basement 1 bedroom
Abraham: 416-300-1122

**NEILSON & FINCH**
1 room for rent
Mathy: 647-834-0414, 647-340-6062

**MORNINGSIDE & SHEPPARD**
2 bed room Basement
Siva: 416-830-0643, 416-533-0768

**NEILSON & MCLEIVEN**
1 Bed room for rent
Nathan: 647-427-7747

**KENNEDY & FINCH**
1 Bedroom
Ranjan: 416-291-9305, 647-208-9305

**WARDEN & FINCH**
1 B/Room Walk out basement
Abratham: 416-300-1122

**DONMILLS & SHEPPARD**
3 Bed room for rent upstairs
Pathi: 416-502-8053

**MORNINGSIDE & SHEPPARD**
2 Bed room Basement
Parking/ Cable/ Internet
Siva: 416-830-0643, 416-533-0768

**NEILSON & MCLIVEN**
Basement for rent
Vani: 416-831-8549

**BIRCHMOND & FINCH**
2 Bed room Basement
Selvan: 416-568-0686

**NEAR YORK UNIVERSITY**
2 Bed room Only for girls
Kumar: 416-546-1475, 416-627-1956

**MCCOWAN & HIGHGLEN**
1 bedroom Basement for rent
Sivanesh: 905-201-8922

**KENNEDY & ELLESMERE**
Office space for rent
Sekar: 416-230-7207

## HOUSE FOR SALE

**BRAMPTON**
3000 sq feet House for sell
Kumar: 416-400-2222

**BELLAMY & EGLINTON**
2 Bedrooms + 1 Den
Vijey: 416-452-5567

## AUTO

**2006 HONDA CIVIC**
$ 13250
Kirupan: 416-456-6022, 416-321-9685

**1999 TOYOTA COROLLA**
$ 3800
Karuna: 905-427-9357

**2002 TOYOTA SIANNA CE**
151km
Shan: 416-661-5454

**2009 TOYOTA CAMRY**
16900
416-451-6895

**2003 TOYOTA COROLLA LE**
Raji: 416-567-6266

**1994 HONDA ACC**
Selvaratnam: 416-201-2792

**99 TOYOTA COROLLA**
$ 3900
Selvam: 647-998-2870

**2006 HONDA CIVIC**
$ 11,250
Kiruban: 416-456-6022, 416-321-9685

**98 TOYOTA CAMRY**
2002 GMC Safari
Arulananthan: 416-266-7794, 416-220-1390

**1990 HONDA ACCORD**
New Tires
Babu: 416-244-9795

NEW HOUSE FOR RENT
**NEILSON & FINCE**
3 Bedrooms House for Rent
Sivaraj:
**416 659 5536**

CTR
கனடியத் தமிழ் வானொலி
416 264 8798

## OTHERS

**TUITION**
math/ science
Ragi: 647-456-9332

**STOVE FOR SALE**
Yalini: 905-794-3814


**FOR JOBS**
Esan: 647-896-2634

**PAINTING & PLUMPING**
Babu: 647-836-3647

**DAY CARE**
Victoria Park and Ellesmere
Sakunthala – 416-439-5405

**வீடு விற்பனைக்கு**
யாழ் / சுண்டுக்குழியில்
3 1/2 பரப்புக் காணி
வீட்டுடன்
விற்பணைக்கு உண்டு
தொடர்புகளுக்கு:
647 400 2739

# துயர் பகிர்வோம்




### சுந்தரம்பிள்ளை கோபாலகிருஷ்ணன்

நயினாதீவு 1ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம்பிள்ளை கோபால-கிருஷ்ணன் அவர்கள் 09.02.2010 அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை செல்லம்மா தம்பதிகளின் அருமை மகனும், காலஞ்சென்ற இராமலிங்கம், சிவபாக்கியம் தம்பதிகளின் அருமை மருமகனும், முத்து-லெட்சுமி, காலஞ்சென்ற திருவிழங்கம், விஜயராமலிங்கம், புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கோகிலா-தேவி அவர்களின் அன்புக் கணவரும், சிவாகரன், கிருபா-கரன், சுபாஸ்சந்திரபோஸ், கமலலோசினி, அருள்விழி ஆகியோரின் அன்புத் தந்தையும், தயாளினி, ஆரணி, சுபாஷினி, கமலகாசன் ஆகியோரின் அன்பு மாமனாரும், நடராசா, சின்னம்மா, கமலாம்பிகை, ரெங்கநாதன், மோகனாதேவி, காலஞ்சென்ற துரைராஜசிங்கம், தர்ம-குலசிங்கம், இராஜகுணசிங்கம், குணபாலசிங்கம், லோகநாதசிங்கம், சிவராஜசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், குலசிங்கம், தவேஸ்வரன், ஞானவடிவேல் ஆகியோரின் சம்மந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிவணக்க நிகழ்வு பெப்ரவரி மாதம் 11.02.2010 அன்று நயினாதீவில் நடைபெற்றது.

| | | |
|---|---|---|
| கோகிலாதேவி | இலங்கை | 9411 313 7078 |
| சிவா | பிரான்ஸ் | 3314 300 7187 |
| கிருபா | பிரான்ஸ் | 3314 803 9709 |
| சுபாஸ் | கனடா | 1416 269 5153 |
| கலா | பிரித்தானியா | 44208 869 0083 |
| விஜயராமலிங்கம் | கனடா | 1905 471 9645 |




### திரு. நல்லையா இரவீந்திரன்

யாழ்ப்பாணம், சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், அளவெட்டியை வதிவிடமாகவும் தற்போது ஸ்காபுரோவில் வசித்துவந்தவருமாகிய இளைப்பாறிய இலிகிதர் (இலங்கை அரசாங்க மரக்கூட்டுத்தாபனம்) நல்லையா இரவீந்திரன் அவர்கள் பெப்ரவரி மாதம் 17ம் திகதி ஸ்காபுரோவில் காலமானார்.

அன்னார் காலம்சென்ற நல்லையா ஜெயமணி தம்பதி-யரின் மகனும் காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை – அன்னபூபதி தம்பதியரின் மருமகனும். மங்கை என அழைக்கப்படும் மங்கையற்கரசியின் கணவரும், ரஞ்சினி (நியூசிலாண்ட்), சாந்தினி(கனடா), காலஞ்சென்றவர்களான ஜெயசிங், சுலோசினி, விநோதினி ஆகியோரின் சகோதர-னும், சுபாசினி(Chemical Engineer), ஜெயக்குமார் (குமார் வீடியோ), சந்திரகுமார் (Oshawa Family Convenience) , ஆகியோரின் தந்தையும். சுபாஸ், புவனா அவர்களின் மாமனாரும், கனகலிங்கம், காந்தினி, சிவலிங்கம், அமுதா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிவணக்க நிகழ்வு பெப்ரவரி மாதம் 22ம் திகதி Torontoவில் நடைபெற்றது.

தொடர்புகளுக்கு: 647 273 0287, 416 457 8609



### திருமதி. கந்தையா சிவபாக்கியம்

கோயிலாக்கண்டியைப் பிறப்பிடமாகவும், இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா சிவபாக்கியம் அவர்கள் 15.02.2010 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பர் சந்திரசேகரம் (நீதிவான்) – கதிராசிப்பிள்ளை தம்பதியரின் ஏகபுத்திரியும், காலஞ்சென்ற சேதுப்பிள்ளை (அச்சுவேலி) சிவசுப்பிர-மணியம் (சட்டத்தரணி), பொன்னம்பலம் (புகையிரதநிலைய அதிபர்) ஆகியோரின் பெறாமகளும், காலஞ்சென்ற V.S. கந்தையா (ஓய்வுபெற்ற அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், Dr.K.செந்தில்நாதன் (கனடா), செந்தில்ராணி (அதிபர், கோயிலாக்கண்டி மகாலக்சுமி வித்தியாலயம்), செந்தில்சோதி, செந்தில்மணி (ஓய்வுபெற்ற ஆசிரியர், திருநெல்வேலி R.C.T.M.S.) செந்தில்குமார் (சுவிஸ்), செந்தில்சேயோன் (கனடா), செந்தில்குமாரி (கனடா), செந்தில்ராஜன் (சுவிஸ்) செந்திற்செல்வி (சுவிஸ்) ஆகியோ-ரின் பாசமிகு தாயும், பவளராணி (கனடா), முத்துலிங்கம் (பிரதிக் கல்விப் பணிப்பாளர்), காலஞ்சென்ற இந்திரதேவன் மற்றும் பாலகுமார் (அதிபர், யா.செங்குந்தா இந்துக்-கல்லூரி), நிரஞ்சனி, வாசுகி (கனடா), லோஜினி, சோமசுந்தரம் (கனடா), ஆனந்தராஜன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிவணக்க நிகழ்வு பெப்ரவரி மாதம் 17ம் திகதி திருநெல்வேலியில் நடைபெற்றது.

சேயோன் (மகன்) 416 735 6551, 416 444 8976

# நாடகத்தின் வேரும் வளர்ச்சியும்

- ஞானம் லேம்பட் -

நிகழ்கலை என்பது ஒன்றை வெளிப்படுத்த தொடர்பாடல் செய்ய, ஒன்றைப் பகிரிந்து கொள்ளப் பிறப்பெய்தியது. இத்தொடர்பாடல் அல்லது தொடர்புறுதல் செயற்படுவதற்கு இந்நிகழ்கலை நாளுக்கு நாள் பல்வேறு உருவங்களாக உருவெடுத்துள்ளது. இந்நிகழ்வில் நாட்டார்கலை மிக முக்கியமானது. இந்நாட்டார் கலை மக்களிடையே இயல்பாகத் தோன்றக் கூடியதும், இயல்பான செயற்பாடுகளைக் கொண்டதுமாகும்.

நிகழ்கலையின் பல கூறுகளும் எல்லாச் சமூகங்களிடையேயும் பதிந்து இருக்கின்றன. ஆனால் அவற்றின் தரமும், ஆழமும் அச்சமூகங்களின் பழக்க வழக்கங்கள், சமூக உறவுகள், நம்பிக்கைகள் என்பவற்றைப் பொறுத்து மாறுபடும். ஆனால் அவ்வுணர்வு எல்லாச் சமூகங்களிடையேயும் அவர்களின் அடி மனதில் உறைந்திருக்கும். இந்நிகழ்கலைக் கூறுகள் அச்சமூகத்தின் அரசியல், சமூக, பொருளாதார, சமய நிகழ்வுகள் எல்லாவற்றிலும் கலந்து ஒன்றித்துக் காணப்படும்.

இந்நிகழ்கலையின் ஒன்றான நாடகம் எப்போது, எங்கே, எப்படித் தோன்றியது என்ற கேள்விக்கு எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடை இன்னும் அளிக்கப்படவில்லை. ஏனெனில் நாடகம் என்றால் என்ன என்பதற்கு பல்வேறு அறிஞர்களிடையே பல்வேறுபட்ட கருத்துகள் நிலவுவதே காரணமாகும்.

மனிதன் தன் இருப்பை நிலைநிறுத்த நடாத்திய போராட்டம், கடவுள் வணக்கம் என்பவற்றுக்காக ஒன்றைப் போலச் செய்தல் அல்லது தங்கள் உணர்வுகளை வெளிக்கொணர மேற்கொண்ட செயற்பாடுகளிலேயே நாடகம் உருவாகியது என்கிறார் Sheldon Cheney என்பார்.

நாடகம் தெய்வீகமானது, மனிதத்துவம் கொண்டது. நாடகத்தில் சமயம், சமூகம், ஆன்மீகம் எனக் கூறுகையில் நாடகம் என்ற சொல்லின் அர்த்தம் வேறுபட்டும், குழப்பமாகவும் உள்ளது. ஆனால் நாடகம் என்பது மனித இருப்பைக் காட்டுவது என்பதில் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. நாடகம் மனிதவாழ்வில் ஒளிகாட்டும் ஒரு கலை.

நாடகத்தின் மூலத்தைத் தேடுகையில், மனிதவியலாளர் (Anthropologists) முதன்மையாகத் தெரிவது புராணக்கதைகளும் (Myths), சடங்குகளும் (Rituals) ஆகும். நாகரீகமடையாத காலத்து மக்கள் (Savage) தங்கள் உணவுக்கும், தங்கட்கு நேரிடும் சம்பவங்களுக்கும், சுகநல செயற்பாடுகள், இயற்கை அழிவுகள் எல்லாவற்றுக்கும் பின்புலமாக ஒரு சக்தி இருப்பதாக நம்பினார்கள். அச்சக்தியை வேண்டியும், அதை வெற்றி கொள்ளவும் சில சடங்குகளைச் செய்தார்கள். அவைகள் நெருப்பை வணங்குதல், பலியிடுதல், வணக்க ஆட்டங்கள் ஆகிய செயற்பாடுகளாகும். இச்சடங்குகளைச் சுற்றிப் புராணக் கதைகள் எழுந்து, இச்சடங்குகளை ஒரு ஒழுங்குமுறைக்குட்படுத்தி அவை வளர்வதற்கு உதவின. இப்பழங்கதைகளும் சடங்குகளைச் சுற்றியே வளர்ந்தும் உள்ளன. எனவே சடங்குகளும் புராணக் கதைகளும் ஒன்றை ஒன்று சுற்றியே வளர்ந்துள்ளன. இப்புராணக் கதைகள் இயன்முறைக்காரணகாரிய வலுவை (Supernatural Force)க் கொண்டாடுவதாக அமைந்துள்ளது.

நாகரீகமடையாக் காலத்து மக்களுக்கு உணவு, உறைவிடம் என்பவற்றுக்கு அடுத்து வருவது நடனமாகும். நடனமே நாகரீகமடையாக் காலத்து மக்களின் உணர்வு வெளிப்பாட்டின் சாளரமும், கலையின் பிறப்பிடமுமாகும். மொழி உருவாகுமுன் அல்லது வளர்ச்சியடையுமுன் இயற்கையோடு ஒன்றித்திருந்த மக்களில் ஓடும் நீரின் அசைவும், வீசும் காற்றின் வருடலும் அவர்களில் ஒரு நெகிழ்வை ஏற்படுத்தியிருக்கும். இந்நெகிழ்வே அவர்களில் தாளலயத்துடனான ஒரு அசைவை – நடனத்தை ஏற்படுத்தியிருக்கும்.

அவன் நடனமாடியபோது ஏற்பட்ட தடப்பதிவு ஏற்படுத்திய ஓசைகள், கைகள் மோதும்போது



எழுந்த ஓசைகள், தடிகளினாலும், கற்களினாலும் உண்டாக்கிய ஓசைகள் நாளடைவில் பாடல்களாயின.

தம்மகிழ்வை வெளிக்கொணர உருவான நடனம், அவர்களது ஏனைய உணர்வுகளையும் மாறுபட்ட நடன உருவில் காட்டின.

வேட்டையாடி வாழ்ந்த காலத்து, அவர்கள் தம் பசியைப் போக்க, வேட்டை சிறக்க மிருகங்களைப் போல வேடமிட்டு வேட்டை நடனமாடினான். இவற்றில் மான் நடனம் (Antelop Dance), எருமை நடனம் (Buffalo Dance) என்பன முக்கியமாகும். இவை, மனிதர்கள் மிருகங்களைக் காணுவது போலவும், அவற்றை வேட்டையாடுவது போலவும், அவற்றைக் கொன்று உண்பது போலவுமான குறிப்புகளை உணர்த்துவது போல அமைந்திருந்தன. சிலவேளைகளில் இந்நடனங்கள் வேட்டை கிடைக்கும்வரை தொடர்ந்து பல நாட்கள் நடைபெற்றதாக ஆய்வுகள் கூறுகின்றன.

சிங்கம், புலி போன்ற பயங்கர மிருகங்களை வேட்டையாடிக் கொன்ற நிகழ்வுகளை அபிநயங்கள் நிறைந்த நடனங்கள் மூலமாக – மிருகங்களைக் காண்பது போல பதுங்கிச் செல்வது போல, கொலை செய்வது போல அபிநயித்து நடனமாடி தமது வீரச் செயல்களை மற்றவர்கட்குக் காட்டியுள்ளார்கள். இவ்வகையான நடனங்களுக்கு மிருகங்களின் தோலை ஆடையாக அணிந்து அம்மிருகங்கள் போன்ற முகமூடி (Mark) அணிந்து அவ்நடனங்கட்கு மெருகூட்டியும் உள்ளனர்.

தம் உணவாகத் தானியங்களை உண்டபோது பயிர் செழித்துவளர மழைவேண்டி நடனமாடியுள்ளனர். இங்கு மழை பெய்வது போலவும், இடி, முழக்கங்கள் போலவும் ஒலி எழுப்பி கடவுளிடம் மழை வேண்டி நடனமாடி பிரார்த்தனை செய்தும் இருக்கிறார்கள்.

தம் எதிரிகளோடு மோதி வெற்றிகொண்ட



நிகழ்வுகளையும் நடனமாடிக் கொண்டாடியதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். எதிரியைச் சுற்றி வளைத்து மோதுவதுபோல, பதுங்கிச் செல்வது போல, எதிரியைக் கொலை செய்வது போல அல்லது எதிரியிடமிருந்து தப்பிச் செல்வது போல நடனங்களை ஆடியுள்ளனர். இங்கு "ஒன்றைப் போலச் செய்தல்" நடைபெறுகின்றது. பின்னர் தம் வேறு அனுபவங்களை அல்லது கற்பனையில் உதித்தவற்றை நடன உருவமாக்கினர். இங்குதான் நடனம் உருவாகியதாக Sheldon Cheney கூறுகிறார்.

அவுஸ்திரேலியப் பழங்குடியினர் தம் மகிழ்வுக்காகப் படகு நடனம் (Canoe Dance) ஆடியமை ஆய்வாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இங்கு ஆண்களும், பெண்களும் கைகளில் தடிகளை ஏந்தி நடனம் ஆடுவர். கையிலுள்ள தடிகளைப் படகு வலிக்கும் துடுப்புகளாகப் பாவனை செய்து, அதனைக் கொண்டு படகு வலிப்பது போல அபிநயிப்பர். இந்நடனம் இரவு முழுவதும் நடைபெறும். இந்நடனம் தாங்கள் தம்முன்னோரும் மேற்கொண்ட படகோட்டுதலை மீள்நினைவு செய்தலும் சொல்லுதலும் ஆகும்.

அவுஸ்திரேலியாவில் உள்ள பல பழங்குடிக் குழுவினர் ஒன்று சேர்ந்து Corroborry என்ற நடனம் ஆடியதாகவும் சொல்லப்படுகின்றது. இங்கு பல பழங்குடிக் குழுவினரிடமிருந்து நூற்றுக்கணக்கானவர்கள் திரட்டப்பட்டு (கிட்டத்தட்ட நாநூறு பேர்) இந்நடனம் ஆடப்பட்டுள்ளது. இந்நடனத்தை நெறிப்படுத்த ஒரு நெறியாளர் இருந்து செயற்பட்டதாகவும் சொல்லப்படுகின்றது.

பழங்குடி மக்களிடையே உணவுத்தேவை அதிகமாக, அலைந்து திரிந்து வேட்டையாட வேண்டிய நிலை அதிகரிக்க எல்லா மக்களும் நடன நிகழ்வில் பங்குபெற முடியாத நிலை ஏற்படலாயிற்று. எனவே அவர்கள் சார்பாக வேட்டையாடி உணவு வேண்டி நடனத்தையும் அது சார்ந்த சடங்குகளையும் செய்ய ஒருவர் அல்லது மதகுரு நியமனம் பெற்றார். இவர்களே தம் குழுவினர் சார்பாக வேண்டுதல் நடனத்தையும், சடங்குகளையும் மேற்கொண்டனர். நாளடைவில் இவர்கள் தம் இருப்பை நிலைநிறுத்த, கடவுளோடும் ஆவிகளோடும் தமது உறவை நெருக்கமாகக் காட்ட நடனங்களை பல்வேறு உட்கூறுகொண்டவையாக உருவாக்கினர். நாளடைவில் இவை கலையம்சம் நிறைந்தவையாயின.

உசாத்துணை:



The Cambridge guide to Theatre: Banham, Martin
Myth and Literature : John B. Vickery
Ritual Theory, Ritual Practice : Bell Catherine
The Myth and Ritual Theory : Robert A.Segal
The Golden Bough: James Frazer
Mask, Mimes and Miracles: Allardyce Nicoll
The Origin of Drama: Ivor Brown
UR-Drama The Origin of Theatre: E.T.Kirby
History of the Theatre: Brockett G. Oscar


ganam.lambert@thaiveedu.com

■ ■ ■


வீடு வாங்க விற்க

உங்கள் வருமானத்திற்கேற்ப எவ்வகையான வீடு வாங்குவதென அறிந்து
கொள்ள முதல் முறை வீடு வாங்குபவர்களின் சலுகைகள் பற்றி
அறிந்துகொள்ள இன்றே எங்களுடன் தொடர்புகொள்ளுங்கள்



Prudential Properties Plus Brokerage
Bus: 416.962.8113
Fax: 416.962.4615, Res: 416 964 5955
552 Parliament Street, Toronto, ON, M4x 1P6



Alfred Soosaipillai
Broker

# லெமூரியா கண்டம்

## (குமரிக் கண்டம்)


தமிழ் இலக்கியப் பாரம்பரியம் சங்க காலத்திலிற்கு முன்பிருந்தே ஆரம்பிக்கின்றது. சங்கம் 10,000 வருடங்களுக்கு முன்பே தோன்றி செழிப்புடன் இருந்தது. இந்த முதல் சங்கம் குமரிக்கண்டத்திலேயே இருந்ததாக ஆராச்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர். ஸ்ரீபன் ஒப்பென்ஹீமர் (Stephen Oppenheimer) என்னும் ஆராச்சியாளர் கடலில் அழ்ந்த சுண்டலான்ட் (Sundaland) என்ற புத்தகத்தில் இந்தியா

**தொடர்...**

பலவிதமான சாதனைகளை இந்த குமரிக் கண்ட பெருநிலப்பரப்பில் இருந்து பெற்றதாகக் குறிப்பிடுகின்றார். ஆனால் இந்த ஆராச்சி பற்றி ஆழமாக ஆராயப்பட வேண்டும் என குறிப்பிடுகின்றார்.

எஞ்சிய பகுதிகயே இன்று உள்ள இலங்கை, மாலைதீவுகள், இலக்கதீவுகள் மடகஸ்கார். இந்தியப் பெருநிலப்பரப்பு, அவுஸ்ரேலியா அகியனவாகும்.


இன்றை ஸ்ரீலங்கா அடங்கலாக முழுவதுமாக பாண்டியத் தமிழ் பேரரசே கோலோச்சி தமிழர்களே ஆதிக்குடிகளாக இருந்துள்ளனர். இதற்கு முந்திய காலப்பகுதியிலேயே தமிழர்களின்








**மேலேயுள்ள படம் கண்ட நகர்விற்கு முன்பும் அதனால் ஏற்பட்ட கடல்கோழினால் ஏற்பட்ட லெமூறியாக் கண்டம் கடலில் ஆழ்ந்து போவதற்கும் முன்பு ஒன்றாக இருந்த தற்போதைய இந்தியா இலங்கை, மடகஸ்கார், அவுஸ்ரேலியா மற்றும் மாலை தீவுகள், லக்கதீவுகள் அடங்கியிருந்த லெமூறியாவின் தோற்றமும் அதிலிருந்த மலைகள், ஆறுகள் அத்தோடு அப்போதிருந்த நகரங்களையும் காணலாம்.**





**இப்படங்கள் இரண்டும் அவஸ்திரேலிய ஆதிவாசிகளின் படங்களாகும் இவர்கள் குமரிக்கண்டத்திலிந்து இடம் பெயர்ந்து வாழும் திராவிட இனத்தின் பரம்பரையினர். இவர்கள் யாவரும் இந்தியா, இலங்கை, அவுஸ்திரேலியா யாவும் ஒன்றாக இணைந்திருந்த கடலில் ஆழ்ந்த குமரிக் கண்டத்திலிருந்து வேட்டையாடி உணவு தேடும் நோக்கோடு பல்லாயிரம் மைல்கள் நடந்து இடம் பெயர்ந்தவர்களாகும். இவர்களுக்கும் ஆபிரிக்க ஒஸ்ரொலொயிட் இனத்திற்கும் பாரிய உருவ வேறு பாடுகளும் மரபணு அலகுகளும் வேறுபட்டவையும் அத்துடன் திராவிட இனத்தின் உருவத்தோற்றத்தோடும் அவர்களது வாழ்கை, திருமண முறைகயோடும் ஒத்துப்போவதாய் இருப்பது இவர்கள் லெமூறியாவில் இருந்து இடம் பெயர்ந்த திராவிடர்கள் என்பதும் இலங்கை அடங்கலான லெமூறியாவில் திராவிடர்களே வாழ்ந்தார்கள் என்பதற்கான ஒரு பாரிய நிரூபணமாகும். ஆகவே இலங்கையின் மண்ணின் மைந்தர்கள் லெமூறியாவில் வாழ்ந்த திராவிடர்களாகிய ஈழத்தமிழர் களும் தென்னிந்தியத் தமிழர்களுமே.**



**இப்படத்தில் காணப்படுபவர்கள் குமரிக் கண்டத்திலிந்து 6000 - 1000 ஆண்டு களுக்கு முன்பு இடம் பெயர்ந்து வட அவுஸ்திரேலியா குயின்ஸ்லாந்திந்தில் வாழும் நாகரீக வளர்ச்சி அடைந்த ஆதிக் குடிகளாவர். இப்படம் 1947ல் எடுக்கப் பட்டது. லெமூறியா கண்டம் ஆபிரிக்கா விற்கு அருகேயுள்ள மடகஸ்காருடனும் தொடர்பு பட்டிருந்ததனால் ஆபிரிக்க ஆதிவாசிகளும் இங்கு குடியேறினர். இங்கு பல வகையான இன வகையுடைய ஆதிவாசிகள் வாழுகின்றார்கள். ஆனால் படத்திலுள்ளவர்கள் திராவிடர் களின் பரம்பரையினரே. இவர்கள் வட அவுஸ்திரேலிய அதிக்குடிகளின் மூதாதையர்களான ஒஸரெலொயிட் இனமோ அல்லது ஆபிக்க நிக்குறொயிட இனமோ அல்லாமல் திராவிட இனச்சாயல் இருப்பது ஈழ, தென்னிந்த தமிழர்களின் சாயல் பட்டவர்த்தனமாத் தெரிவது இவர்களின் லெமூறியாவிலிருந்த இடம்பெயர்ந்து வாழ்தவர்கள் என்று கூறமுடியும்.**

பிலிப் ஸ்கலேற்ரர் என்பபடும் பூகோளவியலாளர் இதனை ஒரு நிலப்பரப்புப் பாலமாகக் குறிப்பிட்டு அதனை லெமூறியா அழைத்து இங்கேதான் லெமூர் என்னும் இனம் வாழ்ந்ததாகக் குறிப்பிடுகின்றார். பல்லாயிரம் காலத்திற் முன்பு வாழ்ந்த Polynasian Storytellers குமரிக்கண்டத்திலேயே முதல் பாண்டியப் பேரரசு இருந்ததாகவும் அங்கேயே முதல் சங்கம் வளர்த்ததாகவும் அங்கு கடலில் ஆழ்ந்த தென் மதுரை மாநகர் இருந்ததாகக் குறிப்பிடுகின்றனர். இங்குள்ள படத்தில் பாண்டியப் பேரரசு, முந்திய மதுரை மாநகர், குமரி ஆறு. ப.்றுளி ஆறு, கன்னி ஆறு, வேதகாலத்தில் கூறப்பட்ட மகாமேரு மலை, அகத்தியர் வாழ்ந்த பொதிகை மலை, கவுடாபுரம், பெருவளநாடு, மூதூர், ஒளிநாடு ஆகியன அடங்கலாகவே குமரிக் கண்டம் இருந்தது. இக்கண்டத்தினைக் கடல்கோள் கொண்டு

மூதாதையர்களாகிய நாகர்கள் வாழ்ந்துள்ளதாக லெமூறியா பற்றி மேல்நாட்டு அறிஞர்களின் ஆராச்சிக் கட்டுரைகளின் மூலம் உறுதிபடத் தெரிவித்துள்ளார்கள். இவர்களை (Snake People) என அழைத்துள்ளார்கள். அவர்கள் கூறுவதனை அப்படியே ஆங்கிலத்தில் நோக்குவோமாயின் “ The Snake People are very, very ancient. They existed approximately 5,000 to 6,000 years ago. They were descendants of the Lemurians, in particular, descendants of the original record-keepers of Lemuria. The snake, in terms of symbology, has always been used on Earth to mean wisdom, so you find many cultures around Earth in which the snake, as a symbol, plays a very important role.

பாம்பு மனிதர்கள் (நாகர்கள்) என்று அழைக்-


முருகேசு பாக்கியநாதன்

கப்பட்டவர்கள் மிக மிக ஆதிகாலத்தில் எறத்தாள 5000 தொடக்கம் 6000 வருடங்களுக்கு முன்பு வாழ்ந்தார்கள். அவர்களே லெமூறியாவின் தொன்மையான குடிகள். அவர்களே அதற்குரிய பதிவுகளை விட்டுச் சென்றுள்ளார்கள். பாம்பு என்பது ஒரு குறியீடே இது உலகியலில் அதி விவேகத்தினைக் குறிக்கும் அதி உன்னதத்திற்குரிய குறியீடாகக் கருதப்படுகின்றது.

ஸ்ரீ லங்கா அரசின் ஆதிக்கத்திற்கு உட்பட்டு மகாவம்ச, சூளவம்ச நம்ப முடியாத புனைகதைகளின் அடிப்படையில் ஸ்ரீலங்காவின் புதை பொருள் ஆராச்சித் திணைக்ளத்தின் ஆராச்சிகள் இவையாவற்றையும் மூடிமறைத்து சரித்திர ஆதாரங்களை மறைத்து புனைகதைகள் புனைந்து வைத்துள்ளார்கள். பிராமி எழுத்துக்களின் கல்வெட்டுக்கள் அனுராதபுரத்தில் கண்டெடுக்கப்பட்டாலும் அவை கிபி 900 ஆண்டுகளில் தோன்றிய சிங்கள மொழியின் ஆரம்ப மொழியாக புனைகின்றார்கள். இது பற்றி நோக்கும் போது தமிழில் இருந்து தோன்றிய கி.பி 500ஆம் ஆண்டளவில் தோன்றிய கிரந்தத்தினையும் கிபி 700ஆம் ஆண்டளவில் தோன்றிய திராவிட மொழிக் குடும் பத்தின் கன்னட தெலுங்கு மொழிகளின் வரிவிடிவங்களைப் பின்பற்றியே சிங்கள மொழியின் வரிவடிவம் கிபி 900 ஆண்டளவில் தோன்றியது. இக்காலத்திலேயே மலையாள மொழியும் தோற்றம் பெற்றது. ஆனால் தமிழோ கிமு 500 ஆண்டளவில் தோன்றியது. சிங்கள மொழிப் பேச்சு வழக்கில் பெரும்பாலான தமிழ் சொற்களும் சமஸ்கிருதச் சொற்களும் விரவியுள்ளதனை பலரும் அறிய முடியும். கிபி 500 - 600ஆம் ஆண்டுகளில் ஈழத்திலும் தமிழ் நாட்டிலும் ஆரியமாயையினால் தமிழில் ஏராளமான தமிழ் சொற்கள் பேச்சுவழக்கிலும் எழுத்துவழக்கிலும் பரவி ஆதிக்கம் செலுத்திய காலமாகும். கிபி 200 ஆண்டளவில் கூட இலங்கையில் பலரும் தமிழே பேசிவந்தார்கள். இன்று இருக்கக்கூடிய சிங்களவர்கள் யாவரும் தமிழ்க்குடிகளே. இறுதியாக தமிழர்களாக வாழ்ந்த நீர்கொழும்பு தமிழர்களே அண்மையில் சிங்களவர்களாக மாறியதனை எமது கண் முன்னேயே பார்த்தோம். அதற்கு முன்பு படிப்படியாக மாற்றப்பட்டவர்களே முறையே சிலாபம், புத்தளம், பாணந்துறை, கழுத்துறை வாழ் சிங்களவராவர். இவர்களின் தோற்ற அமைப்பு அதற்கு சான்று பகரும். விஜயன் ஒரிசாவிலிருந்து கடத்தப்பட்ட தனது 600 நண்பர்களுடன் இலங்கைக்கு வந்து குடியேறி இயக்கர் இன குவேனியையும் அவன் நண்பர்கள் நாகர் இனப் பெண்களையும் மணமுறறு இயக்கர்களாகவே வாழ்ந்தார்கள். விஜயனின் நண்பர்கள் பாண்டி நாட்டில் பெண் எடுத்ததாகவும் வரலாறுண்டு. இதன் பின்பே ஒரு கலப்பினம் தோன்றியது. புத்த சமயத்தினைப் பின்பற்றிய ஒரு சாராரே தங்களை ஒரு தனி இனமாக நினைக்கத் தொடங்கியது வட இந்தியாவின் ஆரியத்தின் மேன்மையினைப் பெற்று தமது நிலையினை உயர்த்திக் கொள்வதற்காகவே. இந்த அறுநூறு பேர்களின் வாரிசுகளையா இவர்கள் ஆரியர் என்கின்றனர். அதற்கு முன்பு வாழ்ந்தவர்கள் இந்த 600பேரை விட மிக அதிகமாகவிருந்திருக்க வேண்டும். ஆகவே விஜயனும் அவனது நண்பர்களும் அங்கிருந்த இனத்துடன் கலக்கக் கூடிய சூழலே இருந்திருக்க வேண்டும். ஆகவே இவர்களுக்குப் பின்பே சிங்களவர்கள் தம்மை ஆரியர்களாகக் கற்பித்துக் கொண்டனர். ஆனால் புத்த சமயம் வடஇந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த பின்பு அதனடிப்படையில் அதனைப் பின்பற்றியவர்கள் தங்களை ஆரியர்கள் என்று

தொடர்தல் 76ம் பக்கம்

வட அமெரிக்காவிலிருந்து முதல் முறையாக நேரடி இணையப் பல்கலைக் கல்லூரி ஆரம்பம்

# VARNAM VIRTUAL ACADEMY

## Save Money ! Save Time ! Save Energy !

**Save 1500$ to 6500$ per year**

உங்கள் வீடுகளில் இருந்தே இணையம் மூலம் நேரடியாக கற்றுக்கொள்வதோடு மேலும் பல சேவைகளையும் பெற்றுக்கொள்ளலாம்

* Grade 1 - 12 Tutoring
* Kids & Adult Computer
* Western Music
* Indian Music

*Further information visit -:* www.varnamonline.com

**You Can Learn From Your Home Face to Face ( Live )**

***Any Where in the World !!!***

* Vocal ( Carnatic ) * Violin * Veena* Mirudhangam * Tabla
* Piano * Keyboad * Guitar * Drums * Music Theory * Dance

வகுப்புகள் நடைபெறும் இடங்கள்

* Midland & Ellesmere
* McCowan & Denison
* Nellson & Finch
* Dundas & Hwy 10
* Dixie & Meyer side
* Dixe & Bovaird

**Contact : Varna.Rameswaran 647.893.4010 / 416.265.8884**

# வாஸ்து



- சத்குரு வாசுதேவ் -

நான் சொல்வது உங்களுக்கு ஏமாற்றமாக இருக்கும். தமிழ்நாட்டில் ஒருவிதமான வாஸ்து இருக்கிறது. கார்நாடகத்திற்குச் சென்றால் அங்கு வேறுவிதமான வாஸ்து வழக்கில் இருக்கிறது. கர்நாடகாவிலும் கூட மலைப்பகுதிகளில் இன்னொரு விதமான வாஸ்து பின்பற்றப்படுகிறது. மலைப்பகுதிகளில் வேறு விதமாகவும், சமப்பகுதிகளில் வேறுவிதமாகவும் வாஸ்து இருக்கிறது. வாஸ்து என்றால் என்ன? பழங்காலங்களில் கிராமங்களில் கட்டிடக்கலை நிபுணர்கள் யாரும் இல்லை. உதாரணத்திற்கு ஒரு மனிதர் தன் வீட்டைத் தானே கட்டிக் கொள்கிறார். அவர் 5 அடி உயரத்திலும், 5 அடி அகலத்திலும் தனக்கென்று ஒரு வீடு கட்டிக்கொள்கிறார். கதவு ஒரு மூலையில் இருக்கிறது. ஜன்னல் வைக்க மறந்துவிட்டார். இப்படிப்பட்ட ஓர் வீட்டில் இருந்தால் உங்கள் மனதிற்கும் உடலுக்கும் என்ன ஆகும்? சீரழிந்து போய்விடும் இல்லையா? இந்தக் கட்டுமான அமைப்பில் இந்த சுவர்களுக்கு இடையில் இருந்து கொண்டிருந்தால், நிச்சயமாக உடலும் மனமும் சீர்கெடும். எனவே, அடிப்படை வழிகாட்டுதல்களுக்காக சாஸ்திரத்தை வடிவமைத்தார்கள்.

சாஸ்திரம் என்ற சொல்லிற்கு 'வழிகாட்டுதல்' என்று பொருள். ஒரு வீடு கட்டுவதாக இருந்தால் அந்தப் பகுதியின் சீதோஷணத்திற்கு ஏற்ப ஒரு குறிப்பிட்ட விதத்தில் கட்டிடம் அமைய வேண்டும். மேற்கில் மறைகிற சூரியக்கதிர்கள் அங்கே வலிமையாக விழுமேயானால் மேற்குப்பகுதியில் இருக்கிற சுவர் தடித்த சுவராக இருக்க வேண்டும். அதன் இன்னொரு பக்கம் கொஞ்சம் மெல்லிய சுவராகக் கூட இருக்கலாம். எனவே ஓர் அளவிற்கு மக்கள் பின்பற்றினார்கள். நல்ல பலன் கிடைத்தது. எனவே, போதிய காற்றோட்டத்தோடு வீடு கட்டுவதற்கான கட்டிக் கலை ஆலோசனைகள்தான் வாஸ்து என்பது. கிராமங்களில் கட்டிடக்கலை நிபுணர்கள் இல்லாததால் சில அடிப்படை விதிகள் வகுக்கப்பட்டன. அவற்றின்படி வீடுகள் கட்டினால் அங்கு வாழ்வதற்கு நன்றாக இருக்கும் என்பதற்காக.

இந்தியாவிலேயே பலவிதமான வாஸ்துக்கள் உள்ளன. அந்தந்தப் பகுதிகளுக்கேற்ற வாஸ்து முறைகள். கடந்த 10 ஆண்டுகளாகத்தான். அதற்கு மக்கள் அதிகமான முக்கியத்துவம் கொடுக்கத் தொடங்கினார்கள். கடந்த 8 -10 ஆண்டுகளுக்கு முன்பு இந்த நிலை இல்லை. இப்போதுதான் அது ஒரு பெரிய வணிகம் ஆகிவிட்டது. வாஸ்து உங்களுடைய வாழ்க்கைக்குள் வருவதற்குக் காரணம், எப்போதுமே நீங்கள் அச்சத்தில் வாழ்வதுதான். ஒரு சமையல் அறை இருக்க வேண்டிய இடத்தில் கழிவறையும், கழிவறை இருக்க வேண்டிய இடத்தில் சமையல் அறையையும் கட்டியிருக்கிறீர்கள். அந்த அளவிற்கு இது போயிருக்கிறது. இப்போது என்ன கேள்விப்படுகிறேன் என்றால் நிறையபேர் அவர்களின் கழிவறைகளில் இருக்கிற தண்ணீர் தொட்டியின் திசையைக் கூட மாற்றி வைக்கிறார்கள். ஏனென்றால் வாஸ்து சொல்கிறது குறிப்பிட்ட திசையில் அமர்ந்து கொண்டு மலங்கழித்தால் நல்லது என்று. இதைவிடவும் கொடுமை இருக்க முடியுமா என்ன?

நான் முதன்முதலாகக் கோவைக்கு வந்தபோது, ஒரு வீட்டிற்கு என்னை சாப்பிடக் கூப்பிட்டிருந்தார்கள். அது ஒரு பெரிய வீடு. வீட்டிற்குள்ளேயே ஒரு சிறிய தோட்டம் இருந்தது. மிக அழகான வீடு. ஆனால் அந்தத் தோட்டத்தின் மையப்பகுதியில் ஒரு பெரிய கொடிக்கம்பம் இருந்தது. எந்த ஒரு காரணத்திற்காகவும் இல்லாமல் அது வெறுமனே அங்கு நின்று கொண்டிருந்தது. அங்கிருந்த பெண்மணியைப் பார்த்து, "இந்தக் கொடிக்கம்பம் எதற்காக?" என்று கேட்டேன். அவர் என்னிடம் சொல்லத் தயங்கினார். என்னிடம் உண்மையைச் சொன்னால் என்ன ஆகும் என்று அவருக்குத் தெரியும். எனவே, "நான் ஈஷா யோகா வகுப்பிற்கு முன்பே வந்திருந்தால் இதைச் செய்திருக்க மாட்டேன்" என்று சொன்னார். "ஏன்? என்னாயிற்று" என்று கேட்டேன். ஏறக்குறைய 12 ஆண்டுகளுக்கு முன்பு இந்த வீட்டைக் கட்டியதாகவும் அங்கு பல ஆண்டுகள் அவர்கள் நன்கு வாழ்ந்து வந்ததாகவும் சொன்னார். ஆனால் 6 மாதங்களுக்கு முன்பு அங்கு ஒரு வாஸ்து விஞ்ஞானி வந்தார். இயற்கையில் ஏற்கனவே இருப்பதைக் கண்டறிபவர்களை விட, இல்லவேயில்லாத ஒரு விஷயத்தைக் கண்டுபிடிப்பவர்கள்தான் பெரிய விஞ்ஞானிகள்.

இந்த வாஸ்து விஞ்ஞானி வந்து பார்த்துவிட்டு, "இந்த வீட்டில் எல்லாம் நன்றாக இருக்கிறது. ஆனால் இந்த வீட்டின் தென்மேற்கு மூலை, அந்த வீட்டைவிடக் கொஞ்சம் உயரமாக இருக்க வேண்டும். ஆனால் உங்கள் வீட்டின் வடமேற்கு மூலை தான் கொஞ்சம் உயரமாக இருக்கிறது. இது இப்படியிருந்தால் உங்கள் மகன் இறந்துவிடுவான்" என்று சொல்லியிருக்கிறார். இந்தப் பெண்மணிக்கு 2 மகன்கள். இதை சொல்லிவிட்டு அந்த விஞ்ஞானி போய்விட்டார். இப்பொழுது இந்தப் பெண்மணி பதறிப் போய்விட்டார். அவரது கணவர் ஒரு மருத்துவர். அவர் இதை ஏற்கவில்லை. அவருக்கு வீட்டை இடித்துக் கட்டுவதில் விருப்பமில்லை.

அந்த விஞ்ஞானி இந்தக் குழப்பம் இந்த வீட்டில் ஒரு வாரம் நீடித்திருக்கும் வரை பொறுத்திருந்தார். இந்த வாரத்திற்குள் பல்வேறு உணர்ச்சிகளால் அலைக்கழிக்கப்பட்டு ஏறக்குறைய பைத்தியம் பிடிக்கும் நிலைக்கு இந்தப் பெண்மணி போய்விட்டார். தன் மகன்கள் தெருவோரத் திருப்பங்களில் இறந்து விழுவது போல் கனவு வரத்தொடங்கியது. அவர் மனதில் ஏகப்பட்ட கற்பனைகள் தொடங்கின. மிகவும் பயந்து போய்விட்டார். தன் மகன்கள் எப்போதும் இறக்க நேரிடும் என்ற அச்சம் நீடித்தது. எனவே ஒரு வாரத்திற்குப் பிறகு இந்த விஞ்ஞானியை மறுபடியும் அழைத்தார். அந்த வாஸ்து விஞ்ஞானிக்கும் இது தெரியும். அவர் சொல்லிவிட்டுப் போய் எத்தனை நாட்களுக்குள் இந்த எதிர்விளைவு ஏற்படும் என்று. ஒரு வாரத்திற்குள் அந்த வாஸ்து விஞ்ஞானியையே தொலைபேசியில் அழைத்தார். அந்தத் தீமையை எதிர்கொள்வதற்கு ஏதாவது செய்யுமாறு அவர்களை இவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

> " வாஸ்து உங்களுடைய வாழ்க்கைக்குள் வருவதற்குக் காரணம், எப்போதுமே நீங்கள் அச்சத்தில் வாழ்வதுதான். இப்போது கழிவறைகளில் இருக்கிற தண்ணீர் தொட்டியின் திசையைக் கூட மாற்றி வைக்கிறார்கள். ஏனென்றால், வாஸ்து சொல்கிறது...? "

இந்த மனிதர் அதற்கு ஒரு பரிகாரம் இருக்கிறதென்று சொல்லி அதற்கு 2,000 ரூபாய் பணம் வாங்கிக் கொண்டு, அவர்கள் மகன் சாகாமல் இருப்பதற்காக ஒரு 25 அடி உயர கொடிக்கம்பத்தை வீட்டிற்குக் கொண்டு வந்தார். அந்த வீட்டில் இருப்போர் உதவியோடு மிகவும் சிரமப்பட்டு அந்த கொடிக்கம்பம் வீட்டிற்குள் கொண்டு வரப்பட்டது. இதற்காக மிகவும் சிரமம் எடுத்துக் கொண்டது போல நடித்தால்தானே இந்த நாடகம் உச்சக்கட்டத்தை அடையும். அந்தக் கொடிக்கம்பத்தைக் கொண்டு வந்து வைத்துவிட்டார்கள். இப்போது இந்தக் கொடிக்கம்பம் வந்ததால் அதன் மேற்கு மூலை உயரமாகி அவர்கள் மகனின் உயிரை இவர் காப்பாற்றிவிட்டார்.

நிச்சயமாக ஒரு வீடு கட்டுவதற்கு என்று ஒரு விஞ்ஞானம் இருக்கிறது. அதில் உடல்நலம், உள்ளநலம் என்று நல்வாழ்க்கைக்கு உதவி செய்வதற்கென்று அம்சங்கள் உள்ளன. இல்லை என்று சொல்ல முடியாது. ஆனால் அச்சத்தின் காரணமாக அதற்கு அளவு கடந்த முக்கியத்துவத்தைக் கொடுக்க ஆரம்பித்து விட்டீர்கள். வாஸ்து ஒரு விஞ்ஞானம்தான். நான் மறுக்கவில்லை. இப்பொழுது அது முழுமையாகக் கைவிடப்பட்டிருக்கிறது. அதற்கு மாற்றாக சீனாவில் இன்னொன்று வந்திருக்கின்றது. இனி உங்கள் கழிப்பறையை நீங்கள் சமையலறையாக மாற்ற வேண்டிய அவசியமில்லை. கழிப்பறையின் முன்னால் ஒரு கண்ணாடி வைத்து விட்டாலே போதும். கழிப்பறையிலேயே உங்கள் சமையலறை தெரியும், இதைச் செய்தால் எல்லாம் சரியாகிவிடும். இவர்கள் இன்னும் அறிவாளிகளாக இருக்கிறார்கள். அவர்களை இடிக்க வேண்டாம். வெறும் கற்களும், கண்ணாடிகளுமே எல்லாவற்றையும் சரி செய்து தருகிறது. எது செய்ய வேண்டுமோ? அதை நீங்கள் செய்வதில்லை. தேவை இல்லாத விஷயங்கள் பலவற்றைச் செய்கிறீர்கள். உங்கள் எல்லா சக்தியையும் இது போன்ற செயல்களில் நீங்கள் வீணடித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

mahesan.thiru@thaiveedu.com

■ ■ ■

# லெமூரியா கண்ட...

74ம் பக்கத் தொடர்ச்சி...

தம்மை மேன்மைப்படுத்துவதற்காக அழைத்தனர் என்றே கூறமுடியும். ஆனால் சிங்களவர் யாவரும் தமிழர்களாகவிருந்து படிப்படியாக மாறியவர்களே.

முதற் சங்கமும் இடைச்சங்கமும் 10,000 ஆண்டுகளுக்கு முன்பு இங்கேயே இருந்ததாகக் குறிப்பிடுகின்றனர். முதற் சங்கம் வடவேங்கடம், தென்மதுரை மற்றும் கவுடாபுரம் அகிய பிரதேங்களுக்குட்பட்டிருந்ததாக ஆராச்சியாளர் குறிப்பிடுகின்றனர். இடைச்சங்கம் ப.்றுளி ஆற்றிற்கும் குமரி ஆற்றிற்கும் இடைப்பட்ட நிலப்பரப்பில் 70 கவதம் பரப்பளவில் இருந்ததாகக் குறிப்பிடுகின்றனர். (இதன் அளவு தற்போதைய 1000 மைல்களாகும்.) பாண்டியப் பேரசில் இருந்த மலைத் தொடர்களில் சீன தொழிலாளர்கள் இரத்தினக்கற்கள் அகழ்ந்து எடுத்து அதனை மன்னரின் கோவில்களில் பதித்ததாகவும் சீன புராணக் கதைகளில் குறிப்பிடப்படுகின்றது.

குமரிக்கண்டத்தினைக் கடல்கோள் கொண்ட பின்பு எஞ்சியிருந்த மக்கள் இலங்கையில் வாழும் தமிழ்குடிகளாவர். இக்காலத்தின் பின்பே கடைச் சங்கம் தென்மதுரையில் பாண்டிய மன்னர்களின் ஆட்சியில் தொடர்ந்து தமிழ் வளர்த்தார்கள்.



வால்மீகி இராமாயணமே முதன் முதலில் தேவநகரியில் (சமஸ்கிருதம்) எழுதப்பட்டது. இதனை வால்மீகி என்னும் ஆரிய பிராமணிய முனிவர் வட இந்தியாவில் எழுதியிருந்தார். இதனை அடியொற்றியே கம்பர் தமிழுக்கேயுரிய இலக்கியச் சுவையுடன் எழுதினார். அதுவே கம்பராமாயணம் எனப்பட்டது. இதனை கம்பரவர்கள் வால்மீகி தனது இராமாயணத்தில் பயன்படுத்திய அத்தனை கதா பாத்திரங்களையும் பயன்படுத்தியே எழுதியிருந்தார்.

ஆரிய மாயை தமிழ்கூறும் நல்லுலகத்தினையே ஆட்கொண்டிருந்த காலமது. அதன் காரமாக வைதீக பிராமணனை மேன்மைப் படுத்தியும் திராவிடர்களைச் சிறுமைப்படுத்தியும் பாத்திரங்கள் படைக்கப்பட்டிருந்தன. இக்காதையானது முன்பொருகாலத்தில் நடைபெற்ற உண்மைச் சம்பவங்களை இலக்கியச் சுவையுடன் வால்மீகி படைத்தது ஆரியமாயையில் உளன்ற சைவத்தமிழர்களுக்கு அப்போது உறைக்கவில்லை. ஆரியப்பிராமண அரசபரம்பரையில் உதித்த இராமனை கடவுள் அவதாரமாகவும் இலங்கையில் அரசாட்சி செலுத்திய திராவிடத் தமிழ் சிவ பக்தனாகிய இராவணனை இராட்சத இனத்தின் தலைவனாகவே வால்மீகி சித்தரிக்கின்றார். இலங்கையில் நாகர்கள் மட்டுந்தன் வாழ்ந்தார்கள் இவர்களின் தலைவனே கறுத்த உருவமுடைய பலசாலியான திராவிடப் பரம்பரையான இராவணன் ஆவான். இவனது குடும்ப உறுப்பினர்கள் அனைவருமே இராடசதர்களாகச் சித்தரிக்கபடும் நாகர்களே. இராமன் தனது படைகளுடன் வட இந்தியாவிலிந்து தெற்கு நோக்கி தமிழ்நாட்டிற்கு வந்து இராமேஸ்வரமூடாக படையெடுத்து வரும்போது அவர்களுக்கு உதவியாக அநுமானும் அவனது இனமாகிய வானரக் கூட்டங்களுமே இராமருக்கு புஜபல உதவிப்படைகளாக இலங்கைக்குப் படையெடுத்து செல்லுகின்றார்கள். ஏன் தென்னாட்டின் மனிதப்பிறவிகள் இருக்கவில்லையா? அங்கு வாழ்ந்த திராவிடர்களை இழிமைப்படுத்தும் நோக்கிலேயே அவர்கள் குரங்குக்கூட்டமாவே சித்தரிக்கப்பட்டுள்ளார்கள். இங்கு மண்ணின் மைந்தன் மறைக்கப்படுகிறான். இது ஆதாரபூர்வமாக மேலும் ஆராச்சிகள் செய்து நிறுவப்பட வேண்டும். இங்கு கூறப்பட்ட இராமர் பாலத்தையே அண்மையில் எடுக்கப்பட்ட செய்மதிப்படங்கள் மூலம் அறிய முடியும். அண்மைய யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மன்னார் வாழ் மக்கள் கடல் வற்றுக் காலங்களில் சிறுபடகின் உதவியுடன் கால் நடையாக ஒரு சென்றார்கள். இப்படிச் சென்ற ஒரு நண்பனே எனக்கு நேரடியாகச் சொன்னார்.

தொடரும்...

packiyanathan.m@thaiveedu.com


■ ■ ■

# கொடியேற்றம்


குரு அரவிந்தன்

கனடிய தேசியக் கொடிக்கு வயது நாற்பத்தி ஐந்து!


கொடியேற்றம் என்றதும் எங்களில் பலருக்கு ஞபகம் வருவது கோயில் திருவிழாக்கள்தான். திருவிழா என்றால் போதும், சிறுவர் இளைஞர் என்ற வயது வித்தியாசமில்லாமல்



1868-1921வரை பாவனையில் இருந்த கொடி.


மூன்று இலைகளைக் கொண்ட அறிமுகம் செய்யப்பட்ட கொடியில் ஒன்று.

எல்லோருக்கும் கும்மாளம் அடிப்பார்கள். அந்த நினைவுகளோடு புகலிடம் தேடிக் கனடாவிற்கு வந்தபின் இங்கேயும் பல விழாக்கள் ஆரம்பமாகும் போது கொடி ஏற்றத்தைக் கண்டோம். விழா அமைப்பாளர்கள் தங்கள் கொடியை ஏற்றும்போது, கனடிய தேசியக் கொடியையும் ஏற்றுவது வழக்கம். மிகவும் கம்பீரமாகப் பறக்கும் அந்த கனடிய தேசியக் கொடிக்கு இன்று வயது நாற்பத்தைந்து. ஆமாம் புதிய வடிவமெடுத்த இன்றைய கனடிய தேசியக் கொடிக்கு நாற்பத்தி ஐந்து வயதாகிறது.

பெப்ரவரி மாதம் 15ம் திகதி 1965ம் ஆண்டு ஒட்டவாவில் உள்ள பார்லிமென்ட்கில் சதுக்கத்தில் முதன் முதலாக கனடிய தேசியக் கொடி உத்தியோகபூர்வமாக ஏற்றி வைக்கப்பட்டது. இந்த வைபவத்தில் அப்போதைய கனடிய கவணஜெனரல் ஜோர்ச் வெயினர் (Georges Vanier) கனடியப் பிரதமராக இருந்த லெஸ்ரர். பி. பியர்சன் (Lester B. Pearson) ஆகியோரும் கலந்து கொண்டனர். சிகப்பு,


1921-1957வரை பாவனையில் இருந்த கொடி.


தற்போதைய பாவனையில் இருக்கும் தேசியக்கொடி

வெள்ளை நிறம் கலந்த தேசியக் கொடியில் மேபிள் இலை சின்னமாக வரையப்பட்டிருந்தது. இரண்டு கரைகளிலும் சிகப்பு நிறமும், நடுவே வெள்ளை நிறமும் கொண்ட, அகலத்தைவிட இரண்டு மடங்கு நீளமான இத்தேசியக் கொடியின் நடுவே சிகப்பு நிறத்தில் மேபிள் இலை வரையப்பட்டிருந்தது. இந்த மேபிள் இலை தொடக்கத்தில் பதின்மூன்று முனைகளைக் கொண்டதாக இருந்தாலும், பின் பதினொரு முனைகளைக் கொண்டதாக மாற்றி அமைக்கப்பட்டது. உண்மையான மேபிள் இலையில் 27 முனைகள் இருப்பதையும் நீங்கள் அவதானிக்கலாம். 1964ம் ஆண்டு லெஸ்ரர் பி. பியர்சனால் நியமிக்கப்பட்ட பதினைந்து உறுப்பினர்களைக் கொண்ட குழுவினரே இத் தேசியக் கொடியை வடிவமைக்க உதவினர். முதலில் மூன்று விதமான கொடிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பின் இறுதித் தெரிவாக இந்தக் கொடி தெரிந்தெடுக்கப்பட்டது. இந்தக் கொடியை றோயல் இராணுவக் கல்லூரியைச் சேர்ந்த ஜோர்ச். ஜி. ஸ்ரான்லி என்பவரும் ஜோன் மத்தர்சன் என்பவரும் சேர்ந்து உருவாக்கியிருந்தனர். முதன் முதலாகத் தேசியக் கொடி ஏற்றப்பட்டபோது அங்கே கூடி நின்ற மக்கள் தேசிய கீதம் இசைத்து, கொடி வணக்கம் செய்தார்கள். அப்போது அங்கே உரையாற்றிய செனற்சபை பேச்சாளர் (Maurice Bourget) இந்தக் கொடி கனடிய குடிமக்களின் ஒற்றுமையையும், எல்லோரும் எந்தவித ஏற்றதாழ்வுமின்றி இந்த மண்ணில் வாழ்வதை அடையாளப்படுத்திக் காட்டுவதாகவும் குறிப்பிட்டார்.

1870ம் ஆண்டிலிருந்து 1924ம் ஆண்டுவரை உத்தியோக பூர்வமற்ற றோயல் யூனியன் கொடியே பிரித்தானிய கட்டுப்பாட்டில் இருந்த வடஅமெரிக்காவில் பாவனையில் இருந்தது. இந்தக் கொடி இடதுபக்க மூலையில் யூனியன் ஜாக் படத்தை உள்ளடக்கியதாக, சிகப்பு நிறத்தைக் கொண்டதாகவும் இருந்தது. 1946ம் ஆண்டு கனடியப் பிரதமராக இருந்த மக்கன்சி கிங் (Mackenzie King) அவர்கள் கனடாவிற்கான புதிய தேசியக் கொடியை அறிமுகப்படுத்த முயற்சி செய்தாலும் அது நடைமுறையில் சாத்தியப்படவில்லை.

கனடிய தேசியக் கொடியைவிட, ஒவ்வொரு மாகாணங்களுக்கான கொடிகளும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. கியூபெக் மாகாணமே தனக்கான முதலாவது கொடியை ஜனவரி மாதம் 21ம் திகதி 1948ல் உருவாக்கியது. இரண்டாவதாக நியூபவுண்லன்ட் தனக்கான கொடியை 1949ல் உருவாக்கியது. கனடாவைப் பிரதிபலிக்கும் அனேகமான கொடிகளில் மேபில் இலை இடம் பெற்றிருக்கிறது. பெப்ரவரி மாதம் 15ம் திகதியை கனடிய தேசிய கொடித்தினமாகக் கனடியர்கள் கொண்டாடுகிறார்கள். கனடிய கொடியில் சிகப்பும் வெள்ளையும் இடம் பெற்றதற்குக் காரணம் இந்த நிறங்களே பிரித்தானிய, பிரெஞ்ச் அரசர்களால் பாவிக்கப்பட்டது என்பதும் முக்கிய காரணமாக இருந்தது.

அனேகமான நாடுகளில் தேசியக் கொடியை எரிப்பதோ அல்லது அதை அவமானப்படுத்துவதோ ஒரு குற்றமாகக் கருதப்படுகின்றது. தேசிய கொடி ஏற்றப்படும்போது கனடிய தேசிய கீதமான 'ஓ கனடா' இசைக்கப்படுவது வழக்கமாகும். இத்தேசிய கீதத்தைக் கவிநாயகர் வி. கந்தவனம் அவர்கள் தமிழில் மொழி பெயர்த்திருப்பதும், அனேகமான தமிழர்களின் விழாக்களில் தமிழில் இத்தேசிய கீதம் இசைக்கப்படுவதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

ஓ கனடா எங்கள் வீடும் நாடும் நீ!
உந்தன் மைந்தர்கள் உண்மைத் தேச பக்தர்கள்!
நேரிய வடக்காய் வலுவாய் இயல்பாய்
நீ எழல் கண்டுவப்போம்!
எங்கும் உள்ள நாம், ஓ கனடா
நின்னைப் போற்றி அணிவகுத்தோம்!
எம் நிலப் புகழைச் சுதந்திரத்தை
என்றும் இறைவன் காத்திடுக!
ஓ கனடா நாம் நின்னைப் போற்றி அணிவகுத்தோம்!
ஓ கனடா நாம் நின்னைப் போற்றி அணிவகுத்தோம்!

kuruaravindan@thaiveedu.com

■ ■ ■



# தமிழமுது தந்த தமிழ் அமுது

கந்தசாமி கங்காதரன்

அமுதுப் புலவர் என்றும் அமுது என்றும் அமுதசாகரன் என்றும் அனைவராலும் நன்கறியப்பட்ட தமிழறிஞர், கவிஞர், கலாநிதி சவரிமுத்து அடைக்கலமுத்து அவர்கள் பெப்ரவரி 23ஆம் நாளன்று தனது 92ஆவது அகவையில், இங்கிலாந்து - இலண்டனில் காலமான துயரச் செய்தியை யாவரும் அறிந்திருப்பீர்கள்.

பாவேந்தர் பாரதிதாசன் ‘தமிழுக்கு அமுதென்று பேர்’ என்றார். ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை தமிழும் அமுதும் இணைந்தே இருந்தன. ‘தமிழுக்கு, புலவர் அமுதென்று பேர்’ என்று நாம் பொருள் சொல்லுமளவுக்கு ஆழ்ந்த, நுண்ணிய தமிழ்ப்புலமையும் தமிழ் மொழி மீது அளவிலாப் பற்றும் கொண்டிருந்தவர் அமுதுப் புலவர்.

1918ஆம் ஆண்டிற் பிறந்த அமுதுப் புலவர், தொடக்கக்கல்வியை இளவாலை ஹென்றியரசர் கல்லூரியிலும் பின்னர் யாழ் சம்பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றார். கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்றப்பட்டவராக, ஆசிரியப்பணியைத் தன்னுடைய பத்தொன்பதாவது அகவையிலேயே தொடங்கினார்.

‘பண்டிதர்’ தகுதிக்குத் தமிழகம் சென்று கற்க வேண்டிய நிலையைத் தவிர்த்து ஈழத்திலேயே அந்தக் கற்கை நெறியை வழங்கும் நோக்கோடு தொடங்கப்பட்ட, மதிப்புமிக்க காவியப் பாடசாலையில் கற்றுப் ‘பண்டிதர்’ ஆனதோடு பேராதனைப் பல்கலைக் கழகத்தின் ‘வித்துவான்’ பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். காவியப்பாடசாலையின் ‘பண்டிதர்’ பட்டமென்பது, காவியப்பாடசாலை அப்போதைய இலங்கைக் கல்வியமைச்சின் கீழ் (Education Ministry Of Ceylon) இயங்கிதால், கல்வியமைச்சு வழங்கிய பட்டமாகின்றது.



14-09-1918 23-02-2010

இத்தகைய தகுதிகள் மூலம் தன்னையும் செழுமைப்படுத்திக் கொண்டு பல்லாயிரக்கணக்கான மாணாக்கர்களுக்குத் தமிழமுதூட்டினார் அமுதுப் புலவர். முதலாம் தர ஆசிரியர் என்ற தகுதியையும் கற்பிக்கும் காலத்தே எய்தியிருந்தார். அதிபராகவும் பதவி வகித்தார்.
ஆசிரியப் பணியோடு அமுதுப் புலவரின் தமிழ்ப்பணி நின்றிடவில்லை. தன் எழுத்துக்கள் மூலம் தமிழுக்கு வளம் சேர்த்தார் புலவர். இருபது வயதிலேயே எழுதத் தொடங்கிய அவரது எழுத்துப் பணியும் 70 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்தது. ‘சத்திய வேத பாதுகாவலன்’ பத்திரிகையில் வெளியான ‘மாதா அஞ்சலி’ தான் புலவரின் கன்னிப் படைப்பு. ஆசிரிய கலாசாலையின் ‘தூதன்’ சஞ்சிகையின் நூறாவது மலருக்கும் யாழ் பல்கலைக்கழகத்துத் தமிழ்ச்சங்கத்தின் ‘இளங்கதிர்’ என்ற ஆண்டு மலருக்கும் ஆசிரியராக இருந்த புலவரின் திறமைக்கு அவ்விரு நூல்களும் சான்று.

தொடர்ந்து அமுதுப் புலவரின் ஆக்கங்கள் பல்வேறு சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் வெளியாகிக் கொண்டிருந்தன. 45ஆண்டு ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்றதும் தன் தமிழ்ப் பணியைத் தொடர்ந்து கொண்டிருந்த அமுதுப் புலவர் 1984இல் இளவாலையிலிருந்து இங்கிலாந்துக்குப் புலம் பெயர்ந்தார். புலத்துக் குளிரோ வேறெந்தச் சூழ்நிலையோ புலவருக்குத் தடையாக இருந்ததில்லை. இங்கிலாந்திலிருந்து ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கும், அவுஸ்திரேலியா, கனடாவுக்கும் அடிக்கடி பயணஞ்செய்து சமூக நிகழ்வுகளிலும் கலந்துகொண்டார்.

அமுதுப் புலவர் எழுதி வெளியான நூல்கள் பல. கருணையுற்றதால் நம் அனைவருக்கும் அன்னையான, அன்னை தெரேசாவின் வாழ்க்கை வரலாறு அமுதுப் புலவரின் அமுதினுமினிய தமிழில் ‘அன்பின் கங்கை அன்னை தெரேசா’ என்று வெளியாகிப் பலத்த வரவேற்பைப் பெற்றது. மருதமடு மாதா காவிய மல்லிகை என்ற மடு மாதா காவியம், சுவாமி ஞானப்பிரகாசரின் வரலாறு - நெஞ்சே நினை(1975), அன்னம்மாள் ஆலய வரலாறு என்று ஆன்மீகப் படைப்புக்கள் பல புலவரின் எழுத்துக்களில் வெளிவந்துள்ளன.

தன்னோடு நெருங்கிப் பழகிய அறிஞர்களைப் பற்றிய நினைவுப் பதிவாக ‘இந்த வேலிக்குக் கதியால் போட்டவர்கள்’ என்ற நூலையும் வெளியிட்டார் அமுதுப் புலவர்.

‘காக்கும் கரங்கள்’ (1983) என்ற ஈழத்தில் தமிழ் சித்த ஆயுள்வேத மருத்துவ ஆய்வு நூலும் அமுதுப் புலவரின் பன்முக ஆளுமைக்குச் சான்று. இந் நூலுக்கும் ‘நெஞ்சே நினை’ நூலுக்கும் இலங்கை சாகித்தியபீட விருது கிடைத்தமை இந் நூல்களின் சிறப்பைப் பறைசாற்றுகின்றது.

கனடாவுக்கும் அமுதுப்புலவருக்கும் நிறையத் தொடர்புண்டு. 2006ஆம் ஆண்டு, தமிழர் தகவல் - வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டபோதும் பின்னர் 2007இல் நெடுந்தீவு மக்கள் ஒன்றியத்தினரின் விழாவின் போதும் அமுதுப் புலவர் கனடாவுக்கு வருகை தந்திருந்தார்.

தான் பிறந்த நெடுந்தீவு மண்ணினதும் அங்கு பேசப்படும் தமிழ் வழக்கினதும் தனித்துவம் பற்றி நிறைய ஆர்வம் கொண்டிருந்தவர் அமுதுப் புலவர். நெடுந்தீவு மக்கள் ஒன்றியத்தின் விழாவில், நகைச்சுவை ததும்பத் ததும்ப அமுதுப் புலவர் பேசும்போது அரங்கமே சிரிப்பில் குலுங்கியது. எத்தனை தீவிரமான விடயத்தைப் பேசினாலும் சிரிக்கவும் வைக்கக்கூடிய மிகுந்த நகைச்சுவை உணர்வு மிகப்பெற்றவர் புலவர்.

அவருடைய இலக்கியப் பணிக்கு, 2004ஆம் ஆண்டு ஒரு பெரும் மகுடம் சூட்டப்பட்டது. மறைந்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் அவர்கள் அமுதுப்புலவரின் கிறிஸ்தவ, இலக்கியப் பணியைப் பாராட்டி ‘செவாலியர்’ விருது வழங்கியபோது தமிழினமே பெருமை கொண்டது. (நடிகர் திலகம் சிவாஜிகணேசனுக்கு பிரெஞ்சு அரசு வழங்கியது செவாலியர் விருதுதான். ஆனால் அதற்கும் இதற்கும் எந்தத் தொடர்புமில்லை)

2004இலேயே இலங்கை அரசின் கலாபூஷணம் விருதும் அமுதுப் புலவருக்கு அணி சேர்த்தது.

யாழ் பல்கலைக்கழகமும் அமுதுப் புலவரின் வாழ்நாள் இலக்கியப் பணிக்கு மதிப்பளிக்குமுகமாக கௌரவ கலாநிதிப் பட்டத்தை 2005இல் வழங்கிப் பெருமை பெற்றது. இங்கிலாந்தின் தமிழ்ச் சமூகமும் வாளாவிருந்துவிடவில்லை. மணிமேகலைப் பிரசுரம் வெளியிட்ட ‘இளவாலை தமிழ்க் கங்கை அமுது ஐயாவின் அற்புதப் படைப்புக்கள்’ என்ற 1,600 பக்க நூலை இலண்டன் கிரீன்.·.போர்ட் நகர மண்டபத்தில் வைத்து வெளியிட்டதோடு, அமுதுப் புலவருக்கு மூதறிஞர் என்ற பட்டத்தினை வழங்கிச் சிறப்புப் பெற்றது. 2010 பெப்ரவரி 7ஆம் நாள், ஊடகர், நாடகர் ஏ.சீ தாசீசியஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் புலத்திலிருந்தும் ஈழத்திலிருந்தும் தமிழ்ச் சான்றோர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

தமிழுக்கும் தமிழருக்கும் அமுதுப் புலவர் செய்த பணிகள் நின்று போய்விட்டாலும் அவரின் படைப்புக்கள் நிலைத்து நின்று அவர் பெயரைச் சொல்லிக் கொண்டிருக்கப் போகின்றன.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த அமுதுப் புலவர் அவர்களின் மறைவில் துயருறும் அன்னாரின் குடும்பத்தவரதும் மற்றும் அனைவரினதும் துயரில் ‘தாய்வீடு’ இதழும் பங்கு கொள்கின்றது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக!

gangatharan.k@thaiveedu.com

■ ■ ■

“வீட்டிலும், நாட்டிலும் இரத்தத் துளிகள். தமிழன் என்ற வேருக்கே கோடரி வைக்கப்பட்டது. இடம் பெயர்ந்து இங்கிலாந்துக்கு வரவேண்டியதாயிற்று. ஓர் ஒற்றைத் தாளைத்தானும் உடன் கொண்டுவந்தால், இடையே உள்ள இருபது தடைமுகாம்களிலும், ஆபத்தை விலைக்கு வேண்டுவதாய் முடியும். இந்த நிலையில் நான் நீண்ட காலமாகத் தேடித் திரட்டிய நூல்களையும் எனது கவிதைக் கோவைகளையும், என் இல்லத்தில் பக்குவமாய் வைத்து விட்டுப் பிறநாடு வந்து சேர்ந்தேன். ஐந்து ஆண்டுகளுக்குப் பின்பு என் இல்லத்துக்குச் சென்ற போது, அங்கே சுடுகாட்டின் மௌனம் தோன்றியது. கடுகு மணியொன்றைக் கண்டெடுத்தாலும், காகிதத் துண்டு ஒன்றைக் காணமுடியவில்லை. திருடர்கள் திருவிழா நடத்தியிருக்கவேண்டும். வாழ்ந்த சுவடுகள்கூடத் திருடப்பட்டு விட்டன.” என்று யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பில் ‘அமுதுவின் கவிதைகள்’ முதற் பகுதி வெளியிடப்பட்டபோது அமுதுப் புலவர் சொன்னார்.

தாயகத்தை விட்டுப் புகலிடம் வந்த பலரின் உள்ளக் கிடக்கை இந்த வரிகள்.



# குப்பையடிக் கறுத்தக்கொழும்பான்

- பொ.கனகசபாபதி -

எமது வளவு விசாலமானது. கம்பீரம் சொட்டும் இரண்டு வடக்கன் மாடுகளுக்கெனத் தனியான தொட்டில் ஒருபுறம். மூன்று பசுமாடுகள், அவற்றின் வழித்தோன்றல்களுக்கென ஒரு தொழுவம் சற்றுத் தள்ளி. இரண்டுக்கும் இடையேதான் குப்பைக் கிடங்கு. அது மிகவும் பெரியது. ஓரளவுக்கு 20 அடி நீளம் பத்தடி அகலம் 4 அடி ஆழம் எனலாம். மாட்டெருவும் வீட்டின் குப்பை கூழங்களும் அங்கே சங்கமம் ஆக, இடையிடையே மழை பெய்து கொடுக்க நமது தோட்டம் மற்றும் வயலுக்கான கூட்டெரு (compost) தயாரிக்கப் படுகிறது. ஆனால் ஒரு சங்கடம். மாரிகாலத்தில் குப்பைக் கிடங்கு நீரினால் நிரம்பிவிடும். இரவிலே ஒரே ஜலதரங்கக் கச்சேரிதான். "கல்லினுட் தேரைக்கும் கருப்பை உயிருக்கும்" எனத் தியாகராஜா பாகவதர் ஒரு பாட்டுப் பாடுவாரே. மழை பெய்தால் அவைக்குக் கொண்டாட்டம். மெல்ல கல்லுக்கு வெளியே வந்து ஓய்வு முறித்துக் கொண்டு உல்லாசம் தேடத் தொடங்கி விடுவார்கள். சோம்பிக் கிடந்தவர்கள் வாழ்க்கையை அனுபவிக்கக் கிளம்பி விட்டால் கேட்க வேண்டுமா? வாழ்க்கையை அனுபவிப்பதற்கு இரவுதான் சிறந்தது என மனிதர் மாத்திரமா உணர்கிறார்கள், மண்டுகங்களுக்கும் அது தெரிந்திருக்கிறது. அதுவும் மழை பெய்தால் கொட்டமடிக்கச் சொல்லிக் கொடுக்க வேண்டுமா? ஆண் மண்டுகங்கள் (தேரை) காதல் வேகத்தால் கூவி அழைப்பது. பெண்களுக்குக் காதில் வந்து பாய, "கூவி அழைப்பான் குமரன்" என அவை ஓசைவந்த இடத்துக்குக் கலவிக்காக பாய்ந்து, பாய்ந்து செல்லும் அழகே அழகு.

பெண்ணின் முதுகில் ஆணுக்குச் சவாரி! பிறகென்ன உல்லாசத்துக்குக் கேட்க வேண்டுமா? 'மண்ணுக்கு மரம் பாரமா' பாடலில் வரும் 'பெற்றெடுத்த குழந்தை தாய்க்குப் பாரமா' என்ற வசனத்தை மாற்றி 'பெற்றெடுத்த புருஷன் எனக்குப் பாரமா' என பெண் மண்டுகம் சுமைதாங்கியாக நீரினை வலம் வரும். ஆனந்தத்தின் உச்சியில் நிற்கும் ஆண்கள் 'டொம் டொம் டொடங் டொடங்' என தாளலயத்துடன் எழுப்பும் ஓசை எமது காதினை நிரப்புவது கேட்பதற்கு கடூரமாக இல்லைத்தான். ஆனால் அவைகளின் உல்லாசம் நமது உறக்கத்துக்குப் பங்கம். காலையில் சென்று பார்த்தால் பாசிமணி கோர்த்த மாதிரி முட்டைகள் நீர்ப்பரப்பிலே மிதக்கும்.

நமது குப்பைக் கிடங்கின் பக்கத்தில் தான் நமது வீட்டுக் கறுத்தக் கொழும்பான் வாசம். குப்பைக் கிடங்கின் பசளை தாராளமாக அதற்கு உரமூட்டியது. பிறகென்ன சும்மா கனகம்பீரமாக கிளை பரப்பியபடி நின்றது. முக்கனி மரங்களிலே மாமரம் தான் தண்ணீர் கெடுபிடி காட்டாத நல்ல ஜீவன். பசளை நிறையவே. ஆகவே பருத்த இலைகள் அடர்த்தியாக கரும் பச்சை நிறத்தில். இலைகளுடன் மரம் கூடலாக ஆரோகணித்து நின்றமையால் காலையில் குயில், மாலையில் கோழி, குருவி என பறவையினம் பலவற்றுக்குத் தற்காலிக வாசஸ்தலம் வழங்குவதிலும் நமது கறுத்தக் கொழும்பான் மிக்க தாராளம்.

"கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளியொளி உதயத்
தொருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
---
---- பள்ளி எழுந்தருளாயே"

என மாணிக்கவாசகப் பெருமான் பாடிய திருப்பள்ளி எழுச்சி, பறவையினம் என்றதும் ஞாபகம் வருகிறது.

சிறுவனாய் பள்ளிப் பிள்ளையாக இருந்தபோது ஆலங்குழாய் வீட்டிலே காலையில் தலைவாயிலில் பாயின் மேல் படுத்துறங்கிக் கொண்டிருந்த என்னைத் துயில் எழுப்பிய குரல்கள் அத்தனையையும் சுவாமிகள் பாடியுள்ளார். வீட்டிற்கு அண்மையில் உள்ள புளியடி வைரவர் கோவிலின் பிரமாண்டமான ஆலமரத்தின் பழங்களை உண்ணும் குருவிகளின் பல்குரல், 'பல்லியம்' போன்ற ரீங்காரம் இப்போது நினைக்கும் போதும் என்னைக் கிறங்கடிக்கின்றன. என் வீட்டு கறுத்தக்கொழும்பானிலே ஓய்வுக்காகவும் உல்லாசத்துக்காகவும் தங்கிய மாங்குயில் மாத்திரம் (Koel –Eudydamus scolopacea) ஓசை எழுப்பவில்லை. மரத்தின் கிளைகளிலே இரவு உறக்கத்துக்காகச் சென்ற நமது வீட்டின் கோழிச்சேவல்களும் பேடுகளும் காலையில் பறந்து கீழே விழுந்து நிலத்தில் இருந்த வண்ணம் செட்டையை அடித்தபடி கூவ, அதன் ஒலிகேட்ட அருகு வீட்டான் கூவச் சங்கிலித் தொடர் போலக் கோழிகளின் கூவல்களை இப்போது எண்ணிய போதும் மனது பரவசத்தில் மிதக்கின்றதே.



மணிவாசகப் பெருமான் சொல்லாதது ஒன்றும் எனது உள்ளத்தினை இதமாக வருடியது. இத்தனை ஓசை ஒலிகளும் என்னை உறக்கம் விட்டு அருட்டின என்பது உண்மை. ஆனால் என்னை எழுப்பியது இவை அல்லவே! அந்த ஓசைகளின் சங்கமத்திலே தேனினும் இனிய குரலொன்று தெளிவாக என் காதில் வந்து பாய்கிறதே. அது "தம்பி எழும்படா" என்று வாஞ்சை நிறைந்த இன்குரல், என்னை ஈன்றவளின் தெய்வீகக் குரல். அந்த இனிய ஏவலா அல்லது அந்தக் குயிலின் இன்னிசைக் கூவலா என்னை துயில் கலைந்து நாளாந்தம் எழச் செய்தன? எது இனிமை? எங்கே இதம்? இத்தனை ஆண்டுகளுக்குப் பின்னரும் அதனை உணர முடிகிறதே. அதன் மகத்துவம் அனுபவித்தவர்களுக்குத் தான் தெரியும்!!

இப்போ கொஞ்சம் ஒரு சில வருடங்கள் பின் நோக்கிச் செல்வோமா?

"கூ, கூ" என்ற அந்த இன்னிசை ஆண்குயிலின் வாயிலிருந்தே வருகிறது. அதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று காதல் செய்வோம் வாரீர் என பெண்ணினத்துக்கு விடும் அழைப்பு. மற்றையது: "இது என்னுடைய பிரதேசம் இங்கே வந்தால் தெரியும்" என ஏனைய ஆண்களுக்கான எச்சரிக்கை.

ஆணின் லீலைக்கு உடன்பட்டால் முட்டையை எங்கே இடுவது என்ற பிரச்சினை பெண்ணிற்கு. இந்தப் பிரச்சினை இன்று நேற்று ஆரம்பமானதல்ல. ஏன் ஏற்பட்டது? வாழ்க்கையில் ஒரு பகுதியையோ அல்லது முழுவதையுமோ இன்னொரு உயிரினத்தினைச் சார்ந்து வாழ் பவர்களை ஒட்டுண்ணி (parasite) என்போம். தனது முட்டைகளை அடைகாக்க காக்கையைக் காக்கா பிடிக்கவேண்டி உள்ளதே குயிலுக்கு! ஆகவே குயிலினை ஒட்டுண்ணி என்றே வகைப்படுத்த வேண்டும். பொதுவாகவே எந்த விலங்கினமும் கூர்ப்பின்படி ஒட்டுண்ணியாகத் தோன்றுவதில்லை. ஆனால் தற்காலிகமாக இன்னொன்றுடன் தொடர்பு ஏற்பட அதனால் வாழ்க்கையைச் சுலபமாக ஓட்டிவிடலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டுவிட அதனையே தனது வாழ்வியலுக்காகத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறது. இப்படியாகத் தான் ஒட்டுண்ணி வாழ்க்கை ஆரம்பமாகிறது. குயிலுக்கு ஏன் இந்த அவலம் என நான் சிந்தித்தேன். சுயநலமிகளான ஆண்களே காரணமாக இருக்கலாம். பெண்குயில் முட்டைகளை அடைகாத்தல், குஞ்சுகளைப் பராமரித்தல் என்கின்ற குடும்பப் பாங்கான செயற்பாடுகளில் தன்னை ஈடுபடுத்திவிடுவதனால் தனது லீலைகளுக்கு இடம் கொடுக்காத கோபத்தை ஆண்குயில் முட்டைகளில் காண்பித்திருக்கலாம். முட்டைகளைக் கூட்டில் இருந்து கீழே உருட்டி அழித்துவிட்டால் அடைகாப்பதோ குஞ்சுகளைப் பராமரிப்பதோ இல்லாமையால் தொடர்ந்தும் தன்காதல் லீலைகளுக்குப் பெண்குயில் ஈடு கொடுக்கும் என்பது ஆண்குயிலின் செயலுக்கான விளக்கம். இதனை எப்படி சரி செய்வது என ஏங்கிய பெண்குயிலுக்குத் தோன்றிய ஒரே வழி தனது முட்டைகளை அடைகாக்க ஒரு ஈன்றாளினைத் (surrogate) தேடுவதே.

'கீக்கீ எனக் கத்தியபடி குயில் குஞ்சுகள் பரிதாபமாகப் பறக்க, ஆக்ரோசத்துடன் காகம் ஒன்று "கா, கா" என்றபடி கலைத்துக் கலைத்துக் கொத்தியதைக் கண்ட நினைவு வரவில்லையா? ஆம். குயில் தனது முட்டைகளைக் காகத்தின் கூட்டிலே இட்டுவிட்டுச் செல்ல காகம் தனது முட்டைகளுடன் குயிலின் முட்டைகளையும் அடை காத்து, பொரித்து உணவூட்டி, வளர்த்து அவை குயில் குஞ்சுகள் என்பதை அறிந்ததும் தான் ஏமாற்றப் பட்டுவிட்டேன் என்றதால் வந்த கோபத்தை ஏதும் பிழைசெய்யாத அந்தக் குஞ்சுகளில் வஞ்சம் தீர்த்ததைக் கண்ணால் எத்தனை பேர்கள் கண்டிருப்பீர்கள்.

குயிற்குஞ்சு முட்டையைக் காக்கைக்கூட் டிட்டால்
அயர்ப்பின்றிக் காக்கை வளர்க்கின்றது போல்
இயக்கில்லைப் போக்கில்லை யேயென்ப தில்லை
மயக்கத்தால் காக்கை வளர்கின்றவாறே.

(திருமந்திரம் 488)

அயர்ப்பு - சந்தேகம்.

கறுத்தக் கொழும்பு மாங்காய்தான் நான் பார்த்த மாங்காய்களிலே பெரியது. நல்ல கரும்பச்சை நிறம், ஆனால் அதிலும் ஒரு ஜொலிப்பு! சில கறுப்பினப் பெண்களைப் பார்த்திருப்பீர்களே - அந்த கருமை முகம். எத்தனை மினுமினுப்பாக, தடவிப் பார்க்க வேண்டும் எனும் ஆசையை எழுப்பும்! கவர்ச்சி காட்டுவதில் எமது கறுத்தக் கொழும்பு மாங்காயைத்தான் அவர்கள் நினைவூட்டுகிறார்கள். மாரி முடிந்தால் நமது குப்பைக் கிடங்கினிலே பல மாங்கன்றுகள் புதிதாக எட்டிப் பார்ப்பதைக் காணலாம். ஆனால் அவை ஒன்றும் நம் தேவைக்குதவாதவை.

மாமரத்தின் உற்பத்தி இந்தியாவே. (Mangifera indica) பின்னர் தென்கிழக்கு ஆசியாவை ஆக்கிரமித்து அடுத்து உலகெல்லாம் பரவி விட்டது. ஆபிரிக்காவிலும், தென் அமெரிக்காவிலும் குடி புகுந்து விட்டாலும் இப்பொழுது உலகில் அதிக அளவிலே மாங்காய் உற்பத்தியாவது இந்தியாவிலேயே.

இங்கே ஒரு முக்கியமான யாழப்பாணத்துக்கே உரித்தான ஒரு விசயம்பற்றிக் கூறியே ஆக வேண்டும். நீங்கள் மாம்பூவினைப் பார்த்திருப்பீர்கள். வெள்ளை அல்லது வெண்மஞ்சள் நிறத்திலே சிறு கிளைகளின் முனைகளிலே மஞ்சரிகளாகக் (Inflorescence) காணப்படும். அந்த மஞ்சரிகளிலே ஈரிலிங்கப் பூக்களும் உள்ளன. அவற்றுடன் ஆண்பூக்களும் காணப் படுகின்றன. ஆகவே மாமரமும் ஓரில்லத் தாவரமாகிறது (Monoceous) இதனால் மகரந்தச் சேர்க்கை சுலபமாக நடைபெற முடியும். ஆண்பூவினால் நடைபெறாவிட்டால் அதே பூவில் உள்ள மகரந்தமணிகளால் மகரந்தச் சேர்க்கை நடைபெறும். ஆகவே சுலபமாக மகரந்தச் சேர்க்கை நடைபெறும். அது தன்மகரந்தச் சேர்க்கையாக (Self-fertilization) உள்ளமையால் இனம் மாறுதற்கு இடம் இல்லை. ஆகவே பொதுவாக எல்லா நாடுகளிலுமே மாங்கன்றுகளை விதைகளிலிருந்தே உண்டாக்குகின்றார்கள். நமது யாழ்ப்பாணத்தில் மாத்திரம் அது விதி விலக்கு. பெரும்பான்மையான மாங்கன்றுகள் ஒட்டு மாங்கன்று. அதனால் சில அனுகூலங்கள் ஏற்படவே செய்கின்றன.

எமது மாங்கன்று ஒட்டு மாங்கன்று. ஒட்டு மாங்கன்றினைப்பற்றித் தெரிந்து கொள்ளவேண்டுமானால் ஒரு மனிதர் பற்றி கொஞ்சம் நான் சொல்லிக் கொள்ள வேண்டும். 65

80ம் பக்கம் பார்க்க...

79ம் பக்கத் தொடர்ச்சி...

வருடங்களுக்கு முந்திய கதை.

அவர் வாசஸ்தலம் இணுவில். எனது அம்மா அவரை சுந்தரஅம்மான் என்றே அழைப்பார். ஊரிலே அவரை மாங்கண்டுச் சுந்தரம் என்பார்கள். ஐந்தடி உயரம் இருக்கும் வட்ட வடிவான தலை. அதில் விசாலமான நெற்றியில் திருநீற்றுக் கீற்றின் மத்தியிலே சந்தனத்தில் பொட்டு. தலையில் காணப்பட்ட மயிர் கணிசமாக உதிர்ந்து விட்ட காரணத்தால் விசாலமான நெற்றி முன்னேயும், கொட்டைப்பாக்கிலும் சற்றுப் பெரிய சிறு குடும்பி பிற்புறத்திலேயும் காட்சிதர, புன்முறுவல் பூத்த முகத்துடன் என்னை வரவேற்றார் அந்தப் பெரியவர். அவர் சொல்லித்தான் நான் ஒட்டுதல்பற்றி (Grafting) முதன் முதலில் தெரிந்து கொண்டேன். அவர் வேறு யாருமல்லர் - கலகலப்புத் தீசனுடைய பேரன். அவர் வீட்டுக்கு நான் முதன் முதலில் போனபொழுது திகைத்து நின்றேன். இது என்ன ஆயிரம் கால் மண்டபமா?



**முற்றத்திலே உள்ள பெரிய கறுத்தக் கொழும்பான் மாமரம் ஒரு ஆயிரம் கால் மண்டபம் போன்று காட்சி தந்தது. அதன் பெரிய கிளைகளில் எல்லாம் தகரக் குடுவைகளிலே நாட்டப்பட்ட மாங்கன்றுகள் தொங்கிக்கொண்டிருந்தன.**

முற்றத்திலே உள்ள பெரிய கறுத்தக் கொழும்பான் மாமரம் ஒரு ஆயிரம் கால் மண்டபம் போன்று காட்சி தந்தது. அதன் பெரிய கிளைகளில் எல்லாம் தகரக் குடுவைகளிலே நாட்டப்பட்ட மாங்கன்றுகள் தொங்கிக் கொண்டிருந்தன. யாழ்ப்பாணத்தின் மரவளர்ச்சி பற்றிச் சிந்திக்கையில் இருவர் என்றுமே நினைவில் நிற்க வேண்டியவர்கள். ஒருவர் மில்க் வைற் கனகராசா என்ற பெருமகன் அவர்கள். மற்றவர் திரு சுந்தரம் அவர்கள்.

தாவரங்களை ஒட்டுகின்ற கலை அக்காலத்தில் தான் யாழ்ப்பாணத்தில் அறிமுகப் படுத்தப் பட்டது என எண்ணுகின்றேன். முதலில் கையாளப்பட்ட முறை 'அணை ஒட்டு' முறை. அதற்காக முதலில் விதைகளை நிலத்தில் பயிரிட்டு, அவை வளர்ந்ததும் தகரக் குடுவைகளில் இடம் மாற்றுவார்கள். பின்னர் அந்தக் கன்றினை எடுத்துச் சென்று பெரிய மாமரத்தில் ஒரு கிளையில் தொங்கவிடுவார்கள். தேவையான கிளையின் ஒருபக்கத்தைச் சிறிது சீவிக் கொள்வார்கள் இதே போன்று இக்கன்றினது ஒரு பக்கத்தையும் சீவிக் கொள்வார்கள். இரண்டினையும் சேர்த்து இறுகக்கட்டி விடுவார்கள். ஏறக்குறைய 15 நாட்களின் பின்னர் கிளைகளை வெட்டி, ஒட்டிய கன்றினைக் கீழே இறக்குவார்கள். இது அக்காலத்தில் நடைமுறையில் இருந்தது. இப்பொழுது 'ஆப்பு ஒட்டு' (Wedge Grafting) என்ற முறை கையாளப்படுகிறது. றோசாச் செடிகளிலே கையாளப்படுவது 'அரும்பு ஒட்டு' (Bud grafting/ Budding).

நமது கறுத்தக் கொழும்பான் ஓட்டு மாங்கன்று என்றேன். வஞ்சகம் இல்லாமல் நிறையவே காய்க்கும், ஆனால் அடர்த்தியான கரும் பச்சை இலைகளின் சுற்றாடலிலே காய்களைக் கண்டு கொள்வது அத்தனை சுலபமல்ல. ஆனால் காய்கள் முற்றி செம்பழம் ஆகி விட்டால் தங்கம்போல மினுங்கும். அப்போ சுலபமாகக் கண்டு கொள்ளலாம். ஆனால் நன்றாக முற்றும் வரையும் மரத்தில் தான் விடவேண்டும். இங்குதான் நாம் விரும்பத் தகாத ஒரு விருந்தாளி எங்களுக்கு இடைஞ்சலாக இருப்பார். முற்றிய மாங்காய் எமது கவனத்தை ஈர்க்கு முன்னர் அவர் கண்டு கொண்டு தன் பல்வரிசையைக் காட்டி விடுவார். அவரை விரட்டுவதற்கு அப்பு கையாண்ட வழி? ஒரு பெரிய தகர டப்பாவின் உள்ளே கல் ஒன்றினைக் கட்டித் தொங்கவிட்டு நமது கறுத்தக் கொழும்பான் ஒன்றின் கிளையிலே அதனைத் தொங்கவிட்டார். அந்த தகர மணியில் இருந்து நீளமான கயிறு ஒன்றினைத் தொடுத்து நமது குசினிக் கப்பு ஒன்றினுடன் இணைத்து விட்டார். அந்தப் பக்கமாக போகின்றவர்கள் யாவரும் அந்தக் கயிற்றினை இழுத்து மணியை அடிக்கச் செய்ய வேண்டும் என்பது அப்புவின் கட்டளை. இதனால் அந்த வேண்டாத விருந்தாளியால் ஏற்பட்ட பிரச்சினை சற்றுக் குறைந்ததேயன்றி முற்றாகவே நீங்கிய பாடில்லை என்பதுதான் உண்மை.

யாழப்பாண மாம்பழம்பற்றி பிரபல தமிழ் அறிஞரும் பலாலி ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளராகக் கடமையாற்றியவருமான மாவிட்டபுரத்தினைச் சேர்ந்த மதுரைப் பண்டிதர் மாவை க.சச்சிதானந்தன் தனது 'ஆனந்தத் தேன்' என்ற நூலில் சொல்லியதை இங்கே தருகிறேன்.

நீதி பிழைப்பிக்கும் நேர்மை தவறுவிக்கும்  
பாதிப்படிப்பில் பதவி தரும் - ஏதுக்கும்  
ஓம்பட் டிசைவிக்கும் ஒன்றன்றோ யாழ்ப்பாண  
மாம்பழத்துத் தீஞ்சுவையின் மாண்பு

பண்டிதர் அவர்கள் தீஞ்சுவை பற்றியே இவ்வளவு கூறுகிறார். ஆனால் அதன் சுவையினுக்கு மேலாக இன்னும் பல கூற முடியும். பெருங்குடல், மார்பு, கிடைநிலைச் சுரப்பி மற்றும் குருதி ஆகியவற்றில் ஏற்படக்கூடிய புற்றுநோயினை தடுக்கவல்ல Polyphenolic Antioxidants மாம்பழத்தில் உள்ளமையால் பொதுவாகப் பெண்களுக்கு மாம்பழம் நல்ல சத்துணவாகும். அது மாத்திரம் அல்லாமல் பெருமளவில் வைற்றமின் A, பொற்றாசியம், வைற்றமின் B6 மற்றும் வைற்றமின் C உடன் Eயும் மாம்பழத்தில் உள்ளது.

கறிபியன் மற்றும் இந்தியாவில் இருந்து மாம்பழம் கொண்டு வந்து இங்கே விற்கிறார்கள்தான். அதனை வாங்கி உண்கின்ற போது எமது நினைவு பின்நோக்கிச் செல்லவில்லையா? மனதில் ஒரு தவிப்பு எற்படவில்லையா?

தித்திப்பாம் அம்பலவி, தீஞ்சுவைக்குச்  
செம்பாட்டான்  
எத்திசையும் மணம்பரப்பும் வெள்ளைக்  
கொழும்பானுடன்  
அத்தனையுள் அதிசிறந்த கறுத்தக்  
கொழும்பானுமே  
எம்ஊரின் பேர் சொல்லப் போதாது,  
அத்துடனே  
காயாகத் தின்பதற்குப் பாண்டியுடன்  
பச்சை தின்னியாம்,  
கொப்புநிறை தொங்கும் காய்களுடன்  
நவக்கீரி, மல்கோவா  
இத்தனையும் தானா? இல்லை இல்லை  
சேலமுடன், கிளிமுக்கன்  
அத்தனையும் வாயூறும் வகைவகையாம்  
தித்திக்கும் யாழ்ப்பாண மாங்காய் கேள்.

நொண்டிக் கவிஞர்



kanagasabapathy.p@thaiveedu.com




TORONTO BUSINESS COLLEGE
கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்

COMPUTERIZED ACCOUNTING DIPLOMA
- EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள் ✓
- 3 வருடங்களுக்குள் EI பெற்றவர்கள் ✓
- 5 வருடங்களுக்குள் MATERNITY BENEFITS பெற்றவர்கள் ✓

அரசாங்க நிதி உதவியில் கற்கலாம்

DIPLOMA முடித்தவர்கள்
- ACCOUNTS CLERK
- COST CLERK
- AUDIT CLERK
- PAYROLL CLERK
- ACCOUNTS RECEIVABLE
- ACCOUNTS PAYABLE
- ACCOUNTS ASSISTANT
- BOOK KEEPER

போன்ற பதவிகளைப் பெற்று உங்கள் எதிர்காலம் மிளிர்வதைக் காண்பீர்

INSTRUCTORS
★ PUSHPA ★ SP ★ RAM

CERTIFICATE COURSES
BUY ONE GET ONE FREE
WINDOWS, KEY BOARDING, DATA ENTRY, WORD, EXCEL, POWER POINT, ACCESS, OUTLOOK, PHOTO SHOP, QUICK BOOKS, SIMPLY ACCOUNTING BY SAGE, SAGE ACCPAC GL, AP, AR
DAY, EVENING, WEEK ENDS

CANADIAN SECURITIES COURSE
EXAM 1 & 2
BY ARUN SENATHIRAJAH, ACIB, MBA
NEW BATCH - WEEKENDS
START DATE: MAR.14TH
IDEAL FOR BANK EMPLOYEES

★ FREE PARKING ★ SMALL CLASS SIZE

416-291-5155
4465 SHEPPARD AVE. EAST #208
( SHEPPARD & BRIMLEY )
SCARBOROUGH, ON, M1S 5H9
t.businesscollege@gmail.com
(REGISTERED AS A PRIVATE CAREER COLLEGE UNDER PRIVATE CAREER COLLEGES ACT 2005)

# வள்ளுவர் பௌதீக விஞ்ஞானியா?

**குமார் புனிதவேல் பக்கம்**

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்தோன்றினாலும், சென்ற நூற்றண்டின் பௌதீக விஞ்ஞான அறிவை வள்ளுவர் பெற்றிருந்தார். இந்த முடிவுக்கு நான் வந்ததன் காரணம் பிள்ளையார் சுளிபோல் பாடிய முதல் குறள்தான். உங்கள் எல்லாருக்கும் பரிட்சயமான அந்தக் குறள்:

> ‘‘அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
> பகவன் முதற்றே உலகு’’

இக்குறளுக்கு பொருள் கூறிய பரிமேலழகர் எழுத்து எல்லாம் அகரம் முதல - எழுத்துகள் எல்லாம் அகரமாகிய முதலை உடையன. உலகு ஆதிபகவன் முதற்று – அதுபோல உலகம் ஆதிபகவனாகிய முதலை உடைத்து என்று கூறிப்போந்தார்.

திருக்குறள் - பரிமேலழகர் உரை

இதில் உலகம் ஆதிபகவன் தலைமைத்துவத்தை உடையது எனப்பொருள்படுவதனால் ஆதிபகவன் இறைவன் பெயராக கொள்ளுதல் முறைமையே. இதில் ஆதிபகவன் என்ற சொல் இருசொல் சேர்க்கையால் ஏற்பட்டது என கொள்வதாயின் ஆதி என்பது ஆதியில் இருந்த பகவன் எனப் பொருள்படும் அக்காலகட்டத்தில் இருந்த அகச்சமயத்திலோ அன்றி புறச்சமயங்களியோ பகவன் என்ற பெயரில் இறைவனை குறிப்பிடப்படவில்லை. மேலும் ஒவ்வொரு தெய்வத்திற்கும் ஆயிரம் நாமங்கள் இட்டு வணங்கிய பக்தர்கள் பகவன் எனும் பெயரை குறிப்பிடவில்லை என்பதைக் கவனிக்கவும்.

இந்நிலையில் ஒரு சாரார் ஆதி பகவன் என்பது தாய் தந்தயரைக் குறிக்கும் என தெரிவித்துள்ளது வியப்பில்லை தான். ஆனால் தமிழ் மறைக் காவலர் என்று போற்றப்படும் கீ.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் 1953ம் ஆண்டு கோவை அனுப்ப பாளையம் திருவள்ளுவர் படிப்பகத்தின் மூன்றுவது ஆண்டு விழாவில் கீழ்க்கண்டவாறு உரையாற்றியுள்ளார்.

“என்னுடைய ஆராய்ச்சியிலே தமிழ்நாட்டிலே கடந்த 35 ஆண்டுகளாகச் சேரிகள் தோறும் சென்று கொண்டிருக்கிறேன். ஒரு சேரியிலாவது ஒரு புலைக்குடி மகளுக்காவது ஆதி என்ற பெயர் இல்லை. இதுதான் போகட்டும் பகவன் என்ற பெயரைப் பெற்றவராவது இருக்க வேண்டாமா? எந்தக் கிராமத்திலும் பகவன் அய்யர், பகவன் சர்மா, பகவன் சாஸ்திரி, பகவன் ராவ், பகவன் அய்யங்கர் என்று ஒருவராவது இல்லை. ஆகவே உயர்க்குடிக் கூட்டத்திலும் புலைக்குடிக் கூட்டத்திலும் காண முடியாத பெயரைக் கொண்ட தாய் தந்தையர்களுக்கு அவர் பிறந்தார் என்று கதை கட்டியது ஒரு கற்பனை. இந்தக் கற்பனை எங்கிருந்து வந்தது? ஆதி பகவன் முதற்றே உலகு என்ற முதற்குறளிலிருந்து அவர் தாய் தந்தையருக்கு வணக்கம் செலுத்தினார் எனக்கொண்டு அக்கற்பனையை அவர்கள் புகுத்தினார்கள் இக்கற்பனைக்கதை அறிஞர்களாலே கொள்ளத்தக்கதல்ல! தள்ளத்தக்கதே!

வள்ளுவரும் குறளும் - கீ.ஆ.பொ. விஸ்வநாதம்

சரி, ஆதி பகவன் என்பது தாய் தந்தையர் அல்ல என்று கொண்டால், நாம் பரிமேலழகர் கூறிய ஆதிபகவன் என்பது உலகின் இறைவனைத்தான் குறிக்கின்றது என்று கொள்வது முறைமையாகும்.

இறைவனை வள்ளுவர் என்ன காரணத்தால் “ஆதி பகவன்” என அழைத்தார் எனும் சிந்தனை தோன்றியபோது இருபதாம் நூற்றாண்டின் தலை சிறந்த விஞ்ஞானி “ஸ்டீபன் ஹாகின்” (Stephan Hawking) கூறிய விடயம் ஞாபகத்திற்கு வந்தது. இந்த பௌதிகவியல் விஞ்ஞானியின் முக்கியமான ஆய்வுத்துறை அண்டவியலும் (Cosmology) குவாண்டம் ஈர்ப்பும் (Quantum gravity) ஆகும். இவர் 21வது வயதிலேயே முதலாவது திருமணத்துக்குச் சற்று முன்னர் அமையோட்ரோபிக் லேட்டரல் ஸ்க்லெரேசிஸ் (Myotropic lateral sclerosis) என்னும் நரம்பு நோயால் தாக்குண்டார். இந்த குணப்படுத்த முடியாத நோயினால் கடுமையாக பாதிக்கப்பட்டு கை கால் முதலியவற்றின் உடலியக்கங்கள் பாதிக்கப்பட்டதுமல்லாமல் பேச்சையும் இழந்த நிலையில் கணினியூடாகப் பேச்சுத் தொகுப்பி மூலம் மற்றவர்களுடன் தொடர்பு வைத்துள்ளார். இந்த நிலையிலும் சென்றவருடம் நடக்க முடியாத, கை கால் பயனற்ற நிலையிலும் அண்ட வெளிப்பயனம் ஒன்றை மேற்கொண்டுள்ளார். இவர் சாதாரன மக்களுக்கு விளங்குவதற்காக நேரத்தின் ஒரு சுருக்க வரலாறு (A brief History of time) எனும் நூல் எழுதியுள்ளார்.

விக்கிப்பீடியா கட்டற்ற கலைக்களஞ்சியம் - ஸ்டீபன் ஹோகிங்.

நாம் இறைவன் தான் உலகினை படைத்தான் என்று கூறுவோம் ஆனால் நேரத்தின் சுருக்க வரலாறு எனும் நூலில் இந்த அண்டத்தின் தோற்றம் பற்றிக் குறிப்பிடுகையில் “In 1929 Edwin Hubble made the land mark observation that where ever you look, distant galaxies are moving rapidly away from us. In other words, the universe is expanding. This means that at an earlier times objects would have been closer together. In fact, it seemed there was a time, about ten or twenty thousand millions years ago, When they were all at exactly the same place and when, therefore the density of Universe was infinite. This discovery finally brought the question of the beginning of the Universe into realm of science.

Hubble’s observations suggested that there was a time called the big band, when the universe was infinitesimally small and if infinitely.

*A Brief History of Time. By Stephen Hawking,*

1929ம் ஆண்டில் எட்வின் ஹபில் ஒரு முக்கிய கண்டுபிடிப்பை உலகிற்கு வளங்கினார். அவர் உலகின் எந்தத்திசையில் நோக்கினாலும் பிரபஞ்சத்தில் உள்ள பால்வீதிமணடலம் அனைத்தும் ஒன்றை ஒன்று விலகிக்கொண்டு செல்வதனால் பிரபஞ்சம் விரிவடைகிறது என்ற தத்துவத்தை முன்வைத்தார். இதன் முடிவு முன் ஒருகாலத்தில் அனைத்துக் கோள்களும் மிக நெருக்கி இருந்திருக்க வேண்டும். இதன் படிக்கு பத்து அல்லது இருபதாயிரம் பில்லியன் வருடங்களுக்கு முன் அவை அனைத்தும் ஒரே இடத்தில் நெருக்கமாக இருந்திருக்க வேண்டும். அத்தருனத்தில் அத்தொகுப்பானது எல்லையற்ற அடர்த்தி உடையதாயிருக்கும். இந்த முடிவு பிரபஞ்சத் தோற்றத்தை பற்றிய வினாவினை விஞ்ஞான வரையறைக்குள் கொண்டு சேர்த்தது.

ஹபிலின் கண்டுபிடிப்பு முன் ஒரு காலத்தில் பெரும் வெடிப்புக் கோட்பாட்டிற்கமைய (Big bang theory) மிகச் செறிவாயிருந்த கோள்கள் ஏதோ காரணத்தால் வெடித்துச் சிதறி இருக்க வேண்டும்.



இங்கு நாங்கள் பெருவெடிப்புக் கோட்பாட்டை சற்று விளங்கிக் கொள்வதவசியம் இக்கருத்தை முதன் முதல் முன் வைத்து விளக்கம் தந்தவர் ஐன்ஸ்டைன் எனும் பௌதீக விஞ்ஞானியே (அதாவது திருவள்ளுவரை தவிர்த்துக் கெண்டால்) இக்கோட்பாட்டின் படி 12 முதல் 14 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் மிக மிக அதிகமான அடர்த்தியுடன் கூடிய சிறிய அளவினதான தீப்பிழம்பாக இப்பிரபஞ்சம் இருந்திருக்கிறது. இன்று எங்களால் அறியப் படுகின்ற அண்டத்தில் உள்ள கோள்கள் அனைத்தும் சில மில்லி மீட்டர்கள் அளவுக்குள் அடங்கி இருந்திருக்கும் என கணிப்பிடப்பட்டுள்ளது. (இது நடேஸ்வரரின் தூக்கிய கையின் தீப்பிழம்பை ஞாபகப்படுத்துகிறதல்லவா) இத்தீப்பிழம்பானது இன்று விஞ்ஞானிகளால் அறியப்படாத ஏதோ ஒரு பிரபஞ்சச் சக்தியினால் பிளவுபட்டு மிக வேகமாக விரிவடையத் தொடங்கி, இன்றும் அவ்விரிவு தொடர்கிறது. இந்த வெடிப்புத்தான் இப்பிரபஞ்சத்தின் ஆதிமூலம். அப்படியாயின் அந்த வெடிப்பை தோற்றுவித்து கோள்கள் அனைத்தும் தனித்தனியாக பகுத்து செல்ல செய்த பிரபஞ்ச சக்தியை இறைச் சக்தி அல்லது இறைவன் என்று சொல்லலாமல்லவா.

தொடர்ந்து வள்ளுவரின் கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் உள்ள குறள்களை நோக்குவோம். வள்ளுவர் அக்கால வழக்கிலிருந்த ஒரு தெய்வத்தையும் குறிப்பிடாமல் தெய்வத்துக் குறிய குண இயல்புகளை விளக்கும் சொற்களை இறைவன் பெயராக கொண்டுள்ளது காணக்கூடியதாயுள்ளது. உதாரணத்திற்கு வாலறிவன் என்பது உண்மை அறிவினை உடையவன் என இறைவனைக் குறிக்கும். மலர் மிசை ஏகினான் என்பது மலர்போன்ற மென்மையான குணத்தை உடையவன் எனப் பொருள்படும். வேண்டுதல் வேண்டாமை இலான் என்பது இறைவன் காய்தல் உவத்தல் இல்லாது நடுநிலையின் நின்று செயற்படும் பண்பாளன் என பொருள்படும். பொறிவாயில் ஐந்தவித்தான் எனும் பெயர் ஐம்புலன்களால் வரும் விளைவுகளை வெண்றவன் என பொருள்படும். தனக்குவமை இல்லாதவன் எனும் பெயர் இறைவன் ஒப்பாளும் மிக்காரும் இல்லாதவன் எனப் பொருள்படும். ஆனால் முதல் குறளில் இறைவனை ஆதி பகவன் என குறிப்பிட்டுள்ளதை எப்படி நியாயப்படுத்தலாம் என்று பார்ப்போம்.

முன்பு குறிப்பிட்டபடி அது அவர் தாய் தந்தையர் பெயர் அல்லாதபடியாலும் பரிமேழலகர் அப்பெயர் உலகின் இறைமையை குறிக்கும் என்பதாலும் எங்ஙனம் இப்பெயர் இறைவனுக்குப் பொருந்தும் என கவானிப்போம்.

அழகு எனும் சொல் அன் எனும் ஆண் பால் விகுதி சேர்கையில் ‘உ’ என்ற உயிர் எழுத்து ‘அ’ எனும் உயிராக மாறி அழகன் எனவரும் இதேபோல்.

| | | |
|---|---|---|
| அழகு | + அன் | = அழகன் |
| அரசு | + அன் | = அரசன் |
| குருடு | + அன் | = குருடன் |
| கய்வு | + அன் | = கயவன் |
| கூத்து | + அன் | = கூத்தன் |

பிரபஞ்சத்தை படைத்தவேளை ஒன்றாக இருந்த சில மில்லிமீட்டர் அளவில் அடர்த்தியுடன் இருந்த கோள்களை இறைவன் பெரு வெடிப்புக் கோட்பாட்டுக்கமையப் பகுத்து தனிக் கோள்களாகச் சிதறவைத்த தன்மையால் இறைவனின் தன்மைகளில் ஒன்று பகுத்தமையாகும். எனவே இக்குணமாகிய பகவு எனும் சொல்லிற்கு அன் எனும் ஆண்பால் விகுதியை சேர்ப்பதால் பகவு + அன் = பகவன் எனப்படும். மேலும் இன்று நாம் கானும் பிரபஞ்சம் தோன்றுவதற்கு முதற் காரணமாக ஆதியில் பகுத்தல் செய்யப்பட்டதால் ‘ஆதி பகவன்’ என இறைவனை குறிப்பிட்டார் திருவள்ளுவர்.

பெருவெடிப்புக் கோட்பாடு சென்ற நூற்றாண்டு தான் நவீன பௌதிக விஞ்ஞானிகளுக்கு தெரிய வந்துள்ளது. ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த வள்ளுவர் தனது ஞானதிருஷ்டியால் இதனை அறிந்து இறைவனை “ஆதி பகவன்” என குறிப்பிட்டுள்ளார்.

சரி நீங்களே கூறுங்கள் திருவள்ளுவர் ஒரு பௌதிக விஞ்ஞானியா?

kumarpunithavel@thaiveedu.com

■ ■ ■

# வாத்தியார் வீட்டிலிருந்து வன்கூவருக்கு... 07

K.S. பாலச்சந்திரன்

# அந்தரவெளியில்... அந்தகார இருளில்...

தொண்டமானாற்றுப்பகுதியில் ஒரு ஆலயத்தில் எனது நிகழ்ச்சி. அனேகமாக இரவு 2 மணிக்குமேல்தான் எனக்கு மேடைதருவார்கள். நாதஸ்வரக் கச்சேரிகள், வில்லுப்பாட்டு என்றெல்லாம் நடந்து முடிந்தபிறகுதான் எனது நிகழ்ச்சி நடக்கும் என்று தெரியுமாதலால் வெகு ஆறுதலாக இரவுச்சாப்பாட்டையும் முடித்துக்கொண்டுதான் வீட்டிலிருந்து புறப்படுவேன். யாழ் மாவட்டத்திற்குள் எங்கு நிகழ்ச்சி நடந்தாலும் இரவைக்கிழித்துக் கொண்டு எனது செம்மஞ்சள் நிற ஸ்கூட்டரில் செல்வது வழக்கம். ஊரடங்கியபின்னர் (அதற்கென சட்டங்கள் வருவதற்கு முந்திய காலம்) றோட்டுகளில் சனநடமாட்டம் குறைந்துபோய், சீதளக்காற்று முகத்திலும், நெஞ்சிலும் பட்டு சிலிர்க்கவைக்க, றோட்டில் படுத்திருக்ககூடிய ஜீவராசிகளையும், அக்கால றோட்டுகளுக்கே உரித்தான பள்ளந்திட்டிகளையும் தவிர்த்து லாவகமாக வெட்டி ஓடுவதற்கு (ஸ்கூட்டரில்தான்) தனித்திறமையும், அவதானமும் வேண்டும். சற்று கண்ணயர்ந்து விட்டால், நந்தனார் படத்தில் வரும் "வழி மறைக்கிறதே" என்ற பாடல்மாதிரி சொல்லுவதற்கு முதலே, றோட்டில் படுத்திருக்கும் மாட்டின் மீது ஏற்றி சரிந்து விழுந்து, சிராய்ப்புகளுடன் பயணத்தைக் கைவிட்டு வீடு திரும்பவேண்டியதுதான்.

இதைவிட தனிவழியில் இரவில் போவதில் இன்னமொரு சிக்கல் இருந்தது. எங்கள் சின்னவயதில் எங்கள் உற்றார் உறவினரான முதியவர்கள் 'அந்தமாதிரியான' கதைகளை அவ்வப்போது சுவாரஸ்யமாகச்சொல்ல, அவற்றை மனதில் பதியம் போட்டு வைத்திருப்போம். 'அந்தமாதிரியான' கதைகள் என்றால் தவறாக நினைத்துவிடாதீர்கள். இராமாயண, மகாபாரத கதையோ, கிளைக்கதைகளோ அல்ல. 'பேய்க்கதைகள்', 'பிசாசுக்கதைகள்', 'முனிக் கதைகள்' என்றெல்லாம் வரிசையாக, மாலை நேரத்தில் பாக்கு உரலில் டொக்கு, டொக்கு என்று இடித்துக்கொண்டே பாட்டாமுறையானவர் சொல்லி முடிக்க, பின்வளவுக்கு போவதற்கும் அம்மாவை துணைக்கு அழைக்கும் நிலைக்கு வந்து விடுவோம்.

கதை சொன்னவர்கள் யார் என்று மறந்துவிட்டாலும், நாங்கள் வளர்ந்தபின்னரும் இந்தக்கதைகள் மறக்காமல் ஞாபகத்தில் இருக்கும். இப்படியாகத்தானே. தனிவழியில் போகும்போது அந்த ஞாபகங்கள் தவறாமல் வந்து தொலைக்கும். கூடலாக நிற்கும் புளியமரத்தின் இலைகள் காற்றில் சலசலப்பதும், ஏதோ குருவிகளின் குடும்பச்சண்டை ஒலிகளும் (அவற்றுக்கும் எங்களைப்போல குடும்பச்சண்டைகள் வராது என்று யார் சொன்னது?) இரவுக்குளிருக்கு மேலாக என் உடம்பை சிலிர்க்கவைக்கும். ஸ்கூட்டரை ஓடிக்கொண்டே ஒரு கையால் சீற்றின் பின்பக்கத்தை தடவிப் பார்த்துக்கொண்டேன். ஏதாவது (பேய்... பிசாசுதான்) ஏறி உட்கார்ந்து கொண்டு என்னோடு ஸ்கூட்டர் சவாரி செய்கிறதா என்று பார்த்துக்கொள்ளத்தான். அந்தளவு பயம்.

போதாதற்கு, தொண்டமானாற்றுக்கு போகும் வழியில் றோட்டுக்கு அருகாக மயானம் ஒன்று வேறு இருந்தது. அந்த இரவுவேளையிலும் இரண்டொருவர் நின்று யாருடையதோ இறுதிக்கிரியையின் கடைசிக் காரியங்களை முடித்துக் கொண்டிருந்தனர். நெருப்பு 'விளாசி' எரிந்தது. ஸ்கூட்டரின் அக்சிலேட்டரை தன்னிச்சையாக முறுக்கினேன். காற்றாகப்பறந்தது. அவர்கள் ஆச்சரியமாக பார்த்ததுபோல தெரிந்தது. அதே நேரத்தில் மனதிற்குள் ஒரு தீர்மானம் எடுத்துக்கொண்டேன். அதாவது நிகழ்ச்சி முடிந்து திரும்பிவரும்போது, ஐந்தாறு மைல் தூரம் அதிகம் என்றாலும் அச்சுவேலிப் பிரதான பாதையால் போவதென்றுதான்.

இத்தனை விக்கினங்களையும் தாண்டி, கடைசியாக, தொண்டமானாறும், செல்வச்சந்நிதி கோவிலும் தெரிய மனதிற்குள் பெரிய நிம்மதி, இனியென்ன. ஒரு வளைவு – அதன் இரண்டு பக்கமும் தென்னைகளும், ஒரு பக்கத்தில் கற்கள் அடுக்கிச்செய்த கல்வேலியுமாக கும்மிருட்டாக இருக்கும். அப்படியே இருந்தது. அதைத்தாண்டி விட்டால் தொண்டமானாற்றுப்பாலம் வெளிச்சமாக இருக்கும். பிறகென்ன. கொஞ்சத்தூரத்தில் நான் நிகழ்ச்சிசெய்ய வேண்டிய கோயில்.

அப்பாடா.. ஸ்கூட்டரை நிறுத்தி, அதில் இருந்தபடியே ஆற்றின் அந்தக்கரையில் இருக்கும் முருகனை மனதிற்குள் வணங்கிக்கொண்டு, வளைவுப்பக்கமாக திரும்ப ஆயத்தமான வேளையில்தான் அந்தச்சத்தம் கேட்டது. நாதஸ்வரத்துடன் தவில்சேர்ந்து அந்தவெளிப்பிரதேசத்தில், அந்தகார இருளின் மத்தியில் எதிரொலித்தது. அதுவும் அந்தவளைவின் இருட்டான பகுதியில் இருந்துதான் கேட்டது. என்னநடக்கிறது என்று நான் யோசிப்பதற்கிடையில் முன்னிருந்து வெளிச்சம் என்மேல் பட்டது. அது பொலிஸ் ஜீப்பின் வெளிச்சம். இருட்டுக்குள் நின்றிருக்கிறது. அந்தவெளிச்சத்தில் தான் நடுறோட்டில் நின்றுகொண்டு நாதஸ்வரக்காரர் சினிமாப்பாட்டு ஒன்றை வாசித்துக்கொண்டிருக்க, தவில்காரர் முழக்கிக்கொண்டிருந்ததும் தெரிந்தது. அவர்கள் வாசித்து முடிக்கும் வரை என்னை நிற்கச் சொல்லி கைகாட்டினார் ஒரு பொலிஸ்காரர்.

ஆமாம். கோயிலுக்கு வாசிக்கப் போய்க்கொண்டிருந்த நாதஸ்வரக்குழுவை மறித்து பொலிஸ்காரர்கள் "நேயர்விருப்பம்' நடத்திக்கொண்டிருந்தார்கள். அந்தக்காலத்தில் அவர்கள் என்றால் அப்படித்தான். நான் இதென்னடா இந்தவில்லங்கத்தில் வந்து மாட்டிக்கொண்டேன் என்ற நினைப்புடன், ஸ்கூட்டரை நிறுத்திவிட்டு இறங்கி நின்றேன்.



ஒருவாறாக கச்சேரி முடிந்தது. அவர்களை போக அனுமதிக்க, நாதஸ்வரக்காரர்கள் தப்பினோம், பிழைத்தோம் என்றதுமாதிரி காரில் ஏறி, கோயில் பக்கமாக போனார்கள். பொலிஸ்காரர்கள் இப்போது என்பக்கம் திரும்பினார்கள். "எங்கை போறது" என்று அவர்களுக்கு தெரிந்த தமிழில் கேட்டார்கள். நான் சொன்னேன். லைசன்ஸ் கேட்டார்கள். என்னுடைய ஸ்கூட்டரில் தொங்கிக்கொண்டிருந்த பையில் இருந்த பட்டுவேட்டியை எதற்று என்று கேட்டார்கள். நிகழ்ச்சிக்கு கட்டுவதற்கு என்று சொல்லவில்லை. கோயிலுக்கு கட்டவென்று மட்டும் சொன்னேன். எதற்கு என்று சொல்லியிருந்தால் என்ன நடக்கும் என்று எனக்குத்தெரியும். இருந்தாலும் அவர்களுக்கு ஏதோ சந்தேகம் இருந்தது. கேட்டுக்கொண்டிருந்தார்கள். கடைசியாக ஜீப்பில் இருந்து அவர்களின் இன்ஸ்பெக்டர் இறங்கிவந்தார். அவர் எங்கள் ஊரில் வேலைபார்த்தபொழுது பலருக்கு சிம்மசொப்பனமாக இருந்தவர். உகண்டாவின் முன்னாள் சர்வாதிகாரியின் பெயரை அவருக்கு பட்டப் பெயராக நாங்கள் சூட்டியிருந்தது அவருக்கு தெரியாது என்று நினைக்கிறேன். ஒருமுறை அவர் எனது நிகழ்ச்சியை எங்கள் ஊரில் ஒருவிழாவுக்கு வந்தபொழுது பார்த்திருக்கிறார். "ஹலோ.. அண்ணை றைற்" என்றார். "எங்கே நிகழ்ச்சிக்கா?" என்று ஆங்கிலத்தில் கேட்டார். நல்லகாலமாக அவருக்கு தெரிந்தவர் என்ற காரணத்தால், கூடநின்ற மற்றப் பொலிஸ்காரர்கள் 'நேயர்விருப்பமாக' என்னை 'அண்ணைறைற்' செய்து காட்டச்சொல்லி கேட்கவில்லை. போகச்சொல்லி விட்டுவிட்டார்கள். அவர் மாத்திரம் இல்லாமல் இருந்தால் நான் 'அண்ணைறைற்' நிகழ்ச்சி செய்த இடங்களின் பட்டியலில் தொண்டமானாற்று இருட்டு வளைவும் ஒன்றாக இடம்பெற்றிருக்கும்.

நான் கோயிலடிக்குப் போனபொழுது, கதை பரவிவிட்டது. நாதஸ்வரக்காரர்கள் நடந்ததைப்போய்ச் சொல்லிவிட்டார்கள். போதாக்குறைக்கு 'அண்ணை றைற்' பாலச்சந்திரனும் அகப்பட்டு நிற்கிறார் என்று சொல்லியிருக்கிறார்கள். என்னை பலரும் அதிசயமாகவும், சிரிப்புடனும் பார்த்தார்கள். என்னைக்கண்டதும் அவர்களின் கார்டிரைவர் ஓடிவந்து ரகசியமாகக் கேட்டார். "உங்களையும் நிகழ்ச்சி செய்யச்சொன்னவர்களோ" என்று.

"கலக்கிவிட்டு வந்திருக்கிறன்" என்று சொன்னேன். அவர் புரிந்ததுமாதிரி தலையாட்டிச் சிரித்துக் கொண்டுசென்றார். தாங்கள் அனுபவித்ததை நானும் அனுபவித்திருப்பேன் என்ற நினைப்பினால் வந்த சந்தோசம் அவருக்கு. அதை கெடுப்பானேன் என்று விட்டுவிட்டேன்.



ksbala@thaiveedu.com

'தாய்வீடு' இப்போது இணையத்திலும்
www.thaiveedu.com


FORMULA HONDA
புதிய, பழைய தரமான வாகனங்களை
வாங்கிக் கொள்வதற்கு அழையுங்கள்
Rajah Tharmalingam
ராஜா தர்மலிங்கம்
Lease 0.9% or 24 months
Finance 0.9% up to 60 months
Used car very low price
Dir: 647-833-4998
2240 MARKHAM ROAD, SCARBOROUGH
416-754-4557
2006 HONDA CIVIC
COUPE, 2DOOR, AUTO
$13,875 80,860 KM
2006 HONDA CIVIC LX
COUPE, 2D
$15,995 49,543 KM
2006 HONDA CIVIC LX
COUPE, 2D
$16,995 58,240 KM
2006 HONDA CIVIC LX
SEDAN, 4D
93,624 KM
2006 HONDA CR-V EX
Certified Used Vehicles
SPORT, UTILITY, 4D
84,700 KM
2008 HONDA CIVIC SI
COUPE, 2D
$18,000 19000 KM
2005 HONDA CR-V
92,852 KM
2005 HONDA CR-V EX
SPORT, UTILITY, 4D
$18,995 93,966 KM
2005 HONDA PILOT
93,624 KM
2006 HONDA CIVIC
131,287 KM
2007 JONDA CIVIC
SEDAN, 4D
$11,600 70,500 KM
2008 HONDA CIVIC EX-L
COUPE, 2D
$18,995 44,090 KM
2007 HONDA CIVIC EX
$18,995 48,6420 KM
2007 HONDA CIVIC EX
COUPLE, 2D, ONE OWNER
$13,850 66,266 KM
2007 HONDA CIVIC EX
SEDAN, 4D
$16,600 85,000 KM
2006 HONDA ODYSSEY
7 PASSENGER
79,053 KM
2006 HONDA ODYSSEY EX
NINIVAN, 4D
92,797 KM
2006 HONDA ODYSSEY EX
NINIVAN, 4D
78,935 KM
2007 HONDA CIVIC
$15,995 96,196 KM
2007 HONDA CIVIC
2 DOOR, COUPE
$16,995 59,900 KM
2007 HONDA FIT SPORT
HATCHBACK, 4D
$13,850 57,300 KM
2007 HONDA ODYSSEY EX
MINIVAN, 4D
69,690 KM
2008 HONDA ACCORD EX
SEDAN, 4D
56,993 KM
2008 HONDA CIVIC DX-G
2DR, AUTO,
$17,995 40,500 KM
2008 HONDA CIVIC
4 DOOR
$18,995 37,649 KM
2007 HONDA CIVIC EX
SEDAN 4D
$18,995 47,540KM
2007 HONDA CIVIC EX
SEDAN, 4D
$17,995 49,470 KM
2007 HONDA CIVIC LX
COUPE, 2D
$18,995 28,284 KM
2007 HONDA CR-V EX-L
SPORT, UTILITY, 4D
43,800 KM
2007 HONDA CR-V EX
SPORT, UTILITY, 4D
19,950 KM

பேரழிவினைக் கொண்டுவரும் நீரழிவு நோயினை இரண்டே இரண்டு மாதங்களில் முற்றும் முழுதாக கட்டுப்படுத்த முடியும்!

ஊளைச் சதை பெருகுவதை தடுக்கிறது! வாத வலியை நீக்குகிறது! உடலுக்கு புதுத்தென்பைக் கொடுக்கிறது!







**டயபீனா** தினமும் அருந்தக்கூடிய மூலிகை ஆரோக்கிய பானம். இது உடலில் மிகுதியான குளுக்கோசினை குறைக்கக்கூடியதும், இரத்தத்திலுள்ள அதிகளவு குளுக்கோசினால் ஏற்படக்கூடிய நோய்களை ஒழுங்கு முறையாக தடுக்கவும் உதவுகிறது. விறைப்புத்தன்மை, பாதங்களில் சுளுக்கு, அலட்சியத் தன்மை மற்றும் மீண்டும் மீண்டும் வியாதிகளை படிப்படியாக நீக்கிவிடக் கூடியது. டயபீனா கண்டிப்பாக நீரிழிவு நோயினால் வருந்துபவர்கள் மட்டுமே பாவிக்கவேண்டியது.

**க்லூட்டியலா** பானமானது மிகுதியான உடல் கொழுப்பை குறைக்கக் கூடியதும், குறிப்பாக உடலின் இடுப்பு, தொடை, தோற்பட்டை, கைகள் போன்ற பகுதிகளில் ஏற்படக்கூடிய ஊளைச் சதை பெருகுவதை தடுக்கவும், கொழுப்பினால் விளையக் கூடிய கெடுதியினை கட்டுப்படுத்தவும், உடல் வலியை நீக்கவும், அத்துடன் வாதத்தினால் ஏற்படக்கூடிய வலியினை குறைக்கவும் உதவுகிறது. க்லூட்டியா உடலுக்கு புதுத்தெம்பைக் கொடுப்பதோடு நீண்ட சுகமான வாழ்விற்கும் வழிவகுக்கிறது.

## இயற்கை மூலிகையின் உதவியுடன் உங்கள் கேசத்தை பராமரியுங்கள்!

The ERVAMATIN™ HAIR LOTION

உங்கள் முடியுதிர்வை தடுக்கவும் மீண்டும் தலைமயிர் வளரவும் மிக உன்னதமாக தொழில் புரிகிறது எவமாட்டின் மூலிகை ஔடதம்! உலகெங்கும் பல்லாயிரக்கணக்கானவரின் பாராட்டுதலைப் பெற்ற மூலிகைத் தயாரிப்பு. இப்போது எவமாட்டின் சாம்புவும் கிடைக்கிறது.









இயற்கை மூலிகையிலான தலை முடி மை

இயற்கை மூலிகையான மருதாண்டி கொண்டு செய்யப்படும் இவ் மை உங்கள் தலை முடியையும் நன்கு பராமரிக்கிறது.

**The Ervamatin Hair Lotion**

Provides effective and fast therapy for hair loss
And its treatment ensures excellent therapeutic results.
Recommended as a treatment for
Hair loss, hair regeneration, dandruff, alopecia,
Thin hair, baldness, fragile and dry hair.

SABONA

Amazon Health Care
www.amazonhealthcare.com

BBB ACCREDITED BUSINESS

Tel: 416 264 8787
www.amazonhealthcare.ca
2602, Eglinton Ave East. (Midland/Eglinton)

**Send gifts** to your loved ones in Sri Lanka on their birthday, anniversary and other special occasions. Choose from a range of flowers, cakes, food items, groceries, baby items, computers and many more.
**www.egiftsender.com**

# ATTIC INSULATION

There are over 1 million homes without enough attic insulation!

## INSULATE YOUR ATTIC NOW

For a limited time government will pay rebate for insulating your attic

**Federal (750) + Provincial (750) + Toronto (200) = $1700**

from existing R-12 insulation to raise it up to R50

**With us, for an average size home it may cost you less than the government rebate to insulate them.**

### How can attic insulation help me?

-Reduce the heat loss through attic
-Save on heating & cooling cost
-Prevent roof rot and mold in a well insulated & vented attic

First step to receiving government rebates is an ENERGY AUDIT. We can arrange for an energy audit

**We also do Spray Foam Insulation!**
Stop molds and rot | Stop air leakage | High R value | Longer life time

INSULATE YOUR HOME AND SAVE MONEY ON HEATING BILLS

**Call for no obligation free quote**

www.enerecon.com

ENERecon INSULATION

Tel 416-847-7171 | Fax 416-847-7181 | info@enerecon.com

Stay warm in winter. Be cool in summer





www.facebook.com/digimediaphoto

digimedia creations

**karuna photography**

Wedding Photographers

416.467.4952 www.digimediaphoto.com



# குறைந்த செலவில் சிறந்த காப்புறுதி



**RESP SPECIAL!**
இம்மாதம் RESP செய்பவர்களுக்கு
3 விசேட சலுகைகள் உண்டு!
- Start from $25

INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.
RBC Insurance
Canada Life
Manulife Financial

தனா மாணிக்கவாசகர்
*Broker*

**Life Insurance**
**Critical Illness Insurance**

Home Equity Line of Credit
**Disability Insurance**
**Mortgage Insurance**



RRSP - Start from $25
Loan approval within 24hrs - Bad credit no problem
RESP - Start from $25
(20%-40% Government Grant + 15% Company Bonus)

**INSURANCE SERVICE INC.**
Cell: 416-728-5772
Business: 416-290-1200


உங்கள் வீட்டு நீரை சூரிய ஒளியில் வெப்பமாக்குங்கள்... உங்கள் பணத்தை மிச்சமாக்குங்கள்...
இதோ உங்களுக்காக
Solar Domestic Hot Water System
BSi
BRIGHT SOLAR INC.
FINANCE PLANS
TD
Prime Plus 2.75% (Over $10,000)
(Prime 2.5% effective Mar 2009)
Prime Plus 3.25% (Over $5,000)
(Prime 2.5% effective Mar 2009)
NO PAYMENT FOR 6 MONTHS !
உங்களுக்கான எமது விஷேட சலுகைகள்
$ 2500 தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் விலைக்கழிவுகள்
$ 150 வீட்டு மின் உபயோக கணிப்புப் பரிசோதனை கழிவுகள்
HRTC வரியிலிருந்து $ 1350.00 வரையிலான மீள் பெறும் உரிமை
இன்னும் பல...
உங்களது சேமிப்புகள் பாரியளவில் வளர்ச்சி பெற சரியான முதலீடு
நாம் உங்களது வீட்டுமின் உபயோக கணிப்புப் பரிசோதனைக்கு 50% செலுத்துவோம்
* condition apply
எமது பிரதான உற்பத்திகள்
சூரியசக்தி மூலம் வீட்டு நீரை வெப்பமாக்கும் முறை (Domestic)
சூரியசக்தி மூலம் வாயு வெப்பமாக்கும் முறை
Photovoltaic மின்சாரம்
காற்றலைகள்
புவி சார்ந்த வெப்பவியல் (Geothermal) மற்றும் உதிரிப்பாகங்கள்
CSA# 232467
BRIGHT SOLAR INC.
வந்து பாருங்கள், உங்களால் எவ்வளவு சேமிக்க முடியுமென்பதை நீங்களே உணர்ந்து கொள்ளுங்கள்...
60 Vanture Drive, Unite 15, Toromto Ontario, M1B 3S4
Tel: 416 754 8327
www.brightsolarinc.com
இயற்கையிலிருந்து இலவச வாழ்வாதார சக்தி

அ. முத்துலிங்கம்

# மகள்கள் வெல்வார்கள்

ஆப்பிரிக்க வாழ்க்கை பற்றி நிறைய எழுதியாகிவிட்டது என்று நினைக்கும்போது இன்னும் சில ஞாபகங்கள் வரும். இந்தச் சம்பவம் நடந்தது நாங்கள் ஆப்பிரிக்காவுக்கு போன முதல் வருடத்தில். அவர்களுடைய பழக்க வழக்கங்கள், வாழ்க்கை முறை பற்றி ஒன்றுமே தெரியாத ஆரம்ப காலம்.

நான் வேலைசெய்தது காட்டுமரங்களை வெட்டி ஏற்றுமதிசெய்யும் அரசுசார் நிறுவனம் ஒன்றில். எனக்கு அவர்கள் கொடுத்திருந்த வீடு காட்டு நிலத்தில் அமைந்திருந்தது. மரத்தினால் செய்த உறுதியான தூண்களின் மேல் வீடு நின்றது. காரணம் காட்டு விலங்குகள் வழக்கம்போல ஒரு பகுதியில் இருந்து இன்னொரு பகுதிக்கு போக வீடு தடையாக இருக்காது. அவை வீட்டுக்கு கீழாலே போகும். வீடு முழுக்க மரத்தினால் கட்டியது. தரை, சுவர், கதவு, ஜன்னல் எல்லாமே மரம்தான். ஆனால் ஆச்சரியம் என்னவென்றால் கூரை கூட மரத்தினால் ஆனதுதான். மரத்தில் செய்த வளைந்த அலகுகளை அடுக்கி அடுக்கி கூரையை செம்மையாகச் செய்திருப்பார்கள். கோடை காலத்தில் குளிர்மையாகவும் குளிர் காலத்தில் வெப்பமாகவும் வீடு இருக்கும்.

ஆப்பிரிக்க விவசாயம் கூட புதுமையானதுதான். ஓர் இடத்தை தேர்ந்தெடுத்து மரங்களையும் செடிகளையும் புதர்களையும் எரிப்பார்கள். பின்னர் அங்கே பயிரிட்டுவிட்டு மழைக்காக காத்திருப்பார்கள். உடம்பை வளைத்து நிலத்துக்காக உழைப்பது என்பதில்லை. பசளை போடுவது, களை பிடுங்குவது போன்ற சங்கதிகள் கிடையாது. அவர்கள் பாட்டுக்கு கயிற்று ஊஞ்சலில் படுத்து நிறைய ஓய்வெடுப்பார்கள். அறுவடைக்காலத்தில் சரியாக வந்து கிடைத்ததை வெட்டிக் கொண்டு போவார்கள். அடுத்த வருடம் அதே நிலத்தை அவர்கள் தெரிவு செய்வதில்லை. இன்னொரு புதிய இடத்தில் பயிர் செய்வார்கள். இப்படியே மாறி மாறி பயிர் செய்து மறுபடியும் முதல் இடத்துக்கு வந்து சேருவார்கள். அங்கே நிலம் ஒருவருக்கு சொந்தம் என்று இல்லாதபடியால் யாரும் எங்கேயும் பயிர் செய்யலாம்.

ஒருநாள் சனிக்கிழமை நடுமத்தியானம். மனைவி சமையல் கட்டில். நான் அந்த மாதம் வந்திருந்த வார இதழ்களை எல்லாம் கட்டாக அடுக்கி வைத்து ஒவ்வொன்றாக வாசித்துக் கொண்டிருந்தேன். உலகச்செய்திகள் என்னிடம் வந்துசேர இரண்டு வாரம் பிடிக்கும். என் ஆறு வயது மகன் வீட்டைச்சுற்றி வளர்ந்திருந்த நீண்ட புற்களுக்கிடையில் விளையாடினான். பக்கத்துக் காட்டை விவசாயத்துக்காக எரித்துக் கொண்டிருந்தபடியால் புகை மணம் அடங்கலும் சூழ்ந்திருந்தது. ஆப்பிரிக்காவில் கிட்டத்தட்ட ஆறுமாதம் கழிந்து விட்டபடியால் அந்த மணம் பழகிவிட்டது. ஆனால் வெட்டுக்கிளிகள் யன்னல்களில் ஓயாமல் வந்து வந்து மோதுவது இன்னும் பழக்கமாகவில்லை.

தூரத்தில் ஒரு வளைந்த உருவம் நடந்து வருவது தெரிந்ததும் நெஞ்சு படக்கென்று அடித்தது. மறுபடியும் ஜொனாதன் கிழவர். அவருக்கு வயது அறுபதிருக்கும். வெள்ளைத் தலைமுடி, நீண்ட மண்புழு ஒன்று கன்னத்தில் இறங்குவதுபோல வெட்டுக்காயம். அது அவருடைய இன அடையாளம். வன்னவேலை செய்த ஆப்பிரிக்க அங்கி, வலைப்பின்னல் தொப்பி. வரும்வழியில் எதையோ மிதிக்கக்கூடாததை மிதித்துவிட்டதுபோல முகம். ஆனால் நல்லவர். அவருக்கு பின்னால் தலையை அவர் முதுகில் கொடுத்து அவரைச் செல்ல மாகத் தள்ளியபடி அவருடைய 15 வயது மகள். சுருண்ட தலைமுடி, முகத்தோடு ஒட்டிய மூக்கு. ஒட்டகத்துக்கு இருப்பதுபோல தேவைக்கு சற்று அதிகமான உதடுகள். பளபளவென்று மின்னும் ஓர் ஆடை அணிந்திருந்தாள். அடக்கமுடியாத குதூகலம் அவள் உடலுக்குள் புகுந்திருந்ததால் சும்மா இருக்க முடியாமல் அசைந்தபடியே இருந்தாள். ஒவ்வொரு அசைவுக்கும் ஆடை ஒவ்வொரு நிறத்தில் மின்னியது.

அவளுடைய பெயர் அக்னஸ், அவருடைய மூன்றாவது மனைவியின் மகள். அவருடைய மூன்று மகன்களைப் பற்றியும் சொல்லியிருக்கிறார். மூத்தவன் நாய் கடித்து இறந்து போனான். இரண்டாமவனை பாம்பு கடித்தது. மூன்றாமவன் நுளம்பு கடித்து இறந்தான். 'எங்கள் வீட்டில் ரகஸ்யமான வியாதி ஒன்று இருக்கிறது. அதுதான் எஞ்சியிருக்கும் அக்னஸ்' என்று கிழவர் ஒருநாள் அறிமுகப்படுத்தினார். அக்னஸ் தொடர்ந்து படிக்கவேண்டும் என்பதில் பிடிவாதமாக இருந்தாள். ஆனால் அவளுக்கு கணிதமும் ஆங்கிலமும் வராது. ஜொனாதன் அவளை தன்னுடைய தங்கையின் தையல் கடையில் வேலைக்கு போகச் சொல்லி வற்புறுத்தினார். அவள் மறுத்து விட்டாள். 'அக்னஸ் எப்படி இருக்கிறாள்?' என்று எப்பொழுது நான் கேட்டாலும் 'தோளிலே சவாரி செய்கிறவளுக்கு தூரத்தைப்பற்றி என்ன தெரியும்' என்று கவலையுடன் சொல்வார்.

'அக்னஸ், உனக்கு என்னவாக வரப்பிடிக்கும்?' என்று அவளிடமே கேட்டேன். அவள் 'உயரமாக' என்றாள். நக்கலாகச் சொல்லவில்லை, வுக்கு பத்துக்குமேல் எண்ணத் தெரியாது. ஆனால் அவரிடம் 200 ஆடுகள் இருந்தன' என்றாள்.

'அப்படியா, நீ எத்தனை ஆடுகளுக்கு சொந்தக்காரியாக வர திட்டம் போட்டிருக்கிறாய்?' அக்னஸ் அசைந்தபடியே இருந்தாள். அவள் உடம்புக்குள் ஓர் இசை ஓடிக்கொண்டிருந்தது. ஆடை அலை அலையாக எழும்பி மின்னியது. பெரிய உதட்டில் பெரிய புன்னகை. உண்மையிலேயே அவளிடம் பெரிய திட்டம் இருந்தது.

'ஆடுகள் அல்ல. இன்னும்பெரிய ஒன்றுக்கு நான் சொந்தக்காரியாக வேண்டும்.'

'அது என்னவோ?' என்றேன்.

சரித்திரப் பிரசித்தி பெறக்கூடிய ஒரு பதிலைச் சொல்ல அவள் வாயை திறந்தாள். ஆனால் அந்தப் பதிலை நாங்கள் ஒருவருமே கேட்க



உற்றுக் கவனித்தபோது அதே சிரித்த முகத்துடன் இருந்தாள்.

'சரி, வாழ்க்கையில் என்னவாக வர விரும்புகிறாய்?'

'ஒரு போப்பாண்டவராக வந்தால்கூட பரவாயில்லை?'

'அது நல்லதுதான். உன் அப்பா உனக்கு ஆங்கிலமோ, கணிதமோ வராது என்று சொல்கிறாரே?'

'அப்பாவுக்கு ஒன்றுமே தெரியாது.' அவளுடைய அப்பா ஏதோ சொல்லவர இவள் எட்டி அவருடைய வாயை தன் கைகளால் பொத்தினாள்.

'ஆங்கிலம் அந்நிய மொழி, அதை நான் ஏன் படிக்கவேண்டும். என்னுடைய தாத்தா-

வில்லை.

விளையாடிக்கொண்டிருந்த என் மகன் திடீரென்று 'வீடு எரியுது, வீடு எரியுது' என்று கத்தினான். நாங்கள் வெளியே ஓடிப்போய் கூரையை பார்த்தால் அங்கே ஓர் இடத்தில் புகை சூழ்ந்திருக்க நடுவே சிவப்பு மலர் போல கொழுந்து எழுந்தது. அந்தக் காட்சி பார்ப்பதற்கு அழகாக இருந்தது. ஆப்பிரிக்காவில் நான் வசித்த பகுதியில் நெருப்பணைப்பு படை வசதிகள் கிடையாது. குழாய் வழியாக தண்ணீரை பீய்ச்சியடிக்கவும் முடியாது. அக்னஸ் அரைக்கண்ணத்துக்கும் குறைந்த நேரத்தில் சுறுசுறுப்பானாள். அவளுக்குள்ளிருந்த யந்திரத்தை யாரோ முடுக்கி விட்டதுபோல பக்கத்தில் நின்ற மரத்தில் கிழவரின் பிருட்டத்தை தள்ளி அவரை ஏற்றிவிட்டாள். அவரை தொடர்ந்து ஒரு வேலைக்காரனையும் ஏற்றினாள். இருவருமே மரக்கிளைகளை பிடித்து ஏறி கூரையின் மேல் பக்குவமாக குதித்தார்கள்.

அடுத்து தண்ணீரில் சாக்குகளை நனைத்து மேலே எறிந்தாள். அவர்கள் அதை நெருப்பின்மேல் அடித்து அடித்து அணைத்தார்கள். அங்கே எத்தனை சாக்குகள் இருந்தனவோ அத்தனையையும் நனைத்து மேலே எறிந்தாள். நாங்களும் அவளைத் தொடர்ந்து அப்படியே செய்தோம். அவர்கள் ஒரு நிமிடம் ஓயாமல் வேலைசெய்தார்கள். ஓர் இடத்தில் நெருப்பை அணைத்தபோது இன்னொரு இடத்தில் பற்றிக் கொண்டது. பறவைகள் பறப்பதுபோல நெருப்புக் கங்குகள் பறந்து வந்து கூரையில் விழுந்தவண்ணம் இருந்தன. கிழவரும் வேலைக்காரனும் அந்தரத்தில் நகர்ந்து அவற்றை அணைத்தனர்.

காட்டை எரித்தவர்களுக்கு வீடு எரிவது தெரியாது. அதற்கிடையில் சனங்கள் கூடிவிட்டார்கள். எவ்வளவுதான் நெருப்பை அணைத்தாலும் காட்டிலிருந்து புதுப்புது கங்குகள் வந்து விழுந்து கொண்டேயிருந்தன. அக்னஸ் காட்டை எரிப்பவர்களிடம் போய் இடுப்பிலே இரண்டு கைகளையும் வைத்துக்கொண்டு சத்தம் போட்டாள். இப்பொழுது அக்னஸும் சனங்களும் சேர்ந்து வீடு எரிவதை தடுப்பதற்கு பதிலாக காடு எரிவதை தடுக்க முயன்றார்கள், இரண்டு மணிநேரம் இது தொடர்ந்தது. எங்கள் மகள், கைக்குழந்தை, வீட்டினுள்ளே தொட்டிலில் தூங்கிக்கொண்டிருந்தது அப்பொழுதுதான் ஞாபகம் வந்து மனைவி உள்ளே பாய்ந்துபோய் மகளை அள்ளிக்கொண்டு வந்தார். குழந்தையின் தலை இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் ஆட அதை தோளிலே போட்டுக்கொண்டு மனைவி நடுங்கியபடி நின்றார்.

சில மணி நேரத்தில் காட்டுத்தீயை அடக்கினார்கள். அங்கேயும் அக்னஸ்தான் முன்னுக்கு நின்றாள். ஒரு தீயணைப்பு படையில் முந்தி வேலைசெய்தவள்போல இயங்கினாள். சூரிய வெளிச்சத்திலும் நெருப்பு வெக்கையிலும் அவளுடைய கண்ணாடி உடை அவள் அசையும்போதெல்லாம் ஒளி வீசியது. அவள் தலைமயிர் மின்சாரம் பாய்ந்ததுபோல தலைமுழுக்க நிறைந்து நின்றது. வீடு எரிவதை புதினம் பார்க்க வந்த சனங்கள் 'அன்று நாங்கள் தப்பியது அருந்தப்பு' என்று அபிப்பிராயம் சொன்னார்கள்.

வீட்டுக்கூரையில் ஏறியவர்கள் அங்கேயே தங்கிவிட்டார்கள். அவர்களை நாங்கள் மறந்துகூடவிட்டோம். அவர்களுக்கு எப்படி இறங்குவதென்று தெரியவில்லை. ஏறும்போது மரத்தின் கிளையை பிடித்து தாவி ஏறி குதித்துவிட்டார்கள், ஆனால் இறங்கும்போது கிளையை பிடிக்கமுடியவில்லை. அக்னஸ்தான் விரைந்துபோய் எங்கேயோ ஓர் ஏணியை சம்பாதித்துக்கொண்டு வந்து அவர்களை இறக்கினாள். அவர்களை கூரையில் ஏற்றும் போது அக்னஸ் என்ன நினைத்திருந்தாள்? ஒரு வீடு பற்றி எரிந்தால் அந்த இடத்தைவிட்டு ஓடுவதுதான் வழக்கம். ஒருவருமே அதே கூரையில் ஏறுவதில்லை. கொஞ்சம் தவறியிருந்தால் அவர்கள் வீட்டுடன் சேர்ந்து எரிந்திருப்பார்கள் அல்லது கீழே குதித்து காலை முறித்துக் கொண்டிருப்பார்கள்.

கிழவரை நோக்கி 'பார்த்தீர்களா! அக்னஸுக்கு பொறுப்பு வந்துவிட்டது, அவள் மாறிவிட்டாள்' என்றேன். கிழவர் 'செட்டை உரித்தாலும் பாம்பு பாம்புதான்' என்றார். 'மனிதனுக்கு கணிதமும் ஆங்கிலமும் முக்கியமல்ல. வாழ்க்கைக்கு தேவையான பாடத்தில் அவள் முதலாவதாக இருக்கிறாள்' என்றேன். அன்று கிழவரும் மகளும் சரியாக அந்த நேரம் வராவிட்டால் என்ன ஆகியிருக்கும் என்று யோசித்தேன். அங்கு குழுமியிருந்த அத்தனை பேரிலும் அக்னஸ் ஆடை பொங்க சுழன்று சுழன்று வேலைசெய்தாள். அவள் சொன்னதை அத்தனை பேரும் கேட்டு நிறைவேற்றினார்கள். ஒரு கட்டத்தில் அவள் ஏதோ சொல்ல என் மனைவி ஒரு வேலைக்காரியை போல

தொடர்தல் 88ம் பக்கம்

87ம் பக்கத் தொடர்ச்சி...

உடனே ஒடி செய்துமுடித்ததை நினைக்க ஆச்சரியமாக இருந்தது.

புறப்பட முன்னர் அக்னஸ் கண்ணைச் சிமிட்டிக்கொண்டு, கள்ளச் சிரிப்புடன் சொன்னது ஞாபகத்துக்கு வந்தது. ‘அப்பாக்கள் எப்பவும் இப்படித்தான். அவர்கள் மகளை புரிந்துகொள்ளவே மாட்டார்கள்.’ எனக்கு ஆச்சரியமாயிருந்தது. ‘இன்று ஒரு வீடு எரியப்போகுது, அதைக் காப்பாற்றுங்கள்’ என்று தேவதூதன் கனவில் பிரசன்னமாகி சொன்னதுபோல அவர்கள் இருவரும் சரியான நேரத்துக்கு வந்தார்கள், அணைத்தார்கள், சென்றார்கள். அந்தக் காட்சியை என்னால் மறக்க முடியவில்லை. அவள் சிரித்த முகம் மாறாமல் ஒருவித துள்ளல் நடையுடன் முன்னே சென்றாள். ஜொனாதன் சுதந்திரதின அணிவகுப்பில் ஒரு ராணுவவீரன் சல்யூட் அடிப்பதுபோல முகத்தை திருப்பி என்னையே பார்த்தபடி மகளை பின்தொடர்ந்தார்.

நான் எழுத வந்த விசயம் எப்படியோ திசை



**உங்கள் கரிசனை எனக்கு தெரியும். ஆப்பிரிக்காவில் வீடு எரிந்தபோது என்னை உள்ளே விட்டுவிட்டு ஓடியவர்கள்தானே நீங்கள்.**

மாறிவிட்டது. என்னுடைய மகள் வளர்ந்து அமெரிக்காவில் படிப்பை முடித்து முதல் வேலையில் சேர்ந்திருந்தாள். நானும் மனைவியும் அவளைப் பார்க்கப் போனோம். மூன்று நாள் எல்லாமே சுமுகமாகப் போனது. நாலாம் நாள் அது தொடங்கியது. வழக்கமாக மூன்றாம் நாளே தொடங்கியிருக்கும். பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு செய்யும் அநீதியை பற்றிய பட்டறை.

ஆரம்பித்து வைத்தது மனைவிதான். ஆனால் குடும்ப பூசல்கள் எங்கேயிருந்தும் தொடங்கலாம். ஏனென்றால் இரண்டு தரப்புமே ஒரு சந்தர்ப்பத்துக்காக ஏங்கிக்கொண்டிருக்கும். என் மனைவிக்கு வீடு சுத்தமாக இருக்கவேண்டும். துரும்பு ஒன்று கிடந்தாலும் அன்று இரவு நித்திரை வராது. நாங்கள் மகளைப் பார்க்கப் போகும் சமயங்களில் மனைவி முழங்காலில் இருந்தபடி ஒரு நாள் முழுக்க தரையை சுத்தம் செய்வார். உள்கூரையை துடைப்பார், சுவரை மினுங்கவைப்பார். மகள் வீட்டை எவ்வளவுதான் சுத்தமாக வைத்தாலும் மனைவிக்கு சம்மதமாக இராது.

நானும் மனைவியும் டிவி பார்த்துக் கொண்டிருந்தோம். சாதாரணமான கேள்விதான். மகள் டிவியில் என்ன இருக்கிறது என்று கேட்டாள். என் மனைவி பட்டுத் துணியிலும் வழுவழுப்பான குரலில் ‘தூசி’ என்றார். அது சிலப்பதிகாரத்து மாதவி பகை நரம்பை மீட்டியதற்கு சமம். சண்டை ஆரம்பமானது. ‘இந்தச் சின்ன டிவியை வைத்து நான் என்ன செய்வது, கொஞ்சம் பெரிய டிவி எனக்கு வாங்கித் தந்திருக்கலாம்.’ இது மகள்.

‘இப்பொழுது நல்ல சம்பளம் வருகிறதுதானே, சொந்தக் காசில் வாங்கினால் என்ன?’ என்றேன்

‘அப்படித்தான் செய்யப்போறேன். என்னுடைய கடன் எல்லாத்தையும் அடைத்த பிறகு.’

நான் சொன்னேன், ‘மறுபடியும் கடனா? யாராவது உலகில் 19 கடன் அட்டைகள் வைத்திருப்பார்களா? ஒருமுறை நான் இதற்காகவே பயணம் வந்து கடன்களை எல்லாம் தீர்த்து கடன் அட்டைகளையும் வெட்டி எறிந்துவிட்டுப் போனேனே.’

‘அட்டைகளை வெட்டினால் கடன் போய்விடுமா? அதற்காகவா என்னுடைய பட்டமளிப்பு விழாவுக்கு நீங்கள் வரவில்லை. மற்ற எல்லா பெற்றோர்களும் வந்திருந்தார்கள். நான் பட்டம் வாங்குவதை பார்க்க இந்த உலகத்தில் ஒருவருமே இல்லை’ என்றாள் மகள். சிணுக்கம் தொடங்கியது.

‘அவர்களுக்கு பெற்றோர்கள் அமெரிக்காவில் இருக்கிறார்கள். நாங்கள் இரண்டு சமுத்திரம் கடந்து மூன்று பிளேன் பிடித்து அல்லவோ வரவேணும்.’

‘உங்களுக்கு விருப்பம் இருந்தால் வந்திருப்பீர்கள்.’

‘எப்படி? இறுதி சோதனைக்கு இரண்டு மாதம் இருக்கும்போது வந்திருந்தோம். இப்பொழுது மறுபடியும் ஆறு மாதம் கழித்து வந்திருக்கிறோம். இதற்குமேல் என்ன செய்யமுடியும். பணம் என்று ஒன்றிருக்கிறதல்லவா?’ என்றேன்.

‘எப்பவும் இந்தச் சாட்டுத்தான்.’

‘கடவுச்சீட்டை தொலைத்துவிட்டேன் என்று தந்தி வந்தபோது நான் வந்திருந்தேனே. இங்கே வந்து பார்த்தால் கடவுச்சீட்டை கை மாறி வைத்துவிட்டதால் வந்த பிரச்சினை. நான் அவ்வளவுதூரம் பயணம் செய்து வந்தது வீணாய் போச்சுது.’

‘நீங்களும் கைமறதியாக எத்தனை தரம் தொலைக்கிறீர்கள். நேற்றுக்கூட வீட்டுச் சாவி தொலைந்ததே.’

‘எல்லாப் பிரச்சினையும் கம்புயூட்டர் படிக்க வந்து உயிரியல் படிப்புக்கு மாறியதால் ஏற்பட்டது.’

‘அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?’

‘ஆறுமாதம் படிப்பு கூடிப்போச்சுது. அதற்கும் நான்தானே பணம் கட்டவேணும்?’

‘எனக்கு வேறு யாராவது பெற்றோர் கிடைத்திருந்தால் எவ்வளவு நல்லாயிருந்திருக்கும்?’

‘வண்ணத்துப்பூச்சி பிறக்கும்போது இருக்கும் அளவுதான் அதன் வாழ்நாள் முழுவதும் இருக்குமாம். அதுபோல உன் சிந்தனையும் வளராமல் அப்படியே நின்றுவிட்டது.’

‘சரி, எனக்கு மூளையில்லை, அதுதானே?’

‘அப்படியல்ல. நாங்கள் உனக்கு என்ன குறை வைத்தோம்?’

‘நான் எட்டாவது படித்தபோது நீங்கள் என்னை பள்ளிக்கூடத்திலிருந்து எடுக்கவரவில்லை. நான் ஒரு மணிநேரம் அழுதுகொண்டு தனியாக காத்திருந்தேன்.’

‘அதற்கு நான் என்ன செய்யமுடியும். கார் பழுதாகிவிட்டது. என்றாலும் வாடகை கார் பிடித்து வந்திருந்தேனே!’

‘எல்லா அப்பாக்களும் இப்படித்தான். அவர்கள் மகளைப் புரிந்துகொள்வதே இல்லை.’

இதே வார்த்தைகளை பல வருடங்களுக்கு முன்னால் ஆப்பிரிக்காவில் கேட்டது ஞாபகத்துக்கு வந்தது. எங்கள் வீட்டிலிருந்த அத்தனை வாய்களும் திறந்துகொண்டன. மகளின் கண்களில் கண்ணீர் தளும்பினாலும் அவள் கைகள் அதை துடைக்க முயலவில்லை. கண்ணீர் கன்னத்தில் இறங்காமல் நேராக தரையில் டக்கென்று விழுந்தது. இது தீராத வாக்குவாதம். இரவுச் சாப்பாட்டுக்கு பிறகு தொடங்கியது, இப்போது மணி பதினொன்றை நெருங்கியது. யாருடைய கடைசி வார்த்தையில் சம்பாசணையை முடிப்பது, அதுதான் பிரச்சினை. நான் பேசாமல் இருந்தேன். குற்றங்களைத் தேடித் தேடி பின்னால் போன மகள் கடைசியாகக் கேட்ட கேள்வி என்னையும் மனைவியையும் திகைக்க வைத்தது.

‘உங்கள் கரிசனை எனக்கு தெரியும். ஆப்பிரிக்காவில் வீடு எரிந்தபோது என்னை உள்ளே விட்டுவிட்டு ஓடியவர்கள்தானே நீங்கள்?’

அதற்கு பிறகு எனக்கு சொல்ல ஒன்றுமே இல்லை.



muththulingam.a@thaiveedu.com


# JRS COLLEGE
OUR COMMITMENT IS QUALITY TRAINING

## English Class
(Business Communication)
Starts on Jan 30th @01:00PM

## Cashier Training
Starts on Jan 30th @9:00AM

FREE
CPA EXAM PREPARATION
(For former JRS College Computerized Accounting students)

FREE TRAININGS
Cashier Or Bank Teller Or Food Handling
(If you enroll in any diploma course at JRS College,
Also Business Communication is free for our JRS College students)

DIPLOMA COURSES

Health Office Administrator (HOA)

Office Assistant





Accounting and Payroll Administration

Computerized Accounting





✱ Some Courses are not available in Etobicoke Campus

| Scarborough Campus | Etobicoke Campus |
|---|---|
| (Midland & Finch) PH 16-4168 Finch Ave East Scarborough, ON M1S 5H6 ☏: 416-292-2455 | (Kipling & Dundas) 300-5359 Dundas St West Etobicoke, ON M9B 1B1 ☏: 416-207-9975 |

# கலாபன் கதை 09

## ஒரு கூண்டும் சில மஞ்சள் கிளிகளும்

### - தேவகாந்தன் -

லண்டன் துறைமுகத்தில் ஈரானியப் பெண்ணினதும், கப்பலின் இரண்டாவது அலுவலரினதும் காதலைக் கேட்ட பிறகு, கலாபன் அதிர்வுகளை அடைந்திருந்தானெனினும் மாறிப் போய்விடவில்லை. உள்ளுள்ளாய் ஒரு தினவு விளைந்துகொண்டே இருந்தது. ஆனால் அது அவன் முந்திய கப்பல்களில் இருந்ததுபோன்ற அளவுக்கோ, முறைமையிலோ இருக்கவில்லைத்தான். அந்த உண்மை தென்கொரியாவில் தெரியவந்தது. அவனே அறிய அது தெரியவந்தது என்பதே அதன் விசேடம்.

புசான் என்கிற தென்கொரிய துறைமுகத்தை அவனது கப்பல் அடைந்தபோது நண்பகலை அண்மிக்கின்ற பொழுதாகவிருந்தது.

கடந்த ஒரு வாரமாக புசான் துறைமுகம்பற்றிய பேச்சாகவிருந்த கப்பலில், அந்த நிமிடத்திலிருந்து உற்சாகம் கரைபுரள ஆரம்பித்துவிட்டது. இரவு வேலை முடித்துவந்த கலாபன் உறக்கம் கலைந்து மதிய உணவை முடித்துவிட்டு கீழே மாலுமிகள் உணவறைக்குச் சென்றபோது, இரண்டொருவரைத் தவிர மீதிப்பேரைக் காணக்கிடைக்கவில்லை. கபின்களுக்குச் செல்லும் நடைபாதையில் ஒரே கூத்தும் கும்மாளமுமாய் இருக்க கலாபன் தன் புதிய நண்பன் ரோனியின் அறைக்குச் சென்றான்.

அங்கேயும் லேசான மது பாவனையும் சல்லாபம்பற்றிய பேச்சுமாகவே இருந்தது. கூடவிருந்த ஓர் ஆபிரிக்கன் புசான்பற்றிய தன் முந்திய அனுபவங்களை ரோனிக்குச் சொல்லிக்கொண்டிருந்தான். விலைமாதர் குடியிருக்கும் பகுதியை Yellow House என்பார்களெனவும், தென்கொரியாவில் இன்சான் என அதேபோன்று இன்னொரு துறைமுகம் இருப்பதாகவும், அந்த இரண்டு நகரங்களில் ஒன்றிலாவது அங்குள்ள சின்னஞ்சிறு மஞ்சட் கிளிகளின் காதல் சிறகடிப்புக்களை அனுபவிக்காதவன் கடலோடியாக இருந்து பிரயோசனமில்லையெனவும் அளந்துகொண்டிருந்தான்.

கலாபனையும் குடிக்கக் கேட்ட ரோனியிடம் தான் சாப்பிட்டுவிட்டதாகவும், மாலையில் பார்க்கலாம் என்றும் கூறிக்கொண்டு அவன் இயந்திர அறைக்கு இறங்கினான்.

சொற்ப நேரத்தில் அவன் வெளியே வந்துவிடலாம். ஆனாலும் அந்த 12-04 மணி வேலைநேரத்தில் இயந்திர அறைக்கு அவன் தான் பொறுப்பு. பயணத்தில் போலவே கப்பல் நங்கூரத்தில் நிற்கும்போதும், துறைமுகத்தில் கட்டிநிற்கும் வேளையிலும் சரி அந்தப் பொறுப்பு மாற்றங்கண்டுவிடாது.

மாலையில் அவன் குளித்து வெளிக்கிட்டிருந்த வேளையில் ரோனி வந்தான். ‘இரு போகலாம்’ என்றுவிட்டு ஜொனி வோக்கரை உள்ளே சிறிதுசிறிதாய் இறக்கியபடி லியோ சேயர் என்றும், நீல் டைமன் என்றும் கசெற்றுக்களைப்போட்டு மெல்லிய சத்தத்தில் ரசித்துக்கொண்டிருந்தான் கலாபன்.

ரோனி சிறீலங்காவிலிருந்து வந்தவன். பறங்கி இனத்தைச் சேர்ந்தவன். ஆங்கிலம், சிங்களம் இரு மொழிகளையும் சரளமாகப் பேசக்கூடியவன். வாழ்விடம், கல்வி ஆகிய காரணங்களால் ஒரு சிங்களவின ஈர்ப்பு இருந்தாலும் ரோனி நல்லவன். கலாபன் நெருங்கிப் பழக அந்தளவு நல்ல குணம் போதும்.

நேரமாக ஆக ரோனி பொறுமை இழப்பது தெரிந்தது. இன்னும் சற்று வேளையாக அவன் குழம்பவே ஆரம்பித்துவிடுவான்போலத் தோன்ற, ‘ரோனி, மன்னித்துவிடு. நான் என்ன நேரம் புறப்படுவேன் எனச் சொல்ல முடியாது. சிலவேளை வெறி ஏறினால் இப்படியே போகாமலும் படுத்துவிடக்கூடும். கப்பல் இங்கே மூன்று நான்கு நாட்கள் நிற்கப்போகின்றது. நாளைக்கும் பார்க்கலாம்தானே. உன்னை இனிமேலும் தாமதப்படுத்த நான் விரும்பவில்லை. போவதானால் போய்க்கொள். கடைசிவரை நீ எனக்காகக் காத்திருக்கவேண்டியதில்லை’ எனக் கூறினான்.

ரோனி, ‘பரவாயில்லை, கலாபா. அநேகமாக சாமான்களை நாளைக்கு ஏற்ற ஆரம்பித்துவிடுவார்கள். எனக்கு மேற்றள காவல்வேலை இருக்கிறது. நேரத்தோடு திரும்பினால்தான் சரியாகவிருக்கும்’ என்றுவிட்டு அவன் பின்னிற்பதின் அதிசயம் மேவ அவனைப் பார்த்தபடி விடைபெற்றுச் சென்றான்.

ரோனிக்கு மட்டுமில்லை, அவனுக்குமே தனது செயல் ஆச்சரியமாகத்தான் இருந்தது.

வந்த அம்மாவின் கடிதத்தில் ஊரிலே பிரச்சினைகள் வெகுத்துவிட்டன, 83க் கலவரத்துக்குப் பின் பெடியள் ராணுவத்தையும் பொலிசையும் தாக்கும் செயல்கள் அதிகரித்து, அதனால் ராணுவத்தினதும் பொலிசினதும் கடற்படையினரதும் கெடுபிடிகள் பெருகியதில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டிருக்கிறது என்று எழுதியிருந்தது. இந்த இயல்பு நிலைப் பாதிப்பில் மனோ கடிதமெழுதாதிருக்கக்கூடிய சாத்தியத்தை அவனால் புரிந்துகொள்ள முடிந்தது. அதனால் மனைவியின் கடிதம் கிடைக்காதபோதும் அவன் ஆத்திரப்படவோ, வேறுவேறு சாத்தியங்களை எண்ணி அந்தரப்படவோ செய்யவில்லை.



ஆனால் காதலிழந்திருப்பதை எதனால் சாந்திப்படுத்த முடியும்? ஓர் அன்பான வார்த்தை, ஓர் ஆதரவான அரவணைப்பு எந்த உயிருக்கும் தேவையாக இருக்கிறதே! உடற்சுகங்களை அவன் பணம் கொடுத்து வாங்கிவிடுவான். ஆனால் காதலை எங்கே, எதைக் கொடுத்து வாங்குவது? ஆனாலும் சரீர உறவுகளினூடாகக் காதலை அடைதல் என்பது ஒரு காரியார்த்தமான மார்க்கமாக அவனுக்குள் நிச்சயமாகியிருந்தது.

நிறைந்த போதை ஏறிய ஒரு தருணத்தில் கீழே இறங்கிய கலாபன், யாரையோ எந்தக் கப்பலிலோ இறக்கிவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்த ஒரு டாக்ஸியை மறித்தான். தான் செல்லவேண்டிய இடம் அவனுக்குத் தெரிந்திருந்தது. அவன் சொல்லியிருக்காவிட்டாலும் டாக்ஸிக்காரன் அவன் செல்லவேண்டிய இடத்துக்கு இம்மி பிசகாமல் அவனைக் கொண்டுபோய்ச் சேர்த்திருப்பான். டாக்ஸிக்காரர்களுக்கு, குறிப்பாக துறைமுகக் கரைகளில் டாக்ஸி ஓட்டுபவர்களுக்கு, அந்தச் சாமர்த்தியம் அதிகம்.

புசான் அழகானது. மலைகள் சூழ்ந்த பகுதி. உயர உயரச் செல்லும் வரிசை வரிசையான வீட்டு அடுக்குகளால் மலையை அமைத்திருப்பதுபோன்ற தோற்றம். கப்பல் துறைமுகத்தை அணிமித்துக்கொண்டிருந்த வேளையில் தொலைவிலிருந்தே அவ்வழகைக் கண்டிருந்தான் கலாபன். அதிகாலையில் அந்த மெல்லிய விளக்குகள் தெரிந்த நகரம் ஒரு கனவுலமாகவே அவனுக்குத் தோன்றியிருந்தது.

கலாபன் நேரத்தைப் பார்த்தான். பன்னிரண்டு ஆகிக்கொண்டிருந்தது.

அமைதியும் அழகும் கொண்டு உறைந்துகிடந்த அந்த நகரத்தின் மஞ்சள் வீடு என அழைக்கப்பட்ட பகுதியில் டாக்ஸி நுழைந்துவிட்டது என்பதை ஊகிக்கக்கூடியதாகவிருந்தது கலாபனால். களிமக்கள் ஆடியும் தள்ளாடியும் ஆங்காங்கே நடந்தபடியிருந்தனர். ஆனாலும் ஒரு அடக்கம், அமைதி நேரத்தின் அகாலம் காரணமாய் அங்கே விழுந்துகிடப்பதாகவே தோன்றிக்கொண்டிருந்தது.

அவன் டாக்ஸிக்காரனிடம் கேட்டான்: ‘நேரம் அதிகமாக ஆகிவிட்டதோ இந்தப் பகுதிக்கு வருவதற்கு?’

டாக்ஸிக்காரன் சிரித்துவிட்டு, ‘இந்தப் பகுதிக்கு எப்போதும் நேரம் சென்றுவிடுவதில்லை. ஏனெனில் இது பகல் காணாதது. பகலும் இரவும் மழையும் வெய்யிலும் இதற்கில்லை. ஆனாலும் மாலையில் வருவது நல்லது ஒருவகையில். அழகான பெண்களைத் தெரிந்தெடுக்க அதுதான் ஏற்ற நேரம்’ என்றான்.

டாக்ஸிக்காரன் இறக்கிவிட்ட வீட்டினுள் நுழைந்தான் கலாபன்.

உள்ளே கூடத்துள் சதுரப்பாங்கில் ஆறேழு பெண்கள் உட்கார்ந்திருந்தார்கள். சில கொரிய இளைஞர்கள் சுற்றிச்சுற்றி வந்து அவர்களைப் பார்வையிட்டுக்கொண்டிருந்தனர். கலாபன் போதையோடு செய்வதறியாது சிகரெட் எடுத்துப் புகைத்தவண்ணம் நின்றிருந்தான். பெண்களைப் பார்வையிட்டுக்கொண்டிருந்த இளைஞர்களில் இருவர் இரண்டு பெண்களைச் சுட்டிக் கையசைக்க அவர்கள் மலர்ந்த முகங்களோடு எழுந்து ஒரு பகுதியால் வெளியே வந்தனர். அப்போதுதான் தெரிந்தது கலாபனுக்கு, அவர்கள் கண்ணாடிக் கூண்டுக்குள் இருந்திருந்தார்கள் என்பது.

அவனுக்கு அதிசயமாக இருந்தது. ‘கப்பலில் ஒரு நாய்கூட இதுபற்றிச் சொல்லவில்லையே’ என யாரையென்றில்லாமல் ஒரு திட்டைத் திட்டிவிட்டு, இனியும் நேரமாகிவிடக்கூடாது என்ற எண்ணத்தில் தனக்கான பெண்ணைத் தேடத் தயாரானான்.

அப்போது அய்ந்து பெண்கள் இருந்திருந்தார்கள் கண்ணாடிக் கூண்டினுள். ஒவ்வொரு பெண்ணின் முன்னாலும் அவன் வரும்போது முட்டுக்கால் பதித்து குதிக்கால்களில் அமர்ந்திருந்த அந்தப் பெண்ணின் விழிகளில் படபடத்த ஆவல் அவனை என்னவோ செய்தது. தன்னை இவன் தேர்ந்தெடுத்துக் கூப்பிட்டுவிடமாட்டானா என்ற ஏக்கம் அவளது கண்களில் தனியாகத் தெரிந்தது. ஒரு கெஞ்சுதலாய் அது வெடித்தெழுந்தது. அவளைத் தாண்டிச் சென்று நீ நான் தேடும் அழகும் கவர்ச்சியுமான பெண்ணில்லையெனச் சொல்லாமல் சொல்லி அவளது யாசகத்தை நிராகரிக்கும் காரியத்தை நிறைவேற்ற அவனது மனம் பின்னின்றது. ஆனாலும் தயக்கத்துடனேனும் அதை அவன் செய்யவேவேண்டியிருந்தது.

ஒரு பெண்ணைத் தாண்டி மற்றப் பெண்ணுக்கு முன்னால் வந்தபோது அந்தப் பெண்ணின் முகமும் அதே ஏக்கத்தை, ஆவலைத் தெரி விப்பதாய் இருந்தது.

ஒரு விலைமாது என்பவள் எந்த ஆணாலும் ஏற்கப்படுபவளாக இருக்கவேண்டும். ஏற்கப்படுவதற்கான அழகும், இளமையும், உடல் வாகும்தான் அவர்களது தொழிலின் மூலதனம். அவை உதாசீனப்படுத்தப்படுமானால் ஒரு விலைமாது துவண்டே போகிறாள். அது அவளது கர்வத்தின் சிதைவு மட்டுமல்ல, எதிர்காலத்தின் அச்சத்தையும் கொண்டிருக்கிறது.

ஒரு விலைமாதில், அவள் எந்த நாட்டைச் சேர்ந்தவளானாலும், ஓர் அனுதாபம் கலாபனிடத்தில் என்றும் இருந்துகொண்டே இருந்தது. தம் நிலைமை காரணமாக அதை ஒரு

தொடர்தல் 90ம் பக்கம்

# கலாபன் கதை 09

89ம் பக்கத் தொடர்ச்சி...

தொழிலாக ஏற்றுக்கொண்ட பாவப்பட்ட ஜென்மங்கள் என்பதுதான் பொதுவாக அவனது அபிப்பிராயம்.

ஓர் இரவு கப்பலுக்கு வந்த ஒரு விலைமாது மிகவும் மோசமான காமலீலையை மறுத்த-தால், வெறிகொண்டிருந்திருந்த ஓர் எகிப்தி-யனிடம் உதடு பிரிய அடிவாங்கிக்கொண்டு அரையும் குறையுமாய் ஓடிவந்து அவனது அறைக் கதவைத் தட்டி அபயம் கேட்ட சமயத்தில், அவளை உள்ளே அனுமதித்து ஆதரவளித்தான் கலாபன். ஆயினும் அவளது நிலைமையில் பின்னர் சினந்து, ‘இந்தத் தொழிலைவிட வேறு ஏதாவது தொழில்செய்து பிழைக்க உனக்குத் தெரியாதா? ஒருவேளை இந்தத் தொழில்தான் உனக்குப் பிடித்தமான தொழிலோ!’ என வைதான். அதற்கு அழுது கொண்டே, தன்னிடத்தில் உள்ள எந்தத்



**அவன் தன்முன்னே நிற்பதுணர்ந்து தலைநிமிர்ந்தாள். அவனது அழைப்புக் கண்டாள். ஆயினும் அது தன்னையென நம்ப மறுத்தவள்போல் நிர்சலனமாய் அவனையே பார்த்தபடி இருந்தாள்.**

தொழில் திறமையையும்விட தன் உடம்புதான் இந்த உலகத்தில் இலகுவாகவும் விருப்ப-மாகவும் வாங்கப்படுகிறது, அதற்கு தான் என்ன செய்யமுடியுமென்று என்று வெம்பி வெம்பி அந்த விலைமாது அழுதாள்.

அன்று அவளது பதில் அவனைச் சுட்டிருந்தது. அவளைச் சேராதிருந்தபோதும் அவளுக்கான பணத்தைக் கொடுத்து அவளை அனுப்பி-வைத்தான் கலாபன்.

அவனால் இரங்க முடியும். ஆனால் கண்-ணாடிக் கூண்டுக்குள் அடைபட்டதுபோலிருந்து எவனொருவன் முன்னேவந்து அவளது முகத்தையும் உருவரை சிறிது தெரியும்படி-யான சட்டைக்கூடாக மார்பகங்களையும், இடையினையும் உற்றுப் பார்க்கும்பொழுது இவன்தான் இன்றைக்கு தன் உழைப்புக்கு கூலிபோடும் தேவனோ என்று ஏக்கத்தோடு நோக்கும் அந்தப் பெண்கள்மீது சொல்-லொணாத அனுதாபம் பிறந்தது கலாபனுக்கு.

கூண்டினுள் இருந்த நான்கு பேரது நிலைமை இவ்வாறெனில் அவனை ஒருமுறை நிமிர்ந்து பார்த்துவிட்டு, தன்னைவிட அழகும் கவர்ச்-சியும் மிக்க மற்ற நான்குபேர்கள் இருக்க இவ்வளவு வசதியும் வலிவும் இருக்கும் இவன் தன்னையா தேர்ந்தெடுக்கப்போகிறான் என்று எண்ணியதுபோல் எந்த எதிர்பார்ப்பை-யும் ஏக்கத்தையும் காட்டாத ஒரு பெண் அவனது கவனத்தைக் கவர்ந்தாள்.

கலாபன் அவள் முன்னால் நின்றான்.

அவளின் அந்த உள்மனக் கோட்டம் அவனை கவனம் குவிக்கச் செய்தது.

அவள் மற்றைய பெண்களைவிட அழகான-வளில்லை. மற்றையவர்களைவிட கவர்ச்சி-யானவளில்லை. அவளில் ஓர் அடக்கம் மெல்லிய இழையாக ஊடாடியிருந்தது. அது தம் மார்புக் குவடுகள் தெரிய ஆடை அணிந்திருந்த மற்றப் பெண்களைப்போலன்றி, அவள் கழுத்துவரை அணிந்திருந்த ரி சேர்ட்டில் காணக்கிடந்தது. மட்டுமில்லை. அவள் அவனது கண்களை ஏறிட்டு நோக்க சிறிய கூச்சமொன்றைக் காட்டியதாகவும் அவன் கண்டான். இவை மட்டுமேதானா? இல்லை. இன்னும் ஏதோவொன்றிருக்கிறது. அதுவே அவளை அவன் தேர்வுசெய்யக் காரணமெ-னினும் கலாபன் இருந்த தலைதொங்கு நிலையில் அது பெரிதாகப் படவில்லை அவனுக்கு.

அவன் அவளைச் சுட்டி வர அழைத்தான்.

அவள் நிமிர்ந்து பார்த்தாள். பின் பழையபடி தலையைக் குனிந்துகொண்டு ஆர்வமறுத்த அமைதிநிலை அடைந்தாள்.

கலாபன் திகைத்தான். மறுபடி கையசைத்து அவளை வர அழைத்தான்.

அவள் இன்னமும் அவன் தன் முன்னே நிற்பதுணர்ந்து தலைநிமிர்ந்தாள். அவனது அழைப்புக் கண்டாள். ஆயினும் அது தன்-னையென நம்ப மறுத்தவள்போல் நிர்சலன-மாய் அவனையே பார்த்தபடி இருந்தாள்.

அவன் அவளை மறுபடியும் அழைத்தான்.

தன்னையேதான் என நிச்சயமாகிய கணத்தில் அவள் முகம் மலர்ந்ததே, ஆயிரம் மலர்கள் ஒரேபொழுதில் தம் இதழ்கள் மலர்த்தி சுடர் விரித்ததுபோலிருந்தது அவனுக்கு. கலாபன் நிலைகுத்தினான்.

அவள் எழுந்து நடந்த நடையில் காலகால-மாய் தான் அடைந்திருந்த அத்தனை இகழ்-வுகளையும் நம்பிக்கையீனங்களையும் தூக்கிப் போட்டு மிதித்துக்கொண்டு செல்கின்ற ஒரு பெருமிதம் கண்டான் கலாபன்.

அறையில் அதுவரை காலமும் தான் அவ-னுக்காகவே காத்திருந்ததுபோன்ற மனநிலை-யில் அவளும், தனக்கு காலகாலமாய்ப் பழக்கமான ஓர் உடலுடன் கொள்ளும் உறவு போல் அவனும் உணர்ந்தார்கள்போல் சேர்க்-கை முடிய முடியத் தொடர்ந்துகொண்டிருந்தது.

ஒரு விடிவேளையில் அவள் சிரிப்பின் முகவரி மறந்தவள்போல் இருப்பதின் காரணத்தைக் கேட்டான் கலாபன்.

அவள் நகைத்தாள். அது சிரிப்பல்ல. சிரிப்பு இதயம் விகசித்துப் பிறப்பது. அதுவோ துயரத்தின் எறியம். தன் விதியை எழுதிய காலத்தின் கொடுங் கரங்களை நோக்கியது. பிறகு சொன்னாள்: ‘நான் இந்த தென்கொரி-யாவிலே அநாதை. எனக்கு அம்மா, அப்பா எல்லோரும் இருக்கத்தான் செய்தார்கள். ஆனால் நோயிலும் விபத்திலுமாய் ஒருவர் பின் ஒருவராய்ப் போய்ச் சேர்ந்துவிட்டார்கள். அந்தக் கரையிலே, வடகொரியாவிலே, எனக்கு இன்னும் உறவுகள் இருக்கின்றன. என் தாத்தா, பாட்டி, மாமன் மாமிகள் எல்லாம் அங்கே இருக்கிறார்கள். ஆனால் ஒரு தொடர்புகூட கிடையாது. அவர்கள் இங்கே வரவோ, நான் அங்கே போவதோகூட நட-வாத காரியம். உயிர்வாழ உடலைக் கொடுத்-துக்கொண்டிருக்கிறேன். கொஞ்சக் காலம் எப்படியோ வாழ்ந்துவிடலாம்தான். பிறகு...? இத்தனை நிச்சயமற்ற வாழ்க்கையோடும், வலிகளோடும், வதைகளோடும் யாராவது சிரிக்க முடியுமா?’

அவளைச் சிரித்தபடி வாழவைக்கவேண்டும் போன்ற ஓர் ஆராமை எழுந்தது அவனில். ‘நான் உன்னை வாழவைக்கிறேன். என்னை உனக்குப் பிடித்திருக்கிறதா?’ என்றான் அவன். அவள் அதுபோன்ற ஆயிரம் கதைகளைக் கேட்டிருக்கமுடியும். அவனை அவள் நம்பி-னாளோ இல்லையோ, அவனது மார்புக்குள் இணக்கமாய் அடங்கினாள்.

விடியும்வரை அவள் அவனுக்கானவள்தான்.

மறுநாள் காலையில் கப்பலுக்குப் புறப்பட்ட-போது, ஏதோ கேட்க நினைத்து தயங்குவது போல் அவள் நிற்க அவன், ‘என்ன?’ என்றான். அவள் மெல்ல, ‘இன்றிரவு வருவாயா?’ என்றாள். அவன், ‘கண்டிப்பாக’ என்றுவிட்டு நடந்தான்.

கப்பலில் மாலை எப்போது ஆகும் என்றிருந்-தது கலாபனுக்கு. அவள் மெதுமெதுவாய் உணர்ச்சி கிளர்ந்து எரிமலைபோல் வெடித்து அடங்கிய தருணங்களில் நகங்கள் கிழித்த இளங்கோடுகள் இன்னும் முதுகினில் இனிமை செய்துகொண்டிருந்தன அவனுக்கு. தனக்கா-கவே படைக்கப்பட்ட தேவதைபோல் அவளை-யே எண்ணியெண்ணி மது போதையை ஏற்றிக்கொண்டிருந்தான் அவன்.

ஒருபோது இன்னும் மனத்தின் மர்மமூலை-யில் அவளிடம் தான் கண்ட பரிச்சயத்தின் கூறு அவனுக்குப் புலனாகியது. அவன் திகைத்துப்போனான். ஆனாலும் அது அப்ப டித்தான் என்றே மீண்டும்மீண்டும் அவனுக்குத் தோன்றிக்கொண்டிருந்தது.

அவளது தோலில் இருந்த மஞ்சளை வழித்-தெடுத்துவிட்டு கம்பிபோல் நீளநீளமாய் விறைத்துத் தொங்கும் அந்தக் கூந்தலில் சில நொய்மையின் நெளிகளை இட்டுவிட்டால் அவள் உயரம் மொத்தம் முகஅமைப்பில் அவனது மனோபோலவே இருப்பாள்.

இருட்டிவந்தபோது விறுவிறுவென டாக்ஸி எடுத்து மஞ்சள்வீடு பகுதிக்குச் சென்றான். இறங்கி டாக்ஸியை அனுப்பிவிட்டு சுற்றிவர நோட்டமிட்டான். அவன் நேற்று வந்திருந்த பகுதி அதுதானா? தெரு அதுதானா? வீடு எது? அவனது சம்யா இருக்கும் வீடு எது?

முதல்நாள் வந்த பகுதியை அவனால் அடை-யாளம் காண முடியவேயில்லை. இரவு ஒரு மணி இரண்டு மணிவரை தெருத்தெருவாக அலைந்தான். வேறெங்கு செல்லவும் மனம் பிடிக்கவில்லை. கப்பலுக்குத் திரும்பிவிட்டான் மறுநாளைய நம்பிக்கையோடு.

மூன்று நாட்களாக வீடுவீடாக ஏறி இறங்-கினான் கலாபன். வெட்கத்தைவிட்டு அந்தப் பகுதியில் சஞ்சரிப்பவர்கள்போல் தென்பட்ட சிலரை விசாரிக்கவும் செய்தான். முதல்நாள் கொண்டுவந்து சேர்த்த டாக்ஸிக்காரன்போலத் தோன்றிய சிலரை, சிலவேளை டாக்ஸிகளை நிறுத்தியே, விசாரித்தான். சம்யாவைக் கண்டுபிடிக்கவே முடியாது போனது அவனால்.

அய்ந்தாம் நாள் மாலையில் கப்பல் துறை-முகத்தைவிட்டுப் புறப்பட்டது. அது அவனது வேலைநேரமாக இருந்தது. Stand By நிலை-யிலிருந்து கப்பல் மிகமெதுவாக பின்னே நகர்வதற்கான கட்டளை மணி அடித்தபோது, எந்திரத்தை இயக்கிய கலாபனின் கண்களில் மெல்லிய நீரரும்பு கட்டியிருந்தது.

•

அய்க்கிய அமெரிக்காவைக் கப்பல் அடைந்த-தும் தென்கொரியாவில் தான் கண்டுபிடித்த சம்யாபற்றியும், அவளை ஒரேநாளில் தொலைத்ததுபற்றியும் கடிதத்தில் நிறைய எழுதியிருந்தான் கலாபன்.

மனித மனங்களின் வெவ்வேறு நிலைத் தரி-சனங்கள் அவனுக்குக் கிடைப்பதில் எனக்கும் மகிழ்ச்சியாகவே இருந்தது. ஆனாலும் விரைவில் குடும்பகாரன் ஆகப்போகிறவன் என்ற வகையில் கலாபனின் இந்தத் தொடர்பு களையும், அனுபவங்களையும் முன்புபோல் என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

அடுத்த வாரமோ, அதற்கும் அடுத்த வாரமோ நான் ஊர் போகிற வேளையில் கலாபனின் மனைவியைப் பார்க்க நேர்கிற சமயம் ஏற்பட்-டால், எனக்கு சம்யாவின் நினைவுதான் வரப்போகிறது. அவனுக்கு எப்படி இருக்குமோ?

‘இதெல்லாம் நல்லதுக்கில்லை’
என ஏனோ என்
மனம்
சொல்லிக்
கொண்டது.



devakanthan@thaiveedu.com

# இம் மாதத்திற்குரிய முக்கிய குறிப்புக்கள்

மார்ச் மாதக் குறிப்புகள்

- பகல்வெளிச்ச நேரத்தை சேமிப்பதற்கான (Daylight saving) நேரமாற்றம் இம்மாதம் (March) 14 ஆம் திகதியாகும். இதனை நினைவில் வைத்திருங்கள்.
- School March Break இம் மாதம் 13ம் திகதியில் இருந்து 21ம் திகதி வரை, இதை பயனள்ளதாக மாற்ற முன் ஏற்பாடு செய்யுங்கள்.
- உங்கள் வருமானவரியை பூர்த்தி செய்ய தயார்படுத்துங்கள் அல்லது வருமானவரியை நிவர்த்தி செய்வதற்கான வேலைகளைச் செய்து முடியுங்கள்.
- உங்கள் கம்பளங்கள் (Carpets) மற்றும் கால்துடைப்பான்களை (Rug) துப்பரவு செய்யுங்கள்
- திரைச்சேலைகளை vacuum அல்லது Steam அல்லது dry clean செய்யுங்கள்.
- வெப்பமேற்றும் மற்றும் குளிராக்கும் (Heating and Cooling System) இன் வெளிப்பகுதியில் இலைகள் மற்றும் ஏனைய அழுக்குகள் இருக்கிறதா என பார்த்து சுத்திகரியுங்கள்.
- சுவர்கள், நிலப்பகுதி, தளபாடம் போன்றவற்றை Vacuum செய்யுங்கள்.
- கதவுக்குமிழ்களை கீறலை ஏற்படுத்தாத தூய்மையாக்கிகளைக் கொண்டு துப்பரவு செய்யுங்கள்.
- கொதிகலன்கள் (Boilers) மற்றும் கனலடுப்பில் வைக்கப்படும் பாத்திரங்-களைத் (Oven drip pans) துப்பரவு செய்யுங்கள்.
- வெப்பமேற்றியின் (Gas heater) புகை மற்றும் காற்று வெளியேறும் குழாய் களில் அழுக்கு மற்றும் தூசுகள் இருக்கின்றதா என்பதை சரிபார்த்து அகற்றுங்கள்.
- குளிர்காலத்திற்கென அமைத்த யன்னல்களை (Windows) அகற்றுங்கள்.
- வீட்டின் வெளிப்புறப் புற்தரை மற்றும் பூந்தோட்ட பாத்திகளை வசந்த காலத்திற்கு ஏற்றதாக மாற்றி அமையுங்கள்.
- புற்தரைகளில் மீண்டும் விதையிடுங்கள்
- செடிகள், மரங்களை அவை பூக்கத் தொடங்குமுன்பாக அளவோடு கத்தரி-யுங்கள்.
- குளிரான காலத்தில் வளரக்கூடிய வெங்காயம், உருளைக் கிழங்கு, கோவா, கரட் போன்ற காய்கறிகளை தோட்டத்தில் பயிரிடுங்கள்.
- விதைகளை விதைக்க முன்பாக அல்லது தாவரங்களை நாட்ட முன்பாக திராட்சைக் கொடி மற்றும் ஏறுகொடித் தாவரங்களை படரவிடக்கூடிய கொடிக்கால்களை நாட்டுங்கள்.
- உங்கள் வீட்டைச் சுற்றிலும் மற்றும் நடைபாதைகளில் மின்விளக்குகள் சரியாக எரிகின்றதா எனச் சரிபாருங்கள்.

தொகுப்பு: மகேன் சிங்கராசா

# LEARN TO EARN!! FREE REAL ESTATE CLASSES!!!


## COMMERCIAL

**INDUSTRIAL**



**$995+TMI** for this rare ~1500 of warehouse and manufacturing space with Dock; 53' truck can load.

**RETAIL/MEDICAL**



**500 sq.ft to 5000 sq.ft** Zoned for medical & retail uses- Available Immediately- Affordable rent

**MARKETING**



Own a Business under **$9,995** for this Print shop and Marketting Business- Cheap rent- Do not Miss

**FISH & CHIPS**




**$89,000** for this money making Turn key Business- Earn your investment less than 2 years-

**PARTY HALL**



**$199,000** for this established Business serving Indian cusine- Sales over $600,000/Y

## RESIDENTIAL

**WHY RENT??**



2BR+2WRcondonear doctors office, shopping, Schools etc for **under $499+**; lease to earn possible.

**LUXURY FOR LITTLE!**



**$1750** per month for large 3BR upscale condo overlooking Golf Course, near large mall and a Hiway

**STARTER HOME!!**



**$309,000** for 4BR+4WR Home in an established neiborhood - near Hosptal, School,and Highway

**ONE OWNER !!**



**$449,000** for 4BR+4WR Home in a desirable neiborhood - near Hosptal,School,University & Hiway

**UNBELIEVABLE!!!**



**$499,000** for a Large 4BR+4WR Home in Scarborough near all Amneties - Corner lot 40' x 110'

***WE OFFER AFFORDABLE PROPERTY MANAGEMENT SERVICES FOR YOUR INVESTMENT PROPERTIES!!***

ஈட்டுக்கு ஒரு வீடு வாங்கத் தருந்த தருணம்!!- வரலாறு காணாத வட்டி விகிதம் இப்போது கிடைக்கிறது!!!

*சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள் - உடனே அழையுங்கள்!!!*

Uthayan Nadarajah
*Real Estate & Business Broker*
Direct:
**416-727-9945**

RE/MAX
The Real Estate Leaders

Vijay Thiagarajah
*Real Estate & Business Broker*
Direct:
**647-297-7144**

RE/MAX Rouge River Realty Ltd., Brokerage, Independantly owned and operated

6758 Kingston Road, Toronto, ON. M1B 1G8 Office: 416-286-3993 Fax: 416-286-3348

***Every office is independantly owned and operated***  ****Not Intended to solicit any property under contract****



## காதல் வாழ்க்கை - 15

# சுற்றம் ஓம்பிய கற்றவர் குடும்பம்

வி. கந்தவனம்

மன்னர் புலவர்களை ஆதரித்த சம்பவங்கள் பல பழந்தமிழ் இலக்கியங்களிற் பதிவாகியுள்ளன. புலவர்களே அவற்றைப் பெருமையுடன் கூறிச் சென்றுள்ளனர். பறம்பிற் கோமான் பாரி, வல்வில் ஓரி, மறப்போர் மலையன், கொடும்பூண் எழினி, பெருங்கல் நாடன் பேகன், மோசி பாடிய ஆய், கொள்ளார் ஓட்டிய நள்ளி ஆகிய மன்னர்கள் கடையெழு வள்ளல்கள் எனப்படுவர். இவர்கள் வாரி வழங்கிப் புலவர்களை வாழ வைத்தனர். மன்னர் புலவர்களை மதித்து வரிசைகள் வழங்கியதால் பலர் ஆர்வமுடன் தமிழைக் கற்றனர். தமிழ் செழித்து வளர்ந்தது.



ஓவியம்: மு.சு. சிவகுமாரன்

கடையெழு வள்ளல்களின்பின் தமிழை வளர்த்த பெருமன்னன் குமணன். அவன் முதிர மலைக்குத் தலைவன், பெருங்கொடை வள்ளல். அவன் காலத்தில் வாழ்ந்தவர் பெருஞ்சித்தித்தனார் என்ற புலவர். தான் சொல்ல வருவதை நுணுக்கமாகச் சித்தரித்து விளக்கும் திறமை கொண்டவராதலால் இவர் சித்திரனார் என அழைக்கப்பட்டார். அன்பிற் சிறந்த இப்புலவர் தனது குடும்பத்துக்கு மட்டுமன்றித் தன் சுற்றத்துக்காகவும் பொருள் ஈட்டி வாழ்ந்தவர்.

ஒருமுறை வறுமை காரணமாகப் பெருஞ்சித்திரனார் குமண வள்ளலைக் காணச் சென்றார். அவரது அறிவையும் தமிழையும் பெரிதும் மதித்துக் குமண வள்ளல் பரிசிலாகப் பெருஞ் செல்வத்தை வழங்கினான். அச் செல்வத்தைக் கொண்டுவந்து மனைவியிடம் கொடுத்துப் புலவர் கூறிய கூற்று அவரின் பரந்த மனப்பான்மைக்கு நல்லதோர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

நின்னயந்து உறைநர்க்கும் நீநயந்து
உறைநர்க்கும்
பன்மாண் கற்பினின் கிளைமுத லோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கும்
இன்னோர்க் கென்னாது என்னொடுஞ் சூழாது
வல்லாங்கு வாழ்வதும் என்னாது நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழ வோயே
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேற் குமணன் நல்கிய வளனே.

(புறம் - 163)

‘மனைக்கு உரியோய்! இச் செல்வம் பழமரங்கள் நிறைந்த முதிரம் என்னும் மலைக்குத் தலைவனாகிய கூரிய வேலையுடைய குமணவள்ளல் தந்தது. இதனை உன்னைச் சார்ந்தவர்க்கும் நீ அன்பு செய்யும் தோழியர்க்கும் பலவகையிலும் சிறந்த கற்பினையுடைய உனது சுற்றத்தைச் சார்ந்த மூத்த மகளிர்க்கும் முன்பு எமது சுற்றத்தார் பசி போக்க உதவியவர்க்கும் மற்றும் இன்னார் இனியார் எனக் கருதாது நீயும் எல்லோர்க்கும் கொடுத்து உதவுவாயாக! அவ்விதம் உதவு கையில் யார் யாருக்கு எவ்வளவு கொடுக்க வேண்டும் என்பதுபற்றியெல்லாம் நீ என்னோடு கூடி ஆலோசிக்க வேண்டியதில்லை. மேலும், வருங்கால நல்வாழ்வுக்கு ஒருபகுதியைச் சேமித்து வைக்க வேண்டும் என்றும் நீ நினைக்க வேண்டியதில்லை.’

பெருஞ்சித்திரனாரின் பாடல் நமக்குப் பல விடயங்களைப் படிப்பிக்கின்றன:

இல்லறத்துக்கு வேண்டிய பொருளைத் தேடும் பொறுப்புக் கணவனுக்குரியது.

அப்பொருளை நிர்வகிக்கும் பொறுப்பு மனைவிக்குரியது.

இல்லறம் சார்ந்த விடயங்களில் மனைவிக்குப் பூரண சுதந்திரம் உண்டு.

பொருளை எல்லோருக்கும் பங்கிடல் வேண்டும்.

அதனை நாமே வைத்து அனுபவிக்க வேண்டும் என்னும் சுயநலம் இருத்தல் ஆகாது.

அத்துடன் ஓர் உண்மைப் புலவனுக்கு இருக்கவேண்டிய தகைமைகள் அனைத்தும் பெருஞ்சித்திரனாரிடம் இருப்பதையும் காணலாம். அன்புடைமை, ஆழ்ந்த அறிவுடைமை, பரந்த மனப்பான்மை, சுற்றத்தைப் பேண வேண்டும் என்னும் பொறுப்புணர்வு, மனைவியின் உரிமைக்கு மதிப்பளித்தல், தன்னம்பிக்கை முதலாய நல்லியல்புகள் அவரை ஒரு புலவனாக மட்டுமன்றி உன்னதமான ஒரு குடும்பத் தலைவனாகவும் உயர்த்துகின்றன.

இரண்டு விடயங்கள் அதி கவனத்துக்குரியன. ஒன்று மனைவிக்குப் புலவர் கொடுத்திருக்கும் முக்கியத்துவமும் உரிமைப்பாடும். அகம் புறம் என இருவகைப்பட்ட தமிழர் வாழ்க்கை முறையில் அகவாழ்வில் பெண்ணுக்கும் புற வாழ்வில் ஆணுக்கும் முன்னுரிமை அளிக்கப்பட்டது. ‘மனைகிழவோயே!’ என்று தலைவியை அழைக்கின்றார் புலவர். ‘மனைக்கு உரிமையுடையவளே!’ என்பது இதன் பொருள். மனைவி என்பதன் பொருளும் இதுவேயாகும். இல்லத்துக்கு முழுப் பொறுப்பும் உடையவள் பெண் என்ற காரணத்தினாலேயே அவள் ‘இல்லத்து அரசி’ என அழைக்கப்படுகின்றாள். அவளது ஆட்சியில் அக்காலத்தில் தலையீடு இருந்தத்தில்லை.

இந்நிலைமை ஆண்வழிப்பட்ட வாழ்க்கைமுறையைக் கொண்ட ஆரியர் வருகையைத் தொடர்ந்து மாறத் தொடங்கலாயிற்று. எனினும் தமிழீழத்தவர் வாழ்க்கைமுறையில் குடும்ப நிர்வாகம் இன்றும் பெரிதும் பெண்கள் பொறுப்பிலேயே இருந்துவருவது குறிப்பிடத்தக்கது.

இரண்டாவதாக, புலவரின் ஒப்புரவு மனப்பான்மை நெஞ்சைத் தொடுகின்றது. ஒப்புரவு என்பது உதவி செய்தல். புலவர் தமது வறுமையைப் போக்கக் குமணனிடம் சென்றவர். பெற்ற பொருளை வைத்துக்கொண்டு தாம்வாழ நினையாது, எல்லோர்க்கும் கொடுத்து வாழ வேண்டும் என்று விரும்பும் அவரது உள்ளம் பொதுவாக எல்லோருக்கும் இருப்பதில்லை. பொருளைக் கட்டிக் காத்தல் வேண்டும் என்னும் பொதுவான இயல்புக்குப் புலவர் மாறானவராக இருக்கின்றார். பொருள் வரும் போகும். இருக்கின்ற பொழுது எல்லோருக்கும் உதவ வேண்டும் என்னும் நல்மனமும் இல்லாத போது அதனை எப்படியாவது தேடிக்கொள்ளலாம் என்னும் தன்னம்பிக்கையும் அவரிடம் இருப்பதைக் காண முடிகின்றது. பொருளிலும் அன்பே மேலானது என்பது அவர் கருத்து.

‘நீயும் கொடு’ என்கிறார் புலவர். இதனால் ‘நானும் கொடுப்பேன்’ என்பதை மனைவிக்குக் குறிப்பாக உணர்த்துகிறார். பெரிய வள்ளல் குமணனிலும் உயர்ந்த வள்ளலாக அவர் விளங்குகிறார்.



kandavanam.v@thaiveedu.com

Tutoring

Grade 1-7: English, Math, Science & Social science Grade 8- 11: English & Math

ஜீவா

B.A (Hons), M.Sc, Ph.D

(Kennedy & Ellesmere அருகாமையில்)

(647) 291 1357

Century 21

Affiliate Realty Inc. Brokerage

Off: 416.290.1200

Dir: 416.908.6003



3 Bedroom, 3 Washroom
End unit like semi,
Double Garage
7 Years Old
Morningside & Finch
Exclusive



பகீரதன் சகாதேவன்
முழுநேர விற்பனை முகவர்

CALL 416.908.6003 SAVE MONEY

# வீடு, வியாபாரம், காணி

## வாங்க விற்க அழையுங்கள்!






**NEED MORE HOMES FOR BUYERS**
**2.5% com**

*Call Pat to Sell Your Home…for TOP DOLLARS*

EXPERIENCE! COMMITMENT! RESULTS!

## Pat Pushpakanthan 416- 894-1187



East Scarborough

BRAND NEW HOME 3BM 3 WSRM

Stoufville

Detached home newer home , 9' ceiling 4 bm 3 wsrm

Markham/14 th ave

Executive home 4 bm/ 5 wsrm green park built home bsmnt finished rented for 1350/-

Markham Steeles

Newer Home 1950 sq ft hardwood,oak stares school shoping

Mccowan/steeles


3 bm 3wsrm home **Bsmnt apartment rent and live**

Stoufville

**One Of A Kind 5200Sqft Custom Built House On 2 Acre Lot**

Kennedy/ steeles

3 bm/ 3 wsrm bsmnt finished

Nielson/Mclevin
2 BM /2wsrm CONDO APT FR SALE

**$153 900**
0% down pymnt
**670/- mo pymnt** mortgage call fr detail


Warden /Stoufville

**25 Acre Lot**

Shepard Scar.


S.Detached Home w attached garage, 3 bm/ 23washroom Sep entrance


Kennedy/Ellesmere
**2 bm condo apt 119 000/-**

Ellesmere/Scarborugh


Luxurious Tridel Condo 2 bm/ 2 wsrm
**Mortgage pymnt 428/-** bi week.. call for detail


Markham/Steeles

Retail location for **sale or Lease**

Scarborough

**Business**
Successful Textile southasian for sale in Scarrborough

Ajax/rosland


Detached home 4 bm/ 34wsrm 389 000/-

Ajax/Rosland

Scarborough east 3 bm/ 3wsrm
**260 000/-**


**Ellesmere/ scar**
3bm 4 wsrm Luxuary home finished bsmnt with kitchen 399900

Brimly/Steeles

**Close To All Amenities. Fully Fenced Yard, Enclosed Front Porch, New Paint. Pot Lights**

Scarborough
**Business**
**Bar fr sale Excellent income**

Markham/Denison

Markham/Denison Retail Location for Sale or Lease close to cotsco canadian tire and Home depot
**249 900/-**

email: rpushpakanthan@trebnet.com

## Pat Pushpakanthan
**Real Estate BROKER**

**CENTURION AWARDS 6 yrs**
**Top producer 7 years**
**Masters Hall of Fame 07**

Century 21
Brokerage AFFILIATE REALTY INC.
80 CORPORATE DR. TORONTO, ONT. M1H 3G5
416-290-1200

## 416 490 7653 (SOLD)
email: rpushpakanthan@trebnet.com

# Mortgage 2.19% ..Refinance also.

E Your SOLD AGENT

*This certificate entitles you to a complementary market analysis of your home's current value*

*some condition applies ** not intended to solicit to the buyers under contract

### இது ஓர் ஈழத்துக் கலைஞர்களின் பதிவுத் தொடர் - 5


# ஆழத்து முத்துக்கள்

நாங்கள் எங்கள் வரலாற்றை எழுதவில்லை. பாரம்பரியம் என்பது பேச்சோடு நின்று விடுகிறது. நாங்கள் எதையுமே பேணிப்பாதுகாப்பதில்லை. மன்னன் சாஜஹான் காலையில் என்ன உணவு அருந்தினான் என்று தொடங்கி அத்தனையும் பதிவு செய்யப்பட்டன என்று ஒரு பத்திரிகையாளரான நண்பர் சொன்னார். அந்தளவு இல்லையென்றாலும் எங்கள் வாழ்வு, எங்கள் மக்கள், எங்கள் கலைஞர்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படவேண்டும். பதிவு செய்யப்படவேண்டும்.

இந்த நோக்குடன் "தாய்வீடு" பத்திரிகை எங்கள் ஈழத்து மண்ணின் கிராமங்களில், ஊர்களில் வாழ்ந்த பிரபலமடைந்தவர்களுடன், தெரியப்படாமல் போய்விட்ட எங்கள் கலைஞர்களைப் பற்றியும் எழுதும்படி வேண்டுகோள் விடுக்கிறது. கட்டுரைகளை சுருக்கமாக, எழுதி அனுப்புங்கள். களம், 'தாய்வீடு' தரக்காத்திருக்கிறது. கருத்து உங்களுடையது. கட்டுரைகளை செதுக்கி சொற்சித்திரங்களாக்கும் பொறுப்பு எங்களுடையது.

*K.S.* பாலச்சந்திரன்

## 'பக்திப் பண்ணரசு' 'இசைச் சக்கரவர்த்தி' திரு.கதிர் சுந்தரலிங்கம்



சிவ பஞ்சலிங்கம்

- ஆயுட்காப்புறுதி பிரதிநிதி -

அன்று! ஒரு காலம்!

பல்வேறு தமிழிசை விழாக்கள் கிராமம் தொட்டு நகரம் வரை தாயக மண்ணில் பல்வேறு இடங்களில் நடைபெறும் அந்த நிகழ்வுகள் இன்றும் பலருக்கும் பசுமரத்தாணி போல் நினைவில் இருக்கும் என்பதில் எதுவித சந்தேகமும் இருக்க மாட்டாது.

ஆலயங்களில் இரவு இரவாக இயல், இசை, நாடகங்களுடன் சேர்ந்த இன்னிசை விழாக்கள் நடைபெறும்! அதனை இப் புலம் பெயர் நாட்டிலிருந்து இன்றும் நினைத்தாலே ஒரு பரவசம் மனதில் தோன்றும்.

தற்போது கனடா உட்பட மேலைத்தேச நாடுகளில் மண்டபத்தினுள் இருப்போர் மட்டும் கேட்பது போலன்றி வெட்ட வெளிகளில் நடாத்தும் விழாக்களின் இன்னிசைகள் தாயக மண்ணின் காற்றலைகளில் பரவி வரும் ஓசையினை கேட்கும் அந்த இனிமை உள்ளதே அது மனித வாழ்வின் ஒரு பொற்காலம்!

புலம் பெயர்ந்து பல வருடங்கள் மேலைத்தேச நாடுகளில் வாழும் நாம் அதனை தற்போது கடந்த காலத்தின் ஒரு கனவாகவே காண்கின்றோம். அந்த தாயக மண்ணின் இனிமையான பொற்கால வாழ்க்கையின் விழாக்களில் நடக்கும் இன்னிசை கச்சேரிகளில் அனேகமாக பல இடங்களில் நடுச்சாமத்தின் பின்பும் கூட "பக்தி பண்ணரசு" திரு.கதிர் சுந்தரலிங்கத்தின் இன்னிசைப் பாடல்கள் நடைபெறவுள்ளது என்ற செய்தி இருந்தால் தூக்க கலக்கத்தில் இருப்போரையும் ஒரு முறை தட்டி விழித்திருக்கச் செய்யும்.

தென்னிந்திய திரையுலகில் சீர்காழி கோவிந்தராஜன் பாடிய

"விநாயகனே வல்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே விண்ணுக்கும் மண்ணுக்கும் ஞானருள்வாய்"

அனேகமாக இதுதான் அவரது ஆரம்ப பாடலாக பல இடங்களில் இருக்கும்.

சில மணிநேரங்கள் தமது இயற்கையான இனிமையான குரல் வளத்தினால் ரசிகர்களை ஆழமான பரவச நிலைக்கு எடுத்துச் செல்லும் திரு. கதிர் சுந்தரலிங்கத்தின் இறுதி பாடல் அருணகிரிநாத சுவாமிகள் பாடிய

"முத்தைதரு பத்தி திருநகை"

என்ற திருப்புகழாகவே அனேகமாக இருக்கும்.

ஏன்? இந்த ஒழுங்கு என அவரிடம் வினாவினால் "என் சக்தி, என் குரல்வளம், இயற்கையாக பிறப்பில் உருவான என் திறமை என்னுடையது அல்ல. நான் பிறந்து வளர்ந்த எனது கிராமமான குப்பிழான் கிராமத்தில் எனது வீட்டுக்கு அருகில் உள்ள எங்கள் குல தெய்வம் 'கற்கரை கற்பக விநாயகரின்' திருவருள் சக்தி எனக்கு அருளாக இருந்து என்னை வழிநடாத்துகின்றது என்பதை என்னால் புரிந்து கொள்ள கூடியதாகவுள்ளது.

அந்த ஆலயத்தில் சங்கீத ஞானம் என்றால் என்ன என்று அறியாத அந்த சிறு வயதில் வாய் திறந்து முதன் முதலில் பாட தொடங்கினேன். அவ் ஆண்டவன் முன்னிலையில் தேவாரமாக பாடத் தொடங்கி, அகில இலங்கையின் பல இடங்களிலும் மட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் சிதம்பரம் தில்லை நடராசர் அரங்கம் என்று பாடி இன்று கனடாவிலும் இதனை இந்த 64 வயதிலும் தொடர்கின்றேன்.

கடந்த சில வருடங்களில் நல்லூர் கந்தன் உற்சவ திருவிழாக்களில் தொடர்ந்து பாடல்கள் பாடும் திருவருள் என் வாழ்வில் பல வருடங்கள் தொடர்ந்தது. அந்த முருகனை நினைத்து என் பாடல்களை முடிக்கின்றேன் என்கின்றார்"

அகில இலங்கையின் பட்டி தொட்டியெல்லாம் தமது இயற்கையான அற்புதமான குரல் வளத்தினால் இன்னிசை பாடல்கள் பாடிய திரு. கதிர் சுந்தரலிங்கம் ஈழ மண்ணில் குப்பிழான் கிராமத்தில் பிறந்தார். 'இசை' என்பதனை பல்கலைக்கழகத்தில் படித்து தேறியவர் என்று இல்லை. ஆனால் இசைப் பல்கலைக்கழகத்தில் முறைப்படி பயின்று முன்னிற்பவர்களை விட தமக்கு கிடைத்த



இயற்கையான குரல் வளத்தினால் ரசிகர்களை மயங்க வைப்பவர்.

அவரின் குடும்ப குல தெய்வம் குப்பிழான் கற்கரை கற்பக விநாயகர் ஆலயமே அவர் பாடலின் ஆரம்பம். குப்பிழான் கிராமத்திலுள்ள ஆரம்ப பாடசாலையில் மிக சிறுவயதில் கல்வி பயின்று கொண்டிருந்த காலத்தில் இயற்கையாக உள்ள இவரது திறமையினை இனம் கண்டு கொண்டவர் அவரது ஆரம்ப பள்ளி ஆசான் திரு.சொக்கலிங்கம் ஆசிரியர் அவர்கள். பாடசாலை நாடகத்தில் ஒரு அழகான சிறுவனாக இருந்த இவரை திருஞான சம்பந்தர் வேடத்திலும், முருக கடவுள் வேடத்திலும் பாட்டுப் பாடி நடிப்பதற்கு இவ் ஆசிரியர் நெறிப்படுத்தினார். அந்த காலத்தில் கிராமிய கூத்து கலையினை தமது குப்பிழான் கிராமத்தில் நடாத்தி கொண்டிருந்த அதே ஊரைச் சேர்ந்த நாடகக் கலைஞர் திரு. பீதாம்பரம் அவர்கள் அந்த கிராமிய நாடகங்களில் சிறுவனாக இருந்த கிரு. கதிர் சுந்தரலிங்கம் அவர்களை பாட்டு பாடி நடிக்க வைத்தார்.

1961ஆம் ஆண்டு, யாழ் முற்ற வெளியில் நடந்த சத்தியாக்கிரக போராட்டத்தில் சிறுவன் கதிர் சுந்தரலிங்கம் பாடிய பாடல் யாழ் நகர் எங்கும் ஒலித்து சகலரின் மனதினையும் தொட்டு நின்றது.

"மானமுள்ள தமிழா வாடா
மார் தட்டி முன்னே வாடா
ஈனர் செய்யும் இன்னல் கண்டு
இன்னமும் தாமதம் ஏனோ"

1967ஆம் ஆண்டு யாழ் - நாச்சிமார் கோவிலடியினை சேர்ந்த "இசைவாணன்" திரு.எம்.கண்ணன் அவர்களின் இன்னிசை



கோஷ்டியில் சேர்ந்து பாட தொடங்கியதே அகில இலங்கை எங்கும் இவரது குரல் வளம் பிரபல்யமாவதற்கு வழிகாட்டியது எனலாம். அன்று பிரபல்யமாக இலங்கையிலிருந்த கண்ணன் கோஷ்டியில் இலங்கையின் முன்னணி பாடகர்களான திரு.அமுதன் அண்ணாமலை, சுண்டிக்குளி ஜே.ஆர் சௌந்தரம் ஆகியோரும் சேர்ந்து பாடியிருந்தனர் என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.

சினிமா, பக்தி பாடல்களை இலங்கையின் தமிழ் பகுதிகளில் மட்டுமல்ல, சிங்கள பகுதிகளில் நடந்த தமிழர்கள் விழாவில் பல காலங்களில் தொடர்ந்து ஒவ்வொரு இரவும் வெவ்வேறு இடங்களில் இன்னிசை கச்சேரிகளில் பாடல் பாட வேண்டிய நிலைமை இருக்கும். யாழ் குடாநாட்டில் சில நேரங்களில் ஒரு இரவில் இரண்டு அல்லது மூன்று இடங்களிலும் இவர்களின் இன்னிசை கச்சேரி நடக்கும். அங்கு இவரது பாடலை அந்த திறந்த வெளியில் கேட்டு ரசிக்க என ஒரு ரசிகர் கூட்டம் அலைமோதும். குறிப்பாக தொண்டமானாறு செல்வசந்நிதி ஆலய உற்சவ காலத்தில் பல தடவைகளில் இவரது பக்தி பாடல்களின் இன்னிசை நிகழ்வு நடைபெற்றதும் அதன் ரசனையில் மூழ்கியதும் அவ் ஆலய பக்தர்களுக்கு இன்றும் நினைவிலிருக்கும் விடயமாகும்.

சினிமா பாடல்களை அதிகமாக பாடினாலும் அவரது குரல் வளம் என்பது பக்தி பாடல்கள், தெய்வீக பாடல்களுக்கே மிகவும் பொருத்த மானதாகவும் அந்த தெய்வீக பாடல்களின் ரசனை என்பது கேட்பவர்களை பக்திப் பரவசத்திற்கே இழுத்துச் செல்வதாக இருந்தது.

1974ஆம் ஆண்டு பக்தி பாடல்களுக்கு என தனியாகவே தமது தலைமையில் ஒரு இன்னிசை கோஷ்டியினை உருவாக்கி ஈழ தமிழ் மண்ணின் ஏராளமான ஆலயங்களில் தெய்வீக பக்தி பாடல்களை மட்டும் பாடி வந்தார்.

தாயக மண்ணின் இன ஒடுக்கல் பிரச்சினை காரணமாக தமிழ்நாடு சிதம்பரத்தில் வசித்த 1991-2001ஆம் ஆண்டு காலத்தில், இவரது பாடல்களுக்கு அண்ணாமலை பல்கலைக்கழக இசைத்துறை மாணவர்கள் பக்க வாத்தியங்களை இசைத்திருந்தனர். சிதம்பரத்தில் 1995ஆம் ஆண்டு ஒரு முறை நடந்த விசேட கும்பாபிஷேக விழாவில் இவரது பக்தி பாடல் நிகழ்ச்சி சிதம்பரம் வாழ் பக்தர்களின் மனதினை தொட்டிருந்தது என்பது அங்கு பத்திரிகையில் வந்த செய்தியாகும்.

ஈழத்தின் பட்டி தொட்டியெல்லாம் இன்னிசை மழை பொழிந்து தமிழ்நாடு சிதம்பரத்திலும் சுமார் பத்து வருடங்கள் இன்னிசை நிகழ்ச்சி நடாத்திய "பக்திப் பண்ணரசு" திரு. கதிர் சுந்தரலிங்கம் தற்போது கனடாவில் வாழ்கின்றார். தமது ஓய்வுபெறும் காலத்திலும் இந்த கலைஞனின் கலைப்பணி, பல ஆலய நிகழ்ச்சிகள், விழாக்களில் கனடாவிலும், ஐரோப்பிய நாடுகளிலும் தொடர்ந்த வண்ணமேயுள்ளது.

siva.panchalingam@thaiveedu.com

■ ■ ■

**Driving School**

ஒட்டுனர் பயிற்சியில் நட்பான அணுகுமுறை, நவீனத்துவமான பயிற்சி முறையுடன் நம்பிகையான வெற்றி G1, G2 தேர்வுப் பயிற்சிகள், போக்குவரத்து வசதிகள், தெளிவான விளக்க வகுப்புகள், வீதித் தேர்வுக்கான வாகன ஒழுங்குகள், வசதிக்கேற்ற தேர்வு நாட்கள்.

நீண்டகால அனுபவத்தின் தனித்துவமான பயிற்சி

**General Driving School**

**Ministry of Transportation Approved Instructor**

பேரின்பநாதன் வேந்தன்

**416-731-2829**

# 'பல்கலைத் தென்றல்' ஸ்ரீதர் பிச்சையப்பா

பெப்ரவரி 20ந்திகதி, சனிக்கிழமை அதிகாலை அவுஸ்திரேலியாவிலிருந்து ஒலிபரப்பாளர் கானாபிரபா தொலைபேசியில் அழைத்து அந்தச்செய்தியைச் சொன்னபொழுது, மிகுந்த கவலையாகவிருந்தது. என்னுடன் தனது இளமைக்காலத்தில் இருந்தே அன்புடனும், உரிமையுடனும் பழகிய அந்த திறமையான கலைஞனான ஸ்ரீதர் பிச்சையப்பா தனது 47வது வயதிலேயே இறந்துவிட்டார் என்பதை என்மனம் நம்பமறுக்கின்றது.

இலங்கை வானொலியின் தமிழ்ச்சேவை நாடகங்களிலே, சானாவின் நெறியாள்கையில் முக்கியநடிகராக நடித்துக்கொண்டிருந்த பிச்சையப்பாவின் மகனாகத்தான் எனக்கு முதலில் ஸ்ரீதரைத் தெரியும். தனது தகப்பனுடன் நாடகங்களில் நடிக்கின்றவர்களாகிய நான், ராமதாஸ், ராஜகோபால், செல்வசேகரன் ஆகியோரை உரிமையாக 'மாமா' என்று அழைத்துக்கொண்டு, வானொலி நிலையத்தில் எங்களை சந்திக்கும் சிறுவனாக என் நினைவில் நிற்கிறார்.

காலப்போக்கில் எங்களுடன் பலவானொலி நாடகங்களில் இணைந்து நடிக்கும்போது ஸ்ரீதரின் தனித்திறமை எங்களுக்கு தெரிய வந்தது. நான் எழுதிய பல வானொலி நாடகங்களில் ஸ்ரீதர் நடித்திருக்கிறார். சில நகைச்சுவைப்பாத்திரங்களை ஸ்ரீதரை மனதில் வைத்துக்கொண்டே நானும், ராமதாஸும் எழுதி அவரை நடிக்கவைத்தோம்.

ஸ்ரீதர் நல்லதொரு கவிஞனாகவும் விளங்கியதோடு, இனிமையாக பாடவும் வல்லவராக விளங்கினார். சஞ்சிகைகளுக்கான ஓவியங்களோடு, பல நூல்களுக்கு அட்டைப்படங்களும் வரைந்து கொடுத்த ஓவியராகவும் திறன்காட்டியவர். எழுத்தாளராகவும், இயக்குனராகவும் ஸ்ரீதரை இனம்கண்டோம்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் கனடாவிற்கு வந்த கலைஞர்குழுவில் ஸ்ரீதரும் இணைந்து வந்தது எனக்கு மிகுந்த சந்தோசத்தை தந்தது. நான் எழுதி, இயக்கிய 'கலாட்டாக்காரர்கள்' என்ற நாடகத்தில் இந்தியாவிலிருந்து கனடாவிற்கு வரும் ஜோதிடராக அனாயாசமாக நடித்து பாராட்டுக்களைப்பெற்றதோடு, அதே மேடையில் வெகுசிறப்பாக திரைப்பாடல்களையும் பாடியதை பலர் மறந்திருக்கமாட்டார்கள்.

நண்பர் அப்துல்ஹமீட், பிரான்ஸ் எஸ்.கே.ராஜன் இருவரும் இணைந்து எண்பதுகளின் பிற்பகுதியில் இலங்கைத்தமிழ்க் கலைஞர்களையும் ஐரோப்பிய நாடுகளுக்கு அழைப்பித்து நிகழ்ச்சி செய்விக்கும் முனைப்பில் ஈடுபட்ட காலத்தில், ஸ்ரீதரும் கலைஞர் குழுக்களோடு சென்றிருக்கிறார்.



1963ம் ஆண்டு ஜுலை மாதம் 20ந்திகதி பிறந்தவர் ஸ்ரீதர் பிச்சையப்பா. தன் சொந்த வாழ்க்கையில் பலதுன்பங்களைச்சந்தித்த இந்தக்கலைஞன், வெடிகுண்டுவிபத்தில் ஒரு கண்ணில் பாதிப்படைந்தது பெரியசோகம். கலகலப்பும், குதூகலமுமாக வலம்வந்த இந்தக் கவிஞனின் அண்மைக்கால மெல்லிசைப்பாடல்களில் அந்தச்சோகத்தை அவதானித்திருக்கிறேன்.

சிறுவர்மலர் நிகழ்ச்சி மூலமாக தன்கலைப் பயணத்தை ஆரம்பித்த ஸ்ரீதர் கலையின் பலதுறைகளிலும் திறமைகாட்டிய 'பல்கலைத் தென்றலாக' பரிணமித்தார். அண்மைக்காலத்தில் மித்திரன் வாரமலரில் 'கலாபவனம்' என்ற தொடரை எழுதிவந்திருக்கிறார்.

கனடாவில் கலைப்பயணத்தை முடித்துக்கொண்டு திரும்பும் வேளையில், ஸ்ரீதருக்கு அன்பளிப்பாக எதை கொடுப்பது என்று தெரியாமல், அவரிடமே கேட்டேன். வாசனைத் திரவியங்களோ, ஆடை, அணிகளோ ஸ்ரீதர் என்னிடம் கேட்கவில்லை. "மாமா... நான் ஓவியம் வரைவதற்கு நல்ல தூரிகைகள், வண்ணங்கள் வாங்கித்தாருங்கள்" என்று உரிமையுடன் கேட்டு வாங்கிப்போனார்.



கே. எஸ். பாலச்சந்திரன்

இன்னும் எவ்வளவோ சாதிக்கக்கூடிய திறமையிருந்தும், ஸ்ரீதருக்கு காலம் மாத்திரம் சந்தர்ப்பம் கொடுக்கவில்லை. அதுதான் கவலையாகவிருக்கிறது.

ksbala@thaiveedu.com

■ ■ ■

ஒவ்வொரு கிராமத்திலும் பல கலைஞர்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். அந்தந்தக் கிராமத்தின் வளர்ச்சிப் பணிகளிலும் முன்னேற்றத்திலும் இவர்களின் பங்கு அழப்பரியது. ஆனால் சந்தர்ப்பம் சூழ்நிலை அவர்களை உலகறியத் தவறிவிட்டது. கலைஞர்கள் நாட்டின் விடியலுக்காய் உழைப்பவர்கள். எங்கள் கிராமத்தின் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாய் வாழ்ந்தவர்கள். எம் ஈழத்துக் கலைஞர்களை நாம் கௌரவிப்போம், நினைவுகூர்வோம், உலகறியச் செய்வோம்.

உங்கள் கிராமத்தின் ஒவ்வொரு கலைஞர் பற்றிய விபரங்களையும் அவர்களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி இலக்கம், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டிற்கு அனுப்பிவையுங்கள்.

**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

■ ■ ■




மனம் விரும்பியது போல்
வீடு வாங்க, விற்க அழையுங்கள்
The Gore Rd/ Hwy 7
Sold
$1,100,000
Detached 2- Storey, 4+2 Bedrooms, 5 Washrooms
Veterans/Touchette (Barrie) For Sale $279,000 Detached 2-Storey, 3 Bedrooms, 4 Washrooms
Warden/407 For Sale $299,000 Condo Apt., 1+1 Bedrooms, 2 Washrooms
Gore/Ebenezer For Sale $339,000 Att/Row/Twnhouse 2-Storey, 3 Bedrooms, 3 Washrooms
Castlemore Blvd / Goreway Dr. For Sale $374,905 Semi-Detached 2-Storey, 4 Bedrooms, 3 Washrooms
Mcvean / Castlemore For Sale $479,900 Detached 2-Storey, 4 Bedrooms, 4 Washrooms
The Gore/Ebenezer For Sale $699,900 Detached 2-Storey, 4 Bedrooms, 4 Washrooms
Mcvean/Hunts Point For Sale $479,900 Detached 2-Storey, 4 Bedrooms, 4 Washrooms
Castlemore/ Mcvean For Sale $529,900 Detached 2-Storey, 4 Washrooms, 4 Bedrooms
Brisdale/Sandalwood Sold $370,000 Detached 2-Storey
Bovaird/Worthington Sold $428,000 Detached 2-Storey
Cottrelle /Gore Sold $469,000 Detached 2-Storey
The Gore/Ebenezer Sold $535,000 Detached Bangalow
The Gore/Ebenezer Sold $680,000 Detached 2-Storey
Bellamy / Lawrence Sold $358,000 Detached Bungalow, 3+2 Bedrooms, 3 Washrooms
Markham Rd/14th Ave Sold $393,000 Link 2-Storey, 3 Bedrooms, 3 Washrooms
Markham/14th Ave Sold $$421,000 Link 2 Storey, 3+2 Bedrooms, 4 Washrooms
Hwy 10/Bovaird Sold $272,750 Semi-Detached 2 Storey
Vankirk / Mayfield Sold $363,500 Detached 2-Storey
-digi Media-
Call before you list, See the Difference!!!
TOP PRODUCER - 2009
Ruby Thambiah
Sales Representative
Dir: 416-999-5337
Tel: 905-201-9977
Fax: 905-201-9229
rubysri@hotmail.com
www.buyandsellwithruby.com
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife/Future
Realty Inc. Brokerage
Independently Owned and Operated
205-7 Eastvale Drive,
Markham, ON L3S 4N8

# தமிழ் எழுத்துக்கள் கல்லில் இருந்து கணினி வரை

பொன் பாலராஜன்

"கல்தோன்றி மண் தோன்றாக் காலத்து முந்தோன்றிய மூத்த குடி தமிழ்க்குடி" என்பது தமிழர்களின் பூர்விகம் பற்றிய கூற்று. தமிழ்க் குடியின் ஆரம்பம் தொன்மை ஆகியவற்றைக் குறிப்பிடும்போது கண்ணதாசன்

கதிர் வெடித்து பிழம்பு விழ
கடற் குதித்து சூடாற
மலை வரமுன் நதி வரமுன்
நலம் வளர்த்த தமிழ் அணங்கே!

என்று குறிப்பிடுகின்றார்.


கல்லுக்கும் மண்ணுக்கும் மலைக்கும் நதிக்கும் முன்னுக்கு வந்த மூத்தகுடி என்று சொல்லி மிகைப்படுத்திக் கவிஞர் கூறியிருந்தாலும், தமிழின் தொன்மை கிறிஸ்துவுக்கு முன் பல ஆயிரம் ஆண்டுகட்கு முன்னையது. இதற்கு ஆதாரமாக கி.முன் 3000 ஆண்டுகட்கு முன்னர் செய்யப்பட்ட மணகலங்கள் சான்று பகிர்கின்றன. இவை தமிழகத்தில் ஆதிச்ச நல்லூருக்கு அருகாமையில் அகழ் வாரய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளன.

தமிழ் மொழி காலத்திற்கேற்ப வளர்ச்சி அடைந்தது மாத்திரமல்ல சில காலப்பகுதிகளில் குறிப்பாக சங்ககாலப் பகுதியில் தமிழ் மொழி வளர்ச்சி அறிவியல் வளர்ச்சி ஆகியவை சமகாலப் பகுதியில் மற்ற எந்த மொழிக் குடும்பத்திற்கும் இல்லாதவாறு காலத்தை மிஞ்சிய வளர்ச்சி கண்டிருந்தது.

தமிழ் எழுத்து வடிவங்களை ஒப்பீட்டடிப்படையில் பார்த்தால் கி.மு 3ம் நூற்றாண்டில் இருந்து கி.பி 19ம் நூற்றாண்டு வரை உள்ள எழுத்து வடிவங்களின் எழுத்துரு மாற்றங்கள் தெள்ளத்தெளிவான அமைப்பு வித்தியாசத்தினைக் காட்டுவதாய் அமைகின்றன. அதாவது கி.மு மூன்றில் கோடுகளாகவும் கம்புகளாகவும் இருக்கும் இவை மருவி மாற்றம் பெற்று கி.பி 6ம் நூற்றாண்டளவில் வளைவுகளையும் நெளிவுகளையும் ஏற்பதனை படத்தில் காணலாம்.




இம் மாற்றத்திற்குரிய காரணத்தினைப் பார்க்குமிடத்து ஒரு உண்மை புலனாகும். பண்டைய காலத்தில் எழுதும் போது கூரான ஆய்தங்களை அல்லது உபகரணங்களைப் பாவித்து எழுதியிருந்தார்கள். இதனால் எழுதுவது அவர்களுக்கு சுலபமாக இருந்தது. வளைந்த நெளிவு சுளிவுகளுடன் எழுதுவது மிகவும் கடினமாகக் காணப்பட்டிருக்கும். பின்னர் கி.பி. ஆறாம் நூற்றாண்டளவில் ஓலையில் எழுதும் வழக்கம் ஆரம்பிக்கப்பட்டபோது ஓலையில் நேர்கோடுகளையும் செங்குத்தான கோடுகளையும் பாவித்து எழுதுவது சிரமமாக காணப்பட்டது. ஏனெனில் இவ்வாறு நேர்கோடுகளினை பாவிக்கையில் ஓலை ஒடிந்து அல்லது கிழிந்து போவதற்கு சாத்தியக் கூறுகள் காணப்பட்டது. இவ்வாறான சிக்கலினைத் தவிர்த்துக் கொள்வதற்காக வளைத்து எழுதும் பழக்கம் அல்லது தேவை ஏற்படுகின்றது. தனிய கற்களிலும் களிமன் மேற்பரப்புக்களிலும் எழுதத்தப்பட்ட தமிழ் எழுத்து வடிவங்கள் கி.பி. ஆறாம் நூற்றாண்டளவில் ஓலைக்கு மாற்றப்பட்ட போது தான் தமிழ் எழுத்தின் முதலாவது சீர்திருத்தம் ஏற்பட்டிருக்க வேண்டும். அந்தக் காலத்துத்



தமிழகத்தில் ஆதிச்ச நல்லூருக்கு அருகாமையில் அகழ்வாரய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்ட கி.மு 3,000 ஆண்டுகட்கு முன்னர் செய்யப்பட்ட மண்கலங்கள்
**(Recent excavations at Aditchanallur near here earthern During urns dating to 3000 BC were found)**

தமிழ் எழுத்து வடிவங்களை பிரமி எழுத்துக்கள் என சொல்லப்படுகின்றது.

திராவிடர்களின் நாகரிகமாகச் சொல்லப்படும் மொகஞ்சதரோ ஹராப்பா பகுதிகள் தற்போது பாகிஸ்தான் நாட்டின் ஒரு பகுதியாக சிந்து மாநிலத்துள் அடங்குகின்றது.

ஆய்வாளர்களின் அபிப்பிராயப்படி தமிழ் எழுத்து பிரமி என்ற எழுத்து வடிவத்தினைத் தாங்கி வளர்ச்சி அடைந்ததாகச் சொல்லப்படுகின்றது. இந்த பிரமி எழுத்து வடிவங்கள் கிட்டத்தட்ட நவீன கால ரோமன் எழுத்துக்களை ஐரோப்பிய மொழிகள் எவ்வாறு தமது எழுத்து வடிவங்களாகப் பயன் படுத்தியிருக்கின்றனவோ எப்படி அராபிய இலக்கங்கள் எண்வடிவங்களுக்கு சர்வதேசம் முழுவதும் ஒரு வடிவமாக ஏற்றுக் கொண்டதுவோ அது போல பிரமி எழுத்துக்கள் தான் பண்டைய இந்திய உபகண்டத்தின் எழுத்து வடிவமாக இருந்ததாகக் கூறப்படுகின்றது.


பிரமி எழுத்து வட்டெழுத்தாகவும், கிரந்தம், நாகரி போன்ற எழுத்தாகவும் கி.மு மூன்றாம், நான்காம் நூற்றாண்டுகளில் மாற்றம் அடைந்ததாக ஆய்வுகள் சுட்டிக்காட்டி நிற்கின்றன. கிறித்துவிற்கு 500 ஆண்டுகளுக்கு முன்னர் பிரமி பிறந்த வள்ளுவர் எழுதிய திருக்குறள் பிரமி எழுத்து வடிவிலா எழுதப்பட்டது என்ற கேள்வியும் எழுகின்றது. கி.பின் 6 – 8ம் நூற்றாண்டளவில் வட்டெழுத்து அதாவது வளைவுகளுடன் கூடிய எழுத்து வடிவங்கள் தமிழில் பயன்படத் தொடங்கியது என புருனல் (Brunell) என்னும் மொழியியல் அறிஞர் குறிப்பிடுகின்றார். ஆனபடியால் திருக்குறள் வட்டெழுத்துக்களால் அல்லாமல் பிரமி எழுத்துக்களால் எழுதியிருக்கப்படக் கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றது. பிரமியில் இருந்து வட்டெழுத்துக்களும் அதன் பின் 15ம் நூற்றாண்டளவில் நவீன தமிழ் எழுத்து வடிவங்களும் உருவாகத் தொடங்கின.

ஆனால் கிரந்த எழுத்துக்கள் தமிழ் எழுத்துக்களுடன் கலந்து பயன்படுத்தப்பட்டு வந்தாலும் 14ம் நூற்றாண்டுவரை கிரந்த எழுத்துக்களின் தாக்கம் தமிழ் எழுத்துக்களில் மிக அரிதாகவே காணப்பட்டது. அதன் பின்னர் 15ம் நூற்றாண்டளவில் அருணகிரிநாதரின் திருப்புகழ் போன்றவற்றில் கிரந்த எழுத்துக்களின் தாக்கம் அதிகமாகக் காணப்படத் தொடங்கியது. முன்னர் குறிப்பிட்டது போல் இந்திய உபகண்டத்தின் ஆதி ஓசைக் குறியீடாக பிரமி முறை இருந்து வந்தது. இதிலிருந்து தான் இரு பிரதான மொழிக் கூறாக தமிழ் எழுத்துக்களும் கிரந்தமும் வளர்ச்சியடைந்தன என்பது அறிஞர்களின் கருத்தாகும்.

தமிழில் இருக்கக் கூடிய ழ, ள, ற, ந போன்ற ஒலிவடிவங்கள் கிரந்தத்தில் இல்லாமல் இருப்பதும் கிரந்தத்தில் இருக்கும் ஸ, ஜ, ஷ, ஹ போன்ற ஒலிவடிவங்கள் தமிழில் வளர்ச்சியடையாது இருந்ததும் அவதானிக்கப்படக் கூடியதாக இருந்தது. அதாவது தமிழ் பிரமி கிரந்த எழுத்துக்களின் வேர் எழுத்து பிரமி எழுத்துவடிவமாக இருந்த போதிலும் அவை தனித்தனியே தத்தமக்குரிய சிறப்பியல்புடன் வளர்ச்சியடைந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

கிறிஸ்த்துவுக்கு முன்னர் முதலாவது நூற்றாண்டில் மண்ணினால் வனையப்பட்ட பானை ஒன்றின் சிதைவுகள் எகிப்திய பண்டைய துறை முகமான குசேர் - அல்-கடிம் (Quseir-al-Qadim ) என்ற துறைமுகத்தில் கண்டெடுக்கப்பட்டது. இதை ஒரு மிகுந்த ஆய்வியல் முக்கியத்தும் மிக்க கண்டுபிடிப்பாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். ஏனெனில் இதைக் கண்டுபிடித்த இடம் ஆபிரிக்கா கண்டத்தின் வடகிழக்கு மூலையில் உள்ள செங்கடல் துறைமுகம். இப் பானையின் விளிம்பின் இருஓரத்திலும் காணப்பட்ட வாசகம் தமிழ் பிரமி எழுத்துகளில் எழுதப்பட்ட 'பானை உறி' என்பதாகும். இந்த செங்கடல் அகழ்வாராய்ச்சி செய்த நிபுணர்கள் பிரித்தானியாவிலுள்ள University of Southampton professor D. Peacock, Dr. L. Blue ஆகியோராகும். அதன் பின்னர் டாக்டர் ராபர்டா தொம்பர் ( Roberta Tomber) என்ற புராதன மட்பாண்ட ஆய்வு நிபுணரினாலும் இரவாதம் மகாதேவன் அவர்களினாலும் தமிழில் எழுதப்பட்டது என்பதும் நிரூபிக்கப்பட்டது.

தமிழ் என்ற வார்த்தையே கி.மு முதலாம் நூற்றாண்டுக்குமுன்னரே பாவிப்பில் இருந்து வருகின்றது. கி.மு இரண்டாம் நூற்றாண்டளவில் குகைகளிலும் கற்பாறைகளிலும் தமிழ்க் கவிதை நடையில் செய்திகள் சொல்லப்பட்டு இருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. பண்டைய தமிழ் எழுத்து ஆவணமான தொல்காப்பியம் ஒரு இலக்கணக் கவிதை நூலாக பல ஆயிரம் வருடங்களுக்கு முன்னே உருவாக்கப்பட்டுள்ளது. தொல்காப்பியர் காலம் கி.முன் முதலாம் நூற்றாண்டாகவும் கூறப்பட்டு வருகின்றது. இதே போல் 2831 பாடல்கள் அடங்கிய சங்க இலக்கியப் பாடற் தொகுப்பை தமிழ் கூறும் நல்லுலகம் பெற்றதும் சிலப்பதிகாரம் மணிமேகலை போன்ற காப்பியங்கள் கி.பின் 8ன் நூற்றாண்டளவில் எழுதப்பட்டதும் தமிழ் எழுத்து சொல்லாக்கம், நூலாக்கம், தொகுப்பு ஆகியவற்றிற்கு




எடுத்துக் காட்டாக இருக்கின்றது. சிலப்பதிகாரம் சங்ககாலப் பாடல்கள், தொல்காப்பியம் ஆகிய அனைத்துமே தமிழ் மொழி நூல்களாக இருந்த போதிலும் இவை யாவையும் வெவ்வேறு விதமான எழுத்துருக்களைக் கொண்டிருப்பதை ஆய்வின் மூலம் அறியலாம். இதனால் காலத்திற்கும் தேவைக்கும் ஏற்ற முறையில் தமிழ் எழுத்துருமாற்றம் நடைபெற்று இன்று தமிழ் ஒரு செம்மொழியாகத் திகழ்கின்றது. இனிவரும் பகுதிகளில் தற்கால கணினிக்கேற்ற எழுத்துரு மாற்றம் பற்றிப் பார்க்கலாம்.

pon.balarajan@thaiveedu.com

■ ■ ■

# அடிப்படையான ஆயுட்காப்புறுதித் திட்டங்கள்



சிறீதரன் துரைராஜா
- ஆயுட் காப்புறுதி முகவர் -

- ஆயுட்காலம் வரை நீடிக்கும் நிரந்தர ஆயுட் காப்புறுதி (Whole Life Insurance)
- தவணைக் காப்புறுதி (Term Insurance).
- சேமிப்புடன் கூடிய நிரந்தர ஆயுட்காப்புறுதி (Universal Life Insurance).
- குறிப்பிட்ட காலத்தில் கட்டி முடிக்கும் நிரந்தர ஆயுட் காப்புறுதி (Universal Life Insurance with Paid up option or Whole life Insurance with Guaranteed paid up option.)

கனடாவில் ஒரு சில நிறுவனங்களைத் தவிர அனைத்து காப்புறுதி நிறுவனங்களும் இந்த காப்புறுதித் திட்டங்களை விற்பனை செய்கின்றன. இத்திட்டங்கள் எப்படி செயற்படும் அல்லது எப்படி பயனுள்ளதாக இருக்கும் என்பதை அறிவதற்கு ஒரு அனுமதி பெற்ற காப்புறுதி முகவரின் ஆலோசனை பெறுவது சிறந்தது. அல்லது இவை பற்றிய கட்டுரைகள் குறிப்புகளை இணையத்தளத்தில் அல்லது புத்தகங்களில் படித்து அறிந்து கொள்ளவேண்டும். சரியான தகவல்களை அறிந்த பின்பு ஒரு திட்டத்தைப் பெற்றுக்கொள்வது நல்லது.

உதாரணமாக நீங்கள் ஒரு பூக்கடைக்கு பூக்கள் வாங்குவதற்காகச் சென்றால் அங்கு எல்லாவிதமான பூக்களும் இருக்கும் இதில் எது சிறந்தது என்று நீங்கள் பூ விற்பனை செய்பவரைக் கேட்டால் அவரால் உங்களுக்கு உதவி செய்யமுடியாது. காரணம் உங்களின் தேவையைப் பொறுத்து பூக்களின் வகை மாறுபடும். ஒரு கல்யாண வீட்டிக்கு கொடுப்பதற்கான பூக்களும், ஒரு மரண வீட்டிற்குக் கொடுக்கும் பூக்களும் ஒரே வகையாக இருக்கமுடியாது. அத்துடன் ஒவ்வொருவரின் தேவைக்கும் ரசனைக்கும் ஏற்றவாறும், அவரால் எவ்வளவு பணம் செலவு செய்ய முடியும் என்பதையும் பொறுத்துத்தான் உங்களுக்கு உகந்த பூக்களை தெரிவு செய்ய முடியும். எல்லாவகையான பூக்களையும் விற்பனை செய்யும் பூக்கடைக்காரருக்கு உங்கள் தேவைக்கேற்ப சரியான பூக்களைத் தெரிவு செய்யும் வசதி உள்ளது. ஆனால் ஒரு குறிப்பிட்ட பூவை மட்டுமே விற்பனை செய்யும் பூக்கடைக்குச் சென்றால் அவர் தன்னிடம் இருக்கும் பூவே சிறந்தது என்று கூறவேண்டியிருக்கும். எல்லாத் தேவைக்கு ஒரு வகையான பூவை மட்டுமே வாங்க வேண்டியிருக்கும். அதேபோல் காப்புறுதி நிறுவனங்களும் எல்லா வகையான திட்டங்களையும் வழங்கக் கூடியதாகவிருந்தால் உங்களுக்கு எது சிறந்தது என்பதை தெரிவு செய்ய முடியும்.

சில காப்புறுதி நிறுவனங்கள் ஒரு வகையான திட்டம் மட்டுமே விற்பனை செய்வார்கள். அந்தத்திட்டம்தான் எல்லோருக்கும் சிறந்தது என்றும் கூறுவார்கள். அப்படியான நிறுவனங்களில் காப்புறுதி பெற்றுக் கொள்ளும்போது மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். எனவே காப்புறுதி முகவரைத் தெரிவு செய்யும் போது பல்வேறு திட்டங்களையும் பல்வேறு நிறுவனங்களிலும் இருந்து பெற்றுத்தரக்கூடிய முகவர்களைத் தெரிவு செய்வது சிறந்தது. தொடர்ந்து ஒவ்வொரு வகையான காப்புறுதித்திட்டங்கள் பற்றியும், அத்திட்டங்கள் மூலம் எவ்வாறு நாம் பயடையமுடியும் என்பது பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டும்.

## ஆயுட் காப்புறுதித்திட்டங்கள் அடிப்படையானதும் அவசியமானதும்

### நிரந்தர ஆயுட் காப்புறுதி (Whole Life Insurance)

எந்த ஒரு நிதித்திட்டமிடலுக்கும் அத்திவாரமாக அமையக்கூடியது ஆயுட்காப்புறுதியே. ஒருவரின் ஆயுள் இல்லை என்றால் எதுவும் செய்யமுடியாது.

சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம்.

> “ ஒருவரின் பொருளாதார மதிப்பு அவரின் உழைக்கும் ஆற்றலில் தங்கியுள்ளது. உழைப்பு அவரின் ஆயுட்காலத்தில் தங்கியுள்ளது. ஆயுட்காலம் குறையும்போது அவரின் உழைக்கும் காலம் குறைகின்றது. ஒருவரின் எதிர்பாராத மரணத்தால் ஏற்படும் பொருளாதார பாதிப்பை தடுப்பதற்கு ஆயுட்காப்புறுதி அவசியமாகின்றது. ”

எனவே ஒருவரின் பொருளாதார மதிப்பு அவரின் உழைக்கும் ஆற்றலில் தங்கியுள்ளது. அவரின் உழைப்பு அவரின் ஆயுட்காலத்தில் தங்கியுள்ளது. ஒருவரின் ஆயுட்காலம் குறையும்போது அவரின் உழைக்கும் காலம் குறைகின்றது. அப்போது அவரின் குடும்பத்திற்கு கிடைக்கும் வருமானம் குறைகின்றது.

எனவே ஒருவரின் எதிர்பாராத மரணத்தால் ஏற்படும் பொருளாதார பாதிப்பை தடுப்பதற்கு ஆயுட்காப்புறுதி அவசியமாகின்றது.

ஆயுட் காப்புறுதி ஒருவரின் வருமான இழப்பை ஈடுசெய்கின்றது. அத்துடன் அவர் அதிககாலம் உயிர் வாழ்ந்தால் நிரந்தர ஆயுட் காப்புறுதி அவரின் குடும்பத்துக்கு ஒரு பெரிய முதலீட்டு சேமிப்பாக மாறுகின்றது. எனவே நிரந்தரமானதும் ஆயுட்காலம் வரை நீடிக்கும் காப்புறுதித்திட்டங்கள் எப்போதும் எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாகவே இருக்கும்.

உதாரணமாக நீங்கள் பல வழிகளில் பணத்தை சேமிக்க முடியும். ஆனால் நிரந்தர ஆயுட்காப்புறுதித்திட்டம் பாதுகாப்பை கொடுப்பதுடன் ஒரு சேமிப்பையும் வழங்குகின்றது.

மிகவும் குறைந்த வயதில் ஒருவர் நிரந்தர ஆயுட்காப்புறுதி பெற்றுக்கொண்டால் அவரின் அந்தக் காப்புறுதிக்கான கட்டுப்பணம் மிகக் குறைந்த தொகையாகவே இருக்கும். அவர் இறந்தவுடன் அவரின் குடும்பத்தினருக்கு கிடைக்கும் தொகை அவர் கட்டிய பணத்தை விட பன்மடங்கு அதிகமாக இருக்கும். நிரந்தர ஆயுட்காப்புறுதித் திட்டங்களில் மாதாந்தக் கட்டணம் செலுத்தும் முறைகள் பலவகையாகத் தெரிவு செய்ய முடியும்.

### ஆயுட் காலம் வரை ஒரே மாதாந்தக் கட்டணம் உள்ள திட்டங்கள்

அதாவது நீங்கள் ஆயுட்காப்புறுதித் திட்டம் ஆரம்பித்த மாதம் முதல் மரணமடையும் வரை மாதாந்தக் கட்டணம் ஒருபோதும் மாறாத திட்டம்.

அத்துடன் மாதாந்தக் கட்டணம் மாதம் ஒரு முறை அல்லது வருடத்துக்கு ஒருதடவை அல்லது வருடத்தில் இருதடவை அல்லது வருடத்தில் நாலு தடவைகள் செலுத்தும் முறைகளைத் தெரிவு செய்யலாம். நிரந்தர ஆயுட்காப்புறுதித் திட்டம் ஒன்றைப் பெற்றுக் கொள்வதன் மூலம் நீங்கள் குடும்பத்தினரை அல்லது உங்கள் அன்புக்குரியவர்களை செல்வந்தர்களாக மாற்ற முடியும். மாதாந்தம் ஒரு சிறிய தொகையை சேமிப்புத்திட்டம் போல் காப்புறுதிக்குச் செலுத்துவதன் மூலம், மரணமடைந்தபின் ஒரு பெரிய தொகையை உங்கள் அன்புக்குரியவர்களுக்கு கிடைக்கச் செய்ய முடியும்.

ஒருவர் மரணமடைந்ததும் ஏற்படும் இறுதிக் கடன் செலவுகள் மற்றும் இறுதி வருடத்துக்கான வருமானவரிச் செலவுகள் போன்றவற்றிற்கும் நிரந்தர ஆயுட் காப்புறுதி மிகவும் பலனளிக்கும்.

### நிரந்தரஆயுட் காப்புறுதியின் சிறப்புகள்.

- மாதாந்தக் கட்டணம் ஒருபோதும் மாறாது.
- ஆயுட்காலம் வரை காப்புறுதி நீடிக்கும்.
- குறிப்பிட்ட காலத்தின் பின்பு பணம் செலுத்த முடியாவிட்டால் அவ்வளவு காலமும் கட்டிய பணத்திற்கான காப்புறுதித்தொகை கிடைக்கும் (Paid up Insuracne).
- முதலீட்டுத்திட்டங்களில் கிடைக்கும் வட்டி விகிதங்களுக்கு உத்தரவாதம் அழிக்க முடியாது. ஆனால் நிரந்தர ஆயுட்காப்புறுதியால் கிடைக்கும் தொகைக்கு உத்தரவாதம் கிடைக்கும். கட்டிய பணம் ஒருபோதும் விரயமாகாது.
- நிரந்தர ஆயுட் காப்புறுதித் திட்டமொன்றைப் பெற்றுக் கொள்வதன் மூலம் நீங்கள் குடும்பத்தினரை அல்லது அன்புக்குரியவர்களை செல்வந்தர்களாக மாற்ற முடியும். மாதாந்தம் ஒரு சிறிய தொகையை சேமிப்புத் திட்டம் போல் காப்புறுதிக்காக செலுத்துவதன் மூலம் மரணமடைந்த பின் ஒரு பெரிய தொகையை உங்கள் பலன் பெறுபவருக்கு கிடைக்கச் செய்ய முடியும்.

ஒருவர் மரணமடைந்ததும் ஏற்படும் இறுதிக் கடன் செலவுகள் மற்றும் இறுதி வருடத்துக் கான வருமானவரிச் செலவுகள் போன்ற வற்றிற்கும் நிரந்தர ஆயட்காப்புறுதி மிகவும் பலனளிக்கும். பெருந்தொகைப் பணத்தை வங்கியில் வைத்திருந்தால் அல்லது சேமிப்புத் திட்டங்களில் வைத்திருந்தால் அதற்கு வருமான வரிகட்ட வேண்டி இருக்கும். அத்துடன் மரணமடைந்ததும் அந்தப்பணம் உங்கள் குடும்பத்தினருக்குக் கொடுக்கும்போது அந்தத் தொகைக்கு வருமான வரி கட்டவேண்டியிருக்கும்.

ஆனால் உங்களால் முடிந்தளவு கூடியதொகைக்குக் காப்புறுதி செய்வதன் மூலம் உங்கள் குடும்பத்தினருக்குக் காப்புறுதிப் பணமாக கிடைக்கச் செய்தால் அதற்கு வருமான வரி கட்ட வேண்டிய அவசியம் இல்லை. காரணம் காப்புறுதியால் கிடைக்கும் பணம் வருமானமாகக் கருதப்படமாட்டாது. (Death Benefit is Tax free) எனவே உங்களிடம் இருக்கும் பணத்தை வருமானவரி இல்லாமல் உங்கள் குடும்பத்தினருக்குக் கிடைக்கச் செய்வதற்கு நிரந்தர ஆயுட் காப்புறுதி ஒரு சிறந்த திட்டமாகும்.

sritharan.t@thaiveedu.com

■ ■ ■

இறுக்கமான சூழலில் இலகுவான தீர்வு

- நிரந்தர ஆயுட் காப்புறுதி
- கொடிய நோய்களுக்கான காப்புறுதி
- ஈட்டுக்கடன் காப்புறுதி
- வைத்திய பரிசோதனை இல்லாத காப்புறுதி
- RRSP • RESP

சிறீதரன் துரைராஜா
காப்புறுதி முகவர்
Member of Million Dollar Round Table | MDRT The Premier Association of Financial Professionals®
416.918.9771
759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407
info@life100.ca

RBC Insurance · INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. · Unity Life of Canada · Canada Life™



# ஆயுட்காப்புறுதிகளும் சேமிப்புத்திட்டங்களும்

## LIFE INSURANCE & RESP



- $ 200,000 வரை மருத்துவப் பரிசோதனை வேண்டியதில்லை
- ஆயுட்காலம் வரை மாதாந்தக் கட்டணத்தில் மாற்றமில்லை
- உடனடியாக காப்புறுதித் திட்டம் அமலாகும்
- வேறு நிறுவனங்களால் நிராகரிக்கப்பட்டவர்களும், நீரிழிவு நோயால் இன்சுலின் பாவிப்பவர்களும் பெற்றுக்கொள்ளலாம்

### Critical Illness Insurance

25விதமான கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டால் 2மில்லியன் வரை பெறக்கூடிய காப்புறுதித் திட்டம் நோய் ஏற்படாவிடில் கட்டியபணம் முழுவதும் மீளப்பெறமுடியும்

### Universal Life Insurance

ஆயுட்காலம் வரை நீடிக்கும் நிரந்தர ஆயுட்காப்புறுதி

### RESP

குழந்தைகளின் உயர்கல்விக்கான சேமிப்புத்திட்டம்
20-40 வீதமான அரச மானியத்துடன்
15 வீத போனஸ்

### Mortgage Insurance

அடமானக் கடனுக்கான காப்புறுதி வங்கியில் பெற்றுக்கொள்வதை விட ஆயுட்காப்புறுதி நிறுவனத்தில் பெற்றுக் கொள்வது சிறந்தது.
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்

- திஜ் Media -

TOPGUN AWARD WINNER 2008, 2009, MDRT QUALIFIER 2007, 2008, 2009

## சிறீதரன் துரைராஜா

MDRT Member of Million Dollar Round Table

**416.918.9771**

759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407



Assumption Life · IA INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. · Unity Life of Canada · Canada Life · RBC Financial Group · LiLAND INSURANCE INC.

இறுக்கமான சூழலில் ஓர் இலகுவான தீர்வு

NEW CREDIT - BAD CREDIT - NO CREDIT
BANKRUPT - NO PROBLEM
On Line - Credit Approvel, All kind of Credit Repairs
உங்கள் வியாபார முதலீடு வீட்டு முதலீடு ஆகியவற்றுக்கான
பணத்தேவைகள் உடன் ஒழுங்கு செய்து தரப்படும்
Shan Kanapathipillai
416.890.2300
e-mail: shankana@juno.com
LIC: M08002487
CENTUM
Looking out for your best interest

• Real Estate Law
• Business Law
YASO SINNADURAI
BARRISTER & SOLICITOR, NOTARY PUBLIC
THE LAW OFFICES OF YASO SINNADURAI
2100 Ellesmere Rd., Suite 202
Scarborough, Ont. M1H3b7
Tel: 416•265•3456
Fax: 416•265•2770

ACCESS LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION
INJURED?
Car Accident (MVA) Claims
Work Accident (WSIB) Claims
Bankruptcy
416-733-8880

வீடு வாங்கவும், விற்கவும்.......
Ramanan Ramachandran
Real Estate Broker
Office: 416.298.3200
Cell: 416.670.6467
I ♥ Referrals
HomeLife Today Realty Ltd., Brokerage
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6
HOMELIFE
HIGHER STANDARDS
*INDEPENDENTLY OWNED AND OPERATED







இம்மாதப் புகைப்படக் கலைஞர்

**ஷியாம் லோகநாதன்**

கனடா ரொறன்ரோவில் வசிக்கும் மருத்துவப்பீட மாணவனான இவர் தனது ஓய்வு நேரங்களில் புகைப்படத்துறையிலும் ஆர்வம் காட்டி வருகின்றார்

**உங்களிடம் (நீங்கள் எடுத்த) அழகான புகைப்படங்கள் இருக்கின்றனவா? அவற்றை நாங்கள் பிரசுரிக்க விரும்புகிறோம்.**

புகைப்படம் எடுத்தவரின் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல், புகைப்படம், எடுக்கப்பட்ட காட்சி அல்லது எடுக்கப்பட்டவருடைய விபரங்கள் என்பவற்றுடன் நீங்கள் எடுத்த புகைப்படத்தையும் அனுப்பிவையுங்கள். அவை இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.

• சுமார் 10 வருடங்கள் Scotia வங்கியில் மோட்கேஜ் அனுபவம்
• 7 நாட்களும்... 24 மணி நேரமும் நட்பான சேவை
• குறைந்த வட்டி வீதம் • 0% Down Payment
Scotiabank
Ragavan Ramanathan
Mortgage Development Manager
• New • Switch • Refinance
Tel: 416•579•7533
Fax: 416•579•9433
ragavan.ramanathan@scotiabank.com

Insurance Ocean
PROTECT YOURSELF AND YOUR LOVED ONES!
Product we serve:
• Accident Death Insurance • Affordable Life Insurance • Critical Illness Insurance
• Disability Income Insurance • Mortgage Insurance • Permanent Life Insurance
• Pet Insurance • Term Life Insurance • Travel Insurance • No Medical Exam Insurance
We provide free training and prepare you for the certification
Now hiring at Ocean Mortgage Include: Marketing Specialist, Sales Reps.
Call today 416-321-2300
Get the best rate online @
www.insuranceocean.com
digi